உ

கடவுள் துணை.

# திருக்குறட் சாரம

திருநெல்வேலி

பரமசிவன் பிள்ளை

எழுதியது.

முதற் பதிப்பு—௨௲

திரிபுரசுந்தரி
அச்சியந்திரசாலை
திருவல்லிக்கேணி
சென்னை.

சுக்கில ௵ ஆவணி ௴ ௧௨

பதிப்புரிமை பெற்றது]

[விலை அணா ௮

## மக்கள் மனத்திற் குறுதி பயக்கும்

# மாண்புடைய நூல்கள்.

---

### ௧. திருவெம்பாவை - திருப்பள்ளியெழுச்சி.

இது சமயாசாரியர் நால்வரில் மணிவாசகப் பெருமானெனப் பெயர்பெற்ற மாணிக்கவாசக சுவாமிகள் உலகம் உய்யும்பொருட்டு உவந்தருளிய திருவாசகம் என்னும் திவ்யக்கிரந்தத்திலுள்ள பாராயண யோக்கியமான திருப்பாட்டுகளை அமையப்பெற்றது. மூலம் குறிப்புரை கதைக் குறிப்பு முதலியவைகளுடன் நல்ல கடிதத்தில் பெரிய எழுத்தில் அச்சிடப் பெற்றது [௬௰ பக்கம்] விலை அணா ஒன்று.

### ௨. சிவார்ச்சனைத் திருமந்திரம்.

இது திருநாவுக்கரசு சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய திருவாரூர்ப் போற்றித் திருத்தாண்டகம் மூலமும் கதைக்குறிப்பும் விசேடார்த்தமும் அடங்கியது இது பாராயணத்திற் குரிய நூல் என்பதுமல்லாமல், சிவபெருமானை ஆராதிக்குங்கால், நூற்றெட்டு முறை போற்றியெனச் சொல்லி மலர் தூவி அர்ச்சித்தற்கும் தகுதியான அரிய மந்திரமுமாகும் அழகிய எழுத்தில் உயர்ந்த தாளில் அச்சிடப்பட்டது [௬௮ பக்கம்] விலை அணா ஒன்று பை ஆறு

### ௩. ஆசார ஒழுக்க முறை

மக்களாய்ப் பிறந்தோர்கள் தினந்தோறும் நடந்துகொள்ள வேண்டிய முறையை இது வெகு நன்றாய் எடுத்துக் காட்டுவதாகையினால் இதனை ஒவ்வொருவரும் வாங்கிப் படித்தல் அவசியமாம் இதில் மக்கள், செய்வன, தவிர்வன நித்திய கருமாநுட்டானம் ஆலயதரிசனம், பாராயணவிதி, விவாகமுறை, இல்லற ஒழுக்கம், ஆண்பெண் பெருமை, கடவுளின் மகிமை, தேகஆரோக்கிய விதிகள், சீவகாருண்ணிய விசேடம் விரதாநுட்டானமுறை இன்னும்பல அரிய விடயங்களும், தேவாரம், திருமந்திரம், திருக்குறள் முதலிய அரிய பெரிய நூல்களிலிருந்து மேற்கோள்காட்டி விளக்கப்பட்டுள்ளன இந்த ஒரு நூல் படித்தால் பல அரிய நூல்களைப் படித்த பயனை அடையலாம் நல்ல கடிதாசியில் அச்சிடப் பெற்றது [௱௰௨ பக்கம்] விலை அணா நாலு.

### ௪. நால்வர் சரித்திரம்.

இது சைவ சமயாசாரியராகிய திருஞான சம்பந்தர் திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்க வாசகர் என்னும் நால்வரது புராண சங்கிரகமாகும். [௭௨ பக்கம்] விலை அணா ஒன்று.

ஞானசம்பந்த நிலயம்.

திருச்சிற்றம்பலம்.

"சிகரம் முகத்திற் றிரளா ரகிலும்
மிகவுந் திவருந் நிவவின் கரைமேல்
நிகரின் மயிலா ரவர்தாம் பயிலு(ம்)
நெல்வா யிலரத் துறைநின் மலனே
மகரக் குழையாய் மணக்கோ லமதே
பிணக்கோ லமதாம் பிறவி யிதுதான்
அகரம் முதலி னெழுத்தா கிநின்ற
யடியே னுய்யப் போவதொர் சூழல்சொல்லே."

—சுந்தரர் தேவாரம்.

# முகவுரை.

'திருக்குறள்' என்பது தமிழ் இலக்கியங்களுகளுக்குச் சிரோமணி யென விளங்கித் தமிழ்மக்களால் தொன்றுதொட்டுப் பொன்னே போலப் போற்றப்பட்டுவரும் ஓர் அரிய பெரிய நூலாம். இந்நூல் அறம் பொருள் இன்பம் எனனும் முப்பாற்பொருளையும் எஞ்சாமல் நாட்டி எப்பாற் சமயத்தாரும் ஒப்பக்கூறும் மெய்ப்பொருள் நூலாம். இதற்கு இணையான நூல் இவ்வுலகில் மற்றெப் பாஷையினும் இலதென்பது இந்நாட்டா டான்றோராலேயன்றிப் பிறநாட்டுப் பெரியாராலும் போற்றிப் புகழ்ந்துரைக்கப்பட் டிருக்கின்றது. அப் பெரியாரிற் சிலர் இந்நூலினைத் தம்பாஷைகளில் மொழிபெயர்த்துத் தாம் பெற்ற இன்பத்தைத் தம்மாபினோரும் பெற்றுய்யுமாறு பேருதவி புரிந்தும் இருக்கின்றனர். ஆகவே தமிழனொருவனுக்கு அவன் தன்னைத் தமிழனென்று தருக்கித்துணிக்கத் தகுவதாகிய பெருமையைத் தருவது இந்நூலொன்றே யாகுமென்பது எப்பாலார்க்கும் ஒப்பமுடிந்த உண்மையாகும். அன்றி, இந்நூல் மக்களுயிர்க்கு மாறிலா உறுதியென உயர்ந்தோரால் நிர்ணயிக்கப்

பட்ட உண்மைப்பொருள்களை வருணபேதம் சாதிபேதம் மதபேதம் காலபேதம் இடபேதம் எனப்பலவை சிறிதுமின்றி எத்தேசத்திலும் எக்காலத்திலும் உள்ள எத்தகைய உயிர்க்கும் பொதுப்படப் போதிப்பதால், இது தமிழர்க்கு மட்டுமே உரியதாகாது எல்லோர்க்கும் பொதுவாயுள்ளதாகும்; இந்நூல் மேலான ஒழுக்கத்தையும், நல்வினை தீவினைகளின் பாகுபாட்டையும், இல்வாழ்வாரும் சந்நியாசிகளும் அநுசரிக்கவேண்டிய முறைகளையும், ஒவ்வொரு சமூகத்தாரும் தத்தம் நிலையில் நின்றொழுகும் முறையையும், அரசாங்க முறையையும், இன்பத்தின் நுட்பங்களையும் செவ்வனே விளக்கிக் கூறுவதாம். "இதிலுள்ள ஒவ்வொரு குறட்பாவும் தன்னிடத்துக் கொண்ட உயர்ந்த கருத்துக்குத் தக்க உயர்ந்த நடையை அனுசரித்தும் சுத்தமான தமிழ்ச் சொற்களால் அமைக்கப்பெற்றும் வெள்ளைக்கம்பியாற் செய்த வேலைக்கூட்டினுள்ளே வைக்கப்பட்டு ஒளிவீசும் தங்க மாம்பழமாகும்' என்று ஆங்கிலப் பெரியாரொருவர் அழகுபட வருணித்துக் கூறியவாற்றால் இந்நூலின் பெருமை இத்தகைத்தென்பதை எவரும் எளிதில் அறியக் கூடும். சுருங்கச்சொல்லல் முதலிய அழகோடுகூடிய ஒவ்வொரு குறளின் அமைப்பை நோக்குமிடத்து அது ஆகாசவாணிக்குச் சமானமாகும் அநேக நூன்முறைகளால் அனுபவிக்கக் கூடியதும், எக்காலத்தும் காப்பாற்றக் கூடியதுமான ஒரு சேமநிதியைப் போன்று மாசணுகாத தமிழ்ப்புதையலாகவுள்ளது இத்திருக்குறளாகும். முடிந்தது முடித்தலாக,

"தேவர் குறளுந் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழு முனிமொழியுங் — கோவை
திருவா சகமுந் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்" —(ஔவையார்)

"ஓதிற்றோ வேதத் தினைத்தம் முருவத் தொளித்தெமக் களித்த
வள்ளுவரே" —(வைராக்கிய தீபம்)

"ஆரியமுஞ் செந்தமிழு மாராய்ந் திதனினிது
சீரியதென் றொன்றைச் செப்பரிதால் — ஆரியம்
வேத முடைத்துத் தமிழ்திரு வள்ளுவனார்
ஓது குறட்பா வுடைத்து" — (வண்ணக்களஞ்சாத்தனார்)

"செய்யா மொழிக்குந் திருவள் ளுவர்மொழிந்த
பொய்யா மொழிக்கும் பொருளொன்றே—செய்யா
அதற்குரியா ரந்தணரே யாராயி னேனை
இதற்குரியா ரல்லாதா ரில்" —(வெள்ளிவீதியார்)

என்றின்னோரன்ன மூதறிவாளர் முதுமொழிகளினால் திருக்குறளும் வான்பற்றிநின்ற ஆரியவேதமாகிய எழுதாமறையும், திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் சுந்தரரெனனும் மூவரது தேவாரங்களும், மாணிக்கவாசகர் அருளிய திருச்சிற்றம்பலக்கோவையார் திருவாசகங்களும், திருமூலரது திருமந்திரமும் தம்முள் ஒக்குமென்பதும், அதனால் அது தமிழ்வேதமெனலாந் தகுதியுடைத்தென்பதும், அம்மட்டேயன்றி ஆரியவேதம் அந்தணர்க்கே உரியதாயிருக்க இத் தமிழ்வேதமாகிய திருக்குறள் அந்தணர் முதலாயினோர் அனைவர்க்கும் உரியதாயிருப்பதால் இது அதனினும் அதிகச்சிறப்புடையதாகக் கருதப்படுமெனபதும் எவராலும் கொள்ளக்கிடக்கும் குறிப்புக்களாகும.

இவவொரு நூலிலேதான் இல்லறம் நடத்துவோன் ஒருவன் எங்ஙனம் நடக்கவேண்டு மென்பது அழகாகக் கூறப்பட்டிருத்தலை நாம் பரக்கக்காணலாம். இல்வாழ்வானென்பான் அறவியல்பினையுடைய ஏனைப் பிரமசாரியருக்கும் வானப்பிரத்தருக்கும் சந்நியாசிகளுக்கும் அவர் செல்லும் நல்லொழுக்க நெறிக்கண் நிலைபெற்ற துணையாயிருத்தலோடு எல்லாவுயிர்க்கும் உதவியாயிருப்பதால் அவனது உயிர்வாழ்க்கை இவ்வுலகிற்கு நிவேதிக்கப்பட்டதாகும். அவன் இருப்போர்க்காவது இறந்தோர்க்காவது தன் கடமைகளைச் செய்யத் தவறாதவனா யுள்ளான். அவன் வாழ்க்கைத்துணைநலமாகிய அவன் மனைவி அவன் வீட்டுக்குக் கீர்த்தியை உண்டுபண்ணுபவளாவாள். அவள் அடக்கமும் ஒழுக்கமும் கற்பும் நிறைந்தவளாகி, தன் கணவன் வருவாய்க்குத்தக்க செலவு செய்பவளாய், தன் கணவனையே தெய்வமாகக்கொண்டு ஒழுகுபவளாவாள். அவனது குழந்தைகளோ அவனுக்கு மேலான திரவியங்களாகும். அவர்களுடைய மழலைச் சொற்களே அவனுக்குப் பிரியமான வாத்தியங்களாகும். அவர்கள் சிறுகைகளால் அளையப்பட்ட கூழே அவனுக்கு அமிர்தத்தினும்

ரிய உணவாகும். தன்னைக்காட்டிலும் தன் பிள்ளைகளை அறிவில் மேம்பட்டவர்களாகச் செய்யவேண்டுமென்பதே அவனது முக்கியக் கருத்து. அன்புடைமை என்பது அவன் பிராணனுக்குச் சமானமான தருமமாகும். அது எல்லாத்தருமங்களுள்ளும் முதன்மையானதும் மேம்பட்டதுமாகும். அவன் வீடு விருந்தோம்பலே அணிகலமாக உடையது. அவன் ஒவ்வொரு விருந்தினரையும் மலர்ந்த முகத்தோடும் இனிய சொற்களோடும் வரவேற்றுத் தான் அருந்தும் அன்னத்தை அவர்களுடன் பகிர்ந்து புசிப்பவனாயிருக்கிறான். பிறர்பால் இனியவை கூறியும் தனாற் பெறப்பட்ட உதவிகளுக்குச் செய்ந்நன்றியறிதலுடையவனும், தன் உயிர்வாழ்க்கையில் நடுநிலைமையோடு கூடியவனும், தனக்கு வாய்ந்துள்ள கடமைகளைச் செய்வதில் கண்டிப்புள்ளவனும், பிறர்தாரத்தை விரும்பாதவனும், பிறர்செய்த தீங்கைப்பொறுத்து அவரை மன்னிக்கும் இயல்புடையவனும், பொறாமையில்லாதவனும், மிதமான இச்சையுள்ளவனும், புறங்கூறாதவனும், பயனில சொல்லாதவனும், தீவினையை அஞ்சுபவனும், ஒப்புரவறிந்து ஈகையுடையவனும், எல்லோராலும் புகழத்தக்க பெருமைவாய்ந்தவனுமுள்ளான் என்றற் றொடக்கத்து விடயங்களெல்லாம் திருக்குறளில் தெளிவாகக்கூறி விவரிக்கப்பட்டுள்ளன.

இத்தகைய அருமையான நூலைச் செய்தவர் திருவள்ளுவனார். உலகத்திற் றோன்றியுள்ள பெரும்புலவர்களுள் இவர் ஒருவரென்று சிலரும், இவரின் மேம்பட்ட புலவர் இல்லையென்று வேறு சிலரும், இவரை நிகர்க்கும் புலவர் இல்லையென்று பின்னும் சிலரும் கூறியுள்ளார். இவர் சென்னையைச் சேர்ந்த திருமயிலாப்பூரில் வள்ளுவகுலத்தில் அவதரித்து நெய்தற்றொழில் புரிந்து தம்மில்லாளுடன் வாழ்ந்து இல்லறதருமத்தை தாமியற்றிய திருக்குறளிற் கூறியாங்கு நடத்திவந்தாரென்பது கர்ணபரம்பரையான ஒரு விருத்தாந்தமாகும். ஆனால், இவரைப்பற்றி இவர் காலத்திலிருந்த சங்கப்புலவர்கள் பாடிய

''அறம்பொரு ளின்பம்வீ டென்னுமந் நான்கின்
திறந்தெரிந்து செப்பிய தேவை—மறந்தேயும்

வள்ளுவ னென்பாேனோர் பேதை யவன்வாய்ச்சொல்
கொள்ளா ரறிவுடை யார்"—(மாமூலனார்).

"உப்பக்க நோக்கி யுபகேசி தோண்மணந்தான்
உத்தர மாமதுரைக் கச்சென்ப—விப்பக்கம்
மாதானு பங்கி மறுவில் புலச்செந்நாப்
போதார் புனற்கூடற் கச்சு"—(நல்கூர்வேள்வியார்)

என்னும் வெண்பாக்களால் இவர் வள்ளுவசாதியிற் பிறக்கவில்லை யென்பதும், மதுரையில் அரசாங்க நிர்வாகத்தில் உயர்ந்த பதவியி லிருந்து அரசியல் செவ்வனே நடைபெறுவதற்கு ஆதாரபுருடராய் விளங்கி, அதனால் "வள்ளுவர் சாக்கியரென்னும் பெயர் மன்னர்க் குட்படுங் கருமத்தலைவர்க் கொக்கும்" என்னும் நியாயப்படி வள்ளுவ ரென்னும் பட்டத்தைப் பெற்று, அப்பெயராலேயே அழைக்கப் பட்டாரென்பதும் பெறப்படும். மேலே கூறப்பட்ட விருத் தாந்தங்களினால் திருவள்ளுவர் திருமயிலாப்பூரில் அவதரித்து வளர்ந்து வாலிபப்பருவங் கழிந்தபின் மதுரையை அடைந்து, அங்கு அரசாங்க அதிகாரியாய் அமர்ந்திருந்து சிலகாலங் கழிந்தபின் மீண் டும் தம் பிறப்பிடமாகிய திருமயிலாப்பூருக்கு வந்து உத்தமமான நெய்தற்றொழிலைச் செய்து தங்காலங்கழித்து, பின்னர் மதுரைச் சங்கத்தில் தாம் திருமயிலாப்பூரிலிருந்தபோது பன்னூலாராய்ச்சி செய்து இயற்றிய திருக்குறளை ஏற்றிப் பின்னர்த் திருமயிலையில் சமாதி யடைந்தாரென்பது ஊகிக்கத்தக்க விடயமாகும். இவர் காலம் சற்றேறக்குறைய ஆயிரத்துத் தொள்ளாயிரம் வருடங்களுக்கு முன்னென்று ஆன்றோர் கணக்கிட்டுள்ளார்.

திருவள்ளுவர் உலகியல் நெறி வீட்டியல் நெறி என்னும் இரண்டையும் நன்றாகவிசாரித்து உண்மை யுணர்ந்தவர். மாந்தர்க்கு இல்லறம் துறவறமென்னும் இருவகையறங்களும் உரியனவென் பதும், அவற்றுள் துறவறத்தை நோக்கியே இல்லறம் சாதித்தற் பாலதென்பதும், உலகந்தேடுவார்க்கு இல்லறமும் வீடுதேடுவார்க்குத் துறவறமும் உரியனவென்பதும் இவர் சித்தாந்தமாகும். இவர் இல்லறவியல் கூறுமிடத்து

''அன்பிலா ரெல்லாந் தமக்குரியர் அன்புடையார்
என்பு முரியர் பிறர்க்கு ''

என்னும் திருக்குறளால் அன்பே அதற்குச் சிறந்த இலக்கணமாகு மென்றும், துறவறவியல் கூறுமிடத்து

''அவாவென்ப எல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றுந்
தவாஅப் பிறப்பீனும் வித்து''

என்னும் திருக்குறளால் அதற்கு அவாவின்மையே சிறந்த இலக்கணமாகுமென்றும் சித்தாந்தஞ் செய்திருத்தலை ஊன்றிநோக்கினுல் அவரது அற்புதத் தெய்வப்புலமையின ஆற்றல் நன்கு புலப்படும். அவரால் விளக்கப்பட்டுள்ள நூற்று முப்பத்து மூன்று விடயங்களுள் ஒவ்வொரு விடயமும் எஞ்சாமற் கடைபோக விசாரித்து நிச்சயம் பண்ணப்பட் டிருத்தலின், எத்துணை மதிநுட்பமுடையாரும் ஒரு விடயத்திலாயினும் ஒன்றைக் கூட்டவேனும் குறைக்கவேனும் இடங் காணமாட்டார். திருவள்ளுவர் எடுத்துக் கொண்ட விடயங்களுட் சிலவற்றைத் தாமாக விசாரித்த பிறதேசப் புலவர்களுள் தலையாயினோர் அவ்விடயங்களின்மேற் கூறியவற்றையும் திருவள்ளுவர் கூறியவற்றையும் ஒப்பிட்டு நோக்குமிடத்து, அவற்றுள் திருவள்ளுவர் கருத்துக்களே சிறந்து நிற்றலின், அவரின் மிக்கோர் பிறரில்லை எனவே சித்தாந்தமாம்.

நாயனாரது குறட்பாக்களின் அருமையும் பெருமையும் பின் வரும் பாக்களாலும் நன்கு விளங்கும் :—

'' வறிதே நிலையாத இம்மண்ணுலகில் நரனக வகுத்தனை நான் நிலயேன், பொறிவாயி லிவை ஐந்தனையும் அவியப்பொரு துன்னடியே புகுஞ்சூழல் சொல்லே'' —(சுந்தரர் தேவாரம்)

''பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீ ரொழுக்க
நெறிநின்றார் நீடு வாழ்வார்''—குறள்.

''மற்றுநெ லொரு பற்றிலன் எம்பெருமான் வண்டார் குழலாள மங்கை பங்கினனே, அற்றார் பிறவிக் கடல்நீந்தி யேறி அடியேன் உய்யப் போவதோர் சூழல்சொல்லே''.—(சுந்தரர் தேவாரம்).

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்." — குறள்.

"ஒடுபுனற் கரையாம் இளமை உறங்கி
விழித்தா லொக்கும் இப்பிறவி"—சுந்தரர்.

"உறங்குவது போலுஞ் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும பிறப்பு—குறள்.

"இன்றுளேன் நாளையில்லேன் எனசெய்வான்
தோனறினேனே"—அப்பா தேவாரம்.

"நேற்றிருந்தாள் இன்றுவெந்து நீறானாள்"—பட்டினத்தார்.

"இன்றைக் கிருந்தாரை நாளைக் கிருப்பரென்
றெண்ணவோ திடமில்லை."—தாயுமானவர்.

"நெருநல் உளனொருவன் இன்றில்லை யெனனும்
பெருமை யுடைத்திவ் வுலகு"—குறள்.

"கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே யுளவென்று - பண்டையோர்
கட்டுரையை மேம்படுத்தாள்"—சேரமான் பெருமாணாயனார்.-
—திருக்கயிலாய ஞானவுலா.

"தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவரென்று - நிலைத்தமிழின்
தெய்வப் புலமைத் திருவள் ளுவருரைத்த
மெய்வைதத சொல்—உமாபதிசிவம - நெஞ்சுவிடுதூது.

"சார்புணர்ந்து சார்பு கெடவொழுக் னெறமையாற்
சாரபுணர்தல் தானே தியானமுமாஞ்—சார்பு
கெடவொழுகி னல்ல சமாதியுமாங் கேதப்
படவருவ தில்லைவினைப் பற்று" — திருக்கடவூர் - உய்யவந்த
தேவர் - திருக்களிற்றுப்படியார்.

"சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்"—குறள்."

"காக்கை கரைந்துண்ணுங் கால மறிமினே"
—திருமூலா திருமந்திரம்.

"காக முறவு கலந்துண்ணக் கண்டீர்"—தாயுமானவர்.

"காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்னநீ ரார்க்கே யுள"—குறள்.

மேற்கூறியாங்கு இவரது நூலின் பல பகுதிகளில் சைவ சித்தாந்தக் கருத்துக்கள் விளங்குவதையும், "பற்றுக பற்றற்ருன் பற்றினைப் பற்றைப், பற்றுக பற்று விடற்கு" என்றின்னோ ரன்ன பாக்களில் சைவ சித்தாந்தக் கருத்துக்களை இவர் வற்புறுத்திக் கூறியிருப்பதையும், (சகல சாத்திர பண்டிதராய பகவனென்னும் அந்தணருக்குப்பிறந்து மயிலாப்பூரில் ஒரு வேளாளரால்வளர்க்கப் பட்டு வாசுகியென்னும் ஒரு தொண்டைமண்டல வேளாளப் பெண்ணை மணந்து சைவதலங்களிற் சிறந்தனவான திருமயிலை யிலும் தென்மதுரையிலும் வசித்திருந்து கடைசியாகத் திருமயிலை யில் சமாதியடைந்தாரென்னும் வரலாற்றிற்கேற்ப) இவர் சமாதி திருமயிலாப்பூரில் தோன்றுதொட்டு இன்றுவரை சைவ நன்மக்க ளால் தெய்வமாகப் பூசிக்கப்பெற்றுவருவதையும் நோக்குமிடத்து, இவர் சமயம் சைவசமயமே யாகுமென்பது ஒருவாறு நிருண யிக்கப் படுவதாம். இன்னும் இவர் கடவுள் வாழ்த்தில் "கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான், தாளை வணங்காத் தலை" என்னும் ஒன்பதாவது குறளிற் குறித்துள்ள தன்வயத்தனுதல், தூயவுடம்பினனுதல், இயற்கையுணர்வினனுதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பசாங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்ற லுடைமை, வரம்பிலின்பமுடைமை, எனனும் எண்வகைக் குணங் களையும் அக்கடவுள் வாழ்த்தின்

க. அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

உ. கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்

ங. மலர்மிசை யேகினன் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்

ச. வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை யில

ரு. இருள்சேர் இருவினையுஞ் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு

௬. பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றா நீடு வாழ்வார

௭. தனக்குவமை யில்லாதான தாளசேர்ந்தாரக் கல்லால்
மனககவலை மாறறல் அரிது

௮. அறவாழி அந்தணன தாளசேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது

எனனும் எட்டுக்குறள்களில் விசேடிக்கப்பட்டிருக்கும முறையினை

''முனனம் அவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும வண்ணங் கேட்டாள
பினனை அவனுடைய ஆரூர் கேட்டாள
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி யானாள
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தைத்
தன்னை மறந்தாள் தன்னாமங் கெட்டாள்
தலைப்பட்டாள நங்கை தலைவன தாளே.''

எனனும் திருநாவுக்கரசு சுவாமிகளது திருத்தாண்டகத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கில், இவரது சமயககொள்கை சைவசமயக்கொள்கையே யாகுமெனபது வெளிமலைபோல் விளங்கும.

இவரது அருமையான நூலின பல திறப்பட்ட வனமைகளாற கவரப்பட்ட பிறசமயத்தா ரெல்லாம் இவரைத் தஞ்சமயத்தவரெனறு கூறுவதும ' எம்மதமும் சம்மதம் ' எனனும் உண்மைச் சைவசித்தாந்தக் கொள்கைக்கு மிகவும் பொருந்தியதே யாகும். இவா சாதியும் சமயமும் எவையேயாக விருப்பினும இருக்க. இவரது நூல் எச்சாதியாாக்கும எச்சமயத்தார்க்கும் பொருத்தமான உறுதிப் பொருளையே கூறி வறபுறுத்துதலால், எண்ணரிய பிறவிகள் யாவற்றினும் அரிதாகிய இம்மானுடப் பிறவியைப் பூர்வசனம புண்ணியத்தின் பயனாகப் பெறறோர இம்மானுடதேகமுள்ள காலத்திலேயே இதனால் அடையக் கிடப்பதாகிய அரும்பெருஞ் செல்வத்தை அடைதறகு இந்நூல் இனறியமையாத சாதனமாகுமென பது எவரும் ஒப்பமுடிந்த உண்மையாகும்.

இத்தகைய பெருமை வாய்ந்த இந்நூல் ஆங்கிலம், கிரேக்கு, இலத்தீன், பிரஞ்சு முதலிய பல்வேறு பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டுப் பிறதேசத்தாரால் படிக்கப்படும் இக்காலத்தில், இந்நூல் செய்யப்பட்ட இனிய தமிழிலே இதனைப்படிக்கும் பாக்கியத்தைப் பெற்ற தமிழ்மக்களில் ஒரு மிகச்சிலரே இந்நூலை முற்றிலும் கற்றவராக விருக்கின்றனர். இதில் அங்கொரு குறளும் இங்கொரு குறளுமாகக் கற்றவர் சிலரும் ஒரு குறள்கூடக் கல்லாதவர் பலருமாக விருத்தல் மிக வெளிப்படையாம். இதனால், நம் தமிழ்மக்களின் நிலைமை மிகவும் பரிதாபப்படத் தக்கதா யிருக்கிறதென்பது தோன்றுவதாம். இந்நூலில் ஆயிரத்து முந்நூற்று முப்பது குறட்பாக்களை உள்ளன ; அவற்றை முற்றிலும்படிக்க அவகாசமில்லாமற் போனபோதிலும், அன்றாடம் ஒரு குறட்பாவையாவது நந்தமிழ்மக்கள் படித்துப் பயனடைய வேண்டுமெனனும் கருத்துடன் இந்நூலின் அறத்துப்பாலிலும் பொருட்பாலிலும் உள்ள நூற்றெட்டு அதிகாரங்களினின்றும் ஒவ்வோரதிகாரத்திற்கு ஒவ்வொரு குறட்பாவாக நூற்றெட்டுக் குறட்பாக்களைத் தேர்ந்தெடுத்து அவற்றுடன் அவ்வவ் வதிகாரங்களிலுள்ள மற்றைக் குறட்பாக்களின் சாரத்தையும் சேர்த்துச் சுலபமாக அருத்தமாகக்கூடிய நடையில் எழுதி அதனைப் புத்தக வடிவமாகப் பதிப்பிக்கலாமென்ன. ஒரேயளவும் ஒரேநிறமும் ஒரேயொளியுமுள்ள இரத்தினங்களி னின்றும் சிலவற்றைத் தேர்ந்தெடுத்தல அசாத்தியமேயன்றோ? அங்ஙனமே திருக்குறளிலே சில பாக்களை என சிற்றறிவுக்கு எட்டியவளவு ஒருவாறு தேர்ந்தெடுத்துள்ளேன். இதிலுள்ளவற்றில் ஒரு குறட்பாவையாவது நாடோறும் காலையில் நியமத்துடன் படித்து, வேலைசெய்யும் நேரம்போக மீதியுள்ள காலங்களில் மனனஞ் செய்து, அமைவுள்ள காலங்களில் அதன் சாரம் சித்தத்தின்கண் படியும்படி முயன்றால், இதைப்படிப்போர் ஒவ்வொருவரும் மேல் நிலையை அடைவாரென்பதிற் சந்தேகமில்லையாம். பெரிய புத்தகங்களை மேலோடு படித்துப் பூரணவுணர்ச்சியில்லாமல் 'நான் அதைப்படித்தேன், இதைப்படித்தேன்' என்று சொல்லிக்கொண்டிருப்பதைப் பார்க்கிலும், உலகத்தாரால்

உயர்ந்ததென ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு நூலில் ஒரு சிறுபாகத்தையாகிலும் சரியாகப் படித்து அதிற் சொல்லியபடி நடக்க முயலுதல் மேலன்றோ? இக்கருத்துடனேயே திருக்குறளைப்படித்து இச்சிறிய நூலை வெளியிடலானேன். இதிற் காணப்படும் பிழைகளை அடியேனுடைய சிறுமையையும் நூலினுடைய பெருமையையும் நோக்கிப் பொறுக்குமாறு பெரியாரை வேண்டுகின்றேன். அன்றியும், அப்பிழைகளை அறிஞர் அடியேனுக்கு அறிவிப்பாராயின், அவை அடுத்த பதிப்புப் புத்தகம் திருத்தமாக வருதற்குச் சிறந்த சாதனமாகும்.

இச்சிறிய நூல் பெரும்பான்மையும் மாணவச் சிறுவருக்கென்றே எழுதப்பட்டதாதலால் இதில் காமத்துப்பால் கலக்கவில்லை.

இனி, சிறியேனியற்றிய **சிவார்ச்சனைத் திருமந்திரமென்னும்** சிறியநூலிற் செப்பிய நூற்றெட்டுச் சிவநாமங்களைப் பிரதிதினமும் நியமமாகப் பாராயணஞ் செய்வோர் இந்நூலில் திரட்டப்பட்டுள்ள நூற்றெட்டுக் குறட்பாக்களையும் **சிவாக்கினைத் திருமந்திரமாக** மதித்துப் பிரதிதினமும் பாராயணஞ் செய்யுமாறு தனியாய்ச் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்நூல் என்ஞான மக்கட்கு உறுதியைப் பயந்து இவ்வுலகின்கண் நிலவுமாறு எல்லாம்வல்ல இறைவனது இணையடிகளை இறைஞ்சுகின்றேன்.

> "எல்லாரு மின்புற் றிருக்க நினைப்பதுவே
> அல்லாது வேறொன் றறியேன் பராபரமே."

சுக்கில வருடம்
ஆவணி மாசம் ௧-ம் தேதி.

தி. சா. பரமசிவன்,
ஞானசம்பந்த நிலயம்,
௨௨, பார்த்தசாரதிநாயுடு தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை.

உ

# அணிந்துரை.

சென்னை வேதாந்தசங்கத் தலைவரும்
திருக்குறள் - தெளிபொருள் விளக்க உரையாசிரியருமாகிய

## ஆசிரியர் - கோ. வடிவேலு செட்டியார் அவர்கள்

எழுதியது.

திருவாளர் - பரமசிவம் பிள்ளை எழுதிய - திருக்குறட் சாரம் என்னும் நூல் என் பார்வைக்கு வந்தது. அதனை யான் ஆரம்ப முதல் அந்தம்வரை ஒருவாறு கவனித்துப் பார்த்தேன். அது பரிமேலழகர் உரையைப் பெரும்பான்மையும் அநுசரித்து விஷய அமைப்பு மாறுபடுதலின்றிச் சிறுவர்களும் எளிதில் அறியக்கூடிய செவ்விய நடையில் எழுதப்பட் டிருக்கிறது. இப் புத்தகத்தைப் படிப்பவர் திருக்குறளில் பரிமேலழகரின் உரையின் அமைப்பைத் தெளிவாக அறிந்துகொள்வதற் குரியவராவர் என்பது எனது அபிப்பிராயமாம். திருக்குறளின் அறத்துப்பால் பொருட்பால்களி லுள்ள 108 அதிகாரங்களில் ஒவ்வொரு குறட்பாவை ஆதாரமாகக் கொண்டு ஒவ்வொரு அதிகார சாரமும் விளக்கப்பட் டிருத்தலின், இது எல்லாம்வல்ல இறைவனுக்கு அஷ்டோத்திர சதநாமாவளி அர்ச்சனை செய்வதுபோன் றமைந்திருக்கின்ற தென்பது எனது அபிப்பிராயமாம்.

பிள்ளையவர்கள் இதுபோன்ற நூல் பல எழுதித் தமிழுலகம் விருத்தியடைய உபகரிக்க வேண்டுமென்று எல்லாம்வல்ல இறைவனை யான் வேண்டுகின்றேன்.

---

திருக்குறள் விளக்க ஆசிரியர்

## திருவாளர் - கி. குப்புசாமி முதலியாரவர்கள்

எழுதியது.

திருவாளர் - பரமசிவம்பிள்ளை எழுதிய திருக்குறட்சாரம் என்னும் நூலைக் கண்ணுற்றேன். முப்பால்களுள் அறம் பொருள் என்னும்

இரண்டு பால்களில் உள்ள நூற்றெட்டு அதிகாரங்களிலும் ஒவ்வோர் அதிகாரத்திலும் ஒவ்வொரு திருக்குறளை, "தண்டமிழின் மேலாந் தரம்" என்னும் தமிழ் ஆறனுள் ஒன்றாக விளங்கும் பரிமேலழகரது உரையையே உரையாகத்தழுவித்தம்மாலியன்றவுரையில் கற்றோரே அறியக்கூடிய அப்பாஷையை மற்றையோரும் அறியும் வண்ணம் விளக்கியெழுதியுள்ளார். ஒவ்வோர் அதிகாரத்தும் பத்துத் திருக்குறளில் எத்திருக்குறள் உலகத்தார்க்கு மிகுதியும் பயனபடத்தக்கது என்று தம் மனதிற்குத் தோன்றியதோ அத் திருக்குறளையே பண்டைய உரையுடன் விளக்கி யெழுதியிருக்கின்றா ராதலால், "திருக்குறட்சாரம்" எனப் பெயரிட்டனர் எனத் தோன்றுகின்றது. பல திருக்குறள் பதிப்புக்கள் இக்காலத்து வெளிவந்து மக்களுக்குப் பயன்படுவதுபோல் திருக்குறள் முற்றும் படிப்பதற்கு இயலாத மக்களுக்கு இச்சாரம் பெரிதும் பயன்படுமென்று எண்ணுகின்றேன.

இந் நூலாசிரியர் என்னுடைய நெடுநாள் நண்பராதலால், இவரை ஒழுக்க சீலரென அறிவேன. ஒழுக்கத்தை உயிராக ஓம்புகின்ற இவ்வாசிரியர் இயற்றிய இந்நூலானது உலகிற்குப் பயன்பட வேண்டுமென்று எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சுகின்

செந்திலாண்டவன் திருவடி துணை.

## பாலவிநோதினி என்னும் பத்திரிகையின் ஆசிரியர்
## வரகவி - திரு. அ சுப்ரமண்ய பாரதி எழுதியது.

திருக்குறள் என்னும் நூலைத் தமிழ்நாடே யன்றித் தமிழ் வழங்கப்பெறாத ஏனைய நாடும் நன்குணரும் ஆதலின் அது பல பாஷைகளிலே மொழிபெயர்க்கப் பட்டுளது. அன்றியும் இதனைத் தமிழ் வேதம் என்றும் உலகம் போற்றுகிறது. இத்தகைய நூலுக்கு உரையெழுதினர் சிலர். அவ்வுரைகளுள் பரிமேலழகர் என்னும் பெரியார் எழுதிய உரையே போற்றப்படுகிறது. அவ்வுரையுடன் - தெளிபொருள் - தெளிபொருள்விளக்கம் முதலியன

சேர்த்து - ஆசிரியர் - கோ. வடிவேலு செட்டியார் ஒரு பதிப்பு பதிப்பித்திருக்கிறார். அது உலகுக்குப் பேருபகாரம் புரிகிறது. திருக்குறள் ஆராய்ந்து பார்க்கப் பார்க்கப் புலவர்க்குப் பல அரிய கருத்துக்களை விளக்கும். வித்தியார்த்திகளுக்கு இம்மை மறுமை நன்மைக்குரிய போதனைகளை இந்நூலில் சகல நீதிகளும் சாத்திரக் கருத்துக்களும் அடங்கியுள்ளன என்று பெருமைபேசி ஓதியுணர்ந்து போற்றத்தக்கபடி போதிக்கும். ஆதலின் இந்த நூலில் எத்தனை விதத்தில் எத்தனை பதிப்புகள் எத்தனை புலவர்கள் வெளியிட்டாலும் தமிழுலகம் ஏற்கும்; ஏற்றுக்கொள்ளத்தக்க கடமையையு முடையது.

இப்பொழுது எனது நண்பர் - திருவாளர் - பரமசிவன் பிள்ளை திருக்குறட்சாரம் என்று பெயர்கொண்ட ஒரு பதிப்பு வெளியிட்டுள்ளார். இந்நூலை நான் படித்துப்பார்த்தேன். பரிமேலழகர் உரையையும் - தெளிபொருள் விளக்க உரையையும் தழுவி அமைக்கப்பட்டிருக்கிறது. அதில் ஒவ்வொரு அதிகாரமும் அதுமேற்கொண்ட விடயத்தைப் பத்துக் குறளினால் விளக்குகிறது. ஆகவே பிள்ளையவர்கள் ஒவ்வொரு அதிகாரத்திலும் ஒவ்வொரு குறளை எடுத்துக்கொண்டு அதனை அதற்குரிய ஏனைய ஒன்பது குறளின் பொருளினால் வசனவடிவில் வெகு அழகாக விளக்கியிருக்கிறாராதலால், இது நூற்றெட்டுக் குறட்பா அடங்கிய சிறு நூலாயினும் படிப்பவர்க்குத் திருக்குறள் முழுவதையும் படித்த பயனைக்கொடுப்பதாக இருக்கிறது. ஆதலால் இதற்குத் திருக்குறட்சாரமெனப் பெயரிட்டது சாலப் பொருத்தமுடையதாகும். பிள்ளையவர்கள் தக்கவொரு நூலைத் தக்க வழியில் எழுதித் தமிழுலகுக்கு உதவினர் என்னும் பெருமைக்கும் இந்நூல் பாத்திரமாக்குகிறது. இவர்கள் - முதலில் - திருவெம்பாவை உரை - சிவார்ச்சனைத் திருமந்திரம் - ஆசார ஒழுக்கமுறை என்னும் நூல்களை இயற்றிப் பண்பட்டதை இந்நூலில் காட்டியிருக்கின்றனர் என்பது அந்நூல்களைப் படிப்பவர்க்கு இனிது விளங்கும்.

இத்தகைய முயற்சியில் பிள்ளையவர்கள் தங்கள் சாவகாச வேளையை உபயோகித்து இதுபோன்ற அரிய நூல்களை இன்னும் வெளியிடுமாறு செந்திலாண்டவன் திருவருள் புரிவாராக.

## பிரம்மஸ்ரீ மஹாமஹோபாத்தியாய வே. சாமிநாதையரவர்கள் எழுதியது.

திருநெல்வேலி ம-ள-ள-ஸ்ரீ பரமசிவன் பிள்ளையவர்கள் எழுதியுள்ள திருக்குறட்சார மென்னும் புத்தகத்திற் சில பகுதிகளைப் படித்துப் பார்த்தேன்.

திருக்குறளின் வசனமாகப் பல நூல்கள் இக்காலத்தில் வெளிப்போந்து உலாவிவரினும் இப்புத்தகம் ஒரு புதிய அமைப்பைப் பெற்று விளங்குகின்றதென்று சொல்லலாம். ஒவ்வோர் அதிகாரத்தும் உள்ள சிறந்த குறள் ஒன்றை எடுத்துக்காட்டி அதன் பொருளையும் தெளிவாக எழுதி அவ் வதிகாரத்திலுள்ள ஏனைப்பாக்களின் கருத்துக்களையும் தொடர்பு படுத்தி நல்ல நடையிற் செவ்வனே விளக்கி உரிய இடங்களிற் சிறந்த சைவநூற் கருத்துக்களை இதன் ஆசிரியர் பிரமாணங்களாகக் கொடுத்திருப்பது யாவராலும் பாராட்டத் தக்கது. இதனைப் படிப்பவர்கள் திருக்குறளிற் கூறப்பட்ட நீதிகளையும் சிவபக்தி மார்க்கத்தையும் எளிதில் அறிந்துகொள்வார்களென்பது என் கருத்து.

'Thirukkural Saram' is a work of merit. I know the author very well as a Tamil Scholar, and the book bears the Stamp of his learning. His presentation, in a concise form, of the leading ideas in each section of the Kural is quite good.

The publication of the book is quite welcome at a time when increased attention is being paid to the study of Tamil in Schools and Colleges, as it is eminently suited for study as a text-book by senior students. I wish the author all success.

HINDU HIGH SCHOOL, Triplicane, Madras. } **P. A. SUBRAMANIA AIYAR,** *Headmaster.*

# பொருளடக்கம்.


| | | பக்கம் |
|---|---|---|
| | நூலின் பெயர்களும் நூலாசிரியரின் பெயர்களும் | (௰௯) |
| ௨. | சிறப்புப்பாயிரம் | (௨௰) |
| ௩. | உரைப்பாயிரம் | ௧ |
| ௪. | பாயிரம் | ௩ |
| ௫. | அறம் - இல்லறம் | ௰௨ |
| ௬. | ,, துறவறம் - விரதம் | ௪௫ |
| ௭. | ,, ,, ஞானம் | ௬௬ |
| ௮. | ஊழ் | ௮௰ |
| ௯. | பொருள் - அரசு | ௮௩ |
| ௰. | ,, அங்கம் - அமைச்சு | ௱௩௫ |
| ௰௧. | ,, ,, நாடு | ௱௫௩ |
| ௰௨. | ,, ,, அரண் | ௱௫௬ |
| ௰௩. | ,, ,, கூழ் | ௱௫௮ |
| ௰௪. | ,, ,, படை | ௱௬௰ |
| ௰௫. | ,, ,, நட்பு | ௱௯௩ |
| ௰௬. | ,, ஒழிப | ௱௯௫ |
| ௰௭. | அரும்பத அதிகார அகாராதி அட்டவணை | ௨௨௧ |
| ௰௮. | திருக்குறளின் பால், இயல் பகுதி, அதிகார விவரங்கள் | ௨௨௬ |
| ௰௯. | திருக்குறட்கோவை | ௨௨௭ |
| ௨௰. | பிழை திருத்தம் | ௨௩௬ |

## நூலின் பெயர்கள்.

க. திருக்குறள் - சிறந்த குறள்வெண்பாவினாலாகிய நூல்.
உ. முப்பால் - அறம் பொருள் இன்பமென்னும் மூன்று பாகங்களை யுடைய நூல்.
ஈ. உத்தரவேதம் - (ஆரியவேதத்துக்குப்) பின்தோன்றிய வேதம்.
ச. தெய்வநூல் - தெய்வத்தன்மை அமைந்து தெய்வவாக்கெனத் தகும் நூல்.
ரு. திருவள்ளுவர் - திருவள்ளுவரால் செய்யப்பட்ட நூல்.
சா. பொய்யாமொழி - பொய்கலவாது உள்ளதை உள்ளபடி உணர்த்தும் நூல்.
எ. வாயுறைவாழ்த்து - உடற்கு உறுதிபயக்கும் மருந்துபோல் உயிர்க்கு உறுதிகூறும் நூல். (வாயுறை - மருந்து)
அ. தமிழ்மறை - தமிழ்வேதம். (மறை - இரகசியப்பொருள்)
கூ. பொதுமறை - நான்கு வருணத்தார்க்கும் பொதுவாகிய வேதம்.
௰. திருவள்ளுவப்பயன் - திருவள்ளுவராலாகிய பயன்.

---

## நூலாசிரியரின் பெயர்கள்.

க. திருவள்ளுவர் - மறைப்பொருளைத் தமிழ்மக்கள் அறிந்துய்யத் தந்த வண்மையுடையவர்.
உ. நாயனார் - மக்களை நன்னெறியில் நடத்துபவர்.
ஈ. தேவர் - தெய்வத்தன்மை யுடையவர்.
ச. முதற்பாவலர் - பாவியற்றும் வன்மையில் முதன்மையுடையவர்.
ரு. தெய்வப்புலவர் - தெய்வத்தன்மையுடைய அறிஞர்.
சா. நான்முகனார் - பிரமனது அம்சமானவர்.
எ. மாதாநுபங்கி - தருக்கில்லாதவர். (மாதம் - தருக்கு; பங்கி - பங்கஞ் செய்தவர்) - உயிர்களிடத்துத் தாயன்புடையவர் எனலுமாம்.
அ. செந்நாப்போதார் - செம்மை வாய்ந்த நாவாகிய மலரையுடையார் (செம்மை - மனக்கோட்டமின்மை.)
கூ. பெருநாவலர் - பெருமை பொருந்திய நாவன்மையுடையவர்.
௰. பொய்யில் புலவர் - பொய்மையில்லாத புலமையுடையவர். (ஐயந்திரிபின்றி உள்ளதை உள்ளபடி உலகத்துக்கு உணர்த்தும் புலவர் என்றபடி.)

## திருக்குறளின் சிறப்புப் பாயிரமாகிய
# திருவள்ளுவ மாலை.

௧. திருத்தகு தெய்வத் திருவள் ளுவரோ
டுருத்தகு நற்பலகை யொக்க — விருக்க
உருத்திர சன்ம னெனவுரைத்து வானில்
ஒருக்கவோ வென்றதோர் சொல் — (அசரீரி).

௩. என்றும் புலரா தியாணர்நாட் செல்லுகினும்
நின்றலர்ந்து தேன்பிலிற்று(ம்) நீர்மையதாய்க் — குன்றாத
செந்தளிர்க் கற்பகத்தின் தெய்வத் திருமலர்போல்
மன்புலவன் வள்ளுவன்வாய்ச் சொல் — (இறையனார்).

௯. மாலுங் குறளாய் வளர்ந்திரண்டு மாணடியால்
ஞால முழுது(ம்) நயந்தளந்தான் — வாலறிவின்
வள்ளுவருந் தங்குறள்வெண் பாவடியால் வையத்தார்
உள்ளுவவெல் லாமளந்தா ரோர்ந்து — (பரணர்).

௭. தானே முழுதுணர்ந்து தண்டமிழின் வெண்குறளால்
ஆனா வறமுதலா வந்நான்கும் — ஏனோருக்
கூழி னுரைத்தார்க்கு மொண்ணீர் முகிலுக்கும்
வாழியுல கென்னாற்று(ம்) மற்று — (நக்கீரர்).

௰. மும்மலையு முந்நாடு(ம்) முந்நதியு முப்பதியு
மும்முரசு(ம்) முத்தமிழு முக்கொடியு — மும்மாவும்
தாமுடைய மன்னர் தடமுடிமேற் றாரன்றோ
பாமுறைதேர் வள்ளுவர்முப் பால் — (சீத்தலைச்சாத்தனார்).

௨௪. ஓதற் கெளிதா யுணர்தற் கரிதாகி
வேதப் பொருளாய் மிகவிளங்கித் — தீதற்றோர்
உள்ளுதோ றுள்ளுதோ றுள்ள முருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு — (மாங்குடிமருதனார்).

---

௧. நற்பலகை - சங்கப்பலகை. ௩. யாணர் - அழகு. (௭) ஆனா - கெடாத. ஊழ் - முறை. (௰) மும்மலை - கொல்லி, நேரி, பொதியம். முந்நாடு - குடநாடு, புனனாடு, தென்னாடு. முந்நதி - காவிரி, வையை, தாமிரபருணி. முப்பதி - கருவூர், உறையூர், மதுரை. மும்முரசு - மங்கலம், வெற்றி, கொடை. முத்தமிழ் - இயல், இசை, நாடகம். முக்கொடி - வில், புலி, மீன். மும்மா - கனவட்டம், பாடலம், கோரம். (மா - குதிரை). மன்னர் - சேர சோழ பாண்டியர். தார் - மாலை.

கடவுள் துணை.

# திருக்குறட் சாரம்

# அறத்துப்பால்

## உரைப்பாயிரம்.

இந்திரன் முதலிய தலைவருடைய பதங்களையும் முடிவில்லாத இன்பத்தையுடைய அழிவில்லாத வீட்டையும் வழியறிந்து அடைதற்குரிய மனிதர்க்கு உறுதியென உயர்ந்தோரால் எடுக்கப்பட்ட பொருள்கள் அரம் பொருள் இன்பம் வீடென்னும் நான்காகும். அவைகளுள் வீடென்பது இப்படிப்பட்டதென்று நினைக்கவும் சொல்லவும் கூடாத நிலைமையை உடையதாகலால் துறவறமாகிய காரணவகையாற் கூறப்படுவதல்லாமல் இலக்கணவகையாற் கூறப்படாமையின் நூல்களாற் கூறப்படுவன மற்றை மூன்றுமேயாம்.

அவற்றுள் அரமாவது மனுமுதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன வொழித்தலுமாம். அஃது ஒழுக்கம் வழக்கு தண்டமென மூன்று வகைப்படும்.

அவற்றுள் ஒழுக்கமாவது பிராமணர் முதலிய வருணத்தார் தத்தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரிய முதலிய நிலைகளில் நின்று அந்தந்த நிலைகளுக்குச் சொல்லப்பட்ட அறங்களில் வழுவாமல் நடத்தலாம்.

வழக்காவது ஒரு பொருளைத் தனித்தனியே எனது எனது என்றிருப்பவர் அதுகாரணமாகத் தம்முள் மாறுபட்டு அப்பொரு

ளின் மேற்செல்வது. அது கடன் வாங்குதல், காக்கும்படி வைத்த பொருளை அபகரித்தல், உடையனல்லான் விற்றல், கூடி இலாபஞ் சம்பாதித்தல், தானஞ்செய்த பொருளைக் கொடாமை, சம்பளங் கொடாமை, கட்டுப்பாட்டை மீறி நடத்தல், ஒரு பொருளை விற்றாவது வாங்கியாவது பின்பு சந்தேகித்தல், மாட்டையுடையவனுக்கும் மேய்த்தவனுக்கும் வரும் வழக்கு, எல்லைவழக்கு, அடித்தல், திட்டல், திருட்டு, கொடியசெய்கை, அயலான் மனைவியை அபகரித்தல், மாதராடவர் தருமம், தாயபாகம், சூதாடல் ஆகிய பதினெட்டுப் பதங்களையுடையதாம்.

தண்டமாவது அவ்வொழுக்க வழியினும் வழக்கு வழியினும் தப்பினவரை அவ்வழியிலே நிறுத்துதற்பொருட்டு ஒப்பநாடி அக்குற்றத்திற்குத் தகுதியாகத் தண்டித்தலாம்.

இவற்றுள் வழக்கும் தண்டமும் உலகவழியிலே நிறுத்துமேயல்லாமல் ஒழுக்கம்போல் மக்களுயிர்க்கு உறுதியைத் தருவனவல்ல ஆகையாலும், அவைதாம் நூலாலேயல்லாமல் அறிவு மிகுதியாலும் தேயவியற்கையாலும் அறியப்படுதலாலும் அவ்விரண்டையும் ஒழித்து இங்கே தெய்வப்புலமைத் திருவள்ளுவரால் சிறப்புடைய ஒழுக்கமே அறமென எடுத்துக்கொள்ளப்பட்டது.

அவ்வறந்தான் நால்வகை நிலைகளையுடையதாய் வருணந்தோறும் வேறுபாடு உடைமையால் சிறுபான்மையாகிய அச்சிறப்பியல்புகளை ஒழித்து எல்லார்க்கும் ஒத்திருத்தலால் பெரும்பான்மையாகிய பொதுவியல்புபற்றி இல்லறம் துறவறமென இருவகை நிலைகளாலே சொல்லப்பட்டது.

அவற்றுள் இல்லறமாவது இல்வாழ்க்கை நிலைக்குச் சொல்லுகின்ற நெறிக்கண் நின்று அதற்குத் துணையாகிய கற்புடைய மனைவியோடும் செய்யப்படுவதாதலின், அதனை முதலிலே சொல்லத் தொடங்கி, எடுத்துக் கொள்ளப்பட்ட இலக்கியம் இனிது முடிதற்பொருட்டுக் கடவுள்வாழ்த்து கூறுகின்றார்.

கடவுள் துணை.

# திருக்குறட் சாரம்

## பாயிரம்

---

### க. கடவுள்வாழ்த்து.

அஃதாவது கவிஞன் தான் வழிபடு கடவுளையாயினும் எடுத்துக்கொண்ட பொருளுக்கு ஏற்புடைக் கடவுளையாயினும் வாழ்த்துதல். அவற்றுள் இவ்வாழ்த்து ஏற்புடைக் கடவுளை யென்றறிக. என்னையெனில், சத்துவம் இராசசம் தாமசம் என்னும் முக்குணங்களால் மூன்றாகிய அறம் பொருள் இன்பமென்னும் உறுதிப்பொருளுக்கு அக்குணங்களாலுடைய விட்டுணு பிரமன் உருத்திரனென்னும் மும்மூர்த்திகளின் வடிவமாகிய முதற்கடவுளோடு சம்பந்தம் இருத்தலால் அம்மூன்று பொருளையும் சொல்லத் தொடங்கிய வர்க்கு அம்மூவரையும் வாழ்த்துதல் முறைமையாகலின், இவ்வாழ்த்து அம்மூவர்க்கும் பொதுப்படக் கூறியதென வுணர்க.

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு. (க)

(இதன் பொருள்.) எழுத்தெல்லாம் - எழுத்துக்களெல்லாம், அகரமுதல - அகரமாகிய முதலையுடையன; அதுபோல, உலகு - உலகம், ஆதிபகவன் முதற்று - ஆதிபகவனாகிய முதலையுடைத்து, என்றவாறு.

ஏகாரம் தேற்றத்தில் வந்தது. தமிழெழுத்துக்களுக்கு மாத்திரமல்லாமல் வடவெழுத்துக்களுக்கும் முதலாதலை நோக்கி 'எழுத்தெல்லாம்' என்றார். ஆதிபகவன் என்னும் இருபெயரொட்டுப் பண்புத்தொகை வடநூல் முடிபாதலின் இயல்பாயிற்று. உலகென்றது இங்கு உயிர்களின்மேல் நின்றது. காணப்பட்ட உலகத்தைக் கொண்டு காணப்படாத கடவுளுக்கு இருப்பைச் சொல்லவேண்டுதலின் 'ஆதிபகவன் முதற்றே' என்று உலகின்மேல் வைத்துச்

சொல்லினார், அப்படிச் சொல்லினாராயினும், உலகிற்கு முதல் ஆதிபகவனென்பது கருத்தாகக் கொள்க. நாதமாத்திரையான இயல்பாற் பிறத்தலால் அகரத்திற்குத் தலைமையும், செயற்கை யுணர்வின்றி இயற்கை யறிவால் முழுதும் அறிதலால் ஆதிபகவனுக்குத் தலைமையும் கொள்க. தலைமைபற்றி வந்த அகரத்திற்கும் ஆதி பகவனுக்கும் பொதுப் பிரதிபிம்பமாகச் சொல்லுதலால் இது எடுத்துக்காட்டுவமை. பகவனெனப்படுவது அறிவு, பொறை, வல்லமை, செல்வம், வீரியம், அழகு ஆகிய ஆறு குணங்களையும் உடைத்தாயிருத்தலின் பகவன் எனப்பட்டது. இக்குறளால் முதற்கடவுளது உண்மை கூறப்பட்டது.

அப்பகவன் மெய்யறிவினை யுடையவனென்பதும், எல்லா நூல்களையுங் கற்றவர்க்கு அக்கல்வியறிவினால் உண்டாகிய பிரயோசனம் அவனடிகளை வணங்கிப் பிறவியை யறுத்தலென்பதும், அன்பினாலே நினைப்பவரது நெஞ்சில் அவர் நினைத்த வடிவோடு அவர் விரைந்து செல்லுமவனென்பதும், அவனது திருவடிகளை இடைவிடாது நினைப்பவர்கள் உலகத்தின்மேல் அழிவின்றி வாழ்வாரென்பதும், அவன் ஒரு பொருளையும் விரும்புதலும் வெறுத்தலும் இல்லாதவனென்பதும், அதனால் அவன் அடிசேர்ந்தார்க்கு அவ்விருப்பு வெறுப்புக்கள் இல்லையென்பதும், அதனால் அவர்களுக்கு அவை காரணமாக வருகிற பிறவித்துன்பங்கள் எக்காலத்தும் இல்லையென்பதும், அவனது மெய்ம்மைசேர்ந்த புகழை எப்பொழுதும் விரும்பிச் சொல்லுபவரிடத்து மயக்கத்தைப்பற்றி வரும் நல்வினை தீவினையென்னும் இரண்டு வினைகளும் உண்டாகாவென்பதும், அவன் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐம்புலன்களிலே செல்லுகின்ற ஆசையை அறுத்தவனாதலால் அவனது மெய்யான ஒழுக்க வழியிலே வழுவாது நின்றவர் பிறப்பில்லாமல் எக்காலத்திலும் ஒரு தன்மையராய் வாழ்வாரென்பதும், அவன் ஒருவிதத்தினாலும் தனக்கு நிகரில்லாதவனென்பதும், அவனது திருவடிகளைச் சேராதவர் பிறவிக்கு ஏதுவாகிய காம வெகுளி மயக்கங்களை நீக்கமாட்டாமையினாலே பிறந்தும் இறந்தும் அவற்றால் வருகிற துன்பங்களுள் அழுந்துவாரென்பதும், அறத்தைச் செய்து அறக்கடலாகிய கடவுளது அடியாகிய புணையைப் பற்றியே

வினைப பொருளும இனபமுமாகிய பிறவிக கடலைககடததல கூடு மெனபதும, கடவுள தனவயததனாதல, தூயவுடமபினனாதல, இயறகையுணர்வினனாதல, முற்றுமுணர்தல, இயலபாகவே பாசங களினீங்குதல, பேரருளுடைமை, முடிவிலாறறலுடைமை, வரமபி லினபமுடைமை எனனும எணவகைபபட்ட † குணங்களையுடை யவனெனபதும, அததகைய குணங்களையுடைய கடவுளது அடிகளை மனததால நினைததும வாககால வாழததியும தலையால வணங்குபவரே பிறவியை ஒழிபபாரெனபதும, அவவாறனறி உலகியலவை நினைப பவர பிறவியை ஒழியாரெனபதும இங்கு அறியததககவைகளாம.

## ௨. வானசிறப்பு.

அஃதாவது அககடவுளது ஆணையால உலகமும அதறகு உறுதி யாகிய அறம பொருளினபங்களும நடததறகு ஏதுவாகிய மழையி னது சிறபபு அதிகார முறைமையும இதனாலே விளங்கும

நீரின றமையா துலகெனின யாரயாரக்கும
வானின றமையா தொழுக்கு. (௰)

(இ - ள) யாரயாரககும - எவவகை மேமபட்டாரககும, நீர - நீரை, இனறு - இலலாமல, உலகு - உலகியலானது அமையா தெனின - பொருநதாதாயின, ஒழுககு - அநநீரினது நடுவே நீங்காத ஒழுககமும, வான - மழையை, இனறு - இலலாமல, அமை யாது - பொருநதாது, எ - று

---

† அணிமா (அணுமாபபோலாதல), மகிமா (மகததுவமாதல), கரிமா (தனனுடல கணடிபபினறியக கணடிபபுளளவாறை யுருவ விலலவனாதல), லகிமா (இலகுததுவமாதல), பிராததி (வேணடுவன வடைதல), பிராகாமியம (நிறையுளளாதல), ஈசததுவம (ஆடசியுள ளாதல), வசிததுவம (எலலாந தனவசமாகக வலலனாதல) என்ன எடடு மாம [இவறறை அட்டமாசிததியெனப.] அனறி வரமபின ஞானம, வரமபில காடசி, வரமபிலினபம, வரமபிலாறறல, நாமமினமை, கோததிரமினமை, ஆயுவினமை, இடையூறினமை எனபனவுமாம்.

இம்மையிலே அனுபவிக்கப் படுவனவாதலிற் பொருளின்பங் களை உலகிய லென்றார். நடுவே நீங்காத ஒழுக்கமாவது எக் காலங்களிலும் எவ்விடங்களிலும் தண்ணீர் உளதாதல். நீரின் றமையா துலகெனபது எல்லாராலுந் தெளியப்படுதலின அது போல வொழுக்கும் வானின் றமையாமை தெளியப்படுமென்பார் 'நீரின் றமையா துலகெனின்' எனறார். இதனை நீரையின்றி யமையா துலகாயின் எத்திறத்தாராகும் மழையையின்றி ஒழுக்கம் நிரம்பாதென உரைப்பாருமுளர்.

உலகத்திலுள்ள எல்லா உயிர்களும் சீவித்திருப்பதற்கு இன்றி யமையாதனவாகிய எல்லா உணவுப் பொருள்களையும் உண்டாக்கி, அவ்வுணவுப் பொருள்களை உண்ணத்தகும பக்குவத்திற சமைத்து, அவ்வுணவுகளை யுண்பவர்க்குத் தானும் உணவாய் நிற்பதும் மழையே யாகுமென்பதும்; அம்மழை பெய்யவேண்டுங் காலத்துப் பெய்யாது பொய்க்குமாயின் உணவின்மையால் பசியால் உயிர்கள் இறக்குமென பதும்; மழை இடையறாது பெய்தலால் உயிர்கள் நிலைபெற்று வருகின் றன வெனபதும்; அதனால் அம்மழைதான் உயிர்களுக்கு அமிர்த மென்று அறியப்படுந் தன்மையுடைத் தாகுமெனபதும்; பூமியின் கண் வாழ்வாரைப் பெய்யாது நின்று கெடுப்பதும், அவ்வாறு கெட் டார்க்குத் துணையாய்ப் பெய்து முன கெடுத்தாற்போல எடுப்பதும் மழையேயெனபதும்; மழை பெய்யாவிடில் புல்லின தலையையுங் காணுதல் அரிதெனபதும்; கடலினகண் வாழுமுயிர்கள் பிறத்தற்கும் மணிமுதலானவை உண்டாதற்கும் மழையே காரணமாதலால், அம் மழை பெய்யாவிடில் கடலும் தனனியல்பு குறையுமென்பதும்; அம்மழை பெய்யாதாயின் தேவர்களுக்கும் இவ்வுலகத்திலே செய் யப்படுகிற திருவிழாவும பூசையும் நடவாவெனபதும; உலகத்தில் தானமும் தவமும் உண்டாகா வெனபதும் இந்த அதிகாரத்திலடங்கிய கருத்துக் களாம்.

## ௩.—நீத்தார்பெருமை.

அஃதாவது முற்றத்துறந்த முனிவரது பெருமை. வான் சிறப்பிற் கூறிய அறம் பொருள் இன்பங்களை உலகத்துக்கு உள்ளவாறு அறிவிப்பவர் அவராதலால் இஃது அதன்பின் வைக்கப்பட்டது.

**சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்**
**வகைதெரிவான் கட்டே யுலகு.** (எ)

(இ-ள்) உலகு-உலகமானது, சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம், என்று-என்று சொல்லப்பட்ட, ஐந்தின்-தன்மாத்திரைகள் ஐந்தனது, வகை-கூறுபாட்டை, தெரிவான்கட்டே-ஆராய்பவனது அறிவினிடத்ததே, எ-று.

அவற்றின் கூறுபாடாவன-நாற்றம் சுவை ஒளி ஊறு ஓசையென்னும் ஐந்தும், அவற்றிலே தோன்றிய நிலம், நீர், தீ, காற்று, ஆகாயமென்னும் பூதங்கள் ஐந்தும், அவற்றின் கூறாகிய மூக்கு, வாய், கண், மெய், செவி யென்னும் ஞானேந்திரியங்கள் ஐந்தும், வாக்கு, பாணி, பாதம், பாயுரு, உபத்தமென்னும் கருமேந்திரியங்கள் ஐந்தும் ஆக இருபதுமாம். வகை தெரிவான என்றதனால் தெரிகின்ற புருடனும், அவன் தெரிதற்குக் காரணமாகிய புத்தி அகங்காரம் மனம் எனப்பட்டவையும் அவற்றிற்கு முதலாகிய மூலப் பகுதியும் கொள்ளப்படும். தத்துவம் இருபத்தைந்தனையும் தெரிதலாவது மூலப்பகுதி ஒன்றில் தோன்றிய தல்லாமையாலே அது பகுதியே யாவதல்லது விகுதியாகா தெனவும், அதனிடத்துத் தோன்றிய புத்தியும் அதனிடத்துத் தோன்றிய அகங்காரமும் அதனிடத்துத் தோன்றிய தன்மாத்திரைகளுமாகிய ஏழும் தத்தமக்கு முதலாயதனை நோக்க விகுதியாதலும் தம்மிடத்துத் தோன்றுவனவற்றை நோக்கப் பகுதியாதலு முடைய வெனவும், அவற்றினிடத்துத் தோன்றிய மனமும் ஞானேந்திரியங்களும் கருமேந்திரியங்களும் பூதங்களுமாகிய பதினாறும் தம்மிடத்துத்தோன்றுவன வின்மையின் விகுதியே யாவதல்லது பகுதியாகா வெனவும், புருடன் தான் ஒன்றில் தோன்றாமையாலும் தன்னிடத்துத் தோன்றுவன வின்மையாலும் இரண்டும் அல்லனெனவும் சாங்கிய நூலுள் ஓதியவாற்றால்

ஆராய்தல். இவ்விருபத்தைந்து தத்துவக்கூட்ட மல்லது உலகென வேறில்லை யென்று உலகினது இருப்பை உள்ளவாறறிதலால் உலகு அவனது அறிவினிடத்த தாயிற்று.

பிறப்பு வீடென்னும் இரண்டனது துன்ப வின்பக் கூறுபாடுகளை ஆராய்ந்தறிந்து அப்பிறப்பறுத்தற்கு இப்பிறப்பிலே* தமக்குரிய ஒழுக்கத்தின் கண்ணே நின்று துறந்தவரது பெருமையே இவ்வுலகில் உயர்ந்ததெனபதும்; அவர் பெருமையை இத்தகையதென்று அளவிட்டுச் சொல்ல முடியாதென்பதும்; ஐம்பொறிகளையும் தத்தம் புலன்களிலே செல்லாமற் காப்பவரே உண்மைத் துறவிகளாவரென்பதும், அன்னவரே † இயமம், நியமம், ஆதனம், பிராணயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதியென்னும் செயற்கரியவற்றைச் செய்யவல்லவராவரென்பதும்; அவரது பெருமையை

* தமக்குரிய வொழுக்கத்தின் கண்ணே நின்று துறத்தலாவது — தத்தம் வருணாச்சிரமங்களுக்கு உரிய ஒழுக்கங்களில் தப்பாமல் நடக்கப் புண்ணியம் வளரும், புண்ணியம் வளரப் பாவந் தேயும், பாவந் தேய அறியாமை நீங்கும், அறியாமை நீங்க இது நித்தியம் இஃது அநித்தியம் என்கிற பகுத்தறிவும் நிலையில்லாத இம்மை மறுமையின்பங்களில் வெறுப்பும் பிறவித் துன்பங்களும் தோன்றும், அவை தோன்ற மோட்சத்தில் ஆசையுண்டாம், அஃது உண்டாகப் பிறவிக்குக் காரணமாகிய வீண் முயற்சிகளெல்லாம் நீங்கி மோட்சத்துக்குக் காரணமாகிய யோக முயற்சி உண்டாம், அஃது உண்டாகத் தத்துவ ஞானம் பிறந்து எனதென்பதாகிய மமகாரமும் நானென்பதாகிய அகங்காரமும் விடும் ஆதலின், இவ்விரண்டு பற்றுக்களையும் இம்முறையே வெறுத்து விடுதலாம்.

† (க) இயமம்-கொலை, களவு, இச்சை, பொய், இவற்றினீங்கிப் புலனடங்கி யிருத்தல்.

(உ) நியமம் - தவம், தூய்மை, தத்துவ நூலோர்தல், மனமுவந்திருத்தல், தெய்வம் வழிபடல். (தவம் - மனம் பொறி வழிபோகாது நிற்றற்பொருட்டு விரதங்களால் உண்டி சுருக்கலும், கோடைக்காலத்தில் வெயிலில் நிற்றலும்

## நீத்தார் பெருமை

அவர்களைப் பார்க்கச் சொல்லிய மந்திரங்களைக் கண்கூடாகக் காட்டுமென்பதும், அவர் அருளினாலே சொன்னாலும் கோபத்தினாலே சொன்னாலும் அவ்வச்சொல் அப்பயனைக் கொடுத்தே விடுமென்பதும் அவரது கோபம் தாமுள்ள அளவு கணமேயாயினும் கோபிக்கப்பட்டவராலே தடுத்தல் அரிதென்பதும், எல்லாவுயிர்களின் மேலும் செவ்விய தண்ணளியை விரதமாகக்கொண்டு நடத்தலினாலே அந்தணரென்று சொல்லப்படுவோர் அறவோராகிய இவரேயென்பதும் இங்கு அறியத்தக்கவைகளாம்.

மாரிகாலத்திலும் பனிக்காலத்திலும் நீரில் நிற்றலும் முதலிய செய்கைகளை மேற்கொண்டு தவறாமல் தம் முயிர்க்கு வருந் துன்பங்களைப் பொறுத்தலும், அந்நிலை பிறவுயிர்கள் தமக்குத் துன்பமிழைத்த காலத்தும் அவைகளுக்குத் தாம் துன்பஞ்செய்யா தொழிதலுமாம்)

(௬) ஆசனம் சுவத்திகம் (அஃதாவது தொடைக்கும் முழங்காலுக்கும் நடுவே இரண்டுள்ளங்கால்களையும் செலுத்தி நேராயிருத்தல்

கோமுகம் (அஃதாவது சக்கனப்பக்கத்தில் இருகாற்பரட்டையும் மாறவைத்து அவ்விருகால் பெருவிரலைக் கைப் பிடித்திருத்தல். சக்கனம் - தொடையின் உட்பக்கம்.)

பதுமம் (அஃதாவது இருதொடை மேலும் இரண்டுள்ளங் காலை மாறித் தோன்றவைத்தல்)

வீரம் (அஃதாவது வலத்தொடையில் இடக்காற்பரட்டைச் சேர்த்து இருமாந்திருத்தல்)

கேசரி (அஃதாவது பீசத்தின் கீழ்ச் சீவனியிடத்துப் பரட்டைவைத்து இடமுழங்கையை முழந்தாளில் வைத்து அங்குலி விரித்து நாசியினுனியைப் பார்த்திருத்தல். சீவனி - சீவநாடி. அங்குலி - விரல்.)

## ச. அறன்வலியுறுத்தல்.

அஃதாவது அம்முனிவரால் அறிவிக்கப்பட்ட மூன்றான அறமானது மற்றைப் பொருளின்பங்கள் போலாகாமல் இம்மை மறுமை வீடெனனும் மூன்றையுந் தருதலால் அவற்றினும் வலியுடைத்தென்பதை நாட்டுதல். அதிகாரமுறைமையும் இதனாலே விளங்கும்.

வீழ்நாள் படாஅமை நன்றாற்றி னஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல. (அ)

பத்திரம் - (அஃதாவது பீசத்தின்கீழ்ச் சீவனியிடத்துப் பாட்டை வைத்து அவ்விருபதத்தையும் இருகையால் இறுகப்பிடித்து அசையாதிருத்தல்.)

முத்தம் (அஃதாவது இடப்பாற்பரட்டாற் சீவனியை யழுத்தி வலக்காற்பரடு அப்பரட்டின்கீழ் அழுந்த விருத்தல்.)

மயூரம் (அஃதாவது முழங்கையிரண்டும் உந்திப்புறத்தி லழுந்தப் புவியிற் கையூன்றிக் கால்நீட்டித் தலைநிமிர்ந் திருத்தல்.)

சுகம் (அஃதாவது சுகமும் திடமும் எவ்வாறிருக்கின் எய்துமோ அவ்வாறிருத்தல்.)

(ச) பிராணாயாமம் - பிராணவாயுவை இரேசக பூரக கும்பகஞ் செய்தல். (அஃதாவது பிராணவாயுவை வெளியே விட்டு உள்ளே யிழுத்துச் சமப்படுத்தி அடக்கல்.)

(ரு) பிரத்தியாகாரம் - உபாதியை நீக்கி உண்ணோக்கல் (உபாதி - தேகசம்பந்தங்களில் ஐயம் வந்தால் அவற்றுள் மனஞ் செல்லாமல் மறுத்தல்.)

(௬) தாரணை - கண்டம், இதயம், நெற்றி, கபாலம், நாபி இவற்றி லொன்றிற் சந்ததம் சிந்தைவைத்தல்.

(எ) தியானம் - சப்தாதி ஐம்புலன்களையும் அடக்கி யோகஞ் செய்தல்.

(அ) சமாதி - இந்திரிய முதலிய தத்துவச் சேட்டைகட் கேதுவாய் யாக்கையுள்ளிருந்து அவற்றோடு கூடினும் அவற்றிற் பற்றின்றி யிருக்கும் ஆன்மாவாகிய தன்னைத் தான் காண்டல்.

## அறன்வலியுறுத்தல்

(இ - ள்.) வீழ்நாள் - செய்யாது கழியுநாள், படாமை - டாகாமல், நன்று - அறத்தை, ஒருவன் ஆற்றின் - ஒருவன் செய்வானாகில், அஃது - அச்செயல், வாழ்நாள் - அவன் சரீரத்தோடு கூடி வாழுநாள், வழி - வரும் வழியை, அடைக்கும் கல் - வாராமல் அடைக்குங் கல்லாம், எ - று.

அவிச்சை (அநாதியாய அஞ்ஞானம்), அவ்வவிச்சைபற்றிவரும் 'நான்' என்னும் அகங்காரம், அவ்வகங்காரம் பற்றிவரும் 'எனக்கு இது வேண்டும்' என்னும் அவா, அவ்வவாபற்றி அப்பொருளின்மேற் செல்லும் ஆசைப்பெருக்கம், அவ்வாசை நிறைவேறாதவிடத்து அப்பொருளையுடையாரிடத்துண்டாகும் வெறுப்பு என்னும் ஐவகைக் குற்றங்களால் வரும் நல்வினை தீவினை என்னும் இருவகை வினைகளும் உள்ளவரைக்கும் உயிர் உடம்போடுங் கூடிநின்று அவ்விரு வினைகளின் பயன்களாகிய இன்பதுன்பங்களை அனுபவிக்கும் ஆதலால் அக்காலமுழுதும் 'வாழுநாள்' எனப்பட்டது. இக்குறளால் அறம் வீடுபயக்குமென்பது சொல்லப்பட்டது.

ஒருவனுக்கு அறஞ்செய்தலின் மேற்பட்ட ஆக்கமுமில்லை, அதனை மயக்கத்தால் மறந்துவிடுதலின் மேற்பட்ட கேடுமில்லை யென்பதும்; தருமஞ்செய்பவன் தனக்கியலும் வகையால் இடைவிடாமல் அது செல்லுமிடங்களிலெல்லாம் (மனவாக்குக் காயங்களால்) செய்தல் வேண்டுமென்பதும்; அவ்வாறறஞ்செய்பவன் தன் மனத்தினிடத்துக் குற்றமில்லாதவனாயிருக்கவேண்டுமென்பதும்; மனத்திலே குற்றமுடையவனாகியபோது அதன்வழிப்பட்ட வாக்கினாலும் காயத்தினாலும் செய்யப்படுகிற அறங்களிலே பயனில்லையென்பதும்; பொறாமை ஆசை கோபம் கடுஞ்சொல் என்னும் இந்நான்குமின்றிச் செய்யப்படுவதே அறமாகுமென்பதும்; அறத்தினைப் பின்னர்ச் செய்வோமென்றிராது நாடோறுஞ் செய்யவேண்டுமென்பதும்; அவ்வாறு செய்த வறம் இவ்வுடம்பினின்று உயிர்போங்காலத்து அதற்கு அழிவில்லாத துணையாகுமென்பதும்; இல்லறத்தோடு பொருந்திவரும் இன்பமே இன்பமாகுமென்பதும்; அதனோடு பொருந்தாது வருவனவெல்லாம் துன்பந்தருவனவாகு மென்பதும் இங்கு அறியத்தக்கவைகளாம்.

பாயிரம் முற்றிற்று.

# இல்லறவியல்.

## ௫. இல்வாழ்க்கை.

அஃதாவது இல்லறத்தை விதிக்கப்பட்ட வழியிலே நின்று செலவனே நடத்துவதற்குத்தகுந்த துணையாகிய கற்புடை மனைவியோடு கூடி வாழ்தல். இந்நிலை அறஞ்செய்தற்குரிய இருவகை நிலையுள் முதலாதலின், இஃது அறன்வலியுறுத்தலின்பின் வைக்கப்பட்டது.

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்
கைம்புலத்தா றோம்ப றலை (௫)

(இ-ள்) தென்புலத்தார் பிதிரர், தெய்வம்-தேவர், விருந்து-அதிதியர், ஒக்கல்-சுற்றத்தார், தான்-தானு, என்ற-என்று சொல்லப்பட்ட, ஐம்புலத்து-ஐந்திடத்துஞ் செய்யப்படுகின்ற, ஆறு-அறநெறியை, ஓம்பல்-வழுவாமல் செய்தல், தலை-இல்வாழ்வானுக்குச் சிறப்புடைய அறமாம், எ-று.

பிதிரராவார் படைப்புக்காலத்து அயனாற்படைக்கப்பட்டதோர் கடவுட்சாதி. அவர் இறந்துபோனவர்களுடைய புத்திரராகியோராற் செய்யப்படுங் கருமங்களினால் திருப்தியடைந்து இறந்தவர்க்கும் அவரினத்தார்க்கும் நேர்ந்த துர்க்கதியை நீக்கி நற்கதியை அளிப்பர். அவர்க்கு இடம் தென்றிசையாகலின் 'தென்புலத்தார்' என்றார். தெய்வமென்பது சாதியொருமை. விருந்தென்பது புதுமை. அஃது இங்கு ஆகுபெயராய் புதியராய் வந்தார்மேல் நின்றது. அவர் இருவகையர், முன்பழக்கத்தினாற் குறித்துவந்தாரும் அஃதின்மையாற் குறியாது வந்தாருமென. எல்லா அறங்களும் தானுளனாய் நின்று செய்யவேண்டுதலின் தன்னை யோம்பலும் அறனாயிற்று. என்ற என்பது விகாரமாயிற்று. ஆங்கு அசை. ஐவகையும் அறஞ்செய்தற்கிடனாகலின் 'ஐம்புலம்' என்றார். இவ்வைம்புலத்திற்கும் ஐந்து கூறு வேண்டுதலால் அரசனுக்கு இறைப்பொருள் (வரிப்பணம்) ஆறிலொன்றாயிற்று என்பதறிக.

இவ்வாறு ஒருவன் பிரமசாரி வானப்பிரத்தன் சந்நியாசியென்னும் மூவர்க்கும் அவர்கள் தம் ஒழுக்கவழிகளில் நிலைபெறத் துணையாவானென்பதூஉம், ஆதாரமானவர் விட்டவர்க்குப் பாவமொழிய அவர்க்கு ஆகாரமாயின வேண்டுவன செய்தலும், வறுமைப்பட்டவர்க்கு உணவு முதலியன கொடுத்தலும், இறந்தவர்க்கு நீர்க்கடன் முதலியன செய்து நல்லகதியை அடைவித்தலும் வழுக்கடவனென்பதூஉம், அங்ஙனம் பொருள் சம்பாதிக்கும்போது பாவத்தைக் கருதி நல்வழியில் சம்பாதித்த அப்பொருளை முன்சொல்லப்பட்ட தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் பிரமசாரியானவன் பிரத்தன் சந்நியாசி ஆதாரமானவர் விடப்பட்டார் வறியார் இறந்தார் என்னும் ஐம்பதின்மருக்கும் உதவியபின் உண்ணக்கடவனென்பதூஉம், பழியஞ்சாதீட்டிய பாவத்தால் வந்த பொருளைப் பகுத்துண்டால் அப்பாவமானது பொருளுடையானையும் பாவமானது தன்னை அடைந்து சந்ததி வழியுமென்பதூஉம்; மனையாளும் கணவனும் மனவொருமையுடன் செய்யும் அறமே பயன்படுமென்பதூஉம், அவ்வாறு செய்யப்படும் இல்லறம் துறவறத்துக்கு மேலானதென்பதூஉம், ஒத்தவரைப் போல்வாராகிய தவஞ்செய்வாருக்கு நேரிடும் பசி முதலான இடையூறுகளை நீக்காது அவரைத் தமது தவநெறியிலே நடத்துவானும் தன் ஒழுக்கத்தினின்றும் தவறாமையின் அத்தவத்தினருக்கும் மேலானவனாவானென்பதூஉம், பின்னே தேவனாய்ப் பிறந்து தேவபோகத்தை அனுபவிப்பது திண்ணமென்பதூஉம் இங்கு அறியத்தக்கவைகளாம்.

## சா. வாழ்க்கைத்துணைநலம்.

அஃதாவது அவ்வில்வாழ்க்கைக்குத் துணையாகிய இல்லாளது நன்மை அதிகார முறைமையும் இதனாலே விளங்கும்.

> மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
> வளத்தக்காள் வாழ்க்கைத் துணை. (க)

(இ - ள்.) மனைத்தக்க - இல்லறத்துக்குத்தக்க, மாண்புடைய ளாகி - மாட்சிமையுடையவளாகி, தற்கொண்டான - தன்னைக்கொண்

டவனது, வளத்தக்காள் - வருவாய்க்குத்தக்க வாழ்க்கையை யுடைய வளே, வாழ்க்கைத்துணை - ஒருவனது இல்வாழ்க்கைக்குத் தகுந்த துணையாவாள், எ - று.

நற்குணங்களாவன துறந்தவரை யுபசரித்தலும், விருந்தினரை யுண்பித்தலும், வறியாரிடத்தே யருளுடைமையும் முதலாயின. நற்செய்கைகளாவன வாழ்க்கைக்கு வேண்டும் பொருள்களறிந்து காப்பாற்றிவைத்தலும், உண்டி சமைத்தல் வல்லமையும், உலக நடையை யறிந்து, அதற்குத் தக்கபடி நடத்தலும் முதலாயின. வருவாய்க்குத்தக்க வாழ்க்கையாவது வரவுக்குத் தக்கபடி செலவு செய்தல். இதனால் இவ்விரண்டு நன்மைகளுஞ் சிறந்தனவென்பது கூறப்பட்டது.

இல்லறத்துக்குத் தகுந்த நற்குண நற்செய்கைகள் மனையாளிடத்தே இல்லையாயின் அவவில்வாழ்க்கை செல்வத்தால் எவ்வளவு பெருமையை உடையதாயிருப்பினும், பிரயோசனமில்லையென்பதும்; ஒருவன் பெறத்தக்குரிய பொருள்களுள் கற்புடைய மனையாளினும் உயர்வாகிய பொருள் வேறில்லையென்பதும், அத்தகைய கற்புடைய மனையாள் தன் கணவனையே தெய்வமாகத் தொழுவாளென்பதும்; அன்னவள் பெய்யென மழை பெய்யுமென்பதும்; அன்னவள் கற்பினின்றும் வழுவாமல் தன்னைக் காத்துத் தன் கணவனையும் உண்டி முதலியவற்றாற் பேணி இருவரிடத்தும் நன்மையமைந்த புகழ் நீங்காமற் காப்பாளென்பதும்; கணவரைப் பூசித்த பெண்டிர் சுவர்க்கமடைந்து தேவர்களாலே பூசிக்கப்படுவரென்பதும்; கற்புடைய பெண்டிரை மனைவியராக அடையாதார்க்குப் பெருமித நடை இல்லையென்பதும்; மனையாளது நற்குண நற்செய்கைகளே ஒருவனுக்கு நன்மையென்றும், நல்ல புத்திரரைப் பெறுதலே அந்நற்குண நற்செய்கைகளுக்கு நல்லாபரணமென்றும் அறிந்தோர் சொல்லுவரென்பதும் இங்கு அறியத்தக்கவைகளாம்.

## எ. புதல்வரைப்பெறுதல்.

அஃதாவது இல்வாழ்வாரால் இயல்பாக இறுக்கப்படும் கடன் மூன்றனுள் முனிவர் கடன் கேள்வி (வேதாத்தியயனம்) யாலும் தேவர் கடன் வேள்வியாலும், தென்புலத்தார்கடன் புதல்வரைப் பெறுதலாலும் அல்லது செலுத்தக் கூடாமையால், அக்கடன் செலுத்தற்பொருட்டு மேற்கூறிய இல்லாளது நற்குண நற்செய்கைகளுக்கு நல்ல அணிகலமென்று நவிலத்தகுமாற்றால் அறியவேண்டுவன அறிதற்குரிய ஆண்மக்களைப் பெறுதல். அதிகார முறைமையும் இதனானே விளங்கும்;

> எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்
> பண்புடை மக்கட் பெறின். (உ)

(இ - ள்.) பழிபிறங்கா - பிறரால் பழிக்கப்படாத, பண்புடை - நற்குணங்களையுடைய, மக்கள் - புதல்வரை, பெறின் - ஒருவன் பெறுவானாயின், அவனை, எழுபிறப்பும் - ஏழுவகைப்பட்ட பிறப்பிலும், தீயவை - துன்பங்கள், தீண்டா - சேரமாட்டா, எ - று.

அவனது தீவினை வளராது தேய்தற்குக் காரணமாகிய நல்வினைகளைச் செய்யும் புதல்வரைப் பெறுவானாயின் என்றவாறாயிற்று. தந்தைதாயர் தீவினை தேய்தற்பொருட்டு அவரைக் குறித்துப் புதல்வர் செய்யுந் தானதருமங்களுக்கு அவர் நற்குணங் காரணமாகலின் 'பண்புடைமக்கள' என்றார். எழுபிறப்பாவன தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்பன. இப்பிறப்புக்கள் மொத்தத்தில் எண்பத்துநான்கு நூறாயிரம் யோனி பேதங்களை யுடையன. அவற்றின் விவரம் பின் வருமாறு:—தேவர் - பதினான்கு நூறாயிரம், மனிதர் - ஒன்பது நூறாயிரம், விலங்கு - பத்து நூறாயிரம், பறவை - பத்து நூறாயிரம், ஊர்வன - பதினொரு நூறாயிரம், நீர்வாழ்வன - பத்து நூறாயிரம், தாவரம் - இருபது நூறாயிரம். எழுபிறப்பு - ஏழுதலைமுறையுமாம்.

ஒருவன் பெறும் பேறுகளுள் அறிய வேண்டுமவைகளை அறிதற்குரிய புதல்வரைப் பெறுதலல்லது பிறிதொன்றில்லை யென்பதும்; புதல்வர் சம்பாதித்த பொருள் தம்மைக் குறித்து அவர்செய்யும்

கலவியினாலே தம்மிடத்து வருமாதலால் தம்முடைய புதல்வரைத் தம்பொருளென்று அறிஞர் சொல்லுவரென்பதூஉம், தம்முடைய மக்களது சிறு கையால் அளாவப்பட்ட சோறு பெற்றோர்க்கு அமிர்தத்தினும் மிக இனிமையுடைத்தாயிருக்குமென்பதூஉம், மக்களது உடம்பைத் தொடுதல் ஒருவனது உடம்புக்கும் அவரது சொற்களைக் கேட்டல் செவிக்கும் இன்பத்தைத் தருமென்பதூஉம், மக்களது மழலைச்சொல் பெற்றோரால் குழலிசையையும் வீணையின் இசையையும் விட இனிதாகக் கருதப்படுமென்பதூஉம், சபையில் கல்வியில் வல்லவனென்று முற்பட்டிருக்கச் செய்தலே தந்தை தன்மகனுக்குச் செய்யும் நன்மையாகுமென்பதூஉம், இவனுடைய தந்தை இவனைப் பெறுதற்கு என்ன தவம் செய்தானோ வென்று அறிவாளர் சொல்லுஞ் சொல்லை உண்டாக்குதலே மகன் தந்தைக்குச் செய்யும் உதவியாகுமென்பதூஉம், தம்மக்களது அறிவுடைமையைக்கண்டு பெற்றோர் மகிழ்வதைவிட உலகத்தார் அதிகமாக மகிழ்வரென்பதூஉம் தன்மகனைக் கல்விகேள்விகளில் நிறைந்தானென்று அறிவுடையோர் சொல்லக்கேட்ட தாயானவள் தான் அவனைப் பெற்றபொழுது அடைந்த மகிழ்ச்சியைவிட அதிக மகிழ்ச்சியை அடைவாளென்பதூஉம் இங்கு அறியத்தக்கவைகளாம்.

## ௮ அன்புடைமை.

இஃதாவது அம்மனைவி புதல்வர் முதலிய தொடர்புடையாரிடத்துப் பிரியமுடைமை. அதிகார முறைமையும் இதனாலே விளங்கும். இல்லறம் இனிது நடத்தலும் பிறவுயிர்களின்மேல் அருள் பிறத்தலும் அன்பின் பயனாதலால் இது வேண்டப்பட்டது. வாழ்க்கைத் துணைமேல் அன்பில்லாத வீட்டது இல்லறம் இனிது நடவாமை, * "அறவோர்க் களித்தலு மந்தண ரோம்பலுந், துற

* இதன் பொருள் பிரமசாரிகளுக்கு வேண்டியன கொடுத்தலும், வானப்பிரத்தரைக் காத்தலும், சந்நியாசிகளை உபசரித்தலும் தொன்றுதொட்டு வரும் ஒப்பற்ற சிறப்பினையுடைய அதிதிகளை முன் சென்று அளவளாவி யுண்பித்தலும் ஆகிய இவைகளை யிழந்த என்னை, (எ-று).

வோர்க் கெதிர்தலுந் தொல்லோர் சிறப்பின், விருந்தெதிர் கோடலு மிழந்த வென்னை'' என்னும் சிலப்பதிகாரச் செய்யுளாலும், அவ் வன்பினால் அருள் பிறத்தல், † 'அருளென்னு மன்பீன் குழவி'' என்னும் குறட்பகுதியானாலும் அறிக.

அறத்திற்கே யன்புசார் பென்ப வறியார்
மறத்திற்கு மஃதே துணை. (௬)

(இ-ள்) அறியார் அறியாதவர் சிலர், அன்பு அன்பானது, சார்பு துணையாவது, அறத்திற்கே-அறத்திற்கே, என்ப என்று சொல்லுவர், மறத்திற்கும் சினத்தை நீக்குவதற்கும், அஃதே அவ்வன்பே, துணை துணையாவது, எ-று.

ஒருவன் செய்த பகைமையால் உள்ளத்தில் சினந்தோன்றிய விடத்து அவனை நட்பாகக் கருதி அவன்மேல் அன்பு செய்ய அச் சினம் நீங்குமாதலின் மறத்தை நீக்குதற்குந் துணையாமென்பார் 'மறத்திற்கும் அஃதே துணை' என்றார், "துன்பத்திற்கியாரே துணை யாவார்" என்றாற்போல 'மறத்திற்கும் அஃதே துணை' என்றதற்குப் பெண்டிர் புதல்வர் முதலாயினோரை நல்வழிப்படுத்தும் பொருட்டு அவரைக் குறித்துச் செய்யப்படும் கோபத்துக்கும் அன்பே காரண மாமெனப் பொருளுரைப்பினும் ஆம்.

" நிக்கிரகங் கட்டானு நேசத்தா லீசன் செய்வ
தக்கிர மத்தாற் குற்ற மடித்துத்தீர்த் தச்சம் பண்ணி
இக்கிர மத்தி னாலே யீண்டற மியற்றி டென்பன்
எக்கிர மத்தி னாலு மிறைசெய லருளே யென்றும்
தந்தைதாய் பெற்ற தத்தம் புதல்வர்க டஞ்சொ லாற்றின்
வந்திடா விடினு றுக்கி வளாரினா லடித்துத் தீய
பந்தமு மிடுவ ரெல்லாம் பார்த்திடிற் பரிவே யாகும்
இந்தநீர் முறைமை யன்றோ வீசனார் முனிவு மென்றும்."

என்னும் சிவஞான சித்தித் திருப்பாசுரங்களின் கருத்தை வுண ஓர்த்துணர்க. இதனால் அன்பினது சிறப்புக் கூறப்பட்டது.

† எகூ - பொருள் செயல்வகை.

தம்மால் அன்புசெய்யப்பட்டவர் துன்பங் கண்டவிடத்தே அன்புடையார் கண் பொழிகின்ற கண்ணீரானது உள்ளேயிருக்கிற அன்பினை எல்லாரும் அறியத் தூற்றுமென்பதும், அன்பிலார் பிறர்க்கு ஒருசிறிதும் பயன்படாமல் தம்பொருள்கள் எல்லாவற்றையும் தாமே வைத்திருப்பாரென்பதும், அன்புடையாரோவென்றால் *ததீசிமுனிவர்போலத் தம்மெலும்பையும் பிறர்க்குக் கொடுப்பரென்பதும், பெறுதற்கரிய மக்களுயிர்க்கு உடம்போடு உண்டாகிய சம்பந்தத்தை அன்போடு பொருந்துதற்கு வந்த வழியின் பயனென்று அறிவுடையோர் சொல்லுவரென்பதும், ஒருவனுக்குச் சம்பந்தமுடையவரிடத்தே செய்யப்பட்ட அன்பானது அத்தன்மையினாலே பிறரிடத்தும் பிரியமுடைமையைத் தருமென்பதும்; அப் பிரியமுடைமைதான் இவனுக்கு யாவரும் நட்பினரென்று சொல்லப்படுகிற பெருஞ்சிறப்பைத் தருமென்பதும், இவ்வுலகத்திலே இல்வாழ்க்கையிலே நின்று மனைவியோடும் மக்களோடும் சுற்றத்தாரோடும் கூடி இன்பமுற்றவர் தம்மாலே செய்யப்பட்ட வேள்வித் தொழிலினாலே தேவராய்ப் பிறந்து அங்கே பேரின்பத்தை அனுபவிப்பரென்பதும், அவ்விதம் அனுபவிப்பது அவர் அன்புடையவராய் இல்லறத்தோடு பொருந்திய வழியின் பயனாகக் கருதப்படுமென்பதும், எலும்பில்லாத புழுக்களின் உடம்பை வெயிலானது சுடுதல்போல அன்பில்லாத உயிர்களை அறக்கடவுள் சுடுமென்பதும், மனத்தில் அன்பில்லாத உயிர் இல்லறத்தோடுகூடி வாழ்தல் கடினமான நிலத்தில் உலர்ந்தமரம் தளிர்த்ததை ஒக்குமென்பதும், உடம்பினகத்திலே இல்லறத்துக்கு அங்கமாகிய அன்பில்லாதவர்க்கு மற்றைப் புறவுறுப்புகளால் பயனில்லையென்பதும்; அன்பு முதலாக அதன்வழி நின்ற உடம்பே உயிர்நின்ற உடம்பாகுமென்பதும், அன்பில்லாத உடல் உயிரற்ற உடலாகுமென்பதும் இங்கு அறியத்தக்கவைகளாம்

* விருத்திராசுரனை வெல்லும்பொருட்டுத் தம்முதுகெலும்பைத் ததீசிமுனிவர் இந்திரனுக்குக் கொடுத்தாரென்பது கதை.

## ௯. விருந்தோம்பல்.

அஃதாவது முன் அறிமுகமில்லாத அதிதிகளும் அவ்வறிமுகத்தின் வந்த அதிதிகளுமாகிய இருவகை விருந்தினையும் ஆதரித்தல். † தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்று ஐவகையோரை ஓம்புதலில் முன்னைய இரண்டும் காணப்படாதவாறு நின்று செய்வன ஆகலானும் பின்னைய இரண்டும் பிறர்க்குக் கொடுத்தல் அல்லாமையானும், இடைநின்ற விருந்தோம்பல் சிறப்புடைத்தாய் இல்லறங்களுக்கு முதலாயிற்று. வேறுபாடில்லா அன்புடைய கணவனும் மனையாளும் கூடியல்லது செய்யப்படாமையின், இஃது அன்புடைமையின்பின் வைக்கப்பட்டது.

இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன். (எ)

(இ-ள்) வேள்விப்பயன் - விருந்தினரை உபசரித்தலாகிய வேள்வியின்பயன், இனைத்துணைத்து என்பது இன்னவளவின தென்பதாகிய, ஓரளவினையுடைத்தன்று, விருந்தின் அவ்விருந்தினரது, துணை - தகுதியளவே, துணை அதற்கு அளவாம், எ-று.

‡ பிரமயாகம், தெய்வயாகம், பூதயாகம், பிதிரியாகம், மானுடயாகம் என்னும் ஐம்பெருவேள்வியில் மானுடயாகம் எனப்படுவது விருந்தோம்பலாகலின் 'வேள்வி' என்றும், பொருளளவு சிறிதாயினும் தக்கார்க்கு உதவப்படின் பெரிதாமாகலின் 'இனைத்துணைத் தென்பதொன்றில்லை' என்றுங் கூறினார். இதனால் விருந்தோம்புவார் இம்மை மறுமை இரண்டினும் எய்தும் பயனுக்குக் காரணங் கூறப்பட்டது.

† சஉ-ம் பக்கம் பார்க்க.

‡ பிரமயாகம் - வேதமோதல்; தெய்வயாகம் - ஓமம் வளர்த்தல்; பூதயாகம் - காகபலி முதலியன ஈதல்; பிதிரியாகம் - தர்ப்பணம் முடித்தல்; மானுடயாகம் - இரப்போர்க்கு உணவு முதலியன ஈதல்.

† "உறக்குந் துணைய தோராலம் வித்தீண்டி
‡ இறப்ப நிழற்பயந் தாஅங்—கறப்பயனுந்
தான்சிறி தாயினுந் தக்கார்கைப் பட்டக்கால்
வான்சிறிதாப் போர்த்து விடும்"

என்னும் நாலடியார் அறன்வலியுறுத்தற் பாசுரத்தின் கருத்தினை உணர்க.

ஒருவன் மனைவியோடும் வீட்டிலிருந்து பொருள்களைக் காப்பாற்றி வாழ்வது விருந்தினரைப் பேணி அவர்க்கு உபகாரஞ் செய்தற்பொருட்டே யாகுமென்பதும், அவ்விதம் செய்யாதவிடத்தே வீட்டிலிருத்தலாலும் பொருள் காப்பாற்றலாலும் உண்டாகிற துன்பச் செயல்களுக்குப் பயனில்லையென்பதும், உண்ணப்படும் பொருள் அமிர்தமே யெனினும் தன்னை நோக்கிவந்த விருந்தினர் தன்வீட்டின் புறத்திருக்கத் தானே தனியுண்ணுதல் கூடாதென்பதும், தன்னை நோக்கிவந்த விருந்தை நாடோறும் உபசரித்து வருபவனது வாழ்க்கை கெடாது மேன்மேற் கிளைக்குமென்பதும், ஞானவொழுக்கங்களால் மேம்பட்ட விருந்தினரைக் காப்பவனது வீட்டில் திருமகள் தன் செல்வ நலவழிப்படுதலைக்கண்டு மன மகிழ்ந்து வாழ்ந்துகொண்டிருப்பாளென்பதும், முன்னே விருந்தினரை உண்பித்துப் பின் மிகுந்ததை உண்பவனது நிலம் நன்றாய விளையுமென்பதும், தன்னிடத்தே வந்த விருந்தை உபசரித்துப் பின்வரும் விருந்தைப் பார்த்துத் தான் அதனோடுண்ண இருப்பவன் மறுபிறப்பிலே தேவுலகத் தேவர்களுக்குச் சிறந்த விருந்தாவானென்பதும், விருந்தினரை உபசரித்து அதன்பயனை அடையாதவர் பொருளை வருந்திக்காத்துப் பின்பு அதனை இழந்து இரங்குவாரென்பதும், விருந்தோம்பலை இகழ்ந்து பேதைமை செல்வத்துள் வறுமையாகுமென்பதும், தூரத்திற் கண்டவிடத்தே முகமலர்ச்சி காட்டலும், அருகணுகி சமீபத்திலே வந்தவிடத்து இன்சொற் சொல்லுதலும், அது கேட்டு உடன்பட்டபோது உபசாரஞ் செய்தலும் ஆகிய குணங்கள் விருந்தோம்புவார்க்கு அவசியம் இருக்க வேண்டுமென்பதும், அக்குணங்கள் மூன்றனுள் முதலாகிய முக

† உறக்கும் - கிள்ளியெடுக்கும் ‡ இறப்ப - மிகவும்.

மலர்ச்சியில்லாதபோது விருந்தினர் தூரத்திலிருந்தே வாடி நீங்குவ ரென்பதும்; அதனால், தீண்டியவிடத்தல்லது வாடாத அனிச்சப் பூவினும் விருந்தினர் மெல்லியராயிருப்பரென்பதும் இங்கு அறியத் தக்கவைகளாம்.

---

## ௰. இனியவைகூறல்.

அஃதாவது மனத்திலுள்ள மகிழ்ச்சியை வெளிப்படுப்பன வாகிய இனிய சொற்களைப் பேசுதல். இது முகந்திரிந்து நோக்கக் குழையும் இயல்பினையுடைய விருந்தினரை ஆதரிப்பார்க்கு இன்றி யமையாததாகலின், விருந்தோம்பலின்பின் வைக்கப்பட்டது.

அல்லவை தேய வறம்பெருகு நல்லவை
நாடி யினிய சொலின். (௯)

(இ-ள்) நல்லவை - பொருளாற் பிறர்க்கு நன்மை பயக்குஞ் சொற்களை, நாடி - மனத்தால் ஆராய்ந்து, இனிய - இனிமையாக, சொலின் - ஒருவன் சொல்லுவானாயின், அவனுக்கு, அல்லவை தேய - பாவங்கள் குறைய, அறம் பெருகும் - தருமம் வளரும், எ-று.

தேய்தல் - தன் பகையாகிய அறம் வளர்தலின் தனக்கு நிலை யின்றி மெலிதல். * "தவத்தின்முன் னில்லாவாம் பாவம்" என்ப தும் இப்பொருளையே யுடைத்து. நல்ல சொற்களை நாடிச் சொல்லு மிடத்தும் கடியவாகச் சொல்லின், அறனாகா தென்பதாம். இதனால் இனியவை கூறுவார்க்கு மறுமைப்பயன் கூறப்பட்டது.

அன்போடு கலந்து வஞ்சனை யில்லனவா யிருக்கின்ற அறத் தினை உணர்ந்தார் வாய்ச்சொற்களே இன்சொற்களாகுமென்பதும; கண்டபொழுதே முகமலர்ந்து அதனோடு இன்சொல்லையு முடைய னாகப் பெற்றால் அது மனமகிழ்ந்து ஒருவற்கு வேண்டிய பொருளைக் கொடுத்தலினும் நன்றென்பதும்; இன்சொற் கலவாத ஈகை தரும மாகா தென்பதும்; இனியசொல்லை யுடையவர்க்கு யாவரும் நட்பின ராவரென்பதும்; அதனால் அவர் எல்லாச் செல்வமும் பெறுவரா தல்

---

* நாலடியார்.

லால் அவர்க்குத் துன்பத்தைச் செய்யும் வறுமை யில்லை யென்பதும்; பெரியோரிடத்தே வணக்கமுடையவனுகி எல்லாரிடத்தும் இனிய சொல்லை யுடையவனு யிருத்தலே ஒருவனுக்கு ஆபரணமாகுமென்பதும்; அவ்வினிய சொல்லானது அவனுக்கு இம்மைக்கு நீதியை யுண்டாக்கி மறுமைக்கு அறத்தையும் பயக்குமெனபதும்; இருபிறப்பிலும் இன்பத்தைத் தருமெனபதும்; பிறர் கூறிய இன்சொல் தனக்கு இன்பந்தருதலை உள்ளபடி அனுபவித் தறிகின்றவன் தனக்கேயன்றிப் பிறர்க்கும் இனிதாகாத கடுஞ்சொல்லைச் சொல்லானெனபதும்; இன்சொல் இருக்க வன்சொற் சொல்லுதலானது கையிலிருக்கும் இனியகனியைத் தின்னுது காய்க்காயைத் தின்பதை நிகாக்குமெனபதும் இங்கு அறியத்தக்கவைகளாம்.

## ௰க. செய்ந்நன்றியறிதல்.

அஃதாவது தனக்குப் பிறர் செய்த நன்மையை மறவாமை. இயவை கூறி இல்லறம் வழுவாதார்க்குச் செய்ந்நன்றி கொல்லல் ஈடேற்றமில்லாத குற்றமாதலின் அதனைப் பாதுகாத்து நீக்குதற் பொருட்டு இஃது இனியவைகூறலின்பின் வைக்கப்பட்டது.

> எழுமை யெழுபிறப்பு முள்ளுவர் தங்கண்
> விழுமந் துடைத்தவர் நட்பு (எ)

(இ - ள்) தங்கண் - தம்மிடத்து உண்டாகிய, விழுமம் - துன்பத்தை, துடைத்தவர் - நீக்கினவருடைய, நட்பு - சிநேகத்தை, எழுமை - வினைப்பயன் தொடரும் எழுமையினையுடையா, எழுபிறப்பும் - தம் எழுவகைப் பிறப்பிலும். உள்ளுவர் - நல்லோர் நினைப்பர், எ - று.

எழுமை யென்பது வினைப்பயன் தொடரும் எழுபிறப்பினை; அது *வளையாபதியுட் கண்டது. வினைப்பயன எழுவகைப் பிறப்பும் தொடருமென்பதை ௬௬-ம் பக்கம் 'ஒருமையுள்' என்ற

* வளையாபதி - ஓர் இலக்கிய நூல். அது பஞ்சகாவியங்களுள் ஒன்று. அவை குண்டலகேசி, சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி என்பன.

[illegible]ட்டகத்துக் குறளிலும், † 'ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற், கெழுமையு மேமாப் புடைத்து' என்னும் குறளிலும், ‡ 'ஒருமைச் செயலாற்றும் பேதை யெழுமையுந், தான்புக் கழுந்து மளறு' என்னும் குறளிலும் காண்க. எழுவகைப் பிறப்பின் விவரம் க௫ம் பக்கத்திற் சொல்லப்பட்டது. எழுமை யெழுபிறப்பு மென்றதற்கு ஏழேழு தலைமுறையும் எனினுமாம். விரைவு தோன்றத் 'துடைத்தவர்' என்று இறந்தகாலத்தாற் கூறினார், விரைவாய் வருபவனை 'வந்தேனென்று' கூறினாற் போல. நினைத்தலாவது துன்பந் துடைத்தலால் அவர்கட்டு உள்ளதாகிய அன்பு பிறப்புத்தோறுந் தொடர்ந்து அன்புடையராதல். இதனால் நன்றி செய்தாரது நட்பு விடலாகாதென்பது கூறப்பட்டது.

தனக்கு முன்னேருதவியுஞ் செய்யாதிருக்க ஒருவன் பிறனுக்குச் செய்த உதவிக்கு மண்ணுலகத்தையும் விண்ணுலகத்தையும் ஈடாகக் கொடுத்தாலும் ஒத்தல் அரிதென்பதும், ஒருவனுக்கு ஆபத்து வந்தவளவிலே ஒருவன் செய்த உதவி சிறிதாயினும் அக்காலத்தை நோக்க நிலவுலகினும் பெரிதாகக் கருதப்படுமென்பதும்; பிரதிபலன் கருதாது செய்யப்படும் உதவியின் நன்மை கடலினும் பெரிதாகக் கருதப்படுமென்பதும், பெரியோர் தமக்குத் தினையளவதாகிய உதவியை ஒருவன் செய்தானாயினும் அதனைப் பனையளவதாக நினைப்பாரென்பதும், கைம்மாறான உதவி காரணத்தாலும் பொருளாலும் காலத்தாலும் முன்செய்த உதவியளவின்றி அவ்வுதவி செய்யப் பெற்றுக்கொண்டவரது தகுதியளவினதாகுமென்பதும், துன்பக்காலத்துத் தனக்கு உதவியானவரது நட்பை விடலாகாதென்பதும், அறிவொழுக்கங்களிற் குற்றமற்றவர் நட்பை மறத்தலாகாதென்பதும், பிறர் செய்த நன்மையை ஒருநாளும் மறத்தலாகாதென்பதும், அவர் செய்த தீமையை அப்பொழுதே

† இதன் பொருள் ஒருவனுக்குத் தான் ஒருபிறப்பின்கண் கற்ற கல்வி எழுபிறப்பிலும் சென்று உதவும், என்று.

‡ இதன் பொருள் மூடனானவன் வரும் பிறவிகளிலெல்லாம் தான் புகுந்து அழுந்துதற்கிடமாகிய நரகத்தை இவ்வொரு பிறப்புள்ளே செய்துகொள்ள வல்லவனாவான், என்று.

மறந்துவிடவேண்டுமென்பதும்; தமக்கு முன்னொரு நன்மை செய்தவர் பின் எத்தகைய கொடிய தீமையைச் செய்தாலும் அவர் செய்த நன்மை ஒன்றையும் நினைக்க அத்தீமைகளெல்லாம் கெடுமென்பதும்; † பெரிய அறங்களைச் சிதைத்தவர்க்கும் பாவத்தில் நீங்கும் வழியுண்டு, ஆனால் ஒருவன் செய்த உதவியைக்கெடுத்தவனுக்கு அப்பாவத்தினீங்கும் வழியில்லையெனபதும் இங்கு அறியத்தக்கவைகளாம்.

## ௧௨. நடுவுநிலைமை.

அஃதாவது பகைவர் அயலார் நட்பினரென்னும் மூவகையோரிடத்தும் அறத்தின வழுவாது ஒப்பநிற்கும நிலைமை. இது நன்றி செய்தவரிடத்து அந்நன்றியை நினைத்தபோது கெடுமாதலின அவ்விடத்துங் கெடலாகாதெனற்கு, செய்ந்நன்றியறிதலின்பின வைக்கப்பட்ட

சமன்செய்து சீர்தூக்குங் கோல்போலமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி. (௮)

(இ - ள்.) சமன் செய்து - முன்னே தான சமனாகிநின்று, சீர் தூக்கும்-பின தன்னிடத்து வைக்கப்பட்ட பாரத்தை அளவுசெய்வதாகிய, கோல்போல் - துலாக்கோல்போல, அமைந்து - இலக்கணங்களாலே நிறைந்து, ஒருபால்-ஒருபக்கத்திலே, கோடாமை-சாயாமை, சான்றோர்க்கு - அறிவால் நிறைந்தோர்க்கு, அணி - அழகு, (எ-று.)

கோலுக்குச் சொல்லப்பட்ட சமன செய்தலும் சீர்தூக்கலும் சான்றோருக்கும், சான்றோருக்குச் சொல்லப்பட்ட அமைதலும் ஒருபாற் கோடாமையும் கோலுக்கும் கூட்டி, சான்றோர் சீர்தூக்கலாவது வாதி பிரதிவாதிகளாலே அறிவிக்கப்பட்டவற்றை முறையால் உள்ளபடி அறிதலாகவும், ஒருபாற் கோடாமையாவது அவ்

† பெரிய அறங்களைச் சிதைத்தலாவது பசுக்கொலை (கோஹத்தி), சிசுக்கொலை (சிசுஹத்தி), பிராமணவதை (பிரமஹத்தி) முதலிய பாதகங்களைச் செய்தல்.

வுள்ளவாற்றை மறைக்காமல் பகைவர், அயலார், நட்பினரென்னும் மூவகையோருக்கும் ஒப்பச் சொல்லுதலாகவும் உரைக்க. இலக்கணங்களால் அமைதல் இருவழியும் ஏற்பன கொள்க.

நடுவுநிலைமை எல்லா அறங்களுள்ளும் சிறந்ததென்பதூஉம்; நடுவுநிலைமையுடையவனது செல்வம் பிறர் செல்வம்போல் அழிவின்றி அவன் சாமளவும் அவனுக்கு உறுதியாய் நின்று பின் அவன் வழியிலுள்ளார்க்கும் உறுதியாகுமென்பதூஉம்; நடுவுநிலைமையில்லாது வருஞ் செல்வம் தீங்கன்றி நன்மை பயவாதென்பதூஉம்; ஒருக்கால் நன்மை பயப்பதுபோலத் தோன்றினும் அதனைக் கொள்ளலாகாதென்பதூஉம்; இவர் நடுவுநிலைமையுடையவர் இவர் நடுவுநிலைமையில்லாதவரென்பதை அவரவரது சந்ததியால் அறியலாமென்பதூஉம்; கேடும் பெருக்கமும் இப்போதைய முயற்சியால் வருவனவாக நினைத்துக் கேடு வாராமையைக் குறித்தும் பெருக்கம் வருதலைக் குறித்தும் ஒருபக்கத்திலே சாயாமல், அவற்றுக்குக் காரணம் பழவினையேயன்றி இச்சாய்தலல்லவென உண்மையுணர்ந்து நடுவுநிலையராயிருக்கை அறிவுடைமைக்கு அழகாகுமென்பதூஉம்; ஒருவன் தன்னெஞ்சம் நடுவுநிற்றலை ஒழிந்து நல்லவல்லவற்றைச் செய்ய நினைக்குமாயின் அந்நினைவைத் தனக்குப் பின்வரக்கிடக்குந் தீமையை முன்னறிவிக்கும் குறியாக அறியக்கடவனென்பதூஉம்; நல்லாக நின்று அறத்தின் கண்ணே தங்கினவனது வறுமையை உயர்ந்தோர் வறுமையென்று கருதாரென்பதூஉம்; சபையினர் வாயிலுமேலே நீதிநூல் கூறிய விதிப்படி வரையறுத்துச் சொல்லினும் அவன் மனம் ஒரு பக்கத்திலே சாய்ந்திருக்குமாயின் அச்சொல் நடுவுநிலைமையாகாதென்பதூஉம்; வியாபாரஞ் செய்பவர் கொள்வது அதிகமும் கொடுப்பது குறைவும் ஆகாமல் பிறர் பொருளையும் தம்பொருள்போல ஒப்பநாடி நடுவுநிலைமையுடையவராய் வியாபாரஞ் செய்யவேண்டுமென்பதூஉம் இங்கு அறியத்தக்கவைகளாம்.

## கங. அடக்கமுடைமை.

அஃதாவது மெய், மொழி, மனங்கள் தீயவழியிற் செல்லாமல் அடங்குதலுடையவனாதல். அது பிறர் குற்றம்போலத் தன் குற்றமுங் காணும் நடுவுநிலைமை யுடையவனுக்கு உரித்தாதலால் அந் நடுவுநிலைமையின் பின் வைக்கப்பட்டது.

ஒருமையு ளாமைபோ லைந்தடக்க லாற்றின்
எழுமையு மேமாப் புடைத்து (௬)

(உ-ள்) ஆமைபோல் ஆமையானது தனது தலையையும் கால்களை நான்கினையும் ஓடு புகுத்தாமல் தன் உடம்பினுள் அடக்குமாறு போல, ஒருவன், ஐந்து தனது மெய் வாய் கண் மூக்குச் செவியென்னும் ஐம்பொறிகளையும் ஒருமையுள் தனது மனமாகிய ஒன்றில், அடக்கல் ஆற்றின் பாவம் புகுத்தாமல் அடக்க வல்லனாயின் அவ்வடக்கம் அவனுக்கு, எழுமையும் எழுபிறப்பின்கண்ணும், ஏமாப் புடைத்து காவலாந் தன்மை யுடையதாம், எ-று.

ஒரு பிறப்பிலே செய்யப்பட்ட வினையின் பயன் எழுபிறப்புந் தொடருமென்பது இதனால் அறிக. இதனால் காயத்தின் அடக்கங் கூறப்பட்டது.

ஒருவனை அடக்கமாகிய அறம் பின் தேவருலகத்திற் கொண்டு போய் விடுமென்பதும், அடங்காமையாகிய பாவம் நரகத்திற் செலுத்துமென்பதும், மனிதருயிர்க்கு அடக்கத்தின் மிக்க செல்வமில்லை யென்பதும், ஆதலால் அவ்வடக்கத்தை ஒவ்வொருவரும் உறுதிப் பொருளாகக் காக்கவேண்டுமென்பதும், ஒருவன் மனவாக்குக் காயங்களைத் தன்வசப்படுத்தி நல்வழியால் அடங்கி நடப்பானாகில் அவ்வடக்கம் அவனுக்கு மேம்பாட்டைத் தருமென்பதும், ஐம்பொறிகளாலும் ஐம்புலன்களை யனுபவித்துக்கொண்டே அடங்கி நடப்பவனது அடக்கம் மலையினும் மிகப்பெரிதாமென்பதும்; பெருமைப்பாடில்லாது அடங்குதல் எல்லார்க்கும் ஒப்ப நன்றே யெனினும் அது செல்வரிடத்து உளதாயின் சிறந்து விளங்குமென்பதும்; நாவடக்கமில்லாதவர் சொற்குற்றத்தினை யடைந்து துன்புறுவரென்பதும், ஒருவன் நல்லவாகச் சொல்லும் சொற்களின்கண்ணே

பிறர்க்குத் துன்பத்தை விளைக்கும் தீயசொல் ஒன்றாயினும் உண்டாவதாயின் அவனுக்குப் பிறவறங்களாலுண்டான நன்மைகளெல்லாம் தீமைகளாய்விடு மென்பதும்; ஒருவன் உரைத்த கடுஞ்சொல் அதனைக் கொண்டவன் மனத்தில் என்றும் மாறாதிருக்கு மென்பதும்; மனத்தின்கண் கோபம் தோன்றாமற் காத்துக் கல்வி யுடையவனாகி அடங்கியவனை அறக்கடவுள் அடையுமென்பதும் இங்கு அறியத் தக்கவைகளாம்.

## கச. ஒழுக்கமுடைமை.

அஃதாவது தத்தம் வருணத்திற்கும் நிலை(ஆசிரமத்து)க்கும் சொல்லப்பட்ட நடையினை யுடையராதல். இது மெய்ம் முதலிய அடங்கினோர்க்கல்லது முடியாதாகலின் அடக்க முடைமையின் பின் வைக்கப்பட்டது.

உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றுங்
கல்லா ரறிவிலா தார். (௰)

(இ - ள்) உலகத்தோடு, ஒட்ட - பொருந்த, ஒழுகல் - ஒழுகுதலை, கல்லார் - கல்லாதார், பல கற்றும் - பல நூல்களையும் கற்றாராயினும், அறிவிலாதார் - அறிவில்லாதவர், எ - று.

உலகத்தோடு பொருந்த ஒழுகுதலாவது உயர்ந்தோர் பலரும் நடந்தவகையால் நடத்தல். அறநூல் சொல்லியவற்றுள் இக்காலத்திற்கு ஏற்காதவைகளை விட்டு, அதிலே சொல்லப்படாதவைகளில் ஏற்குமவைகளைத் தழுவி வருதலால் அவையும் அடங்குதற்கு 'உலகத்தோ டொட்ட' என்றும், கல்விக்குப்பயன் அறிவும் அறிவிற்குப் பயன் ஒழுக்கமும் ஆதலின், அவ்வொழுகுதலைக் கல்லாதார் 'பல கற்றும் அறிவிலாதார்' என்றுங் கூறினார். ஒழுகுதலைக் கற்றலாவது - பெரியோ ரொழுக்கத்தைக் கைக்கொண்டு அப்பியசித்தல். "பழையன கழிதலும் புதியன புகுதலும், வழுவல கால வகையி னானே" என்னும் நன்னூற் சூத்திரத்தின் கருத்தினை இங்கு உணர்க. தற்காலத்தில் ஆடவரில் அநேகரும் அவர்வழி நிற்கும் பெண்டிரில்

பலரும் இவ்வரியவாக்கின் அரும்பொருளை அறியும் வகையால் அறியாதவராய் அதனை ஆதாரமாகக்கொண்டு அந்நிய நாட்டு அநாகரீக அநாசாரங்களை அநியாயமாய் அநுட்டித்து அயர்கின்றனர். அன்னோரை அறிவுறுத்தல் அறிஞருக் குரியதோர் ஆன்ற கடனாகும்.

ஒழுக்கம் உயர்ந்தார்க்கும் இழிந்தார்க்கும் சமமாகச் சிறப்பினைத் தருமென்பதும்; உயிர் எல்லாப் பொருளினுஞ் சிறந்ததாயினும் அது இருவினைகளை யியற்றி இன்பத்துன்பங்களை எய்துங்கொள்வது போலாகாது இன்பமொன்றையே உண்டாக்குவதனால் ஒழுக்கம் உயிரினும் சிறந்ததாகு மென்பதும்; அறங்கள் † பலவற்றையும் ஆராய்ந்து இவற்றுள் இருமைக்குந் துணையாவது யாதென்று மனத்தை அடக்கித் தேர்ந்தாலும் துணையாய் முடிவது ஒழுக்கமேயாதலால் ஒருவன் அவ்வொழுக்கத்தினை ஒன்றாலும் அழிவுபடாமற் பேணி வருந்தியும் காக்கக்கடவனென்பதும்; ஒவ்வொருவரும் தத்தம் வருணத்திற்கேற்ற ஆசாரமுடையவரா யிருத்தல்வேண்டுமென்பதும்; இழிகுலத்திற் பிறந்தாரும் ஒழுக்கத்தால் உயர்குலத்தாராவரென்பதும்; உயர்குலத்திற் பிறந்தாரும் ஒழுக்கமிலராகில் தாழ்ந்தகுலத்தின ராவரென்பதும்; பொறாமையுள்ளவனிடத்துச் செல்வமில்லாமைபோல ஒழுக்கமில்லாதவனிடத்து உயர்ச்சியில்லையென்பதும்; பெரியோர் ஒழுக்கமில்லாமையால் வருங் குற்றத்தை யறிந்து அவ்வொழுக்கத்திற் குறையாரென்பதும்; ஒருவனுக்கு ஒழுக்கத்தினால் மேன்மையும் அஃதில்லாமையால் இழிவும் உண்டாகுமென்பதும்; ஒருவனுக்கு நல்லொழுக்கம் அறத்திற்குக் காரணமாய் இருமையினும் இன்பம் பயக்குமென்பதும்; தீயொழுக்கம் பாவத்திற்குக் காரணமாய் இருமையினும் துன்பம் பயக்குமென்பதும்; நல்லொழுக்கமுள்ளவர்கள் மறந்தும் தீச்சொற்களைச் சொல்லாரென்பதும் இங்கு அறியத்தக்கவைகளாம்.

† அறங்கள் முப்பத்திரண்டு. அவையாவன:—ஆதுலர்க்குச் சாலை (ஏழைகட்குத் தங்குமிடம்), ஓதுவார்க்குணவு (ஓதுவார் - தேவாராதி அருட்பாக்களை விதிமுறையில் ஓதுவதையே தொழிலா

## ௧௫. பிறனில்விழையாமை.

அஃதாவது காமமயக்கத்தால் பிறனுடைய மனைவியை விரும்பாமை. இஃது ஒழுக்கமுடையாரிடத்தே நிகழ்வதாகலின், ஒழுக்கமுடைமையின்பின் வைக்கப்பட்டது.

அறன்கடை நின்றாரு ளெல்லாம் பிறன்கடை
நின்றாரிற் பேதையா ரில். (௨)

(இ-ள்) காமங்காரணமாக, அறன்கடை - பாவத்தின்கண், நின்றாருள்ளெல்லாம் - நின்றார் எல்லாருள்ளும், பிறன்கடை நின்றாரின் - பிறன் மனையாளை இச்சித்து அவன் வாயிலினிடத்தே சென்று நின்றார்போல, பேதையார் - மூடர், இல் - இல்லை, (எ-று).

அறத்தினின்றும் நீக்கப்பட்டமையின் 'அறன்கடை' என்றார். அறன்கடை நின்று பெண்வயிற் செல்வாரும் பரத்தையரோடும் இழிகுல மகளிரோடும் கூடி இன்பந் துய்ப்பவரும்போல, அறமும் பொருளும் இழத்தலேயன்றிப் பிறன்கடை நின்றார் அச்சத்தால் தாம் கருதிய இன்பமும் துய்க்கப்பெறாராதலின் 'பேதையாரில்' என்றார். இதனால், இன்பமுமில்லை என்பது பெறப்பட்டது.

க்கொண்டவர் பண்டாரங்கள்) அறுசமயத்தார்க்கு உண்டி [வைணவம், சைவம், சாக்தம் (சக்திசமயம்), சௌரம் (சூரியசமயம்), காணபதம் (கணபதிசமயம்), கௌமாரம் (குமாரசமயம்) என்பன அறுசமயங்களாம்] பசுவுக்கு வாயுறை (வாயுறை உணவு) சிறைச்சோறு, ஐயம் (பிச்சை) தின்பண்டம் நல்கல், அறவைச்சோறு (அறவை - அநாதம்), மகப்பெறுவித்தல், மகவுவளர்த்தல், மகப்பால் வார்த்தல், அறவைப்பிணஞ் சுடுதல், அறவைத்துரியம் (துரியம் - உடை), சுண்ணம், நோய்மருந்து, வண்ணார், நாவிதர், கண்ணாடி, காதோலை, கண்மருந்து, தலைக்கெண்ணெய், மணமுடிப்பித்தல், பிறர்துயர்காத்தல், தண்ணீர்ப்பந்தல், மடம், தடாகம், சோலை, ஆவுரிஞ்சுதறி, (பசுவுரிஞ்சும் குற்றுக்கல்), விலங்கிற்குணவு, ஏறுவிடுதல் (மணமுடிக்க வருபவன் பிடிக்கும்படி இடம் விடுதல்), விலைகொடுத்து உயிர்காத்தல், கன்னிகாதானம் என்பனவாம்

பிறன் மனைவியை இச்சித்தொழுகும் அறியாமை அறநூலையும் பொருணூலையும் ஆராய்ந்தவரிடத்து இல்லையென்பதும், தம்மைச் சந்தேகியாதவரது மனைவியினிடத்துப் பாவஞ்செய்தலை விரும்புவோர் உயிருடையவராயிருந்தாலும் அவர் அடைதற்பாலதாகிய அறம் பொருளின்பங்களாகிய பயன்களை அடையாமையால் இறந்தவரேயாவரென்பதும்; கௌதம முனிவரது மனைவியாகிய அகலிகையை விரும்பிச் சோரந் துங்கின அத்தீச் செய்கையினாலே தனது பெருமை கெட்டு இழிவை யடைந்தாற்போல, பிறன்மனைவியை விரும்பிச் சேர்வோன் எவ்வளவு பெருமையுடையவனாயினும் அதனையெல்லாம் இழந்து சிறுமையடைவானென்பதும், பகை பாவம் அச்சம் பழி என்னும் இந்நான்கு குற்றங்களும் அவனை விட்டு ஒருகாலும் நீங்காவென்பதும், பிறன் மனைவியை விரும்பாதவனே அறமாகிய இயல்போடுகூடி இல்வாழ்வானென்று சொல்லப்படுவானென்பதும்; பிறன்மனைவியைச் சேராதவர்களே இம்மண்ணுலகத்திலும் விண்ணுலகத்திலும் எல்லா நன்மைகளையும் அடைதற்கு உரியவர்களாவார்களென்பதும் இங்கு அறியத்தக்கவைகளாம்.

## கசு. பொறையுடைமை.

அஃதாவது காரணம்பற்றியாவது அறியாமையாலாவது ஒருவன் தமக்குத் தீங்குசெய்த விடத்துத் தாமும் அதனை அவனிடத்துச் செய்யாது பொறுத்தலையுடையராதல். நல்லொழுக்கத்தினின்றும் நீங்கிப் பிறன்மனையாளை விரும்புதல் முதலிய அகாரியங்களைச் செய்தவர்களிடத்தும் பொறுக்கவேண்டுமென்றற்கு, இது பிறனில்விழையாமையின்பின் வைக்கப்பட்டது.

**உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்**
**இன்னாச்சொ னோற்பாரிற் பின். (௰)**

(இ - ள்.) **உண்ணாது** விரதங்களினாலே உணவைவிட்டு, **நோற்பார்** - தம்மை அடைந்த நோயைப் பொறுப்பவர், **பெரியர்** - எல்லாரினும் பெரியவராவர், அவர் பெரியவராவது, **பிறர்** - அயலார்,

சொல்லும் - தம்மைச் சொல்லும், இன்னாச் சொல் - வெறுக்கப் படுஞ் சொற்களை, நோற்பாரின் - பொறுப்பவரின், பின், எ - று.

பிறர் - இங்கே அறிவில்லாதவர். விரதங்களினால் உணவை விட்டுத் தம்மையடைந்த பசி நோய் முதலியவற்றைப் பொறுத்துக் கொள்ளாமைக்கு ஏதுவாகிய யாதொன்றனாலும் இருவகைப்பற்று களோடிருந்தே பொறுத்தலால் 'இன்னாச்சொல் நோற்பாரிற்பின்' என்றார். பிறர்சொல்லும் வெறுக்கப்படும் சொற்களைப் பொறுப்பவர் தவஞ்செய்வாரினும் பெரியராகச் சொல்லலாயிற்று. இதனால் பிறர் வருத்தமுண்டாகச் சொல்லிய வார்த்தைகளைப் பொறுத்தல் சொல்லப்பட்டது.

தம்மைக் கொலை செய்வதையொத்த குற்றஞ் செய்தாரையும் பொறுப்பதும், பொறுப்பதுடன் அவர்களைக் காப்பதும் சிறந்த தருமமாகுமென்பதும்; பிறர் செய்த குற்றத்தைத் தன்னால் தண்டிக்கக் கூடிய காலத்திலேயும் பொறுத்தல் வேண்டுமென்பதும்; அக் குற்றத்தை நினையாமல் அப்பொழுதே மறத்தல் அப்பொறுமையினும் மிக நல்லதென்பதும்; விருந்தினர்க்கு உதவாதவன் ஏராளமான பொருளையுடையவனாயிருப்பினும் தரித்திரனாகவே இகழப்படுதல் போல், அறிவீனர் செய்த குற்றத்தைப் பொறாதவன் எவ்வளவு வலிமையுடையவனாயிருப்பினும் வலிமையில்லாதவனாகவே கருதப் படுவானென்பதும்; சகல நற்குணங்களுமாம் நிறையைப்பெற்ற ஒருவன் அந்நிறையுடைமை தன்னிடத்தினின்று நீங்காமையை வேண்டு வானாயின் அவன் பொறுமையுடையவனாயிருக்கவேண்டுமென்ப தும்; பிறன் தமக்குத் தீங்கு செய்தவிடத்துப் பொறாது அவனை வருத்தினவரை அறிவுடையோர் ஒருபொருளாக மனத்துக்கொள்ளா ரென்பதும்; அதனைப் பொறுத்தவரைப் பொன்னைப்போலப் போற்றுவரென்பதும்; தமக்குத் தீங்கு செய்தவனை வருத்தின வர்க்கு உண்டாவது வருத்திய அந்நாளொன்றிலும் நினைத்தது முடித்தோமென்று தருக்கியிருக்கும் பொய்யின்பமேயாக, அதனைப் பொறுத்தவர்க்கு உலகம் அழியுமளவும் புகழுண்டாமென்பதும்; செய்யத்தகாத கொடியவற்றைத் தனக்குப் பிறர் செய்தாராயினும் இப்பாவத்தினாலே இவர் மறுமையிலே எரிவாய் நரகத்திலே வீழ்

வாரேயென்றவருந்தத் தான் அறமல்லாத செயல்களைச் செய்யாதிருத்தல் ஒருவனுக்கு நன்றென்பதாம், மனச்செருக்கால் தம் மிடத்துத் தீயவற்றைச் செய்தபோது தாமும் வலியிட்டுத் தீயவற்றைச் செய்து தோல்வியடையாமல் தமது பொறுமையினாலே அவரை வெல்லக்கடவரென்பதும் இவ்வழியில் நடப்பவராய்க் கடுஞ்சொற்களைப் பொறுப்பவர் இல்வாழ்க்கையிலே இருந்தும் துறந்தவர்போலப் பரிசுத்தமான குணத்தையுடையவராவரென்பதும் இங்கு அறியத்தக்கனவாகும்.

## ௧௭ அழுக்காறாமை.

இதனுள் அழுக்காறென்பது ஒருசொல் அதன்பொருள் பிறராக்கம் பொறாமை என்பது. இப்பதம் சொல்லால் உடன்பாடாயிருப்பினும் பொருளால் எதிர்மறையை உணர்த்துகிறது. அழுக்கறுத்தல் என்னும் சொல் விகுதிகெட்டு முதனிலை திரிந்து அழுக்காறு என்றாயதால் இது முதனிலைதிரிந்த தொழிற்பெயர். பின் அழுக்காற்றைச் செய்யாமை யென்னும் பொருள்பட எதிர்மறை ஆகாரமும் மகர ஐகார விகுதியும் பெற்று அழுக்காறாமையென நின்றது. இப்பதம் சொல்லால் எதிர்மறையாயிருப்பினும் பொருளால் உடன்பாட்டை உணர்த்துகிறதையும் அறிக. இப்பொறாமையும் பொறைக்கு மறுதலையாகலின் இதனை விலக்குதற்கு இது பொறையுடைமையின்பின் வைக்கப்பட்டது.

அவ்விய நெஞ்சத்தா னாக்கமுஞ் செவ்வியான்
கேடு(ம்) நினைக்கப் படும். (௯)

(இ - ள்) அவ்விய நெஞ்சத்தான் பொறாமையுள்ள மனத்தையுடையவனது, ஆக்கமும் செல்வமும், செவ்வியான் - பொறாமையில்லாத மனத்தையுடையவனது கேடும் வறுமையும், நினைக்கப்படும் - ஆராயப்படும், எ - று.

உளவாயினென்பது குறைந்து நின்றது. பொறாமையானது தன்னை உடையானது செல்வத்தைக் கெடுத்து அவனை நரகத்திற

செலுத்திவிடுமென்னும் விதிக்கு மாறாகப் பொறாமையினாலே செல்வமும் பொறாமையில்லாமையினாலே கேடும் உண்டாகுதல் கூடாமையால் அறிவுடையார் இவை உண்டாதற்கு ஏதுவாகிய பழவினை யாதென்று ஆராய்வாராதலின் 'நினைக்கப்படும்' என்றார்.

† "இம்மைச் செய்தன யானறி நல்வினை
உம்மைப் பயன்கொல் ஒருதனி யுழந்தித்
திருத்தகு மாமணிக் கொழுந்துடன் போந்தது"

எனவும் (சிலப்பதிகாரம்)

"என்செயலாவதி யாதொன்று மில்லை யினித்தெய்வமே
உன்செயலே யென்றுணரப் பெற்றேனிந்த வூனெடுத்த
பின்செய்த தீவினை யாதொன்று மில்லைப் பிறப்பதற்கு
முன்செய்த தீவினை யோவிங்ங னேவந்து மூண்டதுவே."

(பட்டினத்தார்)

எனவும் நினைக்கப்பட்டவாறறிக.

ஒருவன் தன் மனதில் அழுக்காறென்னுங் குற்றமில்லாத இயல்பினைத் தனக்கு (௧௪-வது அதிகாரத்திலே) ஓதிய ஒழுக்க நெறிபோல உயிரிலும் சிறந்ததாகக் காப்பாற்றக் கடவனென்பதும்; யாவரிடத்தும் பொறாமையில்லாதிருத்தலே ஒருவனுக்குச் சிறந்த பேறாகுமென்பதும்; பொறாமையுடையவன் அறமும் பொருளு மில்லாதவனாவானென்பதும்; அறிவுடையோர் பொறாமை காரணமாகச் செல்வங் கல்வி முதலானவையுடையவரிடத்தே தீங்கு நினைக்கவும் சொல்லவும் செய்யவும் மாட்டாரென்பதும்; பொறாமையானது தன்னைக் கொண்டவனைப் பகைவர் கெடுக்கவேண்டாது தானே கெடுக்குமென்பதும்; பிறர் பேறுகண்டு பொறாமைப்படுதல் தன் பேறு மாத்திரமேயல்லாமல் தன் சுற்றத்தின் பேறுகளையும்

† இதன்பொருள்:—யானறிய இப்பிறப்பிற் செய்தனவெல்லாம் நல்வினையாகவும் இம்முழு மாணிக்கக்கொழுந்து போன்ற மனைவியுடன் நீ வந்து ஒருதுணையுமின்றித் தனியேயலைந்தது முற்பிறப்பிற் செய்த தீவினையின் பயன்தானோ என்பது.

இழுக்கச் செய்யுமெனபதும்; பொறாமையுடையவனை மூதேவி அடைவாளெனபதும்; பொறாமையானது தன்னையுடையவனைத் தரித்திரத்தைக் கொடுத்து நரகத்தில் தள்ளிவிடுமெனபதும; பொறாமைப் பட்டுச் செல்வம் பெற்றாரும் அஃதின்றி வறுமையுற்றாரும் இல்லையெனபதும இங்கு அறியத்தக்கவைகளாம்.

## ௧௮. வெஃகாமை.

அஃதாவது பிறர்க்குரிய பொருளை அபகரிக்க நினையாமை. பிறருடைமை கண்டவிடத்துப் பொறாமைப்படுதலே யல்லாமல் அதனைத் தான் அபகரிக்க நினைத்தலும் குற்றமென்றற்கு இஃது அழுக்காறாமையின்பின் வைக்கப்பட்டது.

அருள்வெஃகி யாற்றின்க ணின்றான் பொருள்வெஃகிப்
பொல்லாத சூழக் கெடும். (௬)

(இ - ள்) அருளவெஃகி - அருளாகிய அறவறத்தை விரும்பி, ஆற்றினகண் - அதறகு வழியாகிய இல்லறத்தினகண், நின்றான - நின்றவன, பொருளவெஃகி பிறர் பொருளை விரும்பி, பொல்லாத - அதனை வருவிக்கும குற்றவழிகளை, சூழ - எண்ண, கெடும் - கெடுவான, எ - று.

இல்லறவழியால் அறிவு முதிர்ந்தவிடத்தல்லது அறக்கக் கூடாமையால், அதனைத் துறவறத்திற்கு ஆறு என்றார். கெடுதல் - இல்லறமுந் துறவறமும ஒரு சேர விழுதல். எண்ணியவளவிலே கெடுமெனவே செயதாற் கெடுதல் சொல்லாமலே பெறப்பட்டது.

பிறர்க்குரிய பொருளைக் கொளளுதல் அறமல்லவெனவே நடுவுநிலைமை யில்லாமல் அவர் தனபொருளை ஒருவன அபகரித்தற்கு விரும்பின அவவிருப்பு அவன குடியைக் கெடச்செய்து பல குற்றங்களையும அப்போதே அவனுக்குக் கொடுக்குமெனபதும்; நடுவுநிலைமையல்லாமையை அஞ்சுவோர் பிறர் பொருளை அபகரித்தலினாலே தமக்கு வரும் பயனை விரும்பிப் பழிச்செயல்களைச் செய்யாரென்பதும்; பேரினபத்தை விரும்புவோர் சிற்றின்பத்தை விரும்பி அறமல்லாத செயல்களைச் செய்யாரெனபதும்; புலன்களை

யென்ற அறிவுடையோர் யாம் வறியமென்று கருதி அவ்வறுமை தீர்தற்பொருட்டுப் பிறர்பொருளை விரும்பாரென்பதும்; யாதொரு விடத்தும் பொருளை யிச்சித்துத் தீமை செய்யாமையே அறிவின் பயனென்பதும்; பிறன்பொருளை அனுபவிக்கும்போது அது நன்றாதலில்லை யாதலால் அப்பொருளை விரும்புதல் ஆகாதென்பதும்; பிறன் பொருளை விரும்பாமையே தன் செல்வங் குறையாமைக்குக் காரணமாகுமென்பதும்; இஃது அறனென்றறிந்து பிறன்பொருளை யிச்சியாத அறிவுடையாரைத் திருமகள் அடைவாளென்பதும்; ஒருவன் பின் விளைவதறியாது பிறன் பொருளை விரும்புவானாயின் அவ்விருப்பம் அவனுக்கு அழிவைத் தருமென்பதும்; அப்பொருளை விரும்பாமை அவனுக்கு வெற்றியைத் தருமென்பதும் அறியத்தக்கவைகளாம்.

## ௧௯. புறங்கூறாமை.

அஃதாவது காணாதவிடத்துப் பிறரை இகழ்ந்து பேசாமை. வாக்குக்குற்றம் மனக்குற்றத்தின் வழியாக வருதலால், இஃது அழுக்காறாமை வெஃகாமைகளின்பின் வைக்கப்பட்டது.

ஏதிலார் குற்றம்போற் றங்குற்றங் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னு முயிர்க்கு. (௰)

(இ - ள்) ஏதிலார் குற்றம்போல் - அயலாரைப் புறங்கூறுவார் அதற்கு அவர் குற்றங் காணுமாறுபோல, தம் குற்றம் - புறங்கூறலாகிய தமது குற்றத்தையும், காண்கிற்பின் - காணவல்லராயின், மன்னும் உயிர்க்கு - அவருடைய நிலைபெறுடைய வுயிர்க்கு, தீது உண்டோ - வருவதொரு துன்பமுண்டோ? (இல்லையென்றபடி), எ - று.

நடுவு நிலையில் நின்று ஒப்பக்காண்டலருமைநோக்கிக் 'காண்கிற்பின்' எனவும், கண்டவிடத்தே புறங்கூறுதலாகிய குற்றம் ஒழிதலினாலே பாவம் இல்லையாகவே வரும் பிறவிகளிலுந் துன்பம் இல்லையென்பது நோக்கி 'உயிர்க்குத் தீதுண்டோ' எனவுங் கூறினார். இதனால் புறங்கூறுதலை ஒழிதற்கு உபாயங் கூறப்பட்டது.

ஒருவன் அறனென்று சொல்லுவதுஞ் செய்யாது பாவங்களைச் செய்யுமாயினும், பிறனைப் புறங்கூறானென்று உலகத்தாரால் சொல்லப்படுதல் நன்றென்பதும், ஒருவனைக் காணாதவிடத்தே இகழ்ந்து பேசிக் கண்டவிடத்தே அவனோடு பொய்யாக மகிழ்தல் அறத்தையழித்துப் பாவத்தைச் செய்தலினுந் தீமையுடைத்தென்பதும், அவ்விதத்தால் உயிர்வாழ்தலினுஞ் சாதல் நன்றென்பதும், ஒருவன் நேரே ஒருவனை முன் [illegible] பின் இகழாதிருக்கக்கடவனென்பதும், புறங்கூறுவான் ஒருவன் அறத்தை நல்லதென்று சொல்லினும் அதனை மனப்பூர்வமாய்ச் சொல்லுகின்றானல்லனென்பது அவன் புறங்கூறுதலினாலே அறியப்படுமென்பதும், காணாதவிடத்துத் தன்னைக் குறித்துப் பிறரால் சொல்லப்பட்ட பழியைக் கேட்டவன் அப்பழியைச் சொன்னவனுக்கு அவனை மிகவும் வருத்தூட்டி அதிகமாகிய பழிகளை ஆராய்ந்து எதிரே சொல்லுவானென்பதும், கூடி மகிழும்படி இனியவாகச் சொல்லி அயலாரோடு சிநேகஞ் செய்யத் தெரியாதவர் புறங்கூறி உறவினரையும் பிரிப்பரென்பதும், பூமியானது புறங்கூறுவோனது உடலைத் தருமத்திற்காகவே சுமக்கின்றதென்பதும் இங்கு அறியத்தக்கவையாம்.

## ௨௰. பயனில்சொல்லாமை.

அஃதாவது தமக்கும் பிறர்க்கும் அறமும் பொருளும் இன்பமுமாகிய பயன்களை யொன்றும் பயவாத சொற்களைச் சொல்லாமை. பொய், குறளை, கடுஞ்சொல், பயனில்சொல் என வாக்கின்கண் நிகழும் பாவம் நான்கினுள், பொய் துறவோர்க்கல்லது ஏனையோர்க்குப் பற்றற விடக்கூடாமையால் அதனையொழித்து இல்வாழ்வாரால் விடக்கூடிய மற்றைய மூன்றினுள் கடுஞ்சொல் இனியவை கூறலாலும், குறளை புறங்கூறாமையாலும் விலக்கி, நின்ற பயனில்சொல் இதனால் விலக்குகின்றாராகலின் இது புறங்கூறாமையின்பின் வைக்கப்பட்டது.

**சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க**
**சொல்லிற் பயனிலாச் சொல். (௰)**

(இ - ள்.) சொல்லில் - சொற்களிலே, பயனுடைய - பிரயோசனமுடைய சொற்களை, சொல்லுக - சொல்லக்கடவர், சொல்லில் - சொற்களிலே, பயனிலாச்சொல் - பிரயோசனமில்லாத சொற்களை, சொல்லற்க - சொல்லாதிருக்கக்கடவர், (எ - று.)

சொல்லுக சொல்லில் பயனுடைய, சொல்லற்க சொல்லில் பயனிலாச் சொல் என்னும் இயலிரண்டு வாக்கியங்களிலும் சொல்லில் என்னும் பதம் மிகையாயினும் † சொற்பொருட்பின் வருநிலையென்னும் அணி நோக்கிவந்தது, * "வைகலும் வைகல் வரக்கண்டு மஃதுணரார், வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர், வைகலும் வைகற்றம் வாழ்நாண்மேல் வைகுதல், வைகலும் வைத்துணரா தார்" என்பதுபோல. இதனாலே சொல்லத்தகுவனவும் சொல்லத்தகாதனவும் நியமிக்கப்பட்டன.

அறிவுடையோர் பலருங் கேட்டு வெறுக்கும்படி பயனில்லாத சொற்களைச் சொல்லுபவனை எல்லாராலும் இகழப்படுவானென்பதும்; பயனில்லாத சொற்களை அறிவுடையார் பலர் முன்பே ஒருவன் சொல்லுதலானது விருப்பமில்லாகிய செயல்களைத் தன் சிநேகிதரிடத்தே செய்தலினும் தீதென்பதும்; பயனில்லாகிய பொருள்களை ஒருவன் விரித்துரைக்குமுரைதானே இவன் நீதியில்லாதவனென்பதை அறிவிக்குமென்பதும்; பயனோடு பொருந்தாததையும் இனிமையும் மெய்ம்மையும் முதலாய குணங்களில்லாததையுமான சொற்களை ஒருவன் பலரிடத்தே சொல்லுவானாயின், அச்சொற்கள் அவனிடத்தே நீதியோடு பொருந்தாததையாகி அவனை நற்குணங்களிலிருந்து நீக்குமென்பதும்; பயனில்லாத சொற்களை நற்குணத்தையுடையவர் சொல்லுவாராயின், அவரது மேம்பாடும் அதனால் வரும் நன்குமதிக்கற்பாடும் அவரிடத்திலிருந்து நீங்குமென்பதும், பதருக்கு அரிசியாகிய உள்ளீடு இல்லையாதல்போலப் பயனில்லாத சொற்களைப் பலகாலும் சொல்லுபவனுக்கு அறிவாகிய உள்ளீடு இல்லையாதலால் அவன் மனிதருக்குள்ளே பதரென்று

† சொற்பொருட்பின் வருநிலையணி - முன்வந்த சொல்லும் பொருளும் பின் பலதரம் வருவது.

* வைகல் - நாள்.

சொல்லப்படுவானென்பதூஉம்; நீதியோடு பொருந்தாத சொற்களி னும் பயனில்லாத சொற்கள் கொடியனவென்பதூஉம்; அறிவுடை யோர் அவ்விருவகைச் சொற்களையும் மறந்தும் சொல்லாரென்ப தூஉம்; முத்திப்பேறும், மேற்கதியடைதலும் முதலாகிய அரிதற் கரிய பயன்களை ஆராயவல்ல அறிவினையுடையார் மிக்கபயனுடைய வல்லாத சொற்களைச் சொல்லாரென்பதூஉம் இங்கு அறியத்தக்கவை களாம்.

## உக. தீவினையச்சம்.

அஃதாவது பாவங்களாயின செய்தற்கு அஞ்சுதல். இதனால் உடம்பினிடத்து நிகழும் பாவங்களெல்லாந் தொடுத்து விலக்கு கின்றாராகலின், இது பயனிலசொல்லாமையின்பின் வைக்கப் பட்டது.

மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறஞ்சூழுஞ் சூழ்ந்தவன் கேடு. (௪)

(இ - ள்.) ஒருவன், பிறன் - பிறனுக்கு, கேடு - கேட்டைத் தரும் காரியத்தைச் செய்ய, மறந்தும், சூழற்க - எண்ணுதிருக்கக் கடவன, சூழின் - எண்ணுவானாயின், சூழ்ந்தவன் - அவ்வெண்ணின வனுக்கு, கேடு - கேடு பயக்கும் வினையை, அறம் - அறக்கடவுள், சூழும் - செய்யவெண்ணுவான், (எ - று.)

கேடு அதனைத் தரும் வினையையுணர்த்தலால் ஆகுபெயர். ஒருவன் பிறன் கேடு சூழும்பொழுதே அறக்கடவுள் அவன் கேடு சூழ்தலின், அவன் பிற்படினும் அறக்கடவுள் முற்படுமென்பது பெறப்பட்டது. அறக்கடவுள் எண்ணுதலாவது அவன் கெடத் தான் நீங்க நினைத்தல். தீவினை எண்ணலும் ஆகாதென்பதாம்.

தீயகாரியங்களைச் செய்தற்குத் தீவினையுடையார் முற்பிறப் பிலே தொடங்கிச் செய்து பழகிவந்தமையால் அஞ்சாரென்பதூஉம்; அப்பழக்கமில்லாத மேலோர் அஞ்சுவரென்பதூஉம்; தனக்கு இன்பந் தருதலைக் கருதிச் செய்யுந் தீவினைகள் செய்தவனைச் செய்தகாலத் திலேயன்றிப் பிறிதொரு காலத்திலும் செய்தவிடத்திலேயே,

டன்றிப் பிறிதோரிடத்திலும் செய்த வுடம்பிலேயேயன்றிப் பிறிதோருடம்பிலும் சென்று பற்றித் துன்புறுத்துமாதலால், அத்தீவினைகள் தீயினுங் கொடியனவாமென்பதும்; தமக்குத் தீங்கு செய்பவருக்கும் தீங்கு செய்யாதிருத்தலே எல்லா அறிவினுள்ளும் தலைசிறந்த அறிவென்பதும்; வறுமை காரணமாகப் பிறர்க்குத் தீங்கு செய்பவன் இப்பிறப்பிலே அதிக வறுமையை அடைதலேயன்றிப் பின்வரும் பிறவிகளிலும் வறியனாகவே யிருப்பானென்பதும்; பொருளால் வறியனெனக் கருதித் தீவினைசெய்பவன் அப்பொருளாலேயன்றி நற்குண நற்செய்கைகளாலும் வறியனாவானென்பதும்; தான் துன்பமடைதலை விரும்பாதவன் துன்பந்தரும் தீச்செயல்களைப் பிறர்க்குச் செய்யாதிருக்கக் கடவனென்பதும்; எத்துணைப் பெரிய பகையுடையாரும் அதனை ஒரு வழியால் தப்புவார், ஆனால் தீவினையாகிய பகைக்கு ஒருவராலும் தப்பமுடியாதென்பதும்; தீவினையானது நிழல்போலத் தன்னைச் செய்தவனையே பற்றிநிற்குமென்பதும், தீவினை செய்யாதவனுக்குக் கேடில்லையென்பதும் இங்கு அறியத்தக்கவைகளாம்.

## ௨௨. ஒப்புரவறிதல்.

அஃதாவது உலகநடையினை அறிந்து செய்தல். உலகநடை (லௌகிகாசாரம்) வேதநடை (வைதிகாசாரம்) போல அறநூல்களுள் கூறப்படுவதன்றித் தாமே அறிந்துசெய்யுந் தன்மைத்தாகலின் 'ஒப்புரவறிதல்' என்றார். மேலே மன மொழி மெய்களில் தவிரத் தகுவன கூறினர். இனிச் செய்யத்தகுவனவற்றுள் எஞ்சி நின்றன கூறுகின்றாராகலின், இது தீவினையச்சத்தின்பின் வைக்கப்பட்டது (ஒப்புரவு - உபகாரம்).

மருந்தாகித் தப்பா மரத்தற்றாற் செல்வம்
பெருந்தகை யான்கட் படின். (எ)

(இ - ள்.) செல்வம் - செல்வமானது, பெருந்தகையான்கண் - உபகாரஞ் செய்யும் பெரியதகைமையை யுடையவனிடத்தே, படின் - உண்டாயின், அச்செல்வம், மருந்தாகி - எல்லாவுறுப்பும்

O-,105 48
F9

பிணிகளுக்கு மருந்தாய், தப்பா - பயன்படுதலில் தவறாத, மரத்தற்று - மரத்தை ஒக்கும், எ - று.

தப்புதலாவது கொள்ளுதற்கு அரிய இடங்களில் நின்றாவது, மறைந்து நின்றாவது, காலத்தால் வேறுபட்டாவது பயன்படாமை. எல்லா வுறுப்புமென்றது மரத்தின் வேர், தூர், தோல், உடல், கிளை, கொம்பு, இலை, காய், கனி முதலியனவாகும். மருந்தாகித் தப்பாத மரமானது பிறர் தனக்குச் செய்யும் ஒடித்தல், வெட்டல், முறித்தல், பறித்தல், செதுக்கல் முதலிய பாபச் செயல்களைப் பொருட்படுத்தாது, அவருடைய பிணிகளைத் தீர்த்தல், அவர்க்கு வேண்டிய சீவியப் பொருளை உதவுதல் முதலிய உபகாரங்களைச் செய்து இன்பத்தைச் செய்யுமென்பதாம். அதுபோலவே பெருந்தகையானிடத்துள்ள செல்வமும் பிறருடைய துன்பத்தை நீக்கி இன்பம் பயக்குமென்றறிக. ஆல் - அசை. இதனால் பிறர்க்கு உபகாரஞ் செய்தல் தனது கடமையாகக் கொள்பவனது செல்வம் பயன்படுமாறு கூறப்பட்டது.

பிரதிபலன் கருதாது உபகாரஞ் செய்பவர் மேகங்களுக்கு ஒப்பாவாரென்பதும்; ஒருவன் முயற்சி செய்து சம்பாதித்த பொருளெல்லாம் கல்வி கேள்வி அறிவு ஒழுக்கங்களால் அமைந்தவர்களுக்கு உபகாரஞ் செய்யும் பொருட்டாமென்பதும்; சுவர்க்கலோகத்திலும் பூலோகத்திலும் உபகாரத்துக்கு மேற்பட்டது வேறொன்றில்லையென்பதும்; உலக நடையை யறிந்து செய்பவனே உயிரோடுகூடி வாழ்பவனாவானென்பதும்; அஃதறிந்து செய்யாதவன் இறந்தவருள் ஒருவனாகக் கருதப்படுவானென்பதும்; உலக நடையை விரும்பிச் செய்யும் பேரறிவாளனது செல்வம் பாழ்படாமல் ஊருணி நீர் நிறைந்தாற்போலவும் பயன்படுமரம் நடுவூரில் பழுத்தாற்போலவும் எல்லார்க்கும் வேண்டுவன உதவுமென்பதும்; தாம் செய்யத் தகுமவைகளை அறிந்த இயற்கை யறிவுடையோர் செல்வம் சுருங்கிய காலத்தும் தக்கார்க்கு உதவுதலில் தளராரென்பதும்; உபகாரஞ் செய்தலை யுடையவன் வறுமைப்பட்டு வருந்துதலாவது கூறாது செய்யும் தன்மையுடைய அவ்வுபகாரங்களைச் செய்யப் பெறாது வருந்துகின்ற இயல்பேயென்பதும் தான் அனுபவிக்கப்படும் பொருள்

களை அநுபவிக்கப் பெறாமையின் றென்பதூம், உபகாரஞ் செய் தலின்றேல் ஒருவனுக்குக் கேடுவருமென்பவருண்டாயின் அக்கேடு ஒருவன் தன்னை விற்றாயினுங் கொள்ளுந் தகுதியையுடையதாகு மென்பதூம், உபகாரஞ் செய்தலின்மேல் கெடுவதுங் கேடல்லவென் பதூம் இந்த அதிகாரத்தின் கருத்துக்களாம்.

## ௨௩. ஈகை.

அஃதாவது தரித்திரராய் யாசித்தவர்க்கு அவரால் வேண்டப் படுவதை யாதொரு பிரதிப்பிரயோசனமுங் கருதாது கொடுத்தல். இது மறுமை நோக்காதாகலின் இம்மை நோக்கிய ஒப்புரவறிதலின் பின் வைக்கப்பட்டது.

வறியார்க்கொன் றீவதே யீகைமற் றெல்லாங்
குறியெதிர்ப்பை நீர துடைத்து. (௧)

(இ-ள்) வறியார்க்கு - ஒருபொருளுமில்லாதவர்க்கு, ஒன்று - அவர் வேண்டுவதொன்றை, ஈவதே - கொடுப்பதே, ஈகை - பிறர்க் குக் கொடுத்தலாகும்; மற்றெல்லாம் - ஒழிந்த எல்லாக்கொடை யும், குறியெதிர்ப்பை - குறிக்கப்பட்ட அளவும் பட்டேறுகூடிய, நீரது - குணத்தை, உடைத்து - உடையதாகும் எ-று.

வறியார்க்குக் கொடுப்பதொழிந்த கொடைகளாவன வறியார் அல்லாதார்க்கு ஒருபயனை நோக்கிக் கொடுப்பனவாம். குறியெதிர்ப் பையாவது - பிறரிடத்தினின்று அளவுகுறித்துப் பொருளை வாங்கி அவ்வாங்கியபடியே அவர்க்கு மீண்டுந் திருப்பிக் கொடுப்பது. நீரது என்பதில் அது என்பது பகுதிப்பொருள் விகுதி. வறியர் அல்லாதார்க்குக் கொடுக்கப்பட்ட பொருள் பின்னும் தம்மிடத்தே வருதலால் 'குறியெதிர்ப்பை நீரதுடைத்து' என்றார். இதனால் ஈகையின் இலக்கணங் கூறப்பட்டது.

ஏற்றல் வீட்டுலகிற்கு நல்லதென்பவர் உளராயினும் அது தீதென்பதும், ஈவார்க்கு அவ்வுலகம் புகுதல் இல்லையென்பார் உள ராயினும் ஈதலே நன்றென்பதும், யான் வறியேனென்று சொல் லுந் துன்பந்தருமொழியை இரப்பவன் சொல்லுவதற்கு முன்னே

அவன் குறிப்பறிந்து கொடுத்தலும், ஒருக்கால் அவ்விரப்பான் தன் குறையைச் சொல்லிவிட்டால் அதனைப் பின்னும் பிறனொருவன் பாற்சென்று அவன் சொல்லாவகையாலும், அதனைத் தான் பிறரிடத்துச் சொல்லாமலும் யான் இதுபொழுது பொருளுடையேன் அல்லேனென்னக் கரப்பார் சொல்லும் சொல்லைச் சொல்லாமலும், கொடுத்தலே நற்குடியிற் பிறந்தவர் செய்கையாகுமென்பதும், இரப்பார்க்குக் கொடுப்பேனென்னநிருப்பார்க்கு அவ்விரப்பாரைக் காணும் போது அவர் நாடிவந்த பொருளொன்றைக் கொடுக்கக்கூடாமை நேரிடுமோ வென்னும் அச்சம் அவ்விரப்பார் விரும்பியதைப் பெற்றதனால் இனிதாகிய அவர்முகத்தைக் காணுமளவும் நிகழுமாதலால், இரத்தல் இரப்பார்க்குத் துன்பஞ்செய்தல் போலவே இரக்கப்படுவார்க்குந் துன்பஞ் செய்யுமென்பதும், தாம் பசித்துப் பிறர் பசியையுந் தீர்க்கமாட்டாத தவத்தினரது வல்லமையைக்காட்டிலும் தாமும் பசியாது பிறர்பசியையும் ஈதலினாலே தீர்ப்பவராகிய இல்லறத்தாரது வல்லமை பெரிதாகுமென்பதும், பொருள் பெற்ற ஒருவன் அப்பொருளைத் தனக்குதவ வைக்குமிடம் அறமேயாதலாலும், அவ்வறத்திற் சிறந்தது ஈகையேயாதலாலும் அவ்வீகையும் வறியார்க்கே யுரித்தாதலாலும் அவ்வறியாரது மிக்கபசியை அறனேக்கித் தீர்த்தல் அறிவுடையார் செய்கையாகுமென்பதும், எந்நாளும் பசித்தார்க்குப் பகிர்ந்திட்டுண்ணும் பழக்கமுடையவனைப் பசியென்னும் †கொடியநோய் தீண்டுதலில்லையென்பதும் வறியார்க்கு வேண்டிய பொருளைக் கொடுத்து அவர் மகிழ்தலினால் அருளுடையார் அடையும் மகிழ்ச்சியை, வறியார்க்குக் கொடாது வைத்திழக்கும் அருளிலாதார் அறியாரென்பதும், இரப்பவர்க்குக் கொடாது தானே உண்ணுதல் ஒருவனுக்குப் பிறரிடம்போய் யாசித்தலினும் அதிகத் துன்பமாக முடியுமென்பதும், அறிவுடையார் வறியராய் வந்திரந்தோர் வேண்டியதொன்றைக் கொடுக்க முடியாதபோது

† இவ்வுடம்பிலே நின்று ஞானத்தையும் ஆசாரத்தையும் கெடுத்து, அதனால் பின்வரும் உடம்புகளுக்குந் துன்பஞ்செய்தலால் பசியானது நோய்களிலெல்லாம் மிக்ககொடியதென்றறிக

அவமதியார் படுந்துன்பத்தைப் பார்த்துச் சகிக்கமுடியாதவராய் உயிர்துறத்தலை விரும்புவரென்பதும் இங்கு அறியத்தக்கவைக ளாம்.

## உச. புகழ்.

அஃதாவது இல்வாழ்க்கைமுதல் ஈகையீறாகச் சொல்லப்பட்ட இல்லறத்தினை வழுவாதார்க்கு இம்மைப்பயனாகி இவ்வுலகத்தின் கண் விளங்கி அழியாது நிற்பதாகிய கீர்த்தி. இது பெருமையான மையும் ஈதல்பற்றி வருதலின், அதன்பின் வைக்கப்பட்டது.

நத்தம்போற் கேடும் உளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது (ரு)

(இ-ள்) நத்தம் (ஆக்கம்) கேடும் புகழுடம்பிற்கு ஆக்க மாகும் வறுமையும், உளதாகும் சாக்காடும் அப்புகழுடம்பு நிலை பெறுவதாகும் மரணமும், வித்தகர்க்கல்லால் சதுரப்பாடு உடைய வர்க்கல்லாமல், அரிது மற்றவர்க்கு இல்லை, எ-று.

நத்து என்னும் முதனிலைத் தொழிற்பெயர் நத்து என விகாரப் பட்டு, பின் அம் என்னும் பகுதிப்பொருள் விகுதிபெற்று நத்தம் என்றாயிற்று. போல் என்பது ஈண்டு உரையசை. ஆக்க மாகுங் கேடாவது புகழுடம்பு செல்வத்தையடைதற்குப் பூதவுடம்பு வறுமைப்படல். உளதாகுஞ் சாக்காடாவது புகழுடம்பு நிலைபெறற் குப் பூதவுடம்பு இறத்தல். நிலையில்லாத உடம்பை வருத்தியும் விட டும் நிலையான புகழை வளர்த்தலும் நிறுத்தலும் வித்தகர்க்கல்லா லரிது' என்றார். இதனால் புகழுடையார் அடையும் மேன்மை கூறப்பட்டது.

மக்களுயிர்க்கு இவ்வுலகத்திலேயே அடையக்கூடிய பயன் 'புகழல்லது பிறிதொன்றில்லை யாதலால், வறியார்க்குக் கொடுத்து அதனால் புகழுண்டாக வாழக்கடவரென்பதும், புகழ்பட வாழ் தற்குக் கல்வி ஆண்மை முதலியவற்றை விட ஈகை சிறந்த†தென்ப

† 'உணவின் பிண்டம் உண்டி முதற்று" (புறநானூறு) என்பதனால் ஈகை சிறந்ததாதலை யறிக. (இதன் பொருள்) உண வால் உளதாகிய உடம்பு உணவை முதலாக உடைத்து என்பது

தும்; தனக்கு இணையன்றாக ஓங்கிய புகழல்லது உலகத்தில் அழியாது நிற்பது பிறிதொன்றில்லை யென்பதும்; புகழைச் செய்பவன் தேவராலும் போற்றப்படுவா*னென்பதும்; மனிதராய்ப் பிறக்கின் புகழுக்கு ஏதுவாகிய குணத்தோடு பிறக்க வேண்டுமென்பதும்; அக்குணம் இல்லாதார் விலங்காய்ப் பிறத்தல் நலமென்பதும்; புகழுண்டாக வாழமாட்டாதவர் அதுபற்றிப் பிறர் இகழ்ந்தபோது இவ்விகழ்ச்சி நமது மாட்டாமையால் வந்ததென்று தம்மை நோவாதவராகித் தம்மை இகழ்பவரை நோவதில் பயனில்லை யென்பதும்; ஒருவன் உலகத்தில் புகழைச் செய்யாவிடில் அச்செய்யாமை தானே அவனுக்கு வசையாமென்பதும்; புகழில்லாத உடம்பைச் சுமந்த நிலம் அப்பாவவுடம்பைச் சுமந்த பொறுப்பால் விளைவு குன்று மென்பதும் இங்கு அறியத்தக்கவைகளாம்.

இல்லறவியல் முற்றுப்பெற்றது.

* "புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின், வலவ னேவா வான வூர்தி, யெய்துப வென்பதஞ் செய்வினை முடித்து"—புறநானூறு. (வலவன - பாகன். வானவூர்தி - விமானம்.)

## துறவறவியல்.

அஃதாவது மேற்கூறிய இல்லறத்தின் வழாது ஒழுகி அறிவுடையராய பிறப்பினை அஞ்சி முத்தி பெறுதற்பொருட்டு மெய் துறந்தார்க்கு உரித்தாய அறம். அத்துறவறந்தான் இருவினைகளால் உண்டாகும் குற்றங்களின் நீங்கி அந்தக்கரணங்கள் பரிசுத்தமாகும் பொருட்டு அநுட்டிக்கப்படும் விரதங்களும் அவ்விரதங்களால் அவ்வந்தக்கரணங்கள் பரிசுத்தமானவிடத்து உண்டாவதாகிய ஞானமும் என இருவகைப்படும்.

---

### விரதம்.

அவற்றுள் விரதங்களாவன, இன்ன அறங்களைச் செய்வேனென்றும், இன்ன பாவங்களைச் செய்யாது விடுவேனென்றும் தத்தம் ஆற்றலுக்குத் தக்கபடி எடுத்துக் கொள்வனவாம். அவைதாம் அளவில்லாதவையாயிருத்தலால் பெருந்தன்மையரான அவைகள் ஞானோபாயமானவையும் அடக்கத்திற்குச் சிறப்புடைய சிலவற்றை இங்கே சொல்லத் தொடங்கி முதலாவதாக அருளுடைமை கூறுகின்றார்.

---

### உரு. அருளுடைமை.

அஃதாவது மனைவி மக்கள் சுற்றத்தார் உறவோர் என்னுந் தொடர்பு பற்றாது இயல்பாக எல்லாவுயிர்கள் மேலும் செல்வதாகிய கருணை. இல்லறத்திற்கு அன்புடைமைபோல, இது துறவறத்திற்குச் சிறந்தமையின் முதலாவது கூறப்பட்டது.

நல்லாற்ருனாடி யருளாள்க பல்லாற்ருல்
தேரினு மஃதே துணை. (உ)

(இ-ள்) நல்லாற்றான் - நல்ல வழியிலே நின்று, நாடி - அளவைகளாலும் யுத்தியாலும் நமக்குத் துணையாகும் அறம் யாதென்று ஆராய்ந்து, அருளாள்க - அருளுடையாராகக்கடவர்; பல்லாற்றால் - ஒன்றையொன்று ஒவ்வாத சமயநெறிகள் எல்லாவற்றாலும், தேரினும் - ஆராய்ந்தாலும், துணை - துணையாவது, அஃதே - அவ்வருளே, (வேறொன்றில்லை என்றபடி) எ-று.

† அளவைகளாவன மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் ஞானேந்திரியங்களாற் காணுங் காட்சியும், குறிகளால் உய்த்துணரும் ‡ அநுமானமும், கருத்தாமொழியாகிய § ஆகமமும் என மூன்று. இவைமூன்றும் முறையே காண்டல், கருதல், உரை என்றும், அநுபவம், யுக்தி, சுருதி என்றும் சொல்லப்படும். ஒப்புமைபற்றி அறிகிற ¶ உவமானமும், இப்படி அல்லாமற்போனால் இது கூடாதென்று அறியும் ＄ அருத்தாபத்தியும், உண்மைக்கு எதிராகிய * இன்மையும் என இவற்றையுங்கூட்டி ஆறென்பாருமுளர். இவையும் ஒருவகையால் அம்மூன்றினுள்ளே அடங்குதலால் மூன்றென்றலே கருத்து. யுத்தியாவது இது கூடும் இது கூடாது எனத் தன்னிடத்தே தோன்றுவது. ஆற்றான் என்பது ஆற்றின் எனப் பொருள் பட்டமையால் வேற்றுமை மயக்கம். ஒன்றற்கு ஒன்று ஒத்திராமையாவது மதவேறுபாட்டால் அளவைகளும் பொருள்களும் தம்முள் மாறுகொள்ளுதலாம். அப்படியிருந்தாலும் அருள் துணையென்று சொல்லுமிடத்து எல்லாருக்கும் ஒத்திருக்குமென்பதாம். உயிரைவிட்டு நீங்காமல் இருமையிலும் உதவுதலால், 'துணை' என்றார். இதனால் அருளினது சிறப்புக் கூறப்பட்டது.

---

† அளவை - பிரமாணம்.

‡ அநுமானம் - புகையைக்கண்டு நெருப்புண்டெனல்.

§ ஆகமம் - ஆண்டவர் ஆதியில் ஆன்மாக்கள் உய்யுமாறு அருளிய சாத்திரம்.

¶ உவமானம் - மரை பசுப்போலெனல்.

＄ அருத்தாபத்தி - பகலுண்ணான் பருத்திருப்பான் என்புழி இரவில் ஒளித்துண்பானென உணர்தல்.

* உண்மைக்குமாறாய இன்மை - (அபாவம்) - முன்னுமில்லை பின்னுமில்லை ஒன்றிலொன்றில்லை ஒருகாலத்துமில்லையெனல்.

செலவங்கள பலவற்றுள்ளும மேலானதென்று சொல்லப்படும் செலவமானது உயிாகளைக காபபாறறி அவவறததால மேமபடுத லாகிய அருடசெலவமே யெனபதும, இழிநதோரிடததும உள்ள மற்றைப பொருட்செலவங்கள சிறபபுடையன அலலவென பதும, அருளசெறிநத நெஞசினையுடையவா நரகமடையா ரென பதும, உயிாகளைபபேணி அருளுடையனுவான கொலைமுதலிய பாவங்கள செயயாமையால அவனுககுப பாவமிலலையாகவே அவன நரகமடைவதிலலை யெனபதும, அருளுடையவனுககு இமமையி லும துனபமிலலையெனபதும, உயிாகளிடததுச செயயவேணடும அருளைவிட டு, விடவேணடும கொடுமைகளைச செயபவா தாம முனபிறபபிலேயும அறததைச செயயாமல பாவததைசசெயது, அதனபயனுக இபபிறபபில துனபபபடுகினறமையை மறநதவராவ ரெனபதும, பொருளிலலாதவாககு இவவுலகததினபம இலலையாயி னறபோல, உயிாகளினமேல அருளிலலாதவாககு வீடடுலகததின பம இலலையெனபதும, விதிவசததால வறியராயினோ அது நீங்கிப் பினனெருகாலததில செலவராவா, ஆனல அருளிலலாதாா பாவம நீஙகாமையால பினனெருகாலததிலும அருளுடையராவதிலலை யெனபதும, ஞானமிலலாதவன இடையே மெயபபொருளை உணாநதால, அதனைத தன ஞானமினமையால தானே அழிததது விடுவதுமபோல, அருளிலலாதவன இடையே அறஞசெயதால அத னைத தன அருளிலலாமையால தானே அழிததுவிடுவா னெனப தும, அருளிலலாதவன தனனிலும வலியவா தனனை வருதத வருமபோது அவாமுன தான அஞசிநிறகும நிலையை நினைபபா னுனல், அவன தனனிலும மெலியாரை வருததுவதறகுச செல லுமபோது அவாககும அபபடியே அசசமுணடாகுமெனறறிநது அவாமேல் அருளுடையவனுவா னெனபதும இஙகு அறியததக்க வைகளாம.

## உகூ புலான்மறுத்தல்.

அஃதாவது ஊனுண்டலை ஒழிதல். கொலைப்பாவத்தைப் பின்னும் உண்டாக்கலால் அதற்குக் காரணமாதலையும், முன்னும் அதனால் வருதலால் அதன் காரியமாதலையும் ஒருங்கு உடைத்தாகிய ஊனுண்டல் அருளுடையார்க்கு இயைவது அன்றாகலின், அதனை விலக்குதற்கு, இஃது அருளுடைமையின்பின் வைக்கப்பட்டது.

உண்ணாமை யுள்ள துயிர்நிலை யூனுண்ண
அண்ணாத்தல் செய்யா தளறு. (ரு)

(இ-ள்.) உயிர் - ஒருவகை உயிர்கள், நிலை - உடம்புகளிலே நிற்றல், ஊன் - மாமிசத்தை, உண்ணாமை உள்ளது - உண்ணாமை யென்கின்ற அறத்தினிடத்தது, ஆதலால், உண்ண - அந்நிலை குலைய ஒருவன் அதனை உண்பானாயின், அளறு - அவனை விழுங்கிய நரகமானது, அண்ணாத்தல் செய்யாது - பின் உமிழ்தற்கு வாய் திறவாது, (எ-று.)

உண்ணப்படும் விலங்குகள் அதனால் குறைந்து மற்றவை பலவாய் விருத்தியடைதலால 'உண்ணாமையுள்ளது உயிர்நிலை' என்றார். உண்ணின் என்பது உண்ண எனத் திரிந்து நின்றது. ஊனுண்டவன் அப்பாவத்தால் நெடுங்காலம் நரகத்துள் அழுந்துவான் என்பதாம். கொலைப்பாவம் கொன்றார்மேல் நிற்றலின் பின் ஊனுண்பார்க்குப் பாவமில்லை யென்பவரை மறுத்து, பாவம் உண்டென்பது இப்பாட்டாற் கூறப்பட்டது. இன்னும், அப்பாவம் கொன்றவனையும் தின்றவனையும் மட்டுமேயன்றி, அம்மாமிசத்தை அறுத்துக் கூறுசெய்பவன், விற்பவன், வாங்குபவன், சமைப்பவன், பரிமாறுபவன் என்னும் இவர்களையும் பற்றி வாதிக்கு மென்பதும் இவண் உணரற்பாலது.

"கொன்றவன் குறைத்தவன் கொணர்ந்து விற்றவன்
ஒன்றொரு பொருள்கொடுத் துவந்து கொண்டவன்
நன்றடு மடைமக னுவிற் பெய்தவன்
என்றிவ ரறுவரு(ம) நரக மெய்துவர்."

பயனில்லாத உடல் வளர்த்தலைப் பயனென நினைத்துப் பிறிதோருயிரின் உடம்பைத் தினபவன அருளும் அறிவுமில்லாத கொடியோனுவா னெனபதும்; பொருளைக் காப்பாற்றாதவர் அதனை இழந்து அதனுலாகும் பயனை அடையாததுபோல, அருளினுக்கு இருப்பிடமாகிய உயிர்களைப் பேணுது அவற்றின உடம்பைத் தின்பவன அருளை இழந்து அதனுலாகும் பயனை அடையாதவனுவா னெனபதும்; கொலைக்கருவியைக கையிற் கொணடவரது மனம் கொலையையே நோககுவதல்லது அருளை நோக்காதவாறுபோல, ஊன் தின்பவரது மனம் அவ்வூனையே நோககுவதல்லது அருளை நோக்காதென்பதும்; அறியாமை காரணமாக அல்லது ஊனதினகை காரணமாக உலகததாா பிராணிகளைக கொல்லாராயின ஒருவரும ஊனை விறகமாட்டா ரெனபதும்; மாமிசம் பிறிதோருடம்பின் புண்ணுவதோடு பிணமாவதையும் தெளிந்த அறிவினையுடையோர் அறிந்து அதனை நீக்குவரெனபதும்; ஆயிரம் யாகஞ் செய்தலினும் ஒருயிரைக் கொன்று அதன் மாமிசத்தை உண்ணுதிருத்தல் நனறு மெனபதும்; ஒருயிரையும் கொல்லாதவனுமாய்ப் புலாலையும் உண்ணுதவனை எல்லா வுயிரும கைகுவித்துத் தொழுமெனபதும இங்கு அறியத்தக்கவைகளாம.

## உஎ. தவம்.†

அஃதாவது மனம் பொறிவழி போகாமல் நிற்கும்பொருட்டு விரதங்களினுலே உண்டிசுருக்கலும் கோடைககாலத்து வெயிலில் நிற்றலும் மழைக் காலத்திலும் பனிக்காலத்திலும் எரி முதலிய நீர் நிலைகளில் நிற்றலும் முதலிய செயல்களை மேற்கொண்டு, அவைக ளால் தம்முயிர்க்கு வருந் துன்பங்களைப் பொறுத்து, பிறவுயிர்களைக காப்பாற்றுதல். புலாலை மறுத்து உயிர்களின் மேல் அருள்முதிர்ந்த விடத்தே செய்யப்படுவதாகலின, இது புலான்மறுத்தலின்பின வைக்கப்பட்டது.

† இஃது அட்டாங்கயோகநிலையின் இரண்டாவது அங்கமாகிய நியமத்தின் முதலுறுப்பாதலை அறிக. அந்நிலையின் விவரம் அ, கூ, ௰-ம் பக்கங்களிற் கூறப்பட்டுளது.

தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்மற் றல்லார்
அவஞ்செய்வா ராசையுட் பட்டு. (௬)

(இ - ள்.) தவம் செய்வார் - துறந்து தவத்தைச் செய்பவர், தம் கருமம் செய்வார் - தமது கருமத்தைச் செய்பவராவார், மற்று அல்லார் - அவரையொழிந்த பொருளின்பங்களைச் செய்பவர், ஆசையுள்பட்டு - அவற்றின்கண் ஆசையாகிய வலையுட்பட்டு; அவம் செய்வார் - தமக்குக் கேடுசெய்வார், எ - று.

† அநித்தமாய * மூவகைத் துன்பத்ததாய் உயிரின் வேறாய உடலுக்கு வருத்தம் வருமென்று ஒழியாது தவத்தினைச் செய்ய, பிறப்புப் பிணி மூப்பு இறப்புக்களால் அநாதியாகத் துன்பமெய்தி வருகின்ற உயிர் ஞானம் பிறந்து மோட்சத்தை அடையுமாதலால், தவஞ் செய்வாரைத் 'தங்கருமஞ் செய்வார்' என்றும், கணத்துள் அழிவதாகிய சிற்றின்பத்தின் பொருட்டுப் பல பிறவிகளிலுந் துன் புறத்தக்க பாவஞ்செய்து கொள்ளுதலால், அல்லாதாரை 'அவஞ் செய்வார்' என்றும் கூறினர். மற்று - தவஞ்செய்தலாகிய வினையை மாற்றியதனுல் வினைமாற்றின்கண் வந்ததாகும்.

முற்பிறப்பில் தவத்தினைச் செய்தோர அதனபயனுக இப் பிறப்பில் சகல செல்வங்களையும் அடைவதேயல்லாமல், முன்

---

† அநித்தம் - நிலையின்மை.

* மூவகைத் துன்பங்களாவன:—

(க) ஆதிதைவிகம் (தெய்வத்தால் வருவது) - கருப்பவாச காலத்தில் நிகழும் விசனம், சனன மரண விதனம், இயம தண்டனை, நரகவேதனை முதலியவற்றால் வருந் துன்பம்.

(உ) ஆதிபௌதிகம் (பூதங்களால் வருவது) - குளிர், வெப் பம், மழை, காற்று, மின்னல், இடி முதலியவற்றால் வருந் துனபம்.

(ங) ஆதியான்மிகம் (உயிர்களால் வருவது) - பிணிகளாலும், விலங்குகளாலும், அரசராலும், திருடராலும், பேய்களா லும், மனிதராலும் சரீரசம்பந்தமாய் வருந்துன்பங்களும், காமக் குரோத வுலோப மோக மத மாச்சரிய மென்னும் உட்பகைகளால் வரும் மனத்துன்பங்களும்.

பழக்கத்தால் நுண்ணிய அறிவும் ஆற்றலும் உடையராய், முற்பிறப்பில் தொடங்கிய அத்தவத்தை இப்பிறப்பிலே செய்துமுடிப்பாரென்பதும், அத்தவத்தை அம்முன்னைத்தவ மில்லாதார் செய்யத் தொடங்குவது வீண்முயற்சி யென்பதும், தவமானது வேண்டியவைகளை வேண்டியபடியே பெறத்தருவதென்பதும், அது பிரமசாரி முதலிய நான்கு ஆசிரமத்தாராலும் செய்யத்தகுவதென்பதும்; இல்வாழ்வாரால் செய்யப்படும் தானத்திலும் தவம் மிகவுயர்ந்ததென்பதும், இல்வாழ்வார் துறந்தார்க்கு உண்டியும் மருந்தும் இருப்பிடமும் உதவுதலை விரும்பித் தாம் தவஞ்செய்தலை மறந்தார்போலுமென்பதும், தமது அறத்துக்குப் பகையாய் அறிவு செய்தார் எவ்வளவு பெரியராயினும் அவரைக் கெடுத்தலும், அத்துறவற வொழுக்கத்தை விரும்பி ஒழுகுவார் எவ்வளவு சிறியராயினும் அவரை உயர்த்தலும் ஆகிய இரண்டையும் தவஞ்செய்வார் நினைப்பாராயின், அவரது தவவலிமையினால் அவை அவருக்கு உண்டாகுமென்பதும், இம்மையிலே தவத்தை ஆராய்ந்து செய்பவர் மறுமையிலே பெறத்தகும் பயன்களாகிய ஆநகாரன முதலிய இறையவன் பதங்களையும் வீடுபேற்றையும் வேண்டியவாறே பெறுவரென்பதும்; புடம்போடப்பட்ட பொன்னுக்குத் தன்னோடு கலந்த மாசுநீங்கி ஒளிமிகுகின்ற விதம்போலத் தவஞ்செய்வோர்க்கு அதனால் வருகின்ற துன்பம் வருத்த வருத்தத் தம்மோடு கலந்த பாவநீங்கி ஞானமிகுமென்பதும், இந்திரியங்களை அடக்கித் தவமாகிய தங்கருமஞ் செய்வாரே தம்முயிரைத் தமக்குரித்தாகப் பெறுவாரென்பதும், அன்னவர் சாபமும் அநுக்கிரகமுமாகிய இருவித வல்லமையும் உடையராதலால், அவரை எல்லாவுயிர்களும் தொழுமென்பதும், தவவலிமை யுடையார் † இப்பணையும் செய்ப்பரென்பதும்;

† இதற்குச் சான்றாவார் மார்க்கண்டேயராவதை யறிக

"உலையா முயற்சி களைகணா வூழின், வலிசிந்து வண்மையு முண்டே - உலகறியப், பான்முளை தின்று மறலி யுயிர்குடித்த, கான்முளையே சாலுங் கரி"—நீதிநெறிவிளக்கம்.

[பான்முளை ஊழ்முளை மறலி — இயமன். கான்முளை - (மார்க்கண்டேயப்) பிள்ளை.]

உலகத்திலே செல்வரும் அறிஞரும் சிலராக வறியரும் அறிவிலரும் பலராதற்குக் காரணம் தவஞ்செய்வார் சிலராக அது செய்யார் பலராதலே * யாகுமென்பதும் இங்கு அறியத்தக்கவைகளாம்.

---

## ௨௮. கூடாவொழுக்கம்.

அஃதாவது தாம் விட்ட காமவின்பத்தை மனத்திடனில்லாமையால் பின்னும் விரும்புமாறு தோன்ற அவ்வாறே கொண்டுநின்று தவத்தோடு பொருந்தாததாய தீயவொழுக்கம். அது விலக்குதற்கு இது தவத்தின்பின் வைக்கப்பட்டது.

நெஞ்சிற் றுறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணா ரில். (௬)

(இ - ள்.) நெஞ்சின் - மனத்தினின்றும், துறவார் - பற்றுக்களை நீக்காதவர்களாகி, துறந்தார்போல் - பற்றற்றார்போலத் தம்மைக்காட்டி, வஞ்சித்து - தானஞ்செய்வாரை வஞ்சித்து, வாழ்வாரின் - வாழுமவரைப்போல, வன்கணார் - கொடியவர், இல் - உலகத்தில் இல்லை. எ - று.

தானஞ்செய்வாரை வஞ்சித்தலாவது யாம் மறுமையில் தேவராதற்பொருட்டு இந்த அருந்தவத்தோர்க்கு இன்னது கொடுப்போமென்று அறியாமற் கொடுத்தவரை அதை வாங்கிக்கொண்டு இழிபிறப்பினராக்குதல். அவர் இழிபிறப்பினராதலை

" அடங்கலர்க் கீந்த தானப் பயத்தினா லலறு முந்நீர்த்
தடங்கட னடுவுட் டீவு பலவுள வவற்றுட் டோன்றி
உடம்பொடு முகங்க ளொவ்வா ரூழ்கனி மாந்தி வாழ்வர்
மடங்கலஞ் சீற்றத் துப்பின் மானவேன் மன்ன ரேறே "

என்னும் சீவகசிந்தாமணிச் செய்யுளா லறிக. இச்செய்யுளின் கருத்து :- இந்திரிய நிக்கிரகஞ்செய்யாது துறந்தாரைப்போல் நடிப்ப

---

* " நுண்ணுணர் வின்மை வறுமை யஃதுடைமை, பண்ணப் பணைத்த பெருஞ்செல்வம் " (நாலடியார்)—என்னும் செய்யுட் பகுதியின் கருத்தினை இவண் உணர்க.

யாககுத தானஙகொடுததவாகள சமுததிரததின நடுவிலுளள தீவு களிலே மககளுடமபும விலஙகின முகமுமுடைய பிராணிகளாகத தோனறி அஙகுளள மரஙகளினினறும உதிாகினற பழஙகளை யுணடு வாழவாராகள எனபது இதனுல தகவிலாாக ளீநததானம தாழவினைத தருமெனறேரக தமககு ஆவன செயதாரககு ஆகா தன விளைததலால 'வனகணா' எனறா

உலகததிலே களவுடையார பிறா அறியாமற செயயுங காரியங களுககு நிலம நீா தீ காறறு ஆகாயம எனனும ஐமபெரும பூதஙகள சாட்சியாதலின, காமம தனனிடததே யுணடாகி வருததிககொண டிருககவும, அககாமம இலலாமையைச சொலலிப புறததாரை வஞ சிததொழுகும வஞசநெஞசததான அவவருததம பொறுககமாட டாமற செயயும களளசசெயகையையும, அவன மறைககினற விததததையும உடமபாய அவனேடு கலநது நிறகினற பூதஙகள ஐநதும கணடு தமமுளளே நகுமெனபதும, தான குறறமெனற றறிநத விடயததிலே செலலுமனமுடையவனுககு அவனுடைய தவவேடததால யாதொரு பயனு மிலலையெனபதும, மனததைத தனவசபபடுததும வலியிலலாத கூடாவொழுககததான பசுவானது தனககுரிய புலலைவிடடுப புலிததோல போாததுப பிறாககுரிய பயிரை மேயதலபோல, தனககுரிய மனைவியைவிடடுத தவவேடங கொணடு பிறாககுரிய பெணடிரை அனுபவிபபா னெனபதும, பிறா தமமை நனகு மதிததறபொருடடு யாம பறறறறேமெனறு சொலவாரது மறைநத ஒழுககமானது அபபொழுது இனிதுபோலத தோனறுவதாயினும பின எனசெயதோம எனசெயதோமெனறு தாமே இரஙகுமபடி பல துனபஙகளையும அவாககுக கொடுககு மெனபதும, குனறிமணியின புறமபோல வேடததாற செமமை யுடையாராயினும, அதன மூககுபபோல மனம அறியாமையால இருணடிருபபார உலகததிற பலருள ரெனபதும, மனததைச சுதத மாககமுடியாது உடலைச சுததிசெயது உலகததை மயககுவாரும பலருள ரெனபதும, அமபு வடிவினுற செவவிதாயிருநதாலும செயலினுலே கொடிதாயும வீணை கோடடினுலே வளைவினதா யிருநதாலும செயலினுலே செவவிதாயும இருபபதுபோலத தவஞ செய்வோரையும கொடியா செவவியரெனபதும அவரது வடிவி

னாலே கொள்ளாமல் அவரது செயலினாலே அறியவேண்டுமென்பதும்; உயர்ந்தோரால் தவத்திற்கு ஆகாதென்று குற்றங்கூறப்பட்ட ஒழுக்கத்தை ஒழித்துவிட்டுத் தவஞ்செய்வாருக்குத் தலைமயிரை மழித்தலும் சடையாக்கலும் வேண்டாவென்பதும் அறியத்தக்கவைகளாம்.

## ௨௯. கள்ளாமை.

அஃதாவது பிறருடைமையாய் உள்ளவைகளில் யாதொரு பொருளையும் அவரை வஞ்சித்துக்கொள்ள நினையாமையாம். நினைத்தலும் செய்தலோ டொத்தலின 'கள்ளாமை' என்றார். இல்வாழ்வார்க்காயின் சுற்றத்தார் முதலியோரிடத்து விளையாட்டுவகையால் அவரை வஞ்சித்துக் கொள்ளுதற்குத் தகுந்த பொருள்களை அவ்வாறு கொண்டாலும் பொருந்தும்; துறந்தவர்க்காயின் அப்பொருளை அபகரிக்க நினைத்தவிடத்தும் பெரியதொரு குற்றமாகலின், இது துறவறத்திற் குரியதாயிற்று. சப்தாதி விடயங்களிலே செல்லாது மடங்கி ஒரு முகப்பட்டு உயிரையே நோக்கவேண்டியதாகிய அவரது மனம * அதைவிட்டுப் புறத்திலே போய்ப் பல விடத்தையுற்று உடம்பின்பொருட்டுப் பொருளை நோக்குதலேயல்லாமல், அப்பொருளையும் வஞ்சித்துக்கொள்ள நினைத்தல் அவருக்குப் பெரியதொரு குற்றமாதல் அறிக. இவ்விதம் வாய்மை முதற்கொல்லாமை முடிவாகிய நான்கு அதிகாரங்களுக்கும் ஒக்கும். இது பொருளைப்பற்றி யுண்டாகுங் குற்றத்தை விலக்குகின்றதாகலின், காமம்பற்றி யுண்டாகுங் கூடாவொழுக்கத்தின்பின் வைக்கப்பட்டது.

அளவல்ல செய்தாங்கே வீவர் களவல்ல
மற்றைய தேற்றா தவர். (௯)

(இ - ள்.) களவல்ல - களவல்லாத, மற்றைய - பிறவற்றை, தேற்றாதவர் - அறியாதவர், காட்சி முதலாகச் சொல்லப்பட்ட

* அவ்விதம் மனம் அடங்கிநின்று உயிரை நோக்குதலே சொரூபதியானம் எனப்படும்.

உயிர்ப்பொருளையும், அதற்கு அநாதியாய் வருகின்ற நல்வினை தீவினைகளின் பயனாகிய சனன மரணங்களையும், அவ்வினைகளால் அவ்வுயிர மக்கள் தேவர் நரகர் விலங்கு என்னும் நாற்கதியுட் பிறந்தும் இறந்தும் வருதலையும், அவ்வாறு பிறந்திறந்து உழலாமல் அவ்விருவினைகளைக் கெடுப்பதற்கு உபாயமாகிய யோக ஞானங்களையும், அவயோகஞானங்களால் அவ்வுயிர் அடையும் முத்தியையும் அளவுசெய்து உள்ளவாறு அறிந்து அறிந்தவாறு ஒழுகமாட்டாதவராகி, அளவல்ல - அவ்வளவல்லாத தீய நினைவுகளை, செய்து - நினைத்து, ஆங்கே - அப்பொழுதே, வீவர் - கெடுவர், எ - று.

தீய நினைவுகளாவன - பொருளுடையாரை வஞ்சிக்கும் விதமும், அவ்வஞ்சனையால் அதைக் கொள்ளும் விதமும், கொள்ளப் பட்ட அப்பொருளினாலே தாம் போகங்களை அனுபவிக்கும் விதமும் முதலாயின. நினைத்தலும் செய்தலாகலிற் 'செய்து' என்றும், அந்நினைப்பு உள்ளஅறங்களைப் போக்கி மறைப்பான சொற்களையும் செயல்களையும் புகுவித்து அப்பொழுதே கெடுக்குமாகலின் 'ஆங்கே வீவர்' என்றுங் கூறினார். மற்றையவாவன - துறந்தார்க்கு உணவாகச் சொல்லப்பட்ட காய் கனி கிழங்கு சருகு முதலானவையும், இல்லறத்தார் செய்யும் தானங்களுமாம். தேற்றாமை அவற்றையே புசித்து அவ்வளவால் திருப்தி யடைந்திருத்தலை அறியாமை. இதனால் களவு செய்வார் கெடும்விதம் கூறப்பட்டது.

† முத்தியை இகழாது விரும்புபவன் பிறர்பொருள் ‡யாதொன்றையும் திருடுதலை மனதினால் நினைக்கவும் கூடாதென்பதும்; கள

---

* அளவைகளின் விவரம் உடு-ம் அதிகாரத்திற் கூறப்பட்டுளது.

† முத்தியை இகழ்தலாவது - காட்சியே பிரமாணமென்றும், நிலம், நீர், தீ, காற்று எனப் பூதம் நான்கேயென்றும், அவைகள் கூடுதலின் சிறப்பினாலே தோன்றிப் பிரிவினாலே அழிவதாகிய உடம்பினிடத்தே அறிவு மதுவினிடத்தே களிப்புப்போல் வெளிப்பட்டு அழியுமென்றும், இறந்தவுயிர் பின்னே பிறவாதென்றும், இன்பமும் பொருளும் ஒருவனது முயற்சியால் வருவதென்றும் சொல்லும் உலோகாயத முதலிய மயக்க நூல்களைத் தெளிந்து அவற்றிற்கேற்ப நடத்தலாம்.

‡ ஞானமுண்டாதற்குக் காரணமான உண்மை நூற் பொருளையாயினும் ஆசிரியனுக்கு வழிபாடு செய்யாமல் அவனை வஞ்சித்துக் கொள்ளின் அதுவும் களவேயாகு மென்றறிக.

வினையால் உண்டாகிய பொருளானது வளர்வதுபோலத் தோன்றிப் பின் அக்களவினைச் செய்தவனுக்கு இம்மைக்குப் பழியையும் மறுமைக்குப் பாவத்தையும் வைத்து அவன் செய்த அறத்தை அழித்துத் தானும் அழியுமென்பதூஉம், அதனால் அக்களவினிடத்து ஆசை வைத்தவன் எப்போதும் தொலையாத துன்பத்தையே அநுபவிப்பானென்பதூஉம், தமக்குரிய பொருளையும் அதன் குற்றம் நோக்கி வெறுத்துத் துறந்தவர் பின்னே பிறர்க்குரியபொருளை நன்றென்று விரும்பி அதனை வஞ்சித்துக் கொள்ளுதற்கு விரும்புவாரானால், அவரிடத்தே, உயிர்களின்மேல் அருள்செய்தல் நமக்கு உறுதியாகுமென்றறிந்து அவ்வருளில் தவறாது நடக்கும் தெளிவு கூடாதென்பதூஉம், உண்மையை அறிந்தவரது நெஞ்சில் அறம் நிலைபெற்றாற்போலக் களவறிந்தார் நெஞ்சில் வஞ்சனை குடிகொண்டிருக்குமென்பதூஉம், களவினைப் பழகுவோர்க்கு இம்மையிலேயே அவர்கள் உடம்பும் அரசரால் தண்டிக்கப்படுதலால் தவறுமென்பதூஉம், அது செய்யாதவர்க்கு இங்கே உடம்பு நிலைபெறுதலோடு மறுமையில் விண்ணுலகமும் தவறாது கிடைக்குமென்பதூஉம் இங்கு அறியத்தக்கவைகளாம்

## ௩௰. வாய்மை. *

அஃதாவது மெய்யினது தன்மை. மெய்யெனப்படுவது பிறிதோருயிர்க்குத் தீங்கு சிறிதும் பயவாத சொல். இதனால் நிகழ்ந்ததொன்றைக் கூறினும் அது தீங்கு பயப்பின் பொய்ம்மையேயாமென்பதூஉம், நிகழ்ந்ததல்லாத வொன்றைக் கூறினும் அது குற்றங்

* இது சத்துவ குணத்தொன்று

**குணம்** ௩ சத்துவம், இராசசு, தமசு

**சத்துவம்** ஞானம், அருள், தவம், பொறை, வாய்மை, மேன்மை, மோனம், ஐம்பொறியடக்கல்.

**இராசசு** - மனவூக்கம், ஞானம், வீரம், தவம், தருமம், தானம், கல்வி, கேள்வி

**தமசு** பேருண்டி, பெருந்துயில், சோம்பு, நீதிவழு, ஒழுக்க வழு, வஞ்சம், மறதி, பொய், கோபம், காமம், கொலை.

தீர்ந்த நன்மையைப் பயப்பின் மெய்ம்மையா † மென்பதும் பெறப் படும். பெரும்பான்மையும் காமமும் பொருளும்பற்றி நிகழ்வதாய பொய்ம்மையை விலக்கலின், இது கூடாவொழுக்கங் கள்ளாமை களின்பின் வைக்கப்பட்டது.

**யாமெய்யாக் கண்டவற்று ளில்லை யெனைத்தொன்றும்**
**வாய்மையி னல்ல பிற.** (௰)

(இ - ள்.) யாம் - யாம், மெய்யா - மெய்ந்நூல்களாக, கண்டவற்றுள் - கண்ட நூல்களுள், யாதொன்றும் - யாதொரு தன்மையாலும், வாய்மையின் - மெய்ம்மையினும், நல்ல - மிக்கனவாகச் சொல்லப்பட்ட பிறவறங்கள், இல்லை - இல்லை, எ - று.

மெய்யை யுணர்த்தும் நூல்களை 'மெய்' என்றது காரியவாகு பெயர். அம்மெய்ந் நூல்களாவன தம்மிடத்து மயக்கம் இல்லாததால் பொருள்களை உள்ளவாறு உணரவல்லவராய்க் காமவெகுளிகள் இல்லாததால் உணர்ந்த பொருள்களை உணர்ந்தபடியே உரைக்கவும் வல்லவராய பெரியோர் அருளால் உலகத்தார் நன்மையடையும் பொருட்டுக் கூறிய * ஆகமங்கள். அவை யெல்லாவற்றிலும் 'வாய்மையின் நல்ல பிற இல்லை' என்பது ஒப்பமுடிந்த தென்பதாம். இதனால் இவ்வறத்தினது தலைமை கூறப்பட்டது.

ஒருவன் தான் அறிந்ததொன்றைப் பிறர் அறிந்திலரென்று பொய்த்தானாயின அதனை அறிந்த அவனது நெஞ்சே அப்பாவத்துக்குச் சாட்சியாய் நின்று அவனை அப்பாவத்தின் பயனாகிய

† "மெய்ம்மையே யொருவனுக்கு விபத்தினை மீட்குமாயிற், பொய்ம்மையு மெய்ம்மைபோலப் புண்ணியம் பயக்குமாதோ"— பாரதம்.

* ஆகமம் - ஆன்மாக்களை அநாதியாய்ப் பற்றிப் பீடித்துக் கொண்டிருக்கும் ஆணவம் கன்மம் மாயையென்னும் மும்மலங்களை ஒழித்து அம்மலங்களால் மூடப்பட்டிருந்த சிவஞானத்தை ஒளிரச் செய்து அவை முத்திபெறும் வகையை உணர்த்தும் நூல். பதி பசு பாச விலக்கணங்களை உணர்த்தும் நூலெனக் கூறினும் ஒக்கும்.

துன்பத்தை அடைவிக்கு † மெனபதும்; பொய் பேசாது உண்மை பேசுபவனை உலகத்தார் போற்றுவ ரெனபதும்; மனத்தோடு பொருந்த உண்மை பேசுபவன் காயத்தால் தானமும் தவமும் ஒருமித்துச் செய்பவரினும் சிறப்புடையவனுவா னென்பதும்; பொய்யாமை இம்மைக்குப் புகழையும் மறுமைக்கு அறத்தையும் தருமென்பதும்; பொய்யாமையாகிய அறத்தைச் செய்யாதவன் செய்யும் மற்றை அறங்கள் நன்றுகாவெனபதும்; ஒருவனுக்கு உடம்பு நீரினுலே சுத்தமாதல்போல் அவனது மனம் உண்மை பேசுதலால் சுத்தமாகுமென்பதும்; துறவால் அமைந்த நல்லோர்க்கு அஞ்ஞானமாகிய அகத்திருளை நீக்குவது பொய்யாமையாகிய விளக்கேயாகு மெனபதும்; அதனுல் அப்பொய்யா விளக்கை நோக்கப் புறத்திருளை நீக்குகிற ஞாயிறு, திங்கள், தீயெனனும் விளக்குகள் விளக்குகளாகா வெனபதும், ஒருவன் கல்வி முதலிய வற்றுல் அமைந்துளாளுயினும் வாய்மை யில்லாதவிடத்துப் பய னில்லையெனபதும் இங்கு அறியததக்கவைகளாம்.

---

## ௩௧ வெகுளாமை.

அஃதாவது சினத்தைச் செய்தற்குக காரணம் ஒருவனிடத்து உண்டாயவிடத்தும் அதனைச் செய்யாமை. அச்சினத்தைத் தம்மின

---

† "கண்டவ ரில்லென வுலகத்து ளுணராதார
தங்காது தகைவின்றித் தாஞ்செய்யும் வினைகளுள்
நெஞ்சறிந்த கொடியவை மறைப்பவு மறையாவாம்
நெஞ்சத்திற் குறுகிய கரியில்லை யாகலின்."

—கலித்தொகை

இதன்பொருள் - அறியாதவாகள் தம்மனத்தினுலே தடுக்கப் படாமல், வேறு தடுப்பாருமின்றி உலகத்திற் கண்டவர்களு மில்லை, யென்று நினைத்துத் தாம் செய்யும் கொடுந்தொழில்களில் தம் மனமறியச் செய்தவைகளைப் பின் பிறரறியாமல் மறைத்தார்க ளாயினும் அவர் நெஞ்சமே அவர் செய்த அத்தீச்செயல்களுக்கு நெருங்கிய சாட்சியாய் நினறு அவற்றை வெளிப்படுத்தும் எனறு வாறு.

வலியாரிடத்துச் செய்யின் அதனால் அவர்க்கு வருவதோர் தீங்கின்றித் தனக்கே தீங்காய் முடிதலால் அதனை அவரிடத்துக் காத்தல் அறனாகாது. அதனைத் தம்மின் மெலியாரிடத்துச் செல்லாது தடுப்பவரே அருளாற் றடுப்பவராவார். அதுவே சிறந்ததோர் அறனாகும். இது பொய்ம்மைபற்றி உண்டாவதாகிய கோபத்தை விலக்கலால், வாய்மையின்பின் வைக்கப்பட்ட

**சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி யினமென்னும்**
**ஏமப் புணையைச் சுடும்.** (௬)

(இ - ள்.) சினம் என்னும் - சினமென்று சொல்லப்படுகிற, சேர்ந்தாரைக் கொல்லி - நெருப்பு, தனக்கு இடமானவரையேயன்றி. இனமென்னும் - அவர்க்கு இனமாகிய, எமம் - இதஞ் சொல்வோராகிய, புணையை - மரக்கலத்தையும், சுடும், - எ - று.

‘சேர்ந்தாரைக் கொல்லி’ யென்பது காரணப்பெயர்; தான் (நெருப்பு) சேர்ந்த விடத்தைக் கொல்லும (அழிக்கும்) தொழிலையுடையதென்பது அதன்பொருள். சேர்ந்தாரையென வுயர்திணைப் பன்மையாகிய பலர்பால்மேல் வைத்து மற்றை ஆண்பால் பெண்பால் ஒன்றன்பால் பலவின்பால் என்னும் நான்குபாலையும் தமது கருத்தோடு கூடிய பொருளாற்றலாற் கொண்டார். இங்கு உருவகஞ் செய்கின்றது துறந்தார் சினத்தையே யாகலின், சினமென்னும் நெருப்பென்ற விதப்பு, உலகத்து நெருப்புச் சுடுவது தான்சேர்ந்த விடத்தையே; இந்நெருப்புச் சேராத விடத்தையுஞ் சுடுமென்னும் வித்தியாசந் தோன்றுகின்றது. இங்கு இனமென்றது யான் எனதென்னும் இருவகைப் பற்றினையும் முற்றத் துறந்து தவத்தினாலும் ஞானத்தினாலும் பெரியவராய், பிறப்பிற்கஞ்சித் தம்மை யடைந்து வீடடையும் நெறியைக் கேட்டவர்களுக்கு அதற்குரிய உறுதி மொழிகளை இனிமையாகச் சொல்லுகின்றவரை. சினமெனனுஞ் சேர்ந்தாரைக் கொல்லி என்று கூறிய உருவகத்தை நோக்கிச் சுடுமென்னுந் தொழில் கொடுத்தாராயினும், சுடுமென்பதற்கு அகற்றும் (நீக்கும்) என்பது பொருளாகக் கொள்க. ஏமப்புணை - இனிமையாகிய மொழிகளை யுபதேசிக்குந் தோணி. இனத்தைப் புணையாக உருவகஞ் செய்தலால் பிறவிக்கடலைக் கடப்பித்து முத்திக் கரை

யைச் சேர்க்கின்றவென வருவித்து அப்புணைக்குமுன் கூட்டுக. புணையையும் என்னும் இறந்தது தழீஇய எச்சவும்மை தொக்கு நின்றது. தன்னையும் பிறவிக் கடலில் வீழ்வித்து எடுப்பாரையும் நீக்குமென்பதாம். நெருப்பிற்குச் சேராத விடத்தையும் சுடுதலை யும், தோணிக்கு இதோபதேசஞ் செய்தலையும் அதிகமாகச் சொல் லுதலால் மிகையொற்றுமை யுருவகவணி.

மெலியார் மேலே கோபம் செய்யாதிருத்தலே தருமமென் பதும்; வலியார் மேலே கோபஞ் செய்தவிடத்து அதனால் அவர்க்கு வருவதோர் தீங்கு இல்லாமையால், அடக்கிய விடத்தும் அறமில்லை யென்பதும்; ஒருவனது கோபமானது தன்னின் வலியார்மேலா வது தன்னை ஒத்தார்மேலாவது உண்டாயின் அது உண்டாய அப் பொழுதே தனக்குத் தீங்குபயக்கு மாதலாலும், தன்னின மெலியார் மேல் உண்டாயின் அது அப்பொழுது தனக்குத் தீங்குபயவா திருப் பினும் இம்மையிலே பழியையும் மறுமையிலே பாவத்தையும் தருத லாலும், மனத்தினால் யான் எனதென்னும் இருவகைப் பற்றையும் விட்டவர்க்கு ஆகாதனவாகிய தீயசிந்தைகளை யெல்லாம் உண்டாக்க லாலும், கோபம் ஒருவரிடத்தும் ஆகாதென்பதும்; துறந்தோர்க்கு அருளினாலே உண்டாகிய முகமலர்ச்சியையும் அகமகிழ்ச்சியையும் கோபம் கெடுக்குமென்பதும்; கோபஞ் செய்பவன் வேண்டிய பயன்களை வேண்டியபடியே யடைவிப்பதாகிய தவத்தைப் பிறர் மேலே சாபமிடுதற்காக இழந்து அத் தவத்துன்பத்தோடு பழைய பிறவித் துன்பமும் ஒருமிக்க அடைதலால், தன்னைத்தான் துன்ப மடையாமற் காக்க விரும்புபவன் தன் மனத்திலே கோபம் வாராமற் காக்கக் கடவனென்பதும்; கோபத்தைத் தனது வல்லமையைக் காட்டுகிற ஒரு குணமென்று தன்னிடத்துக் கொண்டவன் பூமியில் அறைந்தவனது கையானது வலியிழத்தல்போலத் தப்பாது தன் வலிமையை இழப்பானென்பதும்; நெருப்புத் தோய்ந்தாலொத்த பொறுத்தற்கரிய துன்பத்தை ஒருவன் தனக்குச் செய்தானாயினும், கூடுமாயின் அவன்மேலும் கோபஞ் செய்யாதிருத்தல் நலமென்ப தும்; கோபமில்லாதவன் எண்ணிய பயன்களெல்லாவற்றையும் பெறுவானென்பதும்; மிக்க சினத்தை உடையார்க்கு ஞானமெய்து தற்குரிய உயிர் இருக்கினும் கலக்கத்தினாலே ஞானத்தை அடை

யாமை நிச்சயமாதலால், அவர் உயிருடையராயிருக்கினும் செத்தவரோ டொப்பாவ ரென்பதும்; சினத்தை விட்டவர்க்கு மரணமடைதற்குரிய உடம்பு இருக்கினும் ஞானத்தினால் முத்தியடைந்து சீவன்முத்தராதல் நிச்சயமாதலால், மரணத்தை யொழிந்தாரோ டொப்பாவ ரென்பதும் இங்கு அறியத்தக்கவைகளாம்.

## ௩௨. இன்னாசெய்யாமை.

அஃதாவது தனக்கு ஒருபயனைக் கருதியாவது கோபத்தினாலாவது சோர்வி(மறதி)னாலாவது ஒருயிர்க்குத் துன்பந்தருமவற்றைச் செய்யாமை. இன்னாசெய்தல் வெகுளி ஒழியவும் நிகழுமென்பதை அறிவித்தற்கு, இது வெகுளாமையின்பின் வைக்கப்பட்டது.

அறிவினா னாகுவ துண்டோ பிறிதினோய்
தந்நோய்போற் போற்றாக் கடை. (ரு)

(இ - ள்.) துறந்தார்க்கு, அறிவினான் - உயிர் முதலியவற்றை உள்ளவாறு அறிந்த அறிவினால், ஆகுவது - ஆவதொரு பயன், உண்டோ - இல்லை, பிறிதின் நோய் - பிறிதோருயிர்க்கு வரும் நோயை, தம் நோய்போல் - தம்முயிர்க்கு வந்ததுபோல, போற்றாக் கடை - காவாதவிடத்து, எ - று.

குறிக்கொண்டு காத்தலாவது நடத்தல், இருத்தல், கிடத்தல், நிற்றல், உண்டல் முதலிய தந்தொழில்களாலும், வேறு விதங்களாலும், உயிர்கள் அடையும் துன்பங்களை முன்னையறிந்து அவை வாராமற் காத்தல். இத்துன்பம் பெரும்பாலும் அஃறிணையிலே எறும்பு முதலாகிய சிறிய உடம்புடைய பிராணிகளைப்பற்றி வருதலால் பொதுப்படப் 'பிறிதின்நோய்' என்றும், மறப்பினாலே அவை துன்பத்தை யடையினும் நமக்குத் துன்பஞ் செய்தலாமென்று அறிந்து காக்கவேண்டுமாகலின், அது செய்யாதவிடத்து அறிவினாலே பயனில்லையென்றும் சொல்லினார்.

யோகமாகிய சிறப்புத்தரும் அணிமா † முதலிய செல்வங்களைப் பிறர்க்குத் துன்பந் தருமவைகளைச்செய்து பெறலாமாயினும், அவற்றைச்செய்யாமையே நல்லதென்பதும்; ஒருவன் வைரங்கொண்டு இன்னாதவற்றைச் செய்தவிடத்து மீண்டு அவற்றை அவனிடத்துச் செய்யாது மனத்திலும் வையாது விடவேண்டுமென்பதும்; தான் முன்பு ஒரு தீமையுஞ் செய்யாதிருக்கத் தன்மேல் வைரங்கொண்டவர்க்கும் துறந்தவன் துன்பஞ் செய்தானாயின், அச்செயலால் அவன் தவமிழந்து பழியும் பாவமும் எய்துவனென்பதும்; ஒருவன் தனக்குத் தீமை செய்தார்க்கு நன்மைசெய்து, அவர் செய்த தீமையையும் தான் செய்த நன்மையையும் மறக்கவேண்டுமென்பதும்; ஒருவன் தான் துன்பமென் றறிந்தவற்றைப் பிறரிடத்துச் செய்தலாகாதென்பதும்; எந்தக் காலத்திலும் எத்தன்மையோருக்கும் எவ்வித தீமையையும் எக்காரணத்தாலும் மனமறியச் செய்யாதிருத்தலே முதன்மையான தருமமாகுமென்பதும்; பிறர் செய்யுந் தீமைகள் தன்னுயிர்க்குத் துன்பமாயிருத்தலை அனுபவித்தறிகின்றவன், இப்படியே இவை பிறவுயிர்க்கும் துன்பந் தருமவையாகுமென்பது அனுமானத்தால் அறிந்திருந்தும், செய்கின்ற இப்பாவம் பிராயச்சித்தத்தால் ஒழிக்கப்படுத லில்லாமையால், பிறவுயிர்க்கு யானசெய்த தீமைகள் யான் வருந்தப் பின்னை வந்து வருத்துமென்பது ஆகமத்தாலும் அறிந்து, பிறவுயிர்களுக்குத் தீமைசெய்தலை ஒழிக்கக்கடவனென்பதும்; இவ்விதம் ஒழிக்காது பிறவுயிர்க்குத் தீமை செய்பவன் பேதையாகக் கருதப்படுவானென்பதும்; துறந்தவர் பிறர்க்குத் தீமைசெய்யின் தமது தவம் அழியப்பெற்றுத் தாம் பிறர்க்குச்செய்த தீமைகளைப் பிறர் தமக்குச் செய்யாமல் தாமே விரைவிலும் எளிதிலும் அடைவரென்பதும்; பிறவுயிர்க்குத் தான் செய்யுந் துன்பம் தன்னையே வந்தடைதலால், துன்பமில்லாதிருத்தலை விரும்புபவன் தான் பிறிதோருயிர்க்குத் துன்பஞ் செய்யாதிருக்கக் கடவனென்பதும் இங்கு அறியத்தக்கவைகளாம்.

† ௫-ம் பக்கம் அடிக்குறிப்பினைப் பார்க்க.

## ௩௩. கொல்லாமை.

அஃதாவது * ஐயறிவுடையன முதல ஓரறிவுடையன ஈறாகிய உயிர்களைச் சோர்ந்துங் கொல்லுதலைச் செய்யாமை. இது மேற்கூறிய அறங்கள் எல்லாவற்றினும் சிறப்புடைத்தாய்க் கூறப்படாத மறைநெறியறங்களை யெல்லாம் தன்னுள் அடக்கி நிற்றலால், இறுதியில் வைக்கப்பட்டது.

> பகுத்துண்டு பல்லுயி ரோம்புத னூலோர்
> தொகுத்தவற்று ளெல்லாந் தலை (உ)

(இ - ள்.) பகுத்து - உணவதனைப் பசித்த உயிர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்து, உண்டு - உண்டு, பல்லுயிர் - ஐவகை உயிர்களையும், ஓம்புதல் - காப்பாற்றல், நூலோர் - அறநூலுடையார், தொகுத்தவற்றுளெல்லாம் - அறந்தார்க்குத் தொகுத்துவைத்த அறங்கள் எல்லாவற்றினும், தலை - தலையாய அறம், எ - று.

பல்லுயிரும் என்னும் முற்றும்மை விகாரத்தால் தொக்கு நின்றது. ஓம்புதல் - மறந்தும் கொலை வாராமற் குறிக்கொண்டு காத்தல். அவ்விதம் காத்தற்குப் பகுத்துண்டல் இன்றியமையாத உறுப்பாகலின், அச்சிறப்புத் தோன்ற, அதனை இறந்தகால வினையெச்சத்தாற் கூறினார். எல்லா நூல்களிலும் நல்லவைகளை எடுத்து எல்லார்க்கும் பொதுப்படக் கூறுதல் இந்நூலாசிரியர்க்கு இயல்பாதலால் ஈண்டும் பொதுப்பட 'நூலோர்' என்றும், அவரெல்லார்க்கும் ஒப்ப முடிதலால் இது தலையாய அறம் என்றுங் கூறினார்.

---

* ஐயறிவுயிர் - சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்னும் ஐம்புல நுகர்ச்சியுடைய உயிர் - மக்கள், தேவர், நரகர், விலங்கு, பறவை.

நாலறிவுயிர் - சுவை ஒளி ஊறு நாற்றம் என்னும் நாற்புல நுகர்ச்சியுடைய உயிர் - தும்பி வண்டு முதலியன.

மூவறிவுயிர் - சுவை ஊறு நாற்றம் என்னும் முப்புல நுகர்ச்சியுடைய உயிர் - சிதல், எறும்பு முதலியன.

ஈரறிவுயிர் - சுவை ஊறு என்னும் இருபுல நுகர்ச்சியுடைய உயிர் - இப்பி, சங்கு முதலியன.

ஓரறிவுயிர் - ஊறு என்னும் ஒருபுல நுகர்ச்சியுடைய உயிர், புல் மரம் முதலியன.

கொலைப்பாவம் பிரன்மனை நயத்தல், கள்ளுண்ணல், திருடுதல், சூதாடல் முதலிய பாவங்கள் எல்லாவற்றினும் கொடியதென்பது எவரும் ஒப்பமுடிந்த உண்மையாதலால், அக்கொலையைச் செய்யாமையே ஒருவனுக்கு அறங்களெல்லாமாகிய செய்கையாகுமென்பதும்; அதனால் 'யாமெய்யாக் கண்டவற்று ளில்லை யெனைத்தொன்றும், வாய்மையி னல்ல பிற' என முன் சிறப்பித்துச் சொல்லப்பட்ட பொய்யாமையினும் கொல்லாமை மேலான தென்பதும்; யாதோருயிரையுங் கொல்லாமையே மேற்கதியும் முத்தியும் பெறுதற்கு நல்லவழியாகு மென்பதும்; மனிதர் முதலாகிய † சரமும் மரமுதலாகிய ‡ அசரமும் ஆகிய இருவகைப் பிறப்புகளிலும் இன்பமென்ப தொன்றில்லாமல் உள்ளதெல்லாம் * துனபமேயாகப் பிறப்பு நின்ற நிலையை அஞ்சிப் பிறவாமைப் பொருட்டு மனைவாழ்க்கையைத் துறந்தவர் எல்லாருள்ளும் கொலைப்பாவத்தை அஞ்சிக் கொல்லாமையாகிய அறத்தை மறவாதவனே உயர்ந்தோனென்பதும்; மிகப்பெரிய § அறத்தினைச் செய்தாரும் மிகப்பெரிய

† சரம் - அசைவன. ‡ அசரம் - அசையாதன.

" ஒடுங்கும் பிணிபிறவி கேடென்றிவை யுடைத்தாய வாழ்க்கை"
" சாநாளும் வாழ்நாளுந் தோற்றமிவை சலிப்பாய வாழ்க்கை",

" பன்னீர்மை குன்றிச் செவிகேட்பின் படர்நோக்கிற் கண் பவளந்திர, நன்னீர்மை குன்றித் திரைதோ லொடு நரைதோன்றும்",
" இறையூண் டுகளோ டிடுக்கணெய்தி யிழிப்பாய வாழ்க்கை"
" பல்வீழ்ந்து நாத்தளர்ந்து மெய்யில்வாடிப் பழிப்பாய வாழ்க்கை."
" பகடூர் பசிநலிய நோய்வருதலாற் பழிப்பாய வாழ்க்கை"

—திருஞான சம்பந்தர்.

" மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின் கலம்போலச்
சாந்துணையுஞ் சஞ்சலமே தான் "—ஔவையார்.

§ இதற்குப் பிரமாணம்—

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ளநினை
வாயினவே வரம்பெறுவர் ஐயுறவேண்டா வொன்றும்
வேயனதோள் உமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையா ரவர்தம்மைத் தோயாவாந் தீவினையே.

—சம்பந்தர் தேவாரம்.

பாவத்தினைச் செய்தாரும் மறுமையிலே சுகதுக்கங்களை யனுபவிப்பாரென்னும் முறையில்லாமல் இம்மையிலேதானே அவைகளின் பயனை அனுபவிப்பா ரென்பது அறநூற் றுணிவுபற்றி, கொல்லாமையாகிய இப்பெரிய அறத்தினைச் செய்தவனதானும் இம்மையிலே துன்பமின்றி இன்பவாழ்க்கை வாய்ந்து இயமபயமின்றிக் காலங்கடித்து ஞானமுண்டாகி மோட்சத்தைப் பெறுவானென்பதும்; தன்னை ஒன்று கொல்லவந்த விடத்தும் தன்னுயிரைக் காப்பாற்றுதற்காகவேனும் அதனைக் கொல்லலாகா தென்பதும்; வேள்விக்கண் தேவர் பொருட்டுப் பிறிதோருயிரைக் கொல்லுதல் சுவர்க்கத்தையடைய விரும்பிய இல்லறத்தார்க்கு ஆகுமென்பார் உளராயினும் அச்சுவர்க்கவின்பம் மோட்சவின்பத்தை நோக்க அற்பமாயிருத்தலாலும், பின்னும் பிறப்பதற்குக் காரணமா யிருப்பதாலும், இவ்வுலகத்திற்போலவே அங்கும் காமக்குரோதாதி பகைகளும், பிணி அச்சம் மரணமுதலிய துன்பங்களும் உள†வாகலாலும், மோட்சமடைய முயற்சிக்கும் துறவறத்தார்க்கு ஓருயிரைக் கொல்லவருஞ் செல்வம் இழிந்ததாகு மென்பதும்; கொலைவினையராகிய மனவுணர்ச்சியில்லாத மாந்தர் அத்தொழிலினது இழிவை அறியாராயினும் அவ்விழிவை அறிந்தவாரலே சண்டாளராகக் கருதப்படுவரென்பதும்; பார்க்கக் கூடாத நோயுடம்புடனே வறுமை மிகுந்த இழிதொழில் வாழ்க்கையினை யுடையவரை இவர் முற்பிறப்பில்

* இதற்குப் பிரமாணம்—

"குற்றொருவரைக் கூறைகொண்டு கொலைகள் சூழ்ந்த களவெலாம்
செற்றொருவரைச் செய்ததீமைகள் இம்மையே வருந் திண்ணமே
மற்றொருவரைப் பற்றிலேனமற வாதெழுமட நெஞ்சமே
புற்றரவுடைப் பெற்றமேறி புறம்பயந்தொழப் போதுமே."

—சுந்தரர் தேவாரம்.

[வேய் - மூங்கில். கூறை - துணி. பெற்றம் - எருது]

† காடு போந்தன னிந்திரன் பொன்னகர் கீண்டு
பாடு சேர்ந்தது சயந்தனுஞ் சிறையிடைப் பட்டான்
நாடில் விண்பதச் செய்கையீ தெம்பிரா னல்கும்
வீட தேயலாற் றுன்பறு மார்க்கம்வே றுண்டோ."

—கந்தபுராணம்

கொலைப்பாவஞ் செய்தவராவரென்று வினைவிளைவுகளை அறிந்தோர் சொல்லுவர்†என்பதும் இங்கு அறியத்தக்கவைகளாம்.

## ஞானம்.

இனி அவ்விரதங்களின் பயனாகிய ஞானம் கூறத் தொடங்கினார். ஞானமாவது மோட்சத்தைத் தரும் அறிவு. அது நிலையாமை, துறவு, மெய்யுணர்தல், அவாவறுத்தல் என்னும் நான்கு அதிகாரங்களுள் அடக்கப்பட்டது.

### ௩௪. நிலையாமை.

அஃதாவது தோற்றமுடையன யாவும் நிலைத்திராதனவாகிய தன்மை. மயங்கியவிடத்துக் கானலில் நீர்போலத் தோன்றி மெய்யுணர்ந்தவிடத்துப் பழுதையிற் பாம்புபோலக் கெடுதலாற் பொய்யென்று சொல்லுவோரும், நிலை வேறுபட்டு வருதலாற் கணந்தோறும் பிறந்திறக்குமென்பாரும், ஒருவிதத்தால் வேறுபடுதலும் ஒருவிதத்தால் வேறுபடாமையும் உடையதினால் நிலைத்தலும் நிலையாமையும் ஒருங்குடையன வென்பாரும் எனப் பொருளின் தன்மை கூறுவார் பலவகைப்பட்டவராவர்; அவரெல்லார்க்கும் அவற்றின் நிலையாமை உடன்பாடாகலின், ஈண்டு அதனையே கூறுகின்றார். இதை யறிந்தவிடத்தல்லது, உலகப்பொருள்களின்மேலுள்ள பற்று விடாதாகலின், இது முன்வைக்கப்பட்டது.

ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப
கோடியு மல்ல பல. (௭)

(இ - ள்.) அறிவிலாதார், ஒருபொழுதும் - ஒருபொழுதளவும், வாழ்வது - தம்முடம்பும் உயிரும் கூடியிருக்கையை, அறியார் -

† "அக்கேபோ லங்கை யொழிய விரலழுகித்
துக்கத் தொழுநோ யெழுபவே—அக்கால்
அலவனைக் காதலித்துக் கான்முறித்துத் தின்ற
பழவினை வந்தடைந்தக் கால்"—நாலடியார் - தீவினையச்சம்.

[அக்கு - சங்கு. அங்கை - உள்ளங்கை. தொழுநோய் - குட்டநோய். அக்கால் - முற்பிறப்பில். அலவன் - நண்டு]

அறியமாட்டார், மாட்டாதிருந்தும் கோடியுமல்ல கோடியளவு மானவும், பல - அதனினும் பலவாகிய நினைவுகளை, கருதுப நினையார் சிறியார் (எ - று)

ஒருபொழுதும் என்ன இறப்புமென்பயால் இங்கே பொழுதென்டது கணக்குத்தக்காட்டி நின்றது காரணமாகிய வினையினளவே வாழ்நாட்குள்ளாவார்கள் ... அடைப்பட்டாம் ... பலவாய நினைவுகளாவன — நாகரீயர் ... நுபவிக்கப்படும் இன்பங்கள் தமக்குரியவை ஆநுபவிக்குமே, அவ்வின்ப நுகர்ச்சிக்குப் பொருளாக் துணைக்காரணமாகுமென்கிற அப்பொருள் தாமேயாசிகளால் வருமவிதமும் அம்முயற்சிகளை தாம் செய்யுமவிதமும் அவைகளுக்குவரும் இடையூறுகளும் ... இடையூறுகள் நீக்கும் விதமும் நீக்கி அப்பொருளைச் சேர்க்கும் விதமும் ஆக்க ... பிறர் கொண்டுபோகாமற் காக்கும் விதமும் அப்பொருளால் சிறந்தி ... ளையாக்கும் விதமும் ... அழிக்கும் விதமும், தாம் அவ்வின்பங்களை அநுபவிக்கும் விதமும் முதலானவையாம். ஆவிவிலாரது உயிர் மேலெல்லை வைத்து ... சொல்லப்படி இதனை அவ்வுடம்புக்கு ஒருகணமாயினும் ... தருமென்று கப்பட்டமை சொல்லப்பட்டது. இனிக் கருதுப பதனை அம்ம இன்ன பன்மைப்படியாக்கி உரைப்பாருமுளர்.

மேலோர் முடையவற்றை அல்லிலாதவைய மேயனு ... கணத்து அவைாவினமே பறச்செய்தல் ... ஒன்றையும், அது பிறவித்துன்பத்துக் குள்ளுவாகலால் வீடடையவிரும்புவோர்க்கு இறிவென்பதும் கூத்தாடுதல் செய்கின்ற சபையினிடத்தே காணப்போர் கூட்டம் கூத்தாட்டுக்காரணமாகப் பலவிடத்திருந்து தாமே வந்து அக்கூத்தாட்டுக் காரணம் போனவிடத்தே தானும் போவதுபோல, செல்வமும் ஒருவனது நல்வினை காரணமாக அவனிடத்தே பலவிடத்தால் தானே வந்து, அந்நல்வினையாகிய காரணம் போனவிடத்தே தானும் போமென்பதும், இவ்விதம் நிலையில்லாத செல்வத்தை ஒருவன் பெற்றால் அது நிற்கும் அப்பொழுதே அதைக்கொண்டு நிலையுள்ளதாகிய மோட்சத்தை அடையவிக்கக்கூடிய தருமத்தைச் செய்யவேண்டுமென்பதும், உயிரானது உலகியல் நடத்தற்பொருட்டுச் சூரியன் முதலாகிய அளவைகளால் கூறுபடுத்தப்பட்ட

நாள் மாதம் வருடமென்னும் காலவளவுபோல் தன்னைக் காட்டி உடம்பை இடைவிடாமல் அறுத்துச் செல்லுகின்ற காலசக்கரத்தின் வாயினிடத்ததெனபதும்; இந்நிலையை உள்ளவாறு உணர்பவர் உலகத்தில் உளராதல் அரிதெனபதும்; பேசாதிருக்கும்படி நாவையடக்கி விக்குள் எழுவதற்கு முன்னே மோட்சத்துக்கு ஏதுவாகிய தருமத்தை விரைந்து செய்ய வேண்டுமெனபதும்; † இவ்வுலகம் நேற்றிருந்தான் இன்றில்லையெனனும் பெருமையை யுடையதாயிருக்கிறதெனபதும்; உடம்பிறகும் உயிருக்கும உளதாய சிநேகிதமானது, முன்னே கருவுந்தானும் ஒன்றாய்ப் பிறந்து அக்கரு உருப்பெறுமளவும் அதற்கு ஆதாரமாகநின்ற முட்டை தனித்துக்கிடக்க, அதனுளிருந்த பறவை பருவம் வந்தபோது பறந்துபோந் தன்மை போன்றதெனபதும்; அறிவாயும் அருவாயும் நித்தமாயுமுள்ள உயிரும், அறியாமையாயும் உருவாயும அநித்தமாயுமுள்ள உடம்பும் தம்முள்ளே மாறுபட்டிருத்தலால், வினைவசத்தாற் கூடியதல்லாமல் நட்பில்லையெனபதும; உயிர்களுக்கு உறக்கமும் விழிப்பும் இயல்பாய்க் கடிதில் மாறிமாறி வருதல்போலவே இறப்பும் பிறப்பும் இயல்பாயக் கடிதில் மாறிமாறி வரு*மெனபதும்; உயிரானது வாத பித்த சிலேட்டுமங்களாகிய நோய்களது வீடாகிய உடம்பில அந்நோய்கள இருக்க அமைந்த காலத்திலே இருந்தும், கோபித்த காலத்திலே விட்டுப்போயும் ஒருடம்பிலும் நிலைபெறாமல் ஒதுக்குகுடியிருந்து வருகிறதேயன்றி, அதற்கு என்றைக்கும் இருப்பதாகிய ஒருடம்பு இதுவரை அமைந்ததில்லையெனபதும இங்கு அறியத் தவைகளாம்.

† "நின்றுளே துளும்புகின்றேனை நீசனேன் ஈசனேயோ, இன்றுளேன் நாளையில்லேன் என்செய்வான் தோன்றினேனே"
திருநேரிசை.

* "ஓடுபுனற்கரையாம் இளமை உறங்கி விழித்தாலொக்கும், இப்பிறவி, வாடியிருந்து வருந்தல் செய்யாது அடியேன் உய்யப் போவதோர் சூழல் சொல்லே"—சுந்தரர் தேவாரம்.

## ௩௫. துறவு.

அஃதாவது புறமாகிய செல்வத்திலும் அகமாகிய உடம்பிலும் உண்டாகிய பற்றை, அவைகளது நிலையாமையைப் பார்த்து விடுதலாம். அதிகார முறைமையும் இதனலே விளங்கும்.

மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்கல்
உற்ருர்க் குடம்பு மிகை. (௫)

(இ - ள்) பிறப்பறுக்கலுற்ருர்க்கு - பிறவியை நீக்கு முயற்சியை மேற்கொண்டவருக்கு, உடம்பும் - * அப்பிறப்பை நீக்குதற்கு உதவியாகிய உடம்பும், மிகை - அதிகமாம்; ஆனபின, மற்றும் - அதற்குமேலும், தொடர்ப்பாடு - சம்பந்தமில்லாதவையுஞ் சில பொருள்கள் பற்றப்படுதல், எவன் - என்னகும், எ - று.

கொல் - அசை, பொதுப்பட உடம்பென்றதால் உருவுடம்பும் அருவுடம்புங் கொள்ளப்படும். அவ்விருவகை யுடம்புகள், அருவுடம் பாவது † பத்துவகை இந்திரிய வுணர்வோடும்

* சென்ற பிறவிகளில் ஈட்டப்பட்ட வினைத்தொகுதிகளில் அவ்வப்பிறவிகளில் அனுபவித்துத் தொலைக்கப்பட்ட பகுதிகள் போக எஞ்சிநின்ற சஞ்சிதமென்னும் வினைக்கூட்டத்தை அனுபவித்துத் தொலைத்தனறிப் பிறப்பு நீங்காதாகலானும், அதனை அனுபவித்தல் சரீரத்தானன்றி வேறுவகையால் ஆகாதாகலானும், பிறப்பறுத்தலுக்கு உடம்பே உதவியெனபது பெறப்படும். இவ்வினைத்தொகுதி பின் சரீரமெடுப்பதற்குக் காரணமாயிருத்தலின் காரண சரீரமெனப்படும். இதனல் பிறப்பறுக்கலுற்ருர்க்கு உடம்புமிகை யெனபதின் பொருள் விசிதமாகும்.

† செவி மெய் கண் வாய் மூக்கு என்னும் ஞானேந்திரியங்கள் ஐந்தும் வாக்குப் பாதம் பாணி பாயுரு உபத்தமெனனும் கன்மேந்திரியங்கள் ஐந்தும் ஆகிய பத்துவகை இந்திரியங்களின் உணர்வு. அவற்றுள செவி ஆகாயத்தின் உதவியால சத்தத்தையும், மெய் வாயுவின் உதவியால் பரிசத்தையும், கண் அக்கினியின் உதவியால் உருவத்தையும், வாய் நீரின் உதவியால் உருசியையும், மூக்கு மண்ணின் உதவியால் வாசனையையும் அறியும்; வாக்கு ஆகாயத்தின் உதவியால் வசனிக்கும்; பாதம் வாயுவின் உதவியால் இயக்கத்தைச் செய்யும்; பாணி (கை) அக்கினியின உதவியால் கொடுத்தல் வாங்குதல்களைச் செய்யும்; பாயுரு (மலவாயில்) நீரின் உதவியால் மலத்தைக் கழிக்கும்; உபத்தம் (குறி) மண்ணின் உதவியால் ஆனந்தத்தைச் செய்யும்.

* ஐவகை வாயுக்களோடும் † காமவினை விளைவுகளோடுங் கூடியமனம், இது நுண்ணுடம் பெனவும்படும். இவ்வுடம்பினிடத்தில் அபிமானம் நிலையாமையை யறிந்த மாத்திரமே விடாமையினால், விடுதற்கு உபாயம் 'எல்லாப் பொருள்களையும்பற்றி நின்றே பற்றற்ற இறைவன அருளிய முத்திநெறியை இதுவே நன்னெறியென்று மனத்திற் கொண்டு அதனிடத்து உபாயத்தை அம்மனத்தாற்செய்க' என்று இவ்வதிகாரத்தின் கடைசிச் செய்யுளிற் கூறியுள்ளார். உருவுடம்பு (தூலசரீரம்) அருவுடம்பு (சூக்குமசரீரம்) எனனும் இவ்விருவகை யுடம்புகளால் துன்பம் இடைவிடாமல் வருதலையறிந்து, இவ்வுடம்புகளாலாகிய பந்தத்தினைக் கணப்பொழுதும் பொறுக்காமல் முத்தியினிடத்து விரைந்து செல்வதினாலே 'உடம்புவகை' எனறார். இன்பதுன்பங்களை யனுபவித்தலினால் உயிரோடு ‡ ஒற்றுமை யடைந்திருத்தலால் இவ்விருவகை யுடம்புகளும் யானென்று சொல்லப்படும். இதனால் அகப்பற்று விடுதல் கூறப்பட்டது.

---

* பிராணன் அபானன் வியானன் உதானன் சமானன் என்பன ஐவகை வாயுக்களாகும். அவற்றுள் பிராணன் இருதயத்திலிருந்து ஆகாயத்தின உதவியால் விடயங்களை விசாரித்துப் புத்தியை நடத்திப் பலத்தைச்செய்யும்; அபானன குதத்திலிருந்து மலசலங்களைப்பிரித்து வெளியேவிடும்; சமானன நாபியிலிருந்து அக்கினியின உதவியால் அன்னபானாதிகளின் சாரத்தை நாடிதோறும் செலுத்திச் சரீரத்தில் எங்கும் சமமாக நிரப்புவது; வியானன் நீரின் உதவியால் சரீரமுழுதும் இடையீடின்றி வியாபித்திருந்து அன்னபானாதிகளை ஏற்றமுங் குறைவுமாகச்செய்து அதனால் நோயை உண்டாக்கித் தேகத்தை இளைக்கச்செய்வது; உதானன் கண்டத்திலிருந்து பிருதிவியின் உதவியால் சத்தத்தை உண்டாக்குவது.

† காமவினை விளைவு - ஆசையும் அதன்பயனாகிய சுகதுக்க நுகர்ச்சியும்.

‡ உயிரினின்றும் உடல் வேறுபட்டதென்னும் உண்மையறிவின்மையினால்.

ஒருவன் எங்கெந்தப் பொருளினின்றும் நீங்கினனோ, அவனுக்கு இப்பிறப்பிலே அந்தந்தப் பொருளைத் தேடுதலாலும் காப்பாற்றலாலும் இழத்தலாலும் வருந் துன்பங்களும், அவைகளைத் தேடுமுறையில் ஈட்டப்பட்ட பாவங்களால் வருபிறப்பில் அனுபவிக்க நேரிடுந் துன்பங்களும் இல்லையென்பதும்; எல்லாப் பொருள்களையும் ஒருமிக்கவிடுதலே தலைமையான துறவாகுமென்பதும்; எல்லாப் பொருள்களையுந் துறத்தலால் ஒருவனுக்கு அப்பொருள் காரணமாக மன வாக்கு காயங்கள் அலையாது நிற்கையாலும், அவை நல்வழியிலே செல்லுதலாலும், இப்பிறப்பிலே உண்டாகும் முறைமையையுடைய இன்பங்கள் பலவாமென்பதும்; அவன் அவ்வின்பங்களைத் தான் அனுபவிப்பதோடு உலகத்துக்கும் மிகப் பெரிய உபகாரங்களைச் செய்யக்கூடுமென்பதும்; அவ்வின்பங்களை நெடுங்காலம் அனுபவிக்கவும், உலகத்துக்கு மிகவதிக உபகாரங்களைச் செய்யவும் விரும்புபவன் இளமையிலேயே துறக்கக்கடவனென்பதும்; சப்தாதி விடயங்களை அனுபவித்தலானது மனத்தைத் துன்பத்தினாலும் பாவத்தினாலும் தேடப்பட்டுவரும் பொருள்களின் மேல் அல்லாமல் முத்திவழியாகிய யோக ஞானங்களிலே செல்லவொட்டாதாதலாலும், அம்மனம் அப்பொருள்களிலே சென்றால் அவ்வனுபவிப்பு விறகுபெற்ற நெருப்புப்போல வளர்வதல்லது கெடுக்கப்படாதாதலாலும், முத்தியடைய விரும்புவோர் இந்திரிய நிக்கிரகஞ் செய்வதோடு எல்லாப் பொருள்களையும் பற்றறத்துறக்க வேண்டுமென்பதும்; துறந்தானொருவன் எல்லாப் பொருள்களையும்விட்டு ஒரு பொருளை விடாதவிடத்தும், அது சார்பாக விடப்பட்ட பொருள்களெல்லாம் திரும்பிவந்து தவத்துக்கு விரோதமாய் அவனுக்கு மனக்கலக்கஞ் செய்யுமென்பதும்; தானல்லாத உடம்பை யானென்றும் தன்னோடு சம்பந்தமில்லாத பொருளை எனதென்றும் நினைத்து அவற்றிலே பற்றுச்செய்தற்குக் காரணமாகிய அகங்காரம் மமகாரமென்னும் மயக்கங்களை ஞானாசிரியரிடத்துப் பெற்ற உபதேசத்தினாலும் யோகப்பயிற்சியினாலும் அவ்விருவகைப் பொருள்களும் யான் என்பதும் எனது என்பதும் அல்லவென்று தெளிந்து அவற்றினிடத்துப் பற்றை விட்டவனே முத்தியடைவா†னென்

† "அற்றது பற்றெனி லுற்றது வீடு"—திருவாய்மொழி.

பதும்; அப்பற்றினை விடாதவனுக்குப் பிறவித்துன்பங்கள் நீங்காவாதலால் முத்தியில்லை யெனபதும்; அவ்விருவகைப் பற்றுக்களுள்ளும் யானென்னும் அகப்பற்றாகிய அநாதியாக வருந் தேகாபிமானத்தினிடத்தே எனதென்னும் புறப்பற்றுப் பிறத்தலால், அவ்வகப்பற்று நீங்கியவழி மற்றைப் புறப்பற்று நீங்குமென்பதும்; அவ்வகப்பற்றினை விடுதற்கு எல்லாப் பொருள்களையும் பற்றிநின்றே பற்றில்லாத கடவுள் அருளிய முத்திநெறியை இதுவே நன்னெறியென்று மனத்துக்கொண்டு தியான சமாதிகளை அப்பியசித்தல் வேண்டுமென்பதும் இங்கு அறியத்தக்கவைகளாம்.

## ௩௬. மெய்யுணர்தல்.

அஃதாவது துன்பத்திற்கு உறைவிடமாகிய பிறப்பினையும் இன்பத்திற்கு உறைவிடமாகிய வீட்டினையும், அப்பிறப்பு வீடுகளின் காரணங்களாகிய அஞ்ஞான ஞானங்களையும், † விபரீத * சந்தேகங்களால் அல்லாமல் உண்மையால் அறிதல். இதனை வடநூலார் தத்துவஞான மென்பர் இதுவும் எல்லாப் பொருளையும்

---

† விபரீத உணர்வு - முத்துச்சிப்பியை வெள்ளியென்றும் மாப்பொம்மையை மனிதனென்றும் இவ்வகையே ஒரு பொருளை மற்றொரு பொருளாக நிச்சயித்தல் போல் மறுபிறப்பும் இருவினைப் பயனும் கடவுளும் இல்லையெனவும் மற்றும் இப்படிப்பட்டவைகளையும் சொல்லுகிற மயக்கநூல் வழக்குகளை மெய்ந்நூல் வழக்கென்று துணிதல்.

* சந்தேக உணர்வு - கானலோ நீரோ, கயிறோ பாம்போ, கிளிஞ்சலோ வெள்ளியோ என்று ஒன்றிலும் நிச்சயம் உண்டாகாது நிற்பதுபோல மறுபிறப்பும் இருவினைப்பயன்களும் கடவுளும் உண்டோ இல்லையோ என்று ஒன்றிலே துணிவுபிறவாமல் நிற்றல்.

பற்றின்றே பற்றற்ற இறைவன் ஓதிய வீட்டு நெறியை இதுவே நன்னெறியென்று மனத்திற் கொண்டவிடத்தே உண்டாவதாகையால், அக்காரணவொற்றுமைபற்றித் துறவின் பின் வைக்கப் பட்டது.

பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு. (அ)

(இ - ள்.) பிறப்பென்னும் - பிறவிக்கு முதற்காரணமான, பேதைமை - அஞ்ஞானம், நீங்க - கெட்டொழிய, சிறப்பெனனும் - முத்திக்கு நிமித்தகாரணமான, செம்பொருள - செவ்வியபொருளை, காண்பது - காண்பதே, அறிவு - ஒருவர்க்கு மெய்யுணர்வாவது, எ - று.

பிறப்பிற்குக் காரணமாய அஞ்ஞானத்தைப் 'பிறப்பெனனும் பேதைமை' எனவும், சிறப்பிற்குக் காரணமாய செம்பொருளைச் 'சிறப்பெனனுஞ் செம்பொருள்' எனவும் காரியங்களைக் காரணங்களாக உபசரித்தார். அவிச்சை (அஞ்ஞானம்), அகங்காரம், அவா, ஆசை, கோபம் என்னும் ஐவகைக் குற்றங்களுள் அவிச்சை மற்றை நான்கிற்குங் காரணமாதலுடைமையால், அச்சிறப்புப் பற்றி அதனையே பிறப்புக்குக் காரணமாகக் கூறினார். எல்லாப்பொருள் களினுஞ் சிறந்ததாதலால் வீடு சிறப்பென்று கூறப்பட்டது. உற்பத்தி நாசங்களில்லாமையால் நித்தியமாய்ப், பெருமையால் தன்னை ஒன்றுங் கலத்தலில்லாமையினால் பரிசுத்தமாய்த், தான் எல்லாப் பொருளையுங் கலந்து நிற்கின்ற முதற்பொருள் விகாரமின்றி எஞ்ஞான்றும் ஒரு தன்மையாயிருத்தல்பற்றி, அம்முதற் பொருளைச் 'செம்பொருள்' என்றார். இவ்வதிகாரத்தின் 'எப் பொருளெத்தன்மைத் தாயினு மப்பொருள், மெய்ப்பொருள் காண்ப தறிவு' என்னும் ஐந்தாவது செய்யுளில் 'மெய்ப்பொருள்' என்றும், 'ஓர்த்துள்ள முள்ள துணரி னொருதலையாப், பேர்த்துள்ள வேண்டா பிறப்பு' என்னும் ஏழாவது செய்யுளில் 'உள்ளது' என்றும் சொல்லியதும் இதுபற்றி யென்றறிக. அச்செம்பொருளைக் காணுதலாவது உயிர் தன் அஞ்ஞானங் கெட்டு அச்செம்

பொருளோடு ஒற்றுமையுண்டாக இடைவிடாது பாவித்தல். இப் பாவித்தலைச் சமாதியென்றுஞ் சுக்கிலத்தியானமென்றுங் கூறுவர். உயிர் உடம்பைவிட்டு நீங்குங்காலத்தில் அவ்வுயிரால் யாதொன்று பாவிக்கப்பட்டது, அவ்வுயிர் அப்பாவிக்கப்பட்டதாய்த் தோன்று * மென்பது எல்லா ஆகமங்களுக்குந் துணிபாதலால், முத்தியெய்து வார்க்கு அக்காலத்தில் பிறப்பிறுக்கு காரணமான பாவனை கெடுதற் பொருட்டுக் † கேவலப் பொருளையே பாவித்தல் வேண்டுதலால்,

* "வேதமுட னாகமபு ராணமிதி காசமுதல
வேறுமுள கலைகளெல்லாம்
மிக்காக வத்துவித துவிதமார்க் கத்தையே
விரிவா யெடுத்துரைக்கும்,
ஓதரிய துவிதமே யத்துவித ஞானத்தை
யுண்டுபணு(ம்) ஞானபாதம்
ஊகமனு பவம்வசன மூன்றுக்கு மொப்பவுமீ
துபயவா திகள்சம்மதம்,
ஆதலி னனகனிச் சரியையா திகள்போது
மியாதொன்று பாவிக்க நான்
அதுவாத லாலுனனை நானென்று பாவிக்கி
னத்துவித பாவமுறலாம்,
எதுபா வித்திடினு மதுவாகி வந்தருள்செ
யெந்தைநீ குறையுமுண்டோ
இகபர மிரண்டினிலு முயிரினுக் குயிராகி
யெங்கு(ம்)நிறை கின்றபொருளே"

என்னும் தாயுமானவர் திருவாக்கின் கருத்தை இங்கு உணர்க.

† கேவலப்பொருள் - யாதொரு சம்பந்தமுமின்றித் தனிமை யாய் விளங்கும் சச்சிதானந்தப் பரம்பொருளாகிய முழுமுதற் கடவுள்.

அக்கேவலப்பொருளை முன்னே பாவித்துப் பழகுதலாகிய இதனி லும் மேலாய வுபாயமில்லை யெனபதுணர்க இம்மக்கட் பிறப் பின்கண்ணே உபதேச மொழிகளை அனுபவமுடைய ஞானாசிரி யரிடங் கேட்டு அதனால் அஞ்ஞானம் நீங்கப்பெற்று, அங்ஙனங் கேட்ட உபதேச மொழிப்பொருளை நிச்சயப்படப் பிரமாணங்க ளாலும் யுகதியாலும் தெளிய ஆராய்ந்து அதனால் விபரீத சந்தேக உணர்வுகள் ஒழியப்பெற்று, தனி முதற்பொருளாகிய பரப்பிரமத் தைத் தன்னுள்ளே பாவித்துச் சமாதியடைதலே உண்மையறி வெனபது இக்குறளிற் கொள்ளக்கிடப்பதைக குறித்துக் காண்க. சமாதியெனபது அட்டாஙக யோகநிலைகளில் இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம் என னும் எழுபடிகளையுங் கடந்து மேலே நிற்பதாகிய எட்டாநிலை யாகும். அவற்றின் விவரங்கள் முன்னரே கூறப்பட்டுள்ளன. [அ-ம் பக்கம் பார்க்க.]

மெய்பொருளல்லாதவைகளை மெய்ப்பொருளென்று உணரும் விபரீதவுணர்வாலே துன்பத்தைத்தரும் பிறவி உண்டாகுமென்ப தும்; அஞ்ஞானத்தினீங்கி மெய்ஞ்ஞானம் பெற்றவர்க்குப் பிரமஞா னம் உண்டாகி, அதனால் அவர் தம்முள்ளே பிரமத்தைக்கண்டு பிறப்பினீங்கிப் பேரின்ப வீட்டினை யடைந்து, * நிரதிசய வானந் தத்தை அனுபவிப்ப ரெனபதும்; ஒருவிதத்தினாலே பிறர் மதத்தை நிராகரித்துத் தமது மதத்தைத் தாபித்தல் (நிறுத்துதல்) எல்லாச் சமயங்களுக்கும் இயல்பாகலால், அந்நூல்களாலே சொல்லப்பட்ட பொருள் நூல்களிலே எது உண்மையென்று உண்டாகிற சந்தே கத்தை யோக முதிர்ச்சியுடையார் தமது அனுபவ ஞானத்தினாலே நீக்கி உண்மையை அறிவா ரென்பதும்; அவர்க்கு அனுபவ ஞானம்

* நிரதிசயவானந்தம் - தனக்கு மேற்பட்டதோர் இன்பத்தை யுடைத்தாயிராத ஆனந்தம்.

வினையை இடைவிடாத மெய்ப்பொருளுணர்வால் அறுத்தலாம். அதிகார முறைமையும் இதனானே விளங்கும்.

அவாவென்ப வெல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றுந்
தவாஅப் பிறப்பீனும் வித்து. (க)

(இ - ள்.) எல்லாவுயிர்க்கும், எஞ்ஞான்றும் - எக்காலத்திலும், தவா - கெடாது வருகின்ற, பிறப்பு - பிறவியை, ஈனும் - விளைப்பதாகிய, வித்து, அவா - அவாவாகும், என்ப - என்று நூலோர் சொல்லுவர், (எ - று.)

உடம்பு நீங்கிப்போங்காலத்து உயிரைப்பற்றித் தொடரும் வினையும், அவ்வினை அவ்வுயிருக்குக் காட்டும் கதியும் (புகலிடமாகிய யாதாமொருவகைப் பிறப்பும), அப்பிறப்பினை அவ்வுயிர் அடைதற்குக் காரணமும, அப்பிறப்பினகண் அவ்வுயிர்க்கு உண்டாகும் விருப்பமும் ஒன்றன்பின் ஒன்றாக அவ்வுயிரினிடத்து வந்துதோன்ற, அச்சமயம் அறிவை * ஐவகைமாயைகளுள் ஒன்றாகிய மோகமென்னும் விபரீத புத்தி மறைக்க, அவ்வுயிரை அவ்வவாவானது அக்கதியினிடத்தே கொண்டு செல்லுமாகலால், அதனைப் 'பிறப்பீனும் வித்து'' என்றும், கதிவசத்தால் உளதாகிய அவ்வுயிரின வேறுபாட்டிலும், அவ்வேறுபாடுகள் தன்மை மாறுபடும் † உற்சர்ப்பிணி ‡ அவசர்ப்பிணி யெனனுங் காலவேறுபாட்டிலும் அது வித்தாகுகை வேறு

* மாயை ரு - தமம், மாயை, மோகம், அவித்தை, அநிர்த்தம்; அவையாவன - சீவசைதன்னியத்தை மறைக்கையால் தமம், - சகத்துருபமான வனிதாத் தோற்றத்துக்குக் காரணமாகையால் மாயை,— விபரீதஞான முண்டாக்குகையால் மோகம்,—உணர்வழிக்கையால் அவித்தை,—சதசுருபத்துக்கு அன்னியமாகையால் அநிர்த்தம். [சைதன்னியம் - தத்துவஞானம், அறிவு. வனிதை - பெண்.]

‡ உற்சர்ப்பிணி - உலகம் வாழ்நாள் போகம் முதலியவைகளால் வளர்பிறைபோலப் பெருகுங்காலம்.

† அவசர்ப்பிணி - உலகம் வாழ்நாள் போகம் முதலியவைகளால் தேய்பிறைபோலச் சுருங்குங்காலம்.

படாமையால் 'எல்லா வுயிர்க்கும் எஞ்ஞான்றும்' என்றும், இஃது எல்லாச் சமயங்களுக்கும் ஒத்தலால் 'தவா' என்றுங் கூறினார்.

இவ்வுலகத்துச் சிற்றின்பத்தைக் குறித்த ஒருபொருளை அவாவின், அவ்வவா பிறப்பீனும் வித்தாயப் பின்னரும் முடிவிலாத துன்பத்தையே விளைக்குமென்பதும், அதாகிய பத்தான பிறப்புப் பிணி மூப்பு இறப்புக்களால் துன்பப்பட்டுக்கொண்டு வருகின்றமையை உள்ளபடி அறிந்தவன் பேரின்ப வீட்டில் ஆசையுடையவனாகி அவ் வீட்டினை அடைதற்குச் சாதனமாகிய பிறவாமையை அவாவுவா னென்பதும்; அப்பிறவாமை தானே ஒருபொருளையும் அவாவா மையை வேண்ட அவனுக்குத் தானே உண்டாகுமென்பதும்; அத னால் அவ்வவாவாமை மக்களது செல்வங்களுக்கும் தேவர்து செல் வங்களுக்கும் மேலானதாகுமென்பதும்; அத்தகைய சிறப்பினை யுடைய அவாவாமை மெய்ம்மையை வேண்டத் தானே உண்டாகு மென்பதும்; மேலே சொல்லப்பட்ட நிலையாமை துறவு மெய்யுணர் தல் ஆகிய காரணங்களெல்லாம் பெற்று, அவைகளால் முத்தியை அடைதற்குரியவரேயாயினும் ஒருவனை அவா பின்னும் நுழைந்து பின்னும் பிறவியில் செலுத்திக் கெடுக்கவல்லது அவாவேயாதலால், அவ் வவாவை அஞ்சிக் காப்பதே துறவறமாவது என்பதும்; அவாவினை அறுத்தவனுக்கு முத்தியென்னும் இன்பம் தப்பாமல் இடையறாது கூடி நின்றவிடத்தும் இடையறா தென்பதும்; ஒருபோதும் நிரம் பாத இயல்பினையுடைய அவாவை ஒருவன் விடுவனாயின் அவ் விடுகை அவனுக்கு அப்போதே எப்போதும் ஒரு நிலைமையைத் தன் மையைக் கொடுக்குமென்பதும் இங்கு அறியத்தக்கவைகளாம்.

"நன்றாய்ஞானங் கடந்துபோய் நல்லிந்திரிய மெல்லாமீர்த் [ந்து
தொன்றாய்க்கிடந்த வரும்பெரும்பாழ் லுலப்பிலதனை யுணர்ந்துணர்
சென்றாங்கின்ப துன்பங்கள் செற்றுக் களைந்து பசையற்றால்,
அன்றேயப்போதே வீடு மதுவே வீடு வீடாமே"

† "எழுது பாவைநல் லார்திறம் விட்டுநான்
தொழுது போகின்ற றேனையுஞ் சூழ்ந்துகொண்
டுழுத சால்வழி யேயுழு வான்பொருட்
டிழுதை நெஞ்சமி தென்படு கின்றதே"

—திருக்குறுந்தொகை.

என்னும் திருவாய்மொழிச் செய்யுளின் கருத்து இவண் உணர்தற்பாலது. இச்செய்யுளின் பொருள் - ஒருவன் விடயஞானங்களைச் செவ்வையாகக் கடந்து இந்திரிய நிக்கிரகஞ்செய்து உயிரோடு அநாதியே ஒன்றாய்க்கிடந்த அரிய பெரிய கெடுதலில்லாத பிரகிருதியை (சூனியத்தைமாயையை) ஈனமாய் உணர்ந்து அட்டாற்சென்று இன்பத்தில் விருப்பும் துன்பத்தில் வெறுப்பும் ஒழியப்பெற்ற ஆசை அறப்பெற்றால் அவ்வாசை நீங்கிய அன்றே அச்சமயத்திலேயே அவனைப் பல பிறவிகளாகப் பற்றிநின்ற பழவினைகள் விட்டொழியும். அவ்வினைகள் அவனை விடுதலே அவனுக்கு வீடாம் (முத்தியாம்) என்பது.

## ௩௮. ஊழ்.

அஃதாவது நல்வினைப் பயனாகிய இன்பமும், தீவினைப்பயனாகிய துன்பமும், அவ்வவ்வினைகளைச் செய்தவனையே சென்றடைதற்குக் காரணமாகிய நியதி. ஊழ், பால், முறை, உண்மை, தெய்வம், நியதி, விதி என்பன ஒருபொருட் சொற்கள். இது பொருளின்பங்கள் இரண்டற்கும் பொதுவாய் ஒன்றனுள் வைக்கப் படாமையாலும் மேற்கூறிய அறத்தொடு சம்பந்தமுடைமையாலும் அதன் இறுதியிலே வைக்கப்பட

வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்குந் துய்த்த லரிது. (எ)

(இ - ள்) கோடி - மெய்யாதி ஐம்பொறிகளால் அனுபவிக்கப்படும் பொருள்கள் எண்ணிறந்தவற்றை, தொகுத்தார்க்கும் - முயற்சி செய்து சேர்த்தவர்களுக்கும், வகுத்தான் - தெய்வம், வகுத்த வகையல்லால் - வகுத்தவகையால் அல்லாமல், துய்த்தல் - அனுபவித்தல், அரிது - உண்டாகாது, எ - று.

* "பல்லாவு ளுய்த்து விடினுங் குழக்கன்று
வல்லதாந் தாய்நாடிக் கோடலைத்—தொல்லைப்
பழவினையு மன்ன தகைத்தே தற்செய்த
கிழவனை நாடிக் கொளற்கு".

என்றாற்போல ஒருயிர் செய்த வினையின்பயன் பிறிதோருயிரிடத்துச் செல்லாதபடி அந்தவினையைச் செய்த அந்த வுயிர்க்கே வகுத்தலால் 'வகுத்தான' என்றார். ஏறு திரிந்து வாய்பாடு (வாய்லாட்சிப்பட்டு வரும் சொல்) வேறுபட்டவழி காலமுதலாகிய சொல் உயர்திணையா யிசைத்தலுமுரிய வெனப் பொருள்படும் "இசைத்தலுமுரிய வேறிடத்தான" என்னும் தொல்காப்பியச் சூத்திரத்தில் உயர்திணைப்பொருளை யுணர்த்திய செய்வவென்னும் அஃறிணைச் சொல் வகுத்தானென உயர்திணையாயிற்று. இந்திரியங்களால் அனுபவிக்கப்படும் பொருள்கள் பலவற்றைச் சேக்காதவர்களுக்கே யல்லாமல் சேர்த்தவர்களுக்கும் என்றதனால் தொகுத்தார்க்கும் என்பதிலுள்ள உம்மை இறந்தது தழீஇய எச்சவும்மை. வேறு முயற்சிகளால் பொருள்களைச் சேகரிக்கலாமே யல்லாமல் அனுபவித்தல் முடியாது, அதற்கு ஊழ்வேண்டு மென்பதாயிற்று.

ஒருவனுக்குக் கைப்பொருள் விருத்தியடைதற்குக் காரணமாகிய ஊழினாலே முயற்சியும், அப்பொருள் அழிதற்குக் காரணமாகிய ஊழினாலே சோம்பலும் உண்டாகுமென்பதும்; ஒருவனுக்கு எல்லா அறிவும் உண்டாயிருந்தாலும், கைப்பொருள் இழத்தற்குக் காரணமாகிய ஊழ்வந்து உற்றவிடத்து அவ்வூழ் அவனறிவினை அறியாமையாக்கு மென்பதும்: இனி அவனறிவு சுருங்கியிருந்தாலும், கைப்பொருள் விருத்தியடைதற்குக் காரணமாகிய ஊழ்வந்து பொருந்தியவிடத்து அஃது அவனறிவை விரிக்குமென்பதும்; அறியாமையாக்கும் ஊழுடைய ஒருவன் நுட்பமான பொருள்களை உணர்த்தும் பலநூல்களையும் கற்றானாயினும், அவனுக்குப் பின்னும் தன் ஊழினாலாகிய பேதைமையறிவே மேற்படு† மென்ப

* நாலடியார்—பழவினை.

† "காதன் மிக்குழிக் கற்றவுங் கைகொடா, ஆதல் கண்ணகத் தஞ்சனம் போலுமால்" என்னும் சீவக சிந்தாமணிச் செய்யுளின் கருத்தை இங்கு உணர்க. இதன்பொருள் - ஆசை மிக்கவிடத்துத் துன்பத்திற்குத் துணையென்று கற்ற கல்வியும் பிறர் குற்றம் நீக்குதற்கு உதவுதலன்றித் தன்குற்றம் நீக்குதற்கு உதவாதொழிதல் கண்ணினுட் கிடந்த அஞ்சனம்(மை) அதற்குப் பயன்கொடாதது போலும், (எ - று.)

தும்; செல்வத்தைச் சம்பாதித்தலும் காப்பாற்றலும் அனுபவித்தலும் அறிவுடையார்க்கல்லது கூடாவன்றே, அவ்விதமல்லாமல் அறிவுடையார் வறியராகவும் அறிவிலார் செல்வராகவும் காணுதலால், அறிவுடையராதற்குக் காரணமாகிய ஊழ் செல்வராதற்குக் காரணமாகாதென்பதும், செல்வமுடையராதற்குக் காரணமாகிய ஊழ் அறிவுடையராதற்குக் காரணமாகாதென்பதும்; அழிக்குமூழ் உற்றவிடத்துக் காலமும் இடமும் கருவியும் தொழிலும் முதலானவை நல்லவையா யிருந்தாலும் அழியுமென்பதும்; ஆக்குமூழ் உற்றவிடத்து அக்கால முதலானவை தீயவையாயிருந்தாலும் ஆகுமென்பதும்; ஊழினாலே தமக்கு உரியவையாகாத பொருள்கள் வருந்திக் காப்பாற்றினாலும் தம்மிடத்து நில்லாமற் போகுமென்பதும்; ஊழினாலே தம்முடையவையாகிய பொருள்கள் புறத்தே கொண்டுபோய் எறிந்துவிட்டாலும் தம்மைவிட்டுப் போகாவென்பதும்; வறியராயினார் துறவறத்தை மேற்கொள்ளாது வருந்துதற்குக் காரணம் ஊழேயாமென்பதும்; *இருவினைகளும் தாமே முன செய்துகொண்டமையாலும், பயனைக்கொடாது கழியாமையாலும், அவற்றின் பயனாகிய இன்பத்துன்பங்கள் இசைந்து அனுபவித்தற்கு உரியவையாயிருக்க, அவைகளிலே இன்பத்தை அனுபவித்தற்கு இசைந்து துன்பத்தை அனுபவித்தற்கு வருந்துதல் அறியாமையாகுமென்பதும்; ஊழானது தன்னை விலக்குதற்பொருட்டுத் தனக்குப் பகையாகிய ஒருபாயத்தை ஆராய்ந்தாலும், தான் அவ்வுபாயத்தையாவது மற்றொன்றையாவது வழியாகக்கொண்டு வந்து அவ்வாராய்ச்சிக்கு முற்பட்டு நிற்குமாதலால், அவ்வூழைப்போல மிகுந்தவலி யுடையவை யாவையுமில்லை யெனபதும் இங்கு அறியத்தக்கவைகளாம்.

## அறத்துப்பால் முற்றிற்று.

* இனப மிடரென் றிரண்டுற வைத்தது
முன்பவர் செய்கையி னாலே முடிந்தது
இன்ப மதுகண்டு மீகிலாப் பேதைகள்
அன்பிலார் சிந்தை யறமறியாரே—திருமந்திரம்.

# பொருட்பால்.

---

## அரசியல்.

இனி இல்லறத்தின் வழியிற் பொருந்துவனவாகிய பொருளின்பங்களுள் இம்மைப்பயனும் மறுமைப்பயனும் பயப்பதாகிய பொருளைச் சொல்ல வெடுத்துக்கொண்டார். அப்பொருள் தனக்குத் துணைக்காரணமாயுள்ள அரசநீதி சொல்லவே அடங்கும். அரசநீதியாவது காவல் நடத்தும் முறைமை. அம்முறைமையை அரசியல், அங்கவியல், ஒழிபியல் என்று மூன்று பிரிவாக்கி, பரந்த இடத்தையுடைய உலகிற்கு உயிர்போற் சிறந்துள்ள அரசனது தன்மையை இருபத்தைந்து அதிகாரங்களாற் சொல்லத்தொடங்கி முதலில் இறைமாட்சி சொல்லுகின்றார்.

---

### ௩௯. இறைமாட்சி.

அஃதாவது அவ்வரசனது நற்குண நற்செய்கைகள். உலகபாலர் வடிவாய்நின்று உலகத்தைக் காத்தலாலே இறை என்று கூறினார். * "திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே யென்னும்" என்று பெரியாரும் பணித்தார்.

அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா
மான முடைய தரசு. (௪)

(இ-ள்.) அறன் - தனக்குச் சொல்லப்பட்ட அறத்தில், இழுக்காது - தவறாது நடந்து, அல்லவை - அறமல்லாதவைகளை, நீக்கி - தனது நாட்டிடத்தும் உண்டாகாமல் ஒழித்து, மறன் - வீரத்தில், இழுக்கா - தவறாத, மானம் - மானத்தை (தாழுதலில்லாமையை), உடையது - உடையவன், அரசு - அரசன், எ-று.

அவ்வறமாவது வேதமோதல், யாகஞ்செய்தல், ஈதல் என்னும் பொதுத்தொழில்களிலும், படைக்கலம் பயிலல், பல்லுயிரோம்பல்,

* திருவாய்மொழி. திரு - கண்டாரால் விரும்பப்படும் தன்மை.

பகைத்திற மழித்தல் என்னும் சிறப்புத் தொழில்களிடம் தவறாமல் நிற்கை * 'மாண்ட, அறநெறி முதற்றே யரசின் † கொற்றம்' என்பதனால் இவ்வறம் பொருட்குக் காரணமாயிற்று. அல்லவை கொலை களவு சூதாடல் மதுபானம் விபசாரம் முதலாயின குற்றமாகிய மானத்தை நீக்குதற்கு 'மறனிழுக்கா மானம்' என்றார், அஃதாவது ‡ விறன்மையின் விலங்காமென மதமேல் முமெறியான, எறண்டவர் நிகராயிறந் தோர்ச்சேரெல்லை னெறிடான, மாற்றன்மையின் பழியாமென நிகரானாரை யெறியான, ஆற்றன்மையின் முதியாரை யெறியா னியல்பன்' எனவும் § "அழிபுநர் புறக் கொடை அயில்வேள் ஓச்சான்' எனவும் சொல்லப்படுவது. அரசு அரசனது தன்மை, அஃது உபசாரவகையால் அவ்வரசன்மேல் நின்றது.

அமைச்சு (மந்திரி), நாடு, நாட்டிற்குக் காவலாகிய மதில் முதலியன, பொருள், சேனை, நட்பு என்று சொல்லப்பட்ட ஆறு அங்கங்களையும் உடையவனே அரசருள் சிறந்தவனாவன் என்பதும், அவ்வாறு அவை ஒன்றில்லாதவிடத்தும் அரசனிக்கு செல்லமாட்டாதென்பதும், அரசனுக்கு மாட்சிமை ஆகின்ற குணங்களுக்கும் உரித்தான அறிவும் கல்வி மேச்சக் கசப் பயனாம் ஈகையும், தொழிலுக்கு உரியனவாகிய அறமல்லது கடிதலும், சுறுசுறுப்பும் ஆண்மையும் ஆகிய இக்குணங்களெல்லாம் இயல்பாக அமைந்

---

* புறநானூறு † கொற்றம் வெற்றி

‡ சீவகசிந்தாமணி - இதன் பொருள் - வேலைக் கையிலேந்திய வீரன் மதயானையை யெறிந்தாலும் விலங்கை யெறிந்தா னென்பதொன்று நினைத்து அதன்மேல் வெற்றியின்மையின் யானையையும் வெட்டானாய், முன்பு வெட்டுண்டவர் தனக்கு ஒப்பாராயினும் வெட்டானாய், பிறர்படை தீண்டின எச்சிலென்று அவரையும் வெட்டானாய், தனக்கு நிகராயாரையும் நிகரான்மையின் பழியாமென்று வெட்டானாய், அறமன்மையின் தன்னின் மூத்தோரையும் வெட்டானாய் நின்றானென்க

§ புறப்பொருள் வெண்பாமாலை - இதன் பொருள் - தோற்றோடுபவர் முதுகில் கூரிய வாளை எறியாத வீரனென்பது.

திருக்கு மென்பதூஉந் தனக்கு மணி, பொன், நெல் முதலான பொருள்களை வருவித்தற்குச் சாதனமாகிய பகைவரையழித்தல், திறைகொள்ளல், தனதாக்குதல் முதலான வழிகளை மேலு மேலும் உண்டாக்கலும் அப்படிச் சேர்ந்த பொருளை ஓரிடத்தே சேர்த்தலும் சேர்த்து வைக்கப்பட்ட பொருளைப் பகைவர், கள்வர், சுற்றத்தார் தொழில் செய்வோர் முதலானவர் கொள்ளாமற் காத்தலும் காக்கப் பட்டவைகளை * அறம்பொருளின்பங்களின் பொருட்டுச் செலவுசெய்தலும் வல்லவன் அரசனாவானென்பது, அரசன் வலியால் வருத்தமடைந்து வந்து முறை வேண்டினார்க்கும் குறையால் வருந்தி வந்து முறையிரந்தார்க்கும் காணுதற்கு எளியனாய் யாவர்க்குங் கடுமையின்றி இன்சொற் கூறி வேண்டுவனவாகத் தெரிந்து வேண்டியபடி கொடுத்துக் குடிகளைத் தன் பாதுகாவலால் பகைவரானும் நலிவு படாமற் காப்பவனும் அமைச்சர் முதலியோர் இடித்துப் புத்திசொல்லும் சொற்களைப் பொறுக்குந் தன்மையுடையவனாகவும் இருத்தல் வேண்டுமென்பதும் இவர் அறிவித்தவைகளாம்.

## ௪௰ கல்வி.

அஃதாவது அவ்வரசன் தான் கற்றற்குரிய நூல்களைக் கற்றல். அவை யாவன அறநூல், நீதிநூலும் யானை, குதிரை, தேர், படைக்கலம் (ஆயுதம்) என்பவற்றின் நூல்களும் முதலாயின. அரசன் அறிவுடையவனாயிருந்தால் தன்னுயிர்க்கேயன்றி மன்னுயிர்க்கும் பயன்படுதல் குறித்து, ஈண்டு அரசியலுள் வைக்க

* கடவுளர், அந்தணர், வறியவரென்றிவர்களுக்கும், புகழுக்குங் கொடுத்தலை அறத்தின் பொருட்டாகவும்; யானை, குதிரை, படை, நாடு, அரண் என்னும் இவைகளுக்கும் பகையோடு கூடுதலினின்றும் பிரிக்கப்படுவோர்க்கும் தன்னைவிட்டுப் பிரிதலினின்றுங் கூட்டப்படுவோர்க்கும் கொடுத்தலைப் பொருட்பொருட்டாகவும், மண்டபம், வாவி (குளம்) செய்குன்று, இளமரக்கா (இளமரச்சோலை, நந்தவனம்) முதலானவைகளைச் செய்தற்கும் ஐம்பொறிகளால் அனுபவிக்கப்படுமவைகளுக்குங் கொடுத்தலை இன்பப்பொருட்டாகவும் கொள்க.

கப்பட்டதாயினும் யாவர்க்கும் உறுதியைத் தருவதாகிய சிறப்புடைமையின்றலே பொதுப்படக் கூறுகின்றார். முன்னதிகாரத்திலே தூங்காமை கல்வி துணிவுடைமை யிம்மூன்றும், நீங்கா நிலனாள் பவர்க்கு என்று தோற்றுவாய் செய்த மாட்சியை விரித்துக் கூறுகின்றமையின், இஃது இறைமாட்சியின்பின் வைக்கப்பட்டது.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக. (௧)

(இ - ள்) ஒருவன், கற்பவை கற்றற்குரிய நூல்களை, கசடறக் குற்றமொழிய, கற்க கற்கக்கடவன், கற்றபின் அப்படிக் கற்றால் அதற்கு அக்கல்விக்குத் தக - தகுதியாக நிற்க அது சொல்லுகின்ற வழியிலே நிற்கக்கடவன் என்று.

கற்பவை யென்றதனை, அறம்பொருள் இன்பம் வீடென்னும் உறுதிப்பொருள்களை உணர்த்தும் நூல்களல்லாமல் வேறு நூல்களினுடைய பயிற்சி சிற்றறிவினர்க்கு ஆகா* வென்பது பெறப்பட்டது. கசடறக் கற்றலாவது விபரீத சந்தேகங்களை நீக்கி மெய்ப்பொருளை நல்லோர் பலருடனும் பலதரமும் பழகுதல். நிற்றலாவது இல்வாழ்க்கையிலே அறம் பொருள்களுக்குக் காரணமான கருமங்களையும் உடன்பட்டுச் செய்து, அவ்வறம் பொருள்களால் உண்டாகும் இன்பத்தையும் அனுபவித்து, தானம் முதலாய அறங்களைக் கல்வி அறிவு ஒழுக்கங்களால் தகுதியுடையவராய பெரியோர்க்கே செய்தலும், துறவிலே தவத்தால் மெய்யுணர்ந்து அவாவறுத்தலும் தவாமை முதலியனவுடைய விருப்பு

* "கல்வி கரையில கற்பவர் நாள்சில மெல்ல நினைக்கிற் பிணிபல தெள்ளிதின் ஆராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப் பாலுண் குருகிற் றெரிந்து," 'அலகுசால் கற்பி னறிவுநூல் கல்லா, துலகநூ லோதுவ தெல்லாம் கலகல, கூஉந் துணையல்லாற் கொண்டு தடுமாற்றம், போஒந் துணையறிவா ரில்' என்னும் நாலடியார் வெண்பாக்களின் கருத்தினை இங்கு உணர்க. [அமைவுடைய - நிறைவுடைய நூல்கள் குருகு - அன்னம் அலகு அளவு தடுமாற்றம் பிறவித்துன்பம்]

பவன் கற்றல் வேண்டுமென்பதும், அவனாற் கற்கப்படவேண்டிய நூல்களும், அவற்றைக் கற்கும் விதமும், கற்றதனாற் பயனும் இதனாற் கூறப்பட்டன.

காரணமும் காரியமுமென இருவகைப்படும் கணிதநூலும் எனை இலக்கணநூலும் அறமுதலாகிய நால்வகைப் பொருளையும் ஐயந்திரிபறக் கண்டுணர்தற்குக் கருவி * யாதலின், அவ்விரண்டையும் அறிவிற்சிறந்தார் தங்களிருகண்களாக மதிப்பரென்பதும்; எல்லா இடங்களிலும் எல்லாக்காலங்களிலும் உள்ளவைகளைக் காணும் ஞானக் கண்ணுடைமையால் கற்றோர் கண்ணுடையரென்றும், அந்த ஞானக்கண் இல்லாமல் நோய் முதலானவைகளாலே துன்பஞ் செய்யும் ஊனக்கண்ணே யுடைமையால் கல்லாதார் முகத்திலே இரண்டு புண்களை யுடையரெனறும் மதிக்கப்படுவரென்பதும்; தாங்கள் சனமார்க்கத்தில் செல்லுதலால் யாவரையும் அவர் மகிழும்படி சேர்தலும், பிறர்க்கு உறுதி தருவனவற்றைக் கூறுதலால், இனி இவரை நாம் எப்போது கூடுவோமென்று நினைக்கும்படி நீங்குதலும் ஆகிய இவ்விரண்டும் கற்றோரது செய்கைகளாகுமென்பதும்; நல்லொழுக்கங் காணுதலாலும் தங்களுக்கு இனிமையும் உறுதியுமான சொற்கள் நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும்

* அவை கருவியாதல் " ஆதி முதலொழிய வல்லா தனவெண்ணில், நீதி வழுவா(ம்) நிலைமையவாம் - மாதே, அறமாம் பொருளின்பம் வீடென் றிவற்றின், திறமாமோ வெண்ணிறந்தாற் செப்பு "; " எழுத்தறியத் தீரு மிழிதகைமை தீர்ந்தான், மொழித்திறத்தின் முட்டறிந்தா னாகு - மொழித்திறத்தின், முட்டறுத்த நல்லோன் முதனூற் பொருளுணர்ந்து, கட்டறுத்து வீடு பெறும் " என்னும் செய்யுட்களாலறிக. [முதல் - அறம் பொருள் இன்பம் வீடு என்பவற்றை உணர்த்தும் முதனூலாகிய வேதம். அல்லாதன - களவுநூல் காமநூல் முதலிய வேதத்துக்கு மாறுபட்ட நூல்கள். எண் இறந்தால் - முதனூற்பொருளைக் கணிதநூலோடு மாறுபட அறிந்தால். திறம் - பாகுபாடு. ஆமோ - ஆகாது, சித்திக்காது. எழுத்து - இயற்றமிழ். இழிதகைமை - பேதைமை. மொழித்திறத்தின் முட்டு - சொற்பாகுபாட்டில் தோன்றும் மாறுபாடு. அறுப்பான் - ஒழிப்பான். கட்டு - பந்தம். வீடு - மோட்சம்.]

இன்பத்தைத் தருதலினாலும், கற்றோரிடத்து யாவரும் அன்புடையராவரெனபதூஉம்; வழிபாட்டு நிலைமையை வெறுக்காது கற்றல் நல்லதாகலால் ஆசிரியர்முன் படிக்கவேண்டும் என்னும் ஆசையினால் தாழ்ந்து நின்று கற்றவரே உயர்ந்தோராவ ரெனபதூஉம்; அவ்வாறு நிற்றலுக்கு வெட்கப்பட்டுப் பொய்யாய மானம் நோக்கி மெய்யாய கல்வியிழந்தவர் இழிந்தவராவ ரெனபதூஉம்; மனிதர்க்கு அறிவானது தாம் கற்ற கல்வியின் அளவாகப் பெருகுமாதலால் சிறிதுகற்ற அளவினாலே போதுமென்று விடாமல் மேலுமேலும் கற்றல்வேண்டுமென்பதூஉம்; கற்றவனுக்குத் தன்னாடும் தன்னூருமே யல்லாமல் பிறநாடுகளும் பிறவூர்களும் பொருள்கொடுத்தும் பூசையும் மகிழ்ந்து செய்தற்கேதுவாகலால், கல்விபோற் சிறந்தது வேறொன்றில்லையெனபதூஉம்; அக்கல்வியானது வினைகளைப்போல உயிரினிடத்தே தங்கி எழுபிறப்புகளிலும் சென்று உதவுமாதலால், அக்கல்வியை ஒருவனதான் இறக்குமளவும் கற்கவேண்டுமெனபதூஉம்; கற்றறிந்தார் நிகழ்காலத்திலே சொற்பொருள்களின் சுவையை அனுபவித்தலாலும், புகழும் பொருளும் பூசையும் பெறுதலாலும், எதிர்காலத்திலே அறம் வீட்டைத் தருதலாலும், அதனால் இடையறாத இன்பத்தை அடைதற்கு ஏதுவாகிய கல்விக்கு உலகத்தார் இப்பெரியவரோடு கூடி அறிதற்கருமையான யோகாப்பியாச முதலிய விடயங்களையெல்லாம் அறியப்பெற்றோமெனலும், அதனாலே வருடங்கள் பலவாக நரையிலமாயினேமெனலும் இன்பமடைதலால், அச்சிறப்பு நோக்கிப் பின்னும் அக்கல்வியையே விரும்புவரெனபதூஉம்; தாயத்தார், கள்வர், வலியர், அரசர் என்றிவராற் கொள்ளப்படாமையாலும் வழிபட்டார்க்குக் கொடுத்தவிடத்துக் குறையாமையாலும் கல்வி அழியாத செல்வமெனபதூஉம்; அஃதொழிந்த மணியும் பொன்னும் செல்வமல்லவெனபதூஉம் இங்கு அறியத்தக்கவைகளாம்.

## சக. கல்லாமை.

அஃதாவது கற்றலைச் செய்யாமை; என்பது கல்லாமையினால் ஆன இழிவை. கல்வியின சிறப்பு முன்னே உடம்பாட்டு வாயிலாகவுஞ் சொல்லியவளவில் முடிவுபெறாமை நோக்கி எதிர்

மறை வாயிலாகவுஞ் சொல்லுதலால், இது கல்வியின்பின் வைக்கப் பட்டது.

நல்லார்கட் பட்ட வறுமையி னின்னாதே
கல்லார்கட் பட்ட திரு. (அ)

(இ - ள்.) கல்லார்கண் - கல்லாதாரிடத்து, பட்ட - நின்ற, திரு - செல்வமானது, நல்லார்கண் - கற்றவரிடத்து, பட்ட - நின்ற, வறுமையின் - வறுமையினும், இன்னாது - துன்பஞ்செய்வதேயாகும், (எ - று.)

வறுமையின் எனபதில் இழிவு சிறப்பும்மை செய்யுள் விகாரத்தால் தொக்குநின்றது. செல்வம் தனக்குரிய கற்றவரையும் வறுமை தனக்குரிய கல்லாதவரையும் விட்டு மாறி நிற்கையால் தாம் இடுக்கண்படுதலும் உலகத்துக்குத் துன்பஞ்செய்தலும் இரண்டினுக்கும் ஒக்குமாயினும், செல்வம் கல்லாதாரைக் கெடுக்க, வறுமை கற்றாரைக் கெடுக்காது நிற்றலால் வறுமையினும் திரு இன்னாது என்றார். இதனால் கல்லாதார் பெற்ற செல்வத்தின் குற்றம் சொல்லப் பட்டது.

நிரம்பிய நூலறிவில்லாதவன் சபையிற் பேசுதல் ஒழுங்கில்லா தொழிந்து அவனுக்கு அவமானத்தை யுண்டாக்கு மென்பதும்; கல்லாதவர் தமக்குக் கல்வியறிவில்லாமையைத் தாம் அறிந்தா ராகில் கற்றோர் சபையினிடத்தே யாதொன்றையும் பேசாதிருப்ப தோடு பின் கல்வியை விரும்பிக் கற்பாரென்பதும்; கல்லாதவனது அறிவுடைமை ஒரோவிடத்தே நன்றாயிருப்பினும் அது நீர் மேலெழுத்துப் போல்வதோர் வகையுடையதாகலால், நிலைபெற்ற நூலறிவுடையார் அதனை அறிவுடைமையாகக் கொள்ளமாட்டா ரென்பதும்; நூல்களைக் கல்லாத ஒருவன் யான் அறிவுடையே னெனத் தன்னை மதிக்கும் மதிப்பு அவற்றைக் கற்றவன்முன் பேசக் கெடுமென்பதும்; எப்படிக் களர்நிலம் தானும் விரும்பப் படுத லொழிந்து உயிர்களுக்கும் உணவு முதலானவைகளை உதவுவ தில்லையோ, அப்படியே கல்லாதவர் தாமும் நன்குமதிக்கப்படுத லொழிந்து பிறர்க்கும் அறிவு முதலானவைகளை உதவாரென்பதும்; நுண்ணிதாய் மாட்சிமைப்பட்டுப் பல நூல்களிலும் சென்ற அறி

வினை * இல்லாதவனுடைய †எழுச்சியும் அழகும் சுண்ணச்சாந்தினாலே மாட்சிமைப்பட அலங்கரிக்கப்பட்ட பாவையினது எழுச்சியையும் அழகையும் ஒக்குமென்பதும்; கல்லாதார் உயர்ந்த சாதியிலே பிறந்தாராயினும், தாழ்ந்த சாதியிலே பிறந்திருந்தும் கற்றவரது பெருமையளவினதாகிய பெருமையில ‡ ரென்பதும்; விலங்கைக் காட்டிலும் மனிதர்க்கு மேலான அறிவு மிகுதி காணப்படுவது கற்றவரிடத்தே யாதலால் கற்றவரே மனிதராவாரென்பதும்; கல்லாதார் விலங்கேயாவ ரெனபதும் இங்கு அறியத்தக்கவைகளாம்.

## ௪௨. கேள்வி.

அஃதாவது கேட்கத்தக்க நூல்களின பொருள்களைக கற்றறிந்தார் கூறக் கேட்டல். கற்றவிடத்தே அக்கல்வியினாலாகிய அறிவை உறுதிப்படுத்தலாலும், கல்லாதவிடத்தும் அக்கல்வியறிவை உண்டாக்கலாலும் இது கல்வி கல்லாமைகளினபின வைக்கப்பட்டது.

செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினு மென் (௰)

(இ - ள்.) செவியிற்சுவை - காதுகளால் அனுபவிக்கப்படுஞ் சுவைகளை, உணரா - அறியாத, வாயுணர்வின் - வாயால் உண்ணப்பட்ட உணவின சுவையை அறியும் அறிவினையுடைய, மாக்கள் -

---

* அறிவுக்கு மாட்சிமையாவது பொருள்களை விரைவிற் காணலும் மறவாமையும் பிறர்க்கு விளங்கும்படி போதித்தலும் அறநூல்கள் செய்தலும் முதலாயின.

† உருவின் மிகுந்தோர் உடம்பைப் பெறுதலும் அரிதாகலால் எழில் நலங்களும் ஒருபயனே யாயினும், நூலறிவில்லாதவிடத்தே சிறப்பில்லனவா மென்பதாம்.

‡ உடம்போடு அழியும் சாதியுயர்ச்சியிலும் ஒருவர்க்கு (முன்னதிகாரத்திற் கூறியபடி) உயிரினிடத்தே தங்கி எழுபிறப்புகளிலும் சென்று உதவும் கல்வியினது உயர்ச்சி சிறப்புடைத்தென்பதாம்.

மனவுணர்ச்சியில்லாத மாந்தர், அவியினும் - இறந்தாலும், வாழினும் - வாழ்ந்தாலும், என - உலகத்துக்கு வருவது யாது, எ - று.

காதுகளால் அனுபவிக்கப்படுஞ் சுவைகளாவன சொற்சுவையும், பொருட்சுவையும். அவற்றுள் சொற்சுவை குணம் அலங்காரம என இருவகைத்து. பொருட்சுவை காமம், நகை, கருணை, வீரம், உருத்திரம் (வெகுளி), அச்சம், இழிவு(அருவருப்பு), வியப்பு, சாந்தம் என ஒன்பது வகைத்து. அவையெல்லாம் இங்கே சொன்னால் விரிந்துபோவது பற்றிச் சொல்லாமல் விடப்பட்டன. வாய்ச்சுவையென்பது இடையிலே பதங்கள் தொக்குநின்ற மூன்றும் வேற்றுமைத் தொகை. இரண்டு உருபும் பொருளும் உடன்தொக்க தொகை யெனப்படும். அது வாயால் நுகரப்படுஞ் சுவைகளை யுணரும் உணர்வு என விரியும். அச்சுவைகள் கைப்பு, காரப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, தித்திப்பு என அறுவகையாம். அவர் செத்தால் இழப்பதும் வாழ்ந்தால் பெறுவதும் இல்லாமையால், அவர்க்கு இரண்டும் சமானந்தா னென்பதாம. வாயுணர்வின என்று பாடமோதுவாரு முளர். செவியிற் சுவையுணரா மாக்கள் என்றதனால், மனவுணர்ச்சியில்லாத மக்களது செவிகள் தமக்கு விடயமான ஓசையைக் கேட்குமாயினும் அச்செவிகள் கேள்வியாகிய கருவியினாலே துளைக்கப்படாமையினால் அவர் மனத்திலே நூற்பொருள் நுழையாதாக ஓசை மாத்திரத்தால் உறுதி யடையாமையால் செவிடாந் தன்மையினரே * யாமென்பதும்; வாயுணர்வின மாக்கள் என்றதனால் கேள்வியறிவில்லாத மக்களது வாயானது தனக்கு விடயமான சுவை மாத்திரத்தை நுகருமாயினும் பணிந்த மொழியினைப் பகர்தல் கூடாதென்பதும் பெறப்படும். இதனால் கேளாதவழிபடுங் குற்றம் சொல்லப்பட்டது.

ஆன்மாக்கள் அறியவேண்டிய அரும்பொருள் அனைத்தையும் அறியுமாற்றில் அறிந்து அழிவிலாவீட்டினை அடைந்து அந்தமில்லா

* "ஆளாகா ராளா னாரை யடைந்துய்யார்
மீளா வாட்செய்து மெய்ம்மையு ணிற்கிலார்
தோளாத சுரையோ தொழும்பர் செவி
வாளா மாய்ந்து மண்ணாகிக் கழிவரே"-திருக்குறுந்தொகை.

ஆனந்தத்தை அனுபவிப்பதற்குக் காரணமாகியபடியால், கேள்விச் செல்வம் அழியுந் தன்மையுடையவும் துன்பந்தருவனவுமான பொருட்செல்வங்கள் எல்லாவற்றினும் சிறந்ததென்பதும்; அக் கேள்வியானது கேட்கும்போது மிகுந்த சுவையையும் கேட்டபின் பெரும்பயன் தருதலையும் உடையதாயிருத்தலால், அது செவிக்கு உணவென்று தகுமென்பதும்; அறிவுடையார் அச்செவியுணவை உணும்போது வாயுணவினை விரும்பாதவராய், செவிக்கு உண வில்லாதபொழுதே வாயுணவை உண்பவரென்பதும்; அவ்வா யுணவும் அதிகமானவிடத்து அஜீரணமாகிக்கும் துன்பமாத்தி ரம் அல்லாமல் நோயும் காமமும் அதிகரித்தலால், அவ்வுணவைக் கொஞ்சமாகவே உண்பவரென்பதும்; அதுதானும் பின்னே பிழைத்திருந்து செவியுணவினை உண்ணும்பொருட்டேயாகச் செய்வரென்பதும்; செவியுணவாகிய கேள்வியினையுடையவர் தேவரோடொப்பாரென்பதும், ஒருவன் உறுதிநூல்களைக் கல் லாதவனாயிருந்தாலும் அந்நூலின் பொருள்களைக் கற்றறிந்தார் சொல்லக் கேட்டால் அஃது அவனுக்கு வறுமையாலாவது அறி வின்மையாலாவது துன்பம் நேர்ந்தவிடத்து உதவிசெய்யுமென் பதும், வழுக்குதலையுடைய சேற்று நிலத்தில் நடப்பவர்க்கு ஊன்றுகோல் அவர் வழுக்கி வீழாது நடப்பதற்கு உதவி செய்வது போல், நல்லொழுக்கமுடையார் வாய்ச்சொல்லானது ஒருவற்கு ஆபத்துக்காலத்தில் உதவிசெய்யுமென்பதும், கல்வியுடையவராயி னும் ஒழுக்கமில்லாதார் அறிவில்லாராகலால், அவர் வாய்ச்சொல் கேட்கலாகாதென்பதும்; ஒருவன் சிறிதாயினும் உறுதிப்பொருள் களைக் கேட்கக்கடவனென்பதும்; அச்சிறிய கேள்விகளும் மழைத் துளிகள்போல் வந்து அவன் மனத்தினுள்ளே நிறைந்து எல்லா அறிவுகளையும் உண்டாக்கி நிறைந்த பெருமையைத் தருமாதலால் அக்கேள்விகளைச் சிறிதென்று இகழலாகாதென்பதும்; பொருள் களைத் தாமும் நுட்பமாக ஆராய்ந்தறிந்து, அதன்மேலும் நிறைந்த கேள்வியையுடையவர் தாமதகுணத்தால் மயங்கினராயினும் தமக் குப் பேதைமையை உண்டாக்கும் அறிவீனமான சொற்களைச் சொல்லாரென்பதும், கேள்வியில்லாதார் அறிவின்மையால் தம்மை வியந்து கூறுவரென்பதும் இங்கு அறியத்தக்கவைகளாம்.

## ௪௩. அறிவுடைமை.

அஃதாவது கல்வி கேள்விகளினாலாகிய அறிவோடு யறிவுடையவராதல். அதிகார முறைமையும் இதனாலே விளங்கும்.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. (௩)

(இ-ள்) எப்பொருள் - யாதொரு பொருளை, யார்யார்வாய் - யாவர் யாவர் சொல்ல, கேட்பினும் - கேட்டாலும், அப்பொருள் - அப்பொருளினது, மெய்ப்பொருள் - மெய்யாகிய பயனை, காண்பது - காணவல்லது, அறிவு - அறிவாம், எ-று.

* சத்துவம், இராசசம், தாமசம் என்னும் குணங்கள் மூன்றும் மாறிமாறி வருதல் யாவர்க்கும் உண்டாதலால், உயர்ந்த பொருளை இழிந்தார்வாயிலும், இழிந்தபொருளை உயர்ந்தார்வாயிலும் உறுதிப் பொருளைப் பகைவர்வாயிலும் கெடுபொருளைச் சிநேகர்வாயிலும் ஒரோவழி(சிலவிடத்து)க் கேட்கப்படுதலால் 'எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினும்' என்றார். யாரயார் என்னும் அடுக்குப் பன்மைபற்றி வந்தது. வாய் என்பது அவர்கள் அப்பொருள்களி னிடத்துப் பழகாமையை அறிவித்து நின்றது. மெய்யாதல் நிலைத் திருத்தல். சொல்லுவாரது இயல்பினை நோக்காமல் அப்பொருளின் பயனை நோக்காக நன்மையைக்கொண்டு பகை விடுவது அறிவென்பதாம்.

அறிவானது ஒருவனுக்குச் சோர்வினால் வருங் கேட்டினை முன்னறிந்தொழிக்குங் கருவியாதலையன்றிப் பகைவர்க்கு அழிக்க முடியாத உள்ளரணாகுமென்பதும், மனத்தை அது போன போக்கிலே போகவிடாமல் விடயங்களின் நன்மைதீமைகளை ஆராய்ந்து தீயதிலிருந்து நீக்கி நல்லதனிடத்துச் செலுத்துவதாகு மென்பதும்; அறிவுடையவன் தான் சொல்லுஞ் சொற்களை வழு வில்லாமல் நன்றாக விளங்கச் சொல்லுவானென்பதும்; பிறர் சொல் லக் கேட்கப்படுமவைகள் வழுவினாலும் நன்றாக விளங்காமற்போனா லும் அவைகளின் பயனைக் கொண்டுவிடுவானென்பதும்; செல்வம்

* இவற்றின் விவரம் ௫௯-ம் பக்கத்திற் பார்க்க.

வந்தவிடத்து மகிழ்ந்திருத்தலும் தரித்திரம் வந்தவிடத்து வருந்தியிருத்தலுமின்றி, எப்போதும் ஒரு தன்மையதாய் உயர்ந்தோரை நட்பாக்குவது ஒருவனுக்கு அறிவுடைமையாகுமென்பதும்; அறிவுடையார் உலகத்தோடு ஒத்து நடப்பார்*என்பதும்; பின்னே வரக்கடவதை முன்னே ஆலோசித்தறிவாரென்பதும்; பாவமும் பழியும் கேடும் முதலாக அஞ்சத்தகுவனவற்றை அஞ்சி நடப்பாரென்பதும்; வரக்கடவதாகிய துன்பத்தை முன்னறிந்து காக்கும் அறிவுடையவர்க்குத் துன்பமுண்டாகாதென்பதும்; செல்வங்களெல்லாம் அறிவினாலே சம்பாதிக்கவும் படுதலால், அறிவுடையார் பிறிதொன்றும் இல்லாதவராயிருந்தாலும் எல்லாமுடையவராவரென்பதும்; அவையெல்லாம் முன்னுறவே அமைந்து கிடந்தாலும் அழியாமற் காத்தற்கும் அழிந்தவிடத்தே சம்பாதித்தற்கும் கருவியாகிய அறிவினை உடையராகாதவர் எல்லாம் உடையவராயிருந்தாலும் ஒன்றும் இல்லாதவராவாரென்பதும் இங்கு அறியத்தக்கவைகளாம்.

## ௪௪. குற்றங்கடிதல்.

அஃதாவது† காமம், வெகுளி, கடும்பற்றுள்ளம், மானம், உவகை, மதம் எனப்பட்ட ஆறு குற்றங்களையும் அரசன் தன்னிடத்தே தோன்றாமல் ஒழித்தல். இவை உட்பகை யெனப்படும். இவைகளைக் குற்றமென்று அறிதலும் ஒழித்தலும் அறிவுடையார்க்கல்லது கூடாமையால் அதனபின் வைக்கப்பட்டது.

---

* உலகத்தையெல்லாம் யான் நியமித்தலால் என்னை நியமிப்பார் இல்லையென்று நினைத்துத் தான் நினைத்தபடியே நடந்தால் பழியும் பாவமும் ஆதலால், அப்படி நடத்தல் அரசனுக்கு அறிவன்றென்று விலக்கப்பட வேண்டியதாதலை அறிக. முன் ௪௨-ம் அதிகாரத்தில் சேர்த்தெடுக்கப்பட்டுள்ள குறள்வெண்பாவில் இக்கருத்து விளக்கப்பட்டிருத்தலையுங் காண்க.

† காமம் - பெண்டு பிள்ளைகளினிடத்தும் மண் பொன் முதலிய பொருள்களினிடத்தும் உண்டாகும் ஆசைப் பெருக்

செயற்பால செய்யா திவறியான் செல்வம்
உயற்பால தன்றிக் கெடும் (௭)

(இ - ள்.) செயற்பால - பொருளினாலே தனக்குச் செய்து கொள்ளப்படுமவற்றை, செய்யாது - செய்துகொள்ளாமல், இவறியான் - அப்பொருளினிடத்து உலோபஞ் செய்தவனது, செல்வம் - செல்வமானது, உயற்பாலதன்றி - பின்னுள்ளதாகும் பகுப்பின்றி, கெடும் - வீணாகக் கெடும், (எ . று.)

செய்து கொள்ளப்படுமவையாவன - அறம் பொருளின்பங்கள். பொருளாற் பொருள் செய்தலாவது அப்பொருளை விருத்தியாக்குதல்; அது ×"பொன்னனி னாகும் பொருபடை*யப்படை, தன்னினாகுந் தரணி‡தரணியிற், பின்னை யாகும் பெரும்பொருளப் பொருள், $ துன்னுங் காலைத் துன்னாதன வில்லையே" என்பதனாலறிக. செல்வமானது அறத்தை செய்யாமையாலும், பொருளை விருத்தியாக்காமையாலும் 'உயற்பாலதன்றி' என்றும், இன்பத்தின் பயனை அனுபவியாமையால 'கெடும்' என்றும் சொல்லினார். உலோபத்தின தன்மையாவது குணங்களெல்லாம் ஒருமித்திருந்தாலும் அவைகளைக் கீழ்ப்படுத்தித் தான் மேற்படவல்ல வியல்பு. அதனால் தீகுணங்களிலெல்லாம் சிறந்தது உலோபமெனறறிக-

வெகுளி - அவ்வாசையைப் பெருக்கும் வழியில் தடை ஏற்பட்ட விடத்து உண்டாகும் கோபம்.

கடும்பற்றுள்ளம் - ஆசைப்பெருக்கால் அடைந்த பொருளில் அணுவேனும அயலாருக்குக் கொடுக்க மனமில்லாமல் அப்பொருளினிடத்து அதிகப்பற்று வைத்தல்.

மானம் - அப்பொருள்களைத் தனனிலும் அதிகமாக வைத்திருப்பவர்களைப் பார்த்துப் பொறாமைப்படுதல்.

உவகை - தன்னதல்லாத பிறபொருளை அடைய விரும்பி அதிலே மனம் சரித்தல்.

மதம் - கல்வி செல்வம் பிறப்பு முதலியவற்றில் தான் உயர்ந்ததாக நினைத்து அடையும் செருக்கு.

× சீவகசிந்தாமணி * சேனை ‡ இராச்சியம் $ கிட்டும்.

பழியை அஞ்சுவோர் தினையளவான சிறியகுற்றம் தம்மிடத்து வந்ததாயினும் அச்சிறிய குற்றமும் தமக்கு நாணுடைமையால் அதனைச் சிறிதென்று பொறுக்காது பெரிதாகக்கொண்டு வருந்திப் பின்னும் அக் குற்றம் வாராமற் காப்பரென்பதூஉம்; ஒருவனுக்கு முடிவைத்தரும் பகை குற்றமேயாகலின், அதனை அவன் தன்னிடத்தும் வாராமற் காக்கக்கடவனென்பதூஉம்; பிறரிடத்துக் குற்றங் காண்பவனொருவன் முன்னே தன்னிடத்துள்ள குற்றத்தைக் கண்டு நீக்கிப் பின்னே அவரது குற்றத்தை நீக்க முயலக்கடவனென்பதூஉம்; ஒருவன் தன்னை நன்குமதித்தவிடத்தே இடமும் காலமும் வலியும் அறியப்படாமையாலும், அறமும் பொருளும் இழக்கப்படுதலாலும், தான் மிகவும் உயர்ந்த காலத்திலும் தன்னை நன்கு மதியாதிருக்கக் கடவனென்பதூஉம்; நினைத்தது முடித்தே விடுவேனென்று அறம் பொருளின்பங்களைத் தாராத தொழில்களை விரும்பினால் அத் தொழில்களால் பாவமும் பழியும் கேடும் வருமாகலால், அவற்றை ஒருவன் விரும்பாதிருக்கக்கடவனென்பதூஉம்; ஒருவன் ஒருபொருளை அனுபவிக்க விரும்பிடில் அவ்விருப்பத்தினை அவன் பகைவர் அறிந்துவிடுதலால் அவன் விரும்பிய அப்பொருளின் வழியாகப் பிரவேசித்து அவனை வஞ்சிப்பராதலால், அவன் அதனை அப்பகைவர் அறியாமல் அனுபவிக்கக்கடவனென்பதூஉம் இங்கு அறியத்தக்கவைகளாம்.

## ௪௫. பெரியாரைத்துணைக்கோடல்.

அஃதாவது காமம் முதலிய அறுவகைக் குற்றங்களையும் முறைப்படி யொழித்தலால் ஆக்கினைசக்கரத்தைச் செலுத்துதற்குரியவனான அரசன் தன்னைத் தீயவழியிற் செல்லாதபடி விலக்கி நல்வழியிற் செலுத்தும் பேரறிவுடையாரைத் தனக்குத் துணையாகக் கொள்ளுதல். அதிகாரமுறைமையும் இதனாலே விளங்கும். பேரறிவுடையவராவார் அரசருக்கும் அங்கங்களுக்கும் மானுடராலும் தெய்வத்தாலும்வரும் குற்றங்கள் வாராமற் காத்தற்குரிய அமைச்சர் (மந்திரிகள்), புரோகிதர் (பின்வருமவற்றை முன்னறிவிப்போர்).

உற்றநோய் நீக்கி யுறாஅமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல். (௨)

(இ - ள்.) உற்ற - தெய்வத்தாலாவது மனிதராலாவது தனக்கு வந்த, நோய் - துன்பங்களை, நீக்கி - நீக்கும்விதம் அறிந்து நீக்கி, உறாமை-பின் அப்படிப்பட்ட துன்பங்கள் வாராதபடி, முற்காக்கும்-முன்னறிந்து காக்கவல்ல, பெற்றியார் - தன்மையினையுடையவரை, பேணி - அவர் மகிழத்தக்கவைகளைச் செய்து, கொளல் - (அரசன்) துணையாகக் கொள்ளக்கடவன, எ - று,

தெய்வத்தால்வருந் துன்பங்களாவன - மழையில்லாமையாலும், அதிக மழையினாலும், காற்று, தீப் பிணி என்ற இவைகளாலும் வருவன. அவை கடவுளரையும் கல்வியறி வொழுக்கங்களால் முதிர்ந்த பெரியோரையும் நோக்கிச்செய்யும் யாகம் விழா தானம் முதலிய சாந்திகளால் நீக்கப்படும். மனிதரால்வருந் துன்பங்களாவன - பகைவர், கள்வர், சுற்றத்தார், தொழில்செய்வார் என்ற இவர்களால் வருவன. அவை * சாம தான பேத தண்டங்களாகிய நால்வகை யுபாயங்களுள் தக்கதினால் நீக்கப்படும். முற்காத்தலாவது தெய்வத்தால் வருமவைகளை † உற்பாதங்களால் அறிந்து அச்சாந்திகளாலே காத்தலும், மனிதரால் வருமவைகளை அவரது குணம் இங்கிதம் ஆகாரம் செயல் என்பவைகளால் அறிந்து மேற்கூறிய உபாயங்களுள் ஒன்றாலே காத்தலும் ஆம். ஆகவே புரோகிதரையும் அமைச்சரையுங் கூறியவாறாயிற்று. இங்கிதம் - குறிப்பால் உண்டாகும் அவயவத்தினது தொழில். ஆகாரம் - குறிப்பில்லாது உண்டாகும் வேறுபாடு. மகிழத்தக்கவை - நன்குமதிக்கை முதலியன. 'உற்றநோய் நீக்கி உறாமை முற்காக்கும் பெற்றியார்' எனப்படுவார் நீதியையும் உலகியலையும் அறியும் அறிவாலும், அறிந்தவாறொழுகலாலும், வயதாலும் முதிர்ந்த பெரியாரேயாவர் என்றறிக. இதனால் பெரியாரது இலக்கணமும், அவரைத் துணையாகக் கொள்ளவேண்டுமென்பதும், துணைகொள்ளும் விதமும் சொல்லப்பட்டன.

* சாமம் - சமாதானம், தானம் - பொருள்கொடுத்தல், பேதம்-பிறரைப் பிரித்தல், தண்டம் - வருத்துதல். ௯௧-ம் பக்கம் பார்க்க.

† உற்பாதம் - துன்னிமித்தம், துர்க்குறி.

அறத்தினது நுட்பத்தைச் சாத்திரங்களின் வாயிலாக அறிதலேயல்லாமல் உலகநடையை யாராய்தலாலும் அறிந்து, அறிவாலும் சீலத்தாலும் காலத்தாலும் முதிர்ந்த பெரியாரது நட்பை அதனது அருமையைத் தெரிந்து நன்குமதித்தல், உயரச்செய்தல், அவர் சொல்வழி நடத்தல் எனபன முதலாக அவர் தனக்கு உள்ளாந்திறமறிந்து அரசன் அவரைக் கொள்ளக்கடவனென்பதும்; அப்பெரியாரை அவர் மகிழத்தக்கவைகளை யறிந்துசெய்து, அவரது சிநேகத்தைக் கொள்ளக்கடவனென்பதும்; அப்பெரியார் அரசனது அங்கங்களுட் சிறந்தனவாய பொருள், படை, அரண்களால் நீக்கப்படாத தெய்வத்துன்ப முதலியவற்றை நீக்குதற்கு உரியவராதலால், அவரது துணைவலிமை அரசனது வலிமை பலவற்றுள்ளும் சிறந்ததென்பதும்; அத்தகைய பெரியாரைத் துணையாகக் கொள்வதோடு தானும் அறநீதிகளின்வழி தவறாது நடப்பவனைப் பகைவர் செய்யக் கிடந்ததொரு துன்பமுமில்லை யென்பதும்; அப்பெரியார் தம்மைத் துணையாகக் கொண்டாரிடத்துத் தீயசெய்கைகளைக் கண்டால் அவரை நெருங்கிக் கோபித்துப் புத்தி சொல்லித் திருத்துவரென்பதும்; அத்தகையாரைத் துணையாகக் கொள்ளாத அரசன் பகையாய்க் கெடுப்பார் இல்லையாயினும் பாகனில்லாத யானைபோல் வழியல்லாத வழியிலே சென்று தானே கெடுவானென்பதும்; முதறபொருளில்லாத வணிகர்க்கு அதனால் வரும் ஊதியம் இல்லையாதல்போலத் தம்மைத் தாங்குவதாகிய துணையில்லாத அரசர்க்கு அதனால்வரும் நிலையில்லையென்பதும்; அரசன் பெரியார் சிநேகத்தை விடுதல் தான் தனியனாயிருந்து கொண்டு பலரோடும் பகை கொள்ளுதலினும் பெருந்தீதாகுமென்பதும் இங்கு அறியத்தக்கவைகளாம்.

## சசு. சிற்றினஞ்சேராமை.

அஃதாவது சிறிய இனத்தைப் பொருந்தாமை. சிறிய இனமாவது நல்லதன் நலனும் தீயதன் தீமையும் இல்லையென்போரும் விடரும் (காமுகரும்) தூர்த்தரும் (வஞ்சகரும்) நடரும் (கூத்தாடிகளும்) உள்ளிட்டுள்ள கூட்டம். அறிவை வேறுபடுத்தி இருமையுங்

கெடுக்கும் இயல்பினதாகிய அக்கூட்டத்தைப் பொருந்தினால் பெரியாரைத் துணைக்கொள்ளுதல் பயனில்லையென்பது அறிவித்தற்கு இஃது அதன்பின் வைக்கப்பட்டது.

மனநல மன்னுயிர்க் காக்க மினநலம்
எல்லாப் புகழுந் தரும். (எ)

(இ - ள்.) மன்னுயிர்க்கு - நிலைபெறுமுயிர்களுக்கு, மனநலம் மனத்தினது நன்மையானது, ஆக்கம் - செல்வத்தை, தரும்-கொடுக்கும்; இனநலம் - இனத்தினது நன்மையானது, எல்லாப்புகழும் - அதனோடு எல்லாப் புகழையும்; தரும் - கொடுக்கும், (எ - று.)

மன்னுயிரென்னும் அஃறிணைப் பெயர் இங்கு மக்களென்னும் உயர்திணைப் பெயர்மேல் நின்றது. இடவழுவமைதியாய் வந்த தரும் என்னும் சொல் மனநலம் என்பதனோடும் கூட்டப்பட்டது. புகழும் என்றதிலுள்ள உம்மை இறந்தது தழுவிய எச்சவும்மை. மனது நன்றாகல்தானே அமையாமையால் அதனை ஆக்கந்தரும் என்றும், புகழ்கொடுத்தற்குரிய நல்லோர்தாமே இனமாகலால் 'இனநலமெல்லாப்புகழுந்தரும்' என்றும் சொன்னார். முன்னே 'மனந்தூய்மை செய்வினை தூய்மை யிரண்டும், இனந்தூய்மை தூவாவரும்' என்று இவ்வதிகாரத்தின் ஐந்தாவது குறளில் மனநன்மை இனநன்மை பற்றிவருமென்பதனை உட்கொண்டு அம்மன நன்மையை இயல்பாகவே யுடையவர்களுக்கு அவ்வினநன்மை வேண்டாவென்பாரை நோக்கி, அம்மனநலமேயல்லாமல் அப்படிப்பட்ட பலவற்றையுந் தருமென்று அவர்க்கும் அது வேண்டுமென்பது இதனாற் கூறப்பட்டது.

தத்தம் அறிவு வேறுபடும் விதமும், அதனால் தமக்கு வரும் துன்பமும் நோக்குதலால், அறிவுடையார் அறிவிலாருக்கு அஞ்சுவரென்பதும்; அறிவு ஒற்றுவுமைப்பட்டு நிற்கையால் வேறு நோக்காமையால் அறிவிலார் அறிவிலாரைத் தமக்குச் சுற்றமாகத் துணிவரென்பதும்; ஆகாசத்திலே தன் தன்மையதாயிருந்த நீரானது நிலத்தோடு சேர்ந்தவிடத்து நிறம் சுவை முதலாகிய குணங்கள் வேறுபட்டாற்போலத் தனித்திருக்கையில் தன் தன்மையதாயிருந்த அறிவு பிறவினத்தோடு சேர்ந்தவிடத்துக் காட்சி கருத்து ஒழுக்க

முதலியன வேறுபட்டு அவ்வினத்தினது தன்மையாகுமெனபதும், மனிதர்க்கு இயற்கையாகிய ஐம்புலவறிவாம் பொதுவறிவு தம்மனங் காரணமாக வுண்டாகுமென்பதும்; செயற்கையறிவாகிய சிறப்பறிவு உண்மையை நோக்கி யறியாதவர்க்கு முன்னமே மனத்துள்ளது போலக் காட்டியும், நோக்கியவிடத்தே பழகிய இனங்காரணமாக வுண்டாகுமெனபதும்; ஒருவன பரிசுத்த இனத்தனேயே அவ்வினத்தோடு பழகக வசததால் பரிசுத்த மனத்தனகி அம்மனத்தினிடத்தே சிறப்பறிவு வெளிப்பட்டு அதனுல் பரிசுத்தமான சொல்லும செயலும உடையவனுவா னெனபதும்; காரணத்திலேயுள்ள பொதுக்குணம காரியத்தினிடத்தும் உண்டாயிருககு மாதலால், நல்ல மனமுடையவர்க்கு நல்ல பிள்ளைகள் பிறக்கு மெனபதும்; நல்ல இனமுடையவர்க்கு எல்லா நனமைகளும உண்டாகுமெனபதும்; முன்னே நல்வினையினுலே மனநன்மையைத் தாமே உடையவராய்ப் பல நற்குணங்களாலும் நிறைந்தவர்க்கும் இனநலமானது அம் மனநலததை வளர்த்து வருமென்பதும்; ஒருவனுக்கு மனநன்மையாலே மறுமையின்பம் உண்டா மென்றாலும், ஒரோவிடதது தமோ குணத்தினுலே மனநலம வேறுபட்டாலும், நல்லினம் அம்மனதைத் திருத்தி மன நலததை நிலைபெறச் செய்து மறுமையை யடைவிக்குமெனபதும்; ஒருவனுககு நல்லினம் அறியாமையினின்று நீக்கித துயரபபடாமற் காத்தலால், அந்நல்லினததை விடச் சிறந்த துணையும், தீயினம் அறிவினின்று நீக்கித் துயரப் படச் செய்தலால், அத்தீயினத்தைவிடக் கொடிய பகையும் யென்பதும் இங்கு அறியத்தக்கவைகளாம்.

## சஎ. தெரிந்துசெயல்வகை.

அஃதாவது அரசன் தான் செய்யுந் தொழில்களை ஆராய்ந்து செய்யுந்திறம். அச்செயல் பெரியாரைத் துணைக்கொள்ளுதல் பயனுடைத்தாயவிடத்து, அவருடன் செய்யப்படுவதாகலால் இது சிற்றினஞ் சேராமையின்பின் வைக்கப்பட்டது.

கருமங்

எண்ணுவ மென்ப திழுக்கு. (எ)

*(இ - ள்) கருமம் செய்யத்தக்க தொழிலும், எண்ணி - முடிக்கும் உபாயத்தை எண்ணி, துணிக தொடங்குக துணிந்த பின் தொடங்கிவைத்துப் பின் எண்ணுவம் என்பது எண்ணுவோமென்றொழிதல், இழுக்கு குற்றம், எ - று.

துணிவு காரணமாக நிகழுந் தொழில் துணிவு என்று கூறப்பட்டது. கருமம் என்பதில் உயர்வு சிறப்பும்மை செய்யுளவிகாரத்தால் தொக்குநின்றது. உபாயமென்பது † அவாயநிலையால் வந்தது. உபாயமாவது கொடுத்தல் இன்சொற் சொல்லல், வேறுபடுத்தல் ஒறுத்தல் என நால்வகைப்படும். இவை வடநூலார் தானம் சாமம் பேதம் தண்டம் என்பர். அவற்றுள் தானம் கிடைத்தற்கரிய பொருளைக் கொடுத்தல், தனக்குப் பிறன் கொடுக்கவேண்டிய பொருளை வாங்காது விட்டுவிடுதல், கொடுக்க வேண்டிய பொருளை மறுக்காது கொடுத்தல், பிறன் பொருள் கொண்டுகொடுத்தல் கப்பம் வாங்காதொழிதல் என ஐந்துவகைப்படும், சாமம் வணங்கல், புகழ்தல் உறவுகொள்ளல், நட்புக்கூறல், உறவுகூறல் என ஐந்து வகைப்படும். பேதம் நட்பொழிதல், கூடினரைப் பிரித்தல் வேறுபகை விளைத்தல் என மூன்றுவகைப்படும். தண்டம் துன்பஞ்செய்தல் பொருள்கொள்ளுதல், கொல்லுதல் என மூன்றுவகைப்படும். இவ்வுபாயங்களெல்லாம் எண்ணாது தொடங்கின் அத்தொழில் பகைவரால் விலக்கப்பட்டு முடியாமையாலும் நடுவே விடுதல் கூடாமையாலும், அரசன் பின் அபாயத்தை யடைதலால், அவ்வெண்ணாமையை 'இழுக்கு' என்றார்.

ஒருதொழிலைச் செய்யக் கருதுபவன் அதனைச் செய்யுமிடத்து அப்போது அதனால் அழிவதையும் அழிந்தால் பின்னே ஆவதையும் ஆயின்று பிற்காலத்துத்தரும் இலாபத்தையும் தெரிந்த நல்லினத்தோடு ஆராய்ந்து செய்யவேண்டுமென்பதூஉம், அறிவுடையார் பின்பெறக்கடவதாகிய இலாபத்தை நோக்கி முன்பெற்றுள்ள முதலையும் இழத்தற்கு ஏதுவாகிய செய்தொழிலை மேற்கொள்ளார்

† அவாயநிலை - அருத்தம் பூர்த்தியாகாமல் எஞ்சி நிற்பது.

ரென்பதும், பின்னை அழிவை அடைந்தவிடத்து அதன்மேலும் அறிவை மானமும் ஆகவென்று உலகத்தார் இகழும் இகழ்ச்சியை அஞ்சுவோர் இனத்தோடும் தனித்தும் ஆராய்ந்து நிச்சயித்தலில்லாத தொழிலைத் தொடங்காரென்பதும், பகைவரை வெல்லக் கருதி எழுபவன் வலி காலம் இடம் என்கிற இவைகளால் தனக்கும் பகைவர்க்கும் உண்டாகிய நிலைமைகளும், தொழில் தொடங்கும் விதமும் அத்தொழிற்கு வரும் தடைகளும், அத்தடைகளை யொழிக்கும் வகையும், பகைவரை வெல்லும் விதமும், வெல்லுதலினாலே யடையும் பயனும் முதலானவைகளை முற்ற எண்ணிச் செய்ய வேண்டுமென்பதும், அரசன் தனது தொழில்களிலே பெருமுயற்சியை யுடையவையும், செய்தாற் பயனில்லாதவையும், பயன் சிறிதானவையும், சந்தேகமானவையும் பின்னே துயரம் விளைப்பவையும் ஆகிய செய்யத்தகாத காரியங்களைச் செய்தாலும், அவற்றிற்கு மாறானவைகளைச் செய்யாதிருந்தாலும், அறிவு ஆண்மை பெருமை என்னும் மூவகை ஆற்றல்களில் பொருள் படையென இருவகைப்பட்ட பெருமை சுருங்கிப் பகைவர்க்கு எளியனாகிக் கெடுவானென்பதும், பொருளாசைக்காரனிடத்தே கொடுத்தலையும் நடுநிலையாளன் போல நின்று முன்னே பிறரோடு போர் செய்து சேர்ந்தவன் என்ற இவர்களிடத்தே இன்சொல்லையும், துணைப்படையாளர் தமது அபிப்பிராயத்துடன் பொருந்தாதவன் என்னும் இவர்களிடத்தே வேறுபடுத்தலையும் இம்மூவகை உபாயங்களின் வழிவாராதவிடத்து இவர்களிடத்தேயும் நம்பக்கூடாத கீழ்மக்களிடத்தேயும் ஒறுத்தலையும் செய்து வெல்லும் வழியால் முயலாத முயற்சி அன்னவர் பலராகி நின்று காப்பினும் தான் எண்ணிய நன்மையைத் தாராது தீமையைத் தருமென்பதும், மேற்கூறிய உபாயங்களுள் நல்லவையான கொடுத்தலையும் இன்சொற் சொல்லுதலையும் செய்தலிலும் அவை செய்யப்படுவோரது குணங்களை ஆராய்ந்தறிந்து அக்குணங்களுக்குப் பொருந்தச் செய்யாவிடத்துக் குற்றமுண்டாமென்பதும், அரசர் தொழில் முடித்தற்பொருட்டுத் தாம் வலியராயிருந்துகொண்டு மெலியார் செய்தற்குரிய தான சாம பேதங்களைச் செய்தாலும், தாம் மெலியராயிருந்துகொண்டு வலியார் செய்தற்குரிய தண்டத்தைச் செய்தாலும், உலகம் அவரை

இஃதுமுமாதலால், உலகத்தால் இகழப்படாத உபாயங்களை ஆராய்ந்து தமது நிலைமையோடு பொருந்தச் செய்யக்கடவனென்பதும் இங்கு அறியத்தக்கவைகளாம்.

## ௪௮. வலியறிதல்.

அஃதாவது அவ்வுபாயங்களில் தண்டஞ் செய்யக் குறித்த அரசன் தான் செய்யக்கருதிய தொழிலின் வலிமையையும், அதனைச் செய்து முடிக்கும் தனவலிமையையும், அதனை விலக்கும் பகைவனது வலிமையையும், இருவர்க்கும் துணையாவோரது வலிமைகளையும் அளந்து அறிதலாம். அதிகார முறைமையும் இதனாலே விளங்கும்.

நுனிக்கொம்ப ரேறினா ரஃதிறந் தூக்கின்
உயிர்க்கிறுதி யாகி விடும். (௬)

(இ - ள்) கொம்பர் ஒரு மரக்கொம்பின் நுனி - நுனியிலே, ஏறினார் - ஏறி நின்றவர் தமது மனவெழுச்சியால், அஃது அவ்வளவினை, இறந்து கடந்து, ஊக்கின் மேலும் ஏறமனவெழுச்சி கொள்ளுவாராயின், அவ்வெழுச்சி, உயிர்க்கு - அவருயிர்க்கு, இறுதியாகிவிடும் - முடிவாகிவிடும், (எ - று.)

கண்கடை என்பது கடைக்கண் என்றாயதுபோலக் கொம்பர் நுனி யென்பது நுனிக்கொம்பர் என்றாயது. இது பின்முன்னாகத் தொக்க ஆறும் வேற்றுமைத் தொகை. ஏறினார் என்னும் பன்மை அறிவிலாமைபற்றி இழிதற்குக் கூறுதலில் வந்தது. இறுதிக்குக் காரணமாவதனை இறுதி என்றது காரியம் காரணமாய உபசாரவழக்கு. பகைவர்மேற் போர்க்குச் செலவு தொடங்கித் தன்னொடு கூடியமட்டும் சென்று நின்றவன் பின் அவ்வளவிலே நில்லாமல் மனவெழுச்சியினாலே மேலுஞ் செல்லுவானாயின், அவ்வெழுச்சியானது தொழில் முடிதற்குக் காரணமாகாமல் அவனுயிர் முடிதற்குக் காரணமாகும் எனகிற பொருள்பட நிற்கையினாலே, இக்குறளும் மேலே 'பீலி † பெய் * சாகாடும் அச்சிறும் அப்பண்

---

† பீலி - மயிலிறகு. * சாகாடு - சகடம், வண்டி

டம், சால மிகுத்துப் பெயின்" என்றாற்போலப் பிறிது மொழிதல் என்னும் அலங்காரம். அளவறிந்து நிற்கவேண்டுமென்றமையின், இதனால் தொழில் வலிமை அறியாதவிடத்து உண்டாம் குற்றம் சொல்லப்பட்டது.

ஒருவன் தான் செய்யக்கருதிய தொழிலது வலிமையையும், அதனைச் செய்துமுடிக்கும் தனது வலிமையையும், அதனை விலக்கும் பகைவனது வலிமையையும், இருவருக்கும் துணையாவோரது வலிமைகளையும் ஆராய்ந்து, தனது வலிமை மிகுமாயின், அத்தொழிலைச் செய்யக்கடவனென்பதும்; தனக்குச் செய்யக்கூடுந் தொழிலையும் அதற்கு அறியவேண்டுவதான வலியையும் அறிந்து, அதனிடத்து மன வாக்குக் காயங்களை எப்போதும் வைத்துத் தொழிலைச் செய்பவனுக்கு முடியாதபொருள் இல்லையென்பதும்; எளியரென்று பலரோடும் பகையைக் கொள்வோன தான் வலியனாகவே யிருந்தாலும் அவ்வெளியர் பலர் கூடியவிடத்து வலியழிவானென்பதும்; ஒருவன் தன் வருமானத்தை நாலுபங்கிட்டு, அவற்றுள் இரண்டைத் தன் செலவுக்காக்கி, ஒன்றைப் பின்னை இடர் வந்தவிடத்து அதை நீக்குதற்கு இருப்பாக்கி, மற்றொரு பங்கை வறியார்க்கு வழங்குவானாயின், அவன பொருள் நிலைத்துநிற்குமென்பதும்; ஒருவனுக்கு வருமானம் குறையாயிருந்தாலும் அவனது செலவினளவு அதிலும் அதிகப்படாதாயின் அவனுக்குக் கேடில்லையென்பதும்; தனக்குள்ள பொருளின் அளவையறிந்து அதற்கேற்ப வாழாது அதிகச் செலவு செய்பவனது வாழ்க்கை உள்ளது போலத் தோன்றி மெய்ம்மையால் இல்லையாகிப் பின்பு அத்தோற்றமும் இல்லாமல் கெட்டுவிடுமென்பதும்; உபகாரஞ்செய்தலே யாயினும், அதுவும் வலியினளவினை ஆராயாது செய்யிற் கெடுதியையே பயக்குமென்பதும் இங்கு அறியத்தக்கவைகளாம்.

## ௪௯. காலமறிதல்.

அஃதாவது மேலே கூறப்பட்ட வலிகள் நான்கனுள் தன் வலியும் துணைவலியும் மிகுதியாக உடையவனைப் பகைவன்மேல் போருக்குச் செல்லத்தொடங்கிய அரசன் அவ்வாறு செல்லுவதற்

குத. தக்குங் காலத்தினை ஆராய்ந்தறிதல் அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து. (௰)

(இ-ள்.) ஒருவன் கூம்பும் பருவத்து தொழிலின்மேலே செல்லாதிருக்கவேண்டுங் காலத்தில், கொக்கு ஒக்க - கொக்கு இருக்குமாறுபோல இருக்கக்கடவன்; மற்றுச் சீர்த்த இடத்து - மற்றைச் செல்லுங்காலம் வாய்த்த விடத்து, அதன் குத்து ஒக்க - அது தப்பாமல் மீனைக்குத்துகின்றமாறுபோலத் தான் கருதிய தைத் தப்பாது செய்து முடிக்கக்கடவன் (எ-று).

மீன்கொள்ளுதற்கு இருக்கும்பொழுது அம்மீன் வருமளவும் அது தன் முயற்சியை முன்னறிந்து தப்பிப்போகாமற் பொருட்டு உயிரில்லதுபோல இருக்குமாதலானும், வந்தவிடத்து அப் பின்பு தப்பிப் போவதற்கு முன்னக்கே விரைந்து குத்துமாதலானும், இருத்தலுக் கும் செய்தலுக்கும் கொக்கு உவமானமாயிற்று. 'கொக்கொக்க' என்றாயிற்று அது கூம்புமாற்போல கூம்புக என்றும், 'குத் தொக்க' என்றாயிற்றும் அது குத்துமாற்போலக் குத்துக என்றும் உரைத்துக்கொள்க. இது தொழிலுவமையணியாதலால், உவமான வாயிலாக இருத்தலுக்கும் செய்தலுக்கும் இலக்கணங் கூறியவாறாயிற்று. பகைவரை வெல்லுதற்குக் காலம் வாய்க்கும் வரை அடங்கியிருந்து அக்காலம் வாய்த்த விடத்துக் குறித்தகாரியத் தைத் தப்பாமற் செய்துமுடிக்க வேண்டுமென்பது கருத்து.

காக்கையானது தன்னினும் வலிமையுடையதாகிய கோட்டானைப் பகற்பொழுதில் வெல்லுகிறதாதலால், பகைவரை வெல்லக் கருதுவாருக்கு அதற்கேற்ற காலம் அவசியமாய் வேண்டுமென்பதும், காலமறிந்து தொழில் செய்வோருக்கு அத்தொழில் தப்பாது கைகூடி வருதலால் அதனால் உண்டாகும் செல்வம் எந்நாளும் அவரை விட்டு நீங்காதென்பதும், தொழில்களைச் செய்தற்காகும் காலத்தை யறிந்து அவற்றை முடித்தற்காகும் சாதனங்களாகிய அறிவு ஆண்மை பெருமையென்னும் மூவகையாற்றல்களுடன் தான சாம பேத தண்டமென்னும் நால்வகை உபாயங்களாற் செய்யவல்லார்க்கு

முடியாத காரியம் ஒன்றுமில்லையென்பதும், அவ்விதம் காலம் பார்த்து இடத்தோடு பொருந்தத் தொழில் செய்பவன் உலகத்தை யாளக்கருதினும் அதுவும் அவனுக்குக் கைகூடுமென்பதும், மிகுந்த வலிமையையுடையவன் பகைவர்மேற் செல்லாது காலம் பார்த்திருக்கின்ற இருப்பு, போர் செய்கின்ற ஆட்டுக்கடா தன் பகை கெடப் பாய்தற்பொருட்டுப் பின்னே கால்வாங்குந் தன்மைத்தென்பதும், அறிவுடையார் பகைவர் தீங்குசெய்த அப்பொழுதே அப்பகைவரறியப் புறத்திலே கோபஞ்செய்யாது தாம் அவரை வெல்லுதற்கேற்ற காலத்தையறிந்து அதுவருமளவும் உள்ளே கோபஞ் செய்பதும் † அவர் பகைமை தீரும்படி மிகவும் வணங்குவாரென்பதும், தமது ஆற்றல் முதலானவைகளால் பெறுதற்கரிய காலம் தாமே வந்து கூடியபோது, அது நீங்குமளவில் அது வருமுன்னே செய்தற்கு அரியவையாயிருந்த தொழில்களைச்செய்து வெற்றி பெறுவரென்பதும் இங்கு அறியத்தக்கவைகளாம்.

## ௫௰ இடனறிதல்.

அஃதாவது வலியும் காலமும் அறிந்து பகைவர்மேற் செல்லுவோன் தான் வெல்லுதற்கேற்ற நிலத்தினை அறிதல். அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

நெடும்புனலுள் வெல்லு முதலை யடும்புனலின்
நீங்கி னதனைப் பிற. (௫)

(இ - ள்.) முதலை, நெடும்புனலுள் - ஆழமுள்ள நீரிலானால், பிற பிறவுயிர்களை யெல்லாம், வெல்லும் - தான் வெல்லாநிற்கும், புனலின் - அந்நீரினின்றும், நீங்கின் - நீங்குமானால், அதனை - அம்முதலையை, பிற - பிறவுயிர்களெல்லாம், அடும் - வெல்லாநிற்கும். (எ - று)

† பகைவரறியக் கோபஞ்செய்தவிடத்தே அவர் தம்மைக் காத்துக் கொள்வராகலால் புறத்திலே கோபஞ் செய்யாரெனவும், கோபம் ஒழிந்தவிடத்தும் பின்பும் தீங்குசெய்யாமல் அடக்குதல் கூடாமையால் உள்ளே கோபஞ்செய்வாரெனவுங் கொள்க.

•எனவே, எல்லாரும் தமது இடத்திலே வலியராயிருப்பா ரென்பது கூறப்பட்டது. நிலையாத நீரினிடத்தே பிறவுயிர்கள் நிற்கமாட்டாமையால் அவையெல்லாம் முதலைக்கு எளியனவாகும்; அவை சஞ்சரித்தற்குரிய நிலத்தினிடத்தே அம்முதலை சஞ்சரிக்க மாட்டாமையால் அஃது அவைகளுக்கெல்லாம் எளிதாமென்றது, பகைவர்மேற் செல்லுமரசர் பகைவர் நிற்கமாட்டாத இடமறிந்து சென்றால் அப்பகைவர் எத்துணை வலியராயிருப்பினும் தமக்கு எளியராவார்; அவவாறல்லாமல் தாம் நிற்கமாட்டாத விடத்தே சென்றால் அப்பகைவர் எத்துணை எளியவராயிருப்பினும் அவர்க்குத் தாம் எளியவராவார் என்கிற பொருள் தோன்ற நின்றமையால்• இது பிறிதுமொழிதல் என்னும் அலங்காரம். அப்பகைவரை அவர் நிற்கமாட்டாதவிடத்துச் சென்று வெல்லவேண்டு மென்பதாம். மேலே அவையெல்லாம் எளியன என்றதனால் மிகப்பெரிய யானையையும் நீரில் முதலை வெல்லுமென்பதும் அவைகளுக்கெல்லாம் எளிதென்றதனால் மிகச் சிறிய முயலுக்கும் நிலத்தில் முதலை தோற்குமென்பதும் பெறப்படும்.

* போர் செய்தற்குத்தக்க விடத்தைப் பெறுமுன் பகைவரை எதிர்த்தலும் இகழ்தலும் கூடாதென்பதும்; † மாறுபாட்டோடு கூடிய வலிமையுடையவருக்கும் அரண் வேண்டுமென்பதும்; வலிமையில்லாதவரும் இடமறிந்து போர்செய்தாற் பகைவரைச் செயிப்பரென்பதும்; அறிவு ஆண்மை பெருமைகளால் எத்துணைச் சிறந்தவராயினும் தமக்குரிய இடம் விட்டு மாறினால் ஒரு காரியமும் செய்யமுடியாதென்பதும்; பகைவரிடத்துத் தொழில்செய்

---

* போர் செய்தற்குத்தக்க விடமாவது - வாயில்களாலும், கீழறைகளாலும், பகைவர் வருதலும் போகுதலும் ஒழியும்வகை அரணைச்சூழ்ந்து ஒன்றற்கொன்று துணையாய்த் தமக்குள்ளே பல படைகள் இருப்பிற்கும், மதிலும் அகழும் முதலாகிய அரண் செய்யப்பட்ட அரசிருப்பிற்கும் ஏற்ற நிலக்கிடக்கையையும் நீரையும் உடையது.

† மாறுபாடாவது - பூமி பலவரசர்ஆளுதற்குப் பொதுவாயுள்ள தென்பதைப் பொறுக்காத அரசரது மனதிலே தோன்றுவது.

யும் விதங்களையெல்லாம் நன்றாய் யோசித்து அவைகளை முடித்தோடு பொருந்தச்செய்ய வல்லார்க்குத் தமது தைரியமல்லாமல் வேறொருதுணை வேண்டுவதில்லையென்பதும்; பெரும்படையுடைய அரசன் தன் படைப்பெருமை நோக்கி இடம் நோக்காமற் சிறுபடையுடையானை அழித்தல் கருதிச் செல்வானாயின், அச்செலவு அப்படைக்கு ஒருமித்துச் சென்று தொழில் செய்யக் கூடாமையாலாவது பழக்கமில்லாமையாலாவது அப்பெருமையால் பயனில்லாமல் தான் அழிந்துவிடுவானென்பதும்; ஆண்மையுடையவரைச் சிறுமை நோக்கி அவரிருப்பிடத்திலே சென்று தாக்கினால் அவர் அதைவிட்டுப் போவதற்குத் துணியாமல் சாவதற்குத் துணிந்தவராய்ப் போர்செய்வாராதலால், அவருக்குப் பெரிய சேனையும் தோற்றோடிப்போமென்பதும் இங்கு அறியத் தக்கவைகளாம்.

## ௫௧. தெரிந்துதெளிதல்.

அஃதாவது அமைச்சர் (மந்திரிகள்), புரோகிதர், சேநாபதியர், தூதர் முதலாயினோரைப் பிறப்புக் குணம் அறிவு எனப்படுகின்றவைகளையும் செய்கையையும் காட்சி, கருத்து, ஆகமம் என்னும் பிரமாணங்களால் ஆராய்ந்து தெளிதல். வலி, காலம், இடமென்னும் மூன்றையும் அறிந்து பகைவர்மேற் செல்வானுக்குச் சேனை கருதுதொடு தொழில்செய்தற்கும், எதிரிடாமைக்கும் இத்தெளிவு வேண்டுதலால் அவற்றின்பின் வைக்கப்பட்டது.

அறம்பொரு ளின்ப முயிரச்ச நான்கின்
திறந்தெரிந்து தேறப் படும். (௧)

(இ - ள்.) அரசனாலே தெளியப்படுவானொருவன், அறம் - அறமும், பொருள் - பொருளும், இன்பம் - இன்பமும், உயிரச்சம் - உயிர்ப்பொருட்டால் வரும் அச்சமும், நான்கின் - என்கின்ற உபதை நான்கினது, திறம் - திறத்தினால், தெரிந்து - மனவியல்பு ஆராய்ந்தால், தேறப்படும் - பின்பு தெளியப்படுவான், எ - று.

அந்நான்கு உபதைகளுள், அறவுபதையாவது புரோகிதரையும் அறவோரையும் அனுப்பி, அவரால், இவ்வரசன் அறமில்லாதவனு

யிருக்கையால் இவனை நீக்கி அறமுடைய உரிமையும் உடையானொருவனை வைத்தற்கு எண்ணினோம்; இதுதான் யாவர்க்கும் சம்மதம், உன கருத்து என்னவென்று சபதத்தோடு சொல்லுவித்தல். பொருளுபதையாவது சேனைத்தலைவனையும் அவனோடு சம்பந்தமானவரையும் அனுப்பி, அவரால், இவ்வரசன் உலுத்தனாயிருக்கையால் இவனை நீக்கி ஈகையும் உரிமையும் உடையவனொருவனை வைத்தற்கு எண்ணினோம்; இதுதான் யாவர்க்கும் சம்மதம், உன கருத்து என்னவென்று சபதத்தோடு சொல்லுவித்தல். இன்பவுபதையாவது ஆதிதொட்டு உரிமையோடு பழகிய ஒரு தவமுதுமகளை அனுப்பி, அவளால், உரிமையுள இராணி உன்னைக்கண்டு வருத்தமுற்றுக் கூட்டவேண்டுமென்று என்னை அனுப்பினாள்; அவளைக் கூடுகையானால் உனக்கு அதிக சுகமாத்திரமல்லாமல் அதிக திரவியமும் கிடைக்குமென்று சபதத்தோடு சொல்லுவித்தல். அச்சவுபதையாவது ஒரு நிமித்தத்தின்மேல் வைத்து ஒரு மந்திரியினாலே மற்றவரை அவன வீட்டில் அழைப்பித்து, இவர் எதிர்க்கும்படி எண்ணற்குக் கூடினாரென்று தான காவல்செய்து, ஒருவனால், இவ்வரசன நம்மைக்கொல்ல எண்ணுகின்றமையால் முந்தி நாம் அவனைக்கொன்று நமக்கினிய அரசனொருவனை வைத்தல் இங்கே யாவர்க்கும் சம்மதம், உன கருத்து என்னவென்று சபதத்தோடு சொல்லுவித்தல். இந்நான்கினும் வேறுபடாதவரை யிருந்தவிடத்துப் பிற்காலத்திலும் வேறுபடாரென்று அநுமானப் பிரமாணத்தினால் தெளியப்படுவா ரென்பதாம்.

உயர்ந்தகுடியிற் பிறந்து, காமம், வெகுளி, கடும்பற்றுள்ளம், மானம், உவகை, மதம், சோம்பல், மறப்பு, தவறு என்னும் குற்றங்களினின்று நீங்கி, நமக்குப் பழிவருமோவென்று அஞ்சி, இழிதொழில்களின்மேல் மனஞ்செல்லாத நற்குணமுடையவனை அரசன் வினைக்குரியவனாகத் தெரிந்துகொள்வா னென்பதும்; அரியநூல்களைக்கற்று, மேற்கூறிய குற்றங்கள் அற்றவிடத்தும் நுட்பமாக ஆராயுமிடத்து அறியாமை இல்லாதிருக்கை அரிதென்பதும்; குணங் குற்றங்களில் ஒன்றேயுடையார் உலகில் இல்லாமையால், ஒருவனது குணங் குற்றங்களை ஆராய்ந்து, அவற்றுள் மிகுதியாயுள்ளதினால் அவனைத் தக்கவன் தகாதவனென்று அறியவேண்டு

மென்பதூம்; குடிப்பிறப்பு குணம் அறிவு என்பவைகளால் மனிதரடையும் பெருமை சிறுமைகளை அவரவரது செய்கைகளாலேயே அறியக்கூடுமென்பதும்; உலகத்தார் பழிப்பன ஒழிதற்கும் புகழ்வன செய்தற்கும் காரணமாகிய உலகநடை யியல்பு சுற்றமில்லாதார்க்கு இல்லாமையால் அவரை நம்பலாகாதென்பதும்; தன்னோடு அவரிடத்து நின்ற அன்புபற்றி அரசன அறிவில்லாதவரிடத்துத் தொழிலை வைத்தால், அத்தொழில் அவரறிவில்லாமையினாலே கெடுமெனபதும்; தன குடியோடு தொடர்ந்த மரபில்லாத ஒருவனைப் பிறப்பு முதலானவைகளாலும் செய்கையாலும ஆராய்ந்தில னாகித் தெளிந்த அரசனுக்கு அதுவெதளிவு அவன சந்ததிக்கிரமத்திலும் நீங்காத துனபத்தைக் கொடுக்குமெனபதும்; மேறகூறிய விதங்களால் தெரிந்து தெளியப்படும் ஒருவனிடத்துக் காணப்படும் சிறிய குறைங்களைப் பொருட்படுத்தலாகாதெனபதும்; அவவாறு தெளியப்பட்டவனிடத்து ஒரு தொழிலை வைத்தபின ஒரு தப்புங் காணுமல் சந்தேகப்படுவாயின, அதனை அவன அறிந்து இனி இது நில்லாதென்றெங் கருத்தால் அத்தொழிலைத் தளரவிடுவது மாத்திரமேயல்லாமல் பகைவராலே எளிதில் பிரிக்கவும்படுவானுதலால், தெளியப்பட்டுத தொழில் செய்பவனிடத்துச் சநதேகப் படுதலும் ஆகாதெனபதும் இங்கு அறியத்தக்கவைகளாம்.

## ௫௨. தெரிந்துவினையாடல்.

அஃதாவது அங்ஙதெளியப்பட்டவரை அவர் செய்யவல்ல தொழில்களை அறிந்து அவைகளிலே ஆளுந்திறம். அதிகார முறைமையும் இதனாலே விளங்கும்.

> வாரி பெருக்கி வளம்படுத் துற்றவை
> ஆராய்வான் செய்க வினை (௨)

(இ - ள்) வாரி - பொருள்கள் வரும் வழிகளை, பெருக்கி - விரியச்செய்து, வளம்படுத்து - அப்பொருள்களாலே செல்வங்களை வளர்த்து, உற்றவை - அப்பொருள்வரும் வழிகளுக்கும் பொருள் களுக்கும் செல்வங்களுக்கும் வந்த இடையூறுகளை, ஆராய்வான் -

தினந்தோறும் ஆராய்ந்து நீக்கவல்லவன், வினைசெய்க - அரசனுக்குத் தொழில் செய்யக்கடவன், எ - று.

பொருள்களாவன மணி பொன் நெல் முதலாயின. அவை வரும் வழிகளாவன பகைவரை யழித்தலும், * திறைகொள்ளலும் தன்னாடு காத்தலும், உழவு, பசுக்காவல், வாணிகமென்னும் வார்த்தையுமாம். அப்பொருள்களாலே வளர்க்கப்படும் செல்வங்களாவன - கடவுளர், அந்தணர், வறியோர் என்றிவர்க்கும் புகழிற்குங் கொடுத்தலாகிய புண்ணியங்களும், யானை, குதிரை, படை, காடு, அரண், பகையோடு கூடுதலினினறும் பிரிக்கப்படுவோர், தன்னைவிட்டுப் பிரிதலினின்றுங் கூட்டப்படுவோா ஆகிய பொருள்களும், மண்டபம், வாவி, செய்குன்று, இளமரக்கா என்பனவும் ஐம்புலன்களால் அனுபவிக்கப்படும் பிறவுமாம். இடையூறுகளாவன தொழில் செய்வோர், சுற்றத்தார், பகைவா, கள்வர் எனகிற இவர்களால் வரும் துன்பங்கள்.

தன்னை உரிமை அறிதறபொருட்டு உள்ளுக்கும் புறத்துக்கும் நடுவாகிய ஒருதொழிலே அரசன தன்னிடத்தே வைதத விடத்து அத்தொழிலிலே ஆமவையும் ஆகாதவையும் ஆகிய செயல்களை ஆராய்ந்தறிந்து, அவைகளுள் ஆமவைகளையே செய்தவன் பின்னும் அத்தன்மையா னுகுதல்பற்றி அவவரசனாலே உள்ளாகிய சிறந்த தொழில்களிலே ஆளப்படுவானென்பதும்: அரசனிடத்தே அனபும், அவனுக்கு அமவைகளை அறியும அறிவும், அவைகளைச் செய்யுமிடத்துக் கலங்காமையும், அவைகளாலே பொருள கைகூடியவழி அப்பொருளின்மேல் ஆசையில்லாமையும் ஆகிய இந்நான்கு குணங்களையும நன்றாக உடையவனிடத்தே அரசனுக்குத் தெளிவுண்டாகுமென்பதும்; † கட்டியஙகாரன்

* துறை - வரி.

† கட்டியங்காரனென்பான் சீவகனது தந்தையான சச்சந்தனது மந்திரிகளுள் ஒருவன். இவன் சச்சந்தன் தன் மனைவியான விசயையிடத்து மிகுந்த காதல்கொணடு அரசாட்சியைக் கவனியாது போகமனுபவித்திருக்கும்போது அச் சச்சந்தனைக் கொன்று அரசாட்சியைக் கவர்ந்துகொண்டானென்பது கதை.

போல அரசவின்பத்தை விரும்பி வேறுபடுவதல்லாமல் அதனைக் குற்றமெனறு விட்டுப் பின் தம்மியல்பிலே நிற்பவர் அரியராதலால், தொழில் வைப்பதற்கு முன்னே எல்லாக்குணங்களும் உடையவராகி வைத்தபின் வேறுபடுவோரை நடுவொணவேயோர் தொழிலை வைத்து அறிந்து நீக்கவேண்டுமென்பதூஉம்; செய்யுமுபாயங்களை அறிந்து, செயலாலும் இடையூறுகளாலும் வருந்துன்பங்களைப் பொறுத்து முடிவுசெய்ய வல்லவனிடத்தல்லது, இவன நம்மிடத்து அன்புடையவனென்று வேறொருவனிடத்துத் தொழிலைவைத்தல் கூடாதெனபதூஉம்; செய்பவனிலக்கணத்தை முன்னே ஆராய்ந்து, செய்யப்படும் தொழிலின் இயல்பைப் பின்னே ஆராய்ந்து அதன் பின் இக்காலத்தில் இவ்விலக்கண முடையவன் இத்தன்மையதாகிய தொழிலை இக்கருவியால் செய்துமுடிக்க வல்லவனென்று காலத்தோடும் கருவியோடும் கூறுபடுத்தி ஆராய்ந்து, அத்தொழிலை அவனிடத்தே விடவேண்டுமெனபதூஉம்; ஒருவனை அரசன தன் தொழில் செய்தற்கு உரியவனாக ஆராய்ந்து துணிந்தால் பின் அவனை அத்தொழில் செய்தற்கு உரியவனாகும்படி உயரச்செய்யக் கடவனென்பதூஉம்; தனது தொழிலினிடத்தே எப்போதும் முயற்சியையுடையவன் அத்தொழில்செய்யும் உரிமையால் தனக்குச்சுற்றமாய் நடக்கின்ற தன்மையை அஃது பொறாதாரது சொல்லைக்கேட்டு அரசன் அவனை அவமதித்துக் கோபிக்க நினைப்பானாயின், பின ஒருவரும் உட்பட்டு முயல்வாரில்லை யாகவே, தன் செல்வம் கெடுமென்பதூஉம்; தனது தொழில் செய்பவன் மாறுபடாது தொழில் செய்வதனால் உலகம் மாறுபடாதிருத்தலால், அரசன் தொழில் செய்பவனது உரிமை அழியாமல் தன்னுள்ளே ஆராய்ந்துகொண்டு வரவேண்டுமென்பதூஉம் இங்கு அறியத்தக்கவைகளாம்.

## ௫௩. சுற்றந்தழால்.

அஃதாவது அரசன் தனது சுற்றத்தாரைத் தன்னைவிட்டு நீங்காதிருக்கும்படி தழுவுதல். தொழில் செய்வோரைச் சொல்லி மற்றைச் சுற்றத்தாரைச் சொல்லுகின்றார் ஆதலால், இது தெரிந்து வினையாடலின்பின் வைக்கப்பட்டது.

விருப்பறாச் சுற்ற மியையி னருப்பறா
ஆக்கம் பலவுந் தரும். (௨)

(இ - ள்.) விருப்பறா - அன்பு நீங்காத, சுற்றம் - சுற்றமானது இயையின் - ஒருவனுக்குக் கிடைக்குமாயின், அது, அருப்பறா - கிளைத்தல் (மேலுமேலும் விருத்தியாதலினின்றும்) நீங்காத, ஆக்கம் பலவும் - பல செல்வங்களையும், தரும் - அவனுக்குக் கொடுக்கும், (எ - று).

உட்பகையினின்றும் நீக்குதற்கு 'விருப்பறாச் சுற்றம்' என்றும், தானே வளர்க்கும் உறுதியுடையதாய செல்வத்தினின்றும் நீக்குதற்கு 'அருப்பறாவாக்கம்' என்றும் அடைகொடுத்துச் சொல்லினார். அரும்பு என்னும் முதனிலைத் தொழிற்பெயர் * தொடை நோக்கி அருப்பு என விகாரப்பட்டு நின்றது. இயையினென்பது அது கிடைத்தலின் அருமையைக் காட்டி நின்றது. ஆக்கத்திற்குக் காரணமாய செல்வத்தை ஆக்கமென்றதனால் அது காரியவாகு பெயராகும். பலவுமென்றது அமைச்சு, நாடு, அரண், பொருள், படை, நட்பு என்னும் அங்கங்கள் (உறுப்புகள்) ஆறனையும் நோக்கி. சுற்றத்தார் பலர்கூடி வளர்த்தலால் அச்செல்வங்கள் மேலுமேலும் கிளைக்கு மென்பது கருத்து.

ஒருவன் செல்வந்தொலைந்து தரித்திரனானவிடத்தும் அவனை விடாமல், அவன் செல்வத்தோடிருந்த காலத்திலே தமக்குச் செய்த உபகாரத்தை எடுத்துக் கொண்டாடுமியல்புகள் உண்மையான சுற்றத்தாரிடத்தே உளவாகுமென்பதும்; சுற்றத்தோடு நெஞ்சு கலத்தல் இல்லாதவனது வாழ்க்கை தாங்குவாரில்லாமையால் கெட்டழியுமென்பதும்; ஒருவன் தனது சுற்றத்தினால் தான் சூழப்படும்வகை அச்சுற்றத்தைத் தழுவி நடத்தல் அவன் பகையில்லாமல் வாழுதற்குக் காரணமாதலால் தன் செல்வத்தினால் அச்சுற்றத்தார்க்கு உதவிபுரிந்து வாழ்தலே அவன் செல்வம் பெற்றதனால் பெற்ற பயனாகுமென்பதும்; அவ்விதம் உதவிபுரிதலும் இன

* பலவடிகளிலேனும் பலசீர்களிலேனும் எழுத்துக்களில் ஒன்றிவருவது செய்யுட்டொடை யெனப்படும்.

சொலாலின்றிப் பயன்படாதெனபதும்; * காகங்கள் தமக்கு இரையாயுள்ளவற்றைக் கண்டவிடத்து மறைக்காமல் தம்மினத்தை அழைத்து அதனோடுங்கூட உணபதுபோலத் தம்மால் அனுபவிக்கப்பட்ட பொருள்களையெல்லாம் தம் சுறறத்தாருமஅனுபவிக்கும்படி மறையாது வைத்து அழைத்துக் கொடுப்பவர்க்கு அறமும் இன்பமுமேயன்றிப் பொருளும் வளருமெனபதும்; அரசன எல்லாரையும் ஒரு தனமையராக நோககாமல் அவரவர் தகுதிக்கு எறக நோக்குவானாயின, அச்சிறப்பு நோக்கி அவவரசனை விடாது வாழுஞ்சுற்றத்தார் பலரென்பதும்; அரசனிடத்து இயற்கையாகவே அன்புடையராகிய சுற்றத்தார் அவனிடதது நெறிகெட வொழுகல், வெறுப்பன செய்தல், காமம் வெகுளி உவகைகளை அளவுகடந்து செய்தல் முதலிய குற்றங்களைக் கண்டவிடத்து அவனைவிட்டுப் பிரிந்து அவன் அக்குற்றங்களினினறும் நீங்கியவிடத்து அவனைத் தாமே சேருவரெனபதும்; காரணமினறித் தனனிடத்து நினறும் பிரிந்துபோய்ப் பின ஒரு காரணத்தால்வந்த சுற்றத்தானை அரசன அக்காரணத்தைச் செய்துவைத்து ஆராய்ந்து தழுவிக்கொள்ளக்கடவ னெனபதும் இங்கு அறியத்தககவைகளாம்.

* "காகமுறவு கலந்துண்ணக் கண்டீ ரகண்டாகாரசிவ
போகமெனும்பே ரினபவெள்ளம் பொங்கித்ததும்பிப் பூரணமாய்
ஏகவுருவாய்க் கிடக்குதையோ இன்புற்றிடநாம் இனியெடுத்த
தேகம்விழுமுன் புசிப்பதற்குச் சேரவாருஞ் செகத்தீரே"
—தாயுமானவர்.

"ஆர்க்கு மிடுமின் அவரிவ ரென்னன்மின்
பார்த்திருந் துண்மின் பழம்பொருள் போற்றன்மின்
வேட்கை யுடையீர் விரைந்தொல்லை யுண்ணன்மின்
காக்கை கரைந்துண்ணுங் கால மறிமினே"—திருமந்திரம்.

## ௫௪. பொச்சாவாமை

அஃதாவது அழகும் செல்வமும் ஆற்றலும் முதலானவைகளால் மகிழ்ந்து தன்னைக் காத்துக்கொள்ளுதலிலும் பகைவரையழித்தல் முதலாகிய காரியங்களிலும் மறதிசெய்யாமையாம். முன்சொல்லப்பட்ட சுற்றத்தாரால் பயனுள்ளது இம் மறதியில்லாதவிடத்தாகலால், இது சுற்றந்தழாலின்பின் வைக்கப்பட்டது.

பொச்சாப்புக் கொல்லும் புகழை யறிவினை
நிச்ச நிரப்புக்கொன் றாங்கு. (௨)

(இ - ள்.) புகழை - ஒருவனது கீர்த்தியை, பொச்சாப்பு - அவமறதி, கொல்லும் - கெடுக்கும், நிச்சநிரப்பு நித்திய வறுமை அறிவினை - அறிவை, கொன்றாங்கு - கெடுக்கும் விதம்போல், (எ - று.)

நிச்சநிரப்பு - நாள்தோறும் யாசித்தலால் வருந்தித் தன வயிற்றை நிறைத்தல். அஃது அறிவுடையானிடத்தே உண்டாயின் அவனுக்கு இளிவரவாலும் (இழிவாலும்) பாவத்தாலும் இகழ்ச்சியை உண்டாக்கி அவனது நன்குமதிப்பினை அழிக்கும்; அதுபோல, மறதியும் புகழுடையவனிடத்தே உண்டாயின் அவனுக்குத் தன்னைக் காத்துக்கொள்ளாமையாலும் காரியக் கெடுதியாலும் இகழ்ச்சியை உண்டாக்கி அவனது நன்கு மதிப்பினை அழிக்குமென்பதாயிற்று. இவ்வாறு பொச்சாப்பானது தன்னால் அடையப்பட்ட ஒருவனுக்கு வசையை உண்டாக்கி அவனது இசையை அழித்தலாலும், *"வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய, வாழ்வாரே வாழாதவர்" என்றமையால் இசைகெடப்பெற்ற ஒருவன் இறந்தவனேயாவான் ஆகலாலும், பொச்சாப்புடையவன் உயிரோடிருந்தும் இறந்தவனாகவே கருதப்படுவானென்பது இதனாற் பெறப்படும். ஆதலினாலே தனக்கு இணைபிறிதொன்றிலதாக வோங்கி உலகத்து இறவாது நிற்பதாகிய புகழை இழக்காதிருக்க விரும்பும் ஒருவன் தன் பெருஞ்செல்வம் பேரின்பம் பெருமிதம் முதலியவற்றால் மகிழ்ச்சியடைந்து செருக்குற நேரிடும்போது, முற்காலத்திலே அதனாலாகிய மறதியினாலே கெட்டவர்களை நினைந்து அக்கேடு

* புகழதிகாரம்-௰ வது செய்யுள்.

தனக்கும் உண்டென்று அஞ்சி அப்பொச்சாவாமையை யாவரிடத்தும் எக்காலத்தும் ஒழிவின்றி ஒப்பக்கடவன் என்பதறிக.

மிகுந்த அகமகிழ்ச்சியினது களிப்பால் வருவதாகிய மறதியானது ஒருவனுக்கு அளவுகடந்த கோபத்திலும் தீதா * மென்பதும்; காடு மலை மதில் அகழி என்னும் அரண்களுள்ளே நிற்பினும் மனத்தின்கண் அச்சமுடையார்க்கு அவ்வரண்களாற் பயனில்லையாதல் போலச் செல்வமெல்லாம் உடையராயினும் மனத்தின்கண் மறதியுடையார்க்கு அச்செல்வத்தாற் பயனில்லையென்பதும்; தன்னாற் காக்கப்படுந் துன்பங்களை (தன் சோர்வுபார்த்துப் பகைவர் செய்யுந் துன்பங்களை என்றபடி) அவை வருதற்கு முன்பே அறிந்து காவாமல் மறந்திருந்தவன் பின் அவை வந்த உற்றகாலத்துக் காக்கக்கூடாமையால் தன்னுடைய குற்றத்தை நினைந்து விசனப்படுவானென்பதும்; மறவாமைக் குணமானது பகைவரிடத்து மாத்திரமேயன்றித் தொழில்செய்வார் சுற்றத்தாரென்னும் தம்மவரிடத்தும் தாம் செல்வமுதலியவற்றால் பெருகிய காலத்திலும் சுருங்கிய காலத்திலும் எல்லாக்காரியங்களிலும் சமமாயிருந்தால் அதற்கொத்த நன்மை பிறிதொன்றில்லையென்பதும்; இடைவிடாத நினைவும் தப்பாத அபுசயமும் உடையார்க்குச் செய்யமுடியாத காரியம் ஒன்றுமில்லையென்பதும்; நீதிநூலுடையார் உயர்த்துக்கூறிய செயல்களாகிய † மூவகை ஆற்றலையும் ‡ நால்வகை உபாயத்தையும் § ஐவகைத் தொழிலையும் $ அறுவகைக் குணத்தையும்

* பகைவரை வெல்லுதலுக்கும் கொடியோரைத் தண்டித்தலுக்கும் வேண்டியதாகிய அளவினைக் கடந்தகோபம் தன்னைக் கொல்வதேயல்லாமல் ஒரோவிடத்துப் பகைவரையும் கொல்லும், மறதி அப்படிப்பட்டதல்லாமல் தன்னையே கொல்லுதலால் அதனினும் தீதாயிற்று.

† மூவகை ஆற்றல் - அறிவு, ஆண்மை, பெருமை.

‡ நால்வகை உபாயம் - ௱௧௰-ம் பக்கம் பார்க்க.

§ ஐவகைத் தொழில் - எளிய முயற்சி, செய்தாற் பயனுள்ளது, பெரும்பயன் தருவது, ஐயமில்லாதது, பின்பு இன்பந்தருவது.

$ அறுவகைக் குணம் - நட்பாக்கல், பகையாக்கல், பகைமேற்சேறல், இருத்தல், பிரித்தல், கூட்டல்.

கடைப்பிடித்துச் செய்யாது மறந்தவர்க்கு எழுபிறப்பிலும் நன்மை யில்லை யென்பதும் இங்கு அறியத்தக்கவைகளாம்.

## ௫௫ செங்கோன்மை

அஃதாவது அரசனாலே செய்யப்படும் முறை(நீதி) யினது தன்மை. அந்த முறையானது ஒருபக்கத்திலே சாயாமல் செவ்வையாகிய கோல்போல இருத்தலாலே செங்கோல் எனப்பட்டது. இதனை வடநூலாரும் தண்டமென்பர் (தண்டம் - கோல்). அது மறதியில்லாத அரசனாலே செய்யப்படத்தக்கது ஆகலின் இது பொச்சாவாமையின்பின் வைக்கப்பட்டது.

ஓர்ந்துகண் ணோடா திறைபுரிந் தியார்மாட்டுந்
தேர்ந்துசெய் வஃதே முறை. (௧)

(இ-ள்) தன்கீழ் வாழ்வார் குற்றஞ் செய்தால் அக்குற்றத்தை, ஓர்ந்து நாடி, யார்மாட்டும் பாரபட்சத்தால் கண்ணோடாது தாட்சணியப்படாமல் இறைபுரிந்து நடுவுநிலைமையைப் பொருந்தி, தேர்ந்து அக்குற்றத்துக்குச் சொல்லிய தண்டத்தை நூலோரோடும் ஆராய்ந்து, செய்வஃதே - அவ்வளவிற்றாகச் செய்தலே, முறை நீதி (எ-று).

பகைவர் அயலார் நட்பினர் என்னும் இம்மூவகையாரிடத்தும் அறத்தின் வழுவாமல் நடுவாய் நின்று இறை என்கிற அரசனுக்கு இயல்பாகலால் அதனை இறை என்றும் உயர்ந்தோர் சிறந்தவரிடத்தும் என்பார் யார்மாட்டும் என்றும் சொல்லினார். இறைமை இறை என்றும், செய்வது செய்வஃது என்றும் விகாரப்பட்டன. அரசனுக்குச் செங்கோலெனப்படுவது கொடியோர், தீக்கொளுவுவோர், நஞ்சிடுவோர், கருவியிற் கொல்வோர், கள்வர் வழியலைப்போர், கொள்ளையிடுவோர், பிறன் மனைவியை விரும்புவோர் முதலியோரைத் துன்பஞ்செய்தல், பொருள்வாங்கல் கொல்லுதல் என்னுந் தண்டங்களுள் பொருந்துமாற்றால் முட்டாமல் (தாட்சணியத்தால் தடுக்கப்படாது) தண்டித்துத் தன் குடிகளைக் காத்துத் தானும் வருத்தாமல் ஆதரித்தலேயாகும். அதனால் அச்செங்கோல் அவனை

யும் காப்பதாகும். இதனுற் செங்கோன்மையது இலக்கணங் கூறப்பட்டது. முட்டாமல் முறைசெய்த முடிமன்னரில் முதன்மையானவர் பசுவை முறைசெய்த மனுநீதிச் சோழனும் தன்கை குறைத்த பொற்கைப் பாண்டியனும் ஆவார் - அவர் சரிதத்தின் சாரம் பின்வருமாறு:—

திருவாரூரில் அரசுசெலுத்திய மனுநீதிச்சோழன் தனது ஒரேபுத்திரன் ஒரு பசுவின் கன்றின்மேல் அறியாது தன் இரதத்தை யேற்றிக்கொல்ல, அதனுல் அக்கன்றின் தாய் மனம்வருந்தி தலைக் கண்ணுற்று, அவ்வருத்தத்திற்கு ஏதுவான துன்பத்தை நீக்கமாட்டாதவனாய், அப்பசுவினது துயரத்தைத் தானும் தாங்குவதே கருமமென்று தீர்மானித்து, தன் புத்திரனைக் கீழே கிடத்தி அவன்மேல் இரதத்தைச் செலுத்திக் கொன்று, கடவுளருளால் மீண்டும் அப்புத்திரன் உயிர்பெற்றெழப்பெற்ருன்.

மதுரையில் அரசுசெலுத்திய பாண்டியர்களுள் ஒருவன தன்பால் அடைக்கலமாக வைத்து அயலூருக்குச் சென்ற ஒருவேதியனது மனைவியைப் பாதுகாத்துவரும் நாளில், ஓரிரவில் நகர்சோதனை வரும்போது அவ்வேதியன் வீட்டில் ஆண்குரல்கேட்டு ஐயமுற்று உள்ளே யார் என்று வினவிக் கதவைத்தட்ட, அப்போது அயலூரிலிருந்து அன்று வந்துசேர்ந்த அந்தணன் கதவைத்தட்டுபவன் யார் என்று கேட்க, அரசன் அச்சங்கொண்டு அங்குள்ள வீடுகளின் கதவுகளையெல்லாம் தட்டிக்கொண்டே போய் அரண்மனையை அடைந்து விடிந்தவுடன் மந்திரிகளை நோக்கி, தனித்திருக்கும் மகளிருள்ள வீட்டின் கதவை நடுராத்திரியிற்சென்று தட்டினவனை தண்டிக்கும்விதம் யாதென்று கேட்டான். அதற்கு அவர்கள் அவன் கையை வெட்டவேண்டுமென்ருர்கள். உடனே அரசன் தனகையை வெட்டிக்கொண்டு நடந்ததைக் கூறிப் பொன்னுல் ஒருகைசெய்து தரித்துக்கொண்டு அதனுல் அன்றுமுதல் பொற்கைப்பாண்டியனென்று விளங்கினுன்.

மூன் வான்சிறப் பதிகாரத்திற் கூறியபடி மன்னுயிர் வாழ்விற்கு மாறிலா ஆதாரமாவது மழையேயென்பது ஒப்பமுடிந்த-

உண்மையே யெனினும், அரசனது காவல் இல்லாவிடத்து அம் மழையினாலாகிய உணவின் பயனைக் குடிகள் அடைதல் அரிதென்பதும்; அரசனது செங்கோல் வேதமும் அதனாற் சொல்லப்பட்ட அறமும் * நிலைபெறுதற்குக் காரணமாயுள்ள தென்பதும்; தன் குடிகளிடத்து இன்சொற் சொல்லுதலும், அவர்களுள் தளர்ந்தார்க்கு வேண்டுமவை கொடுத்தலும், அவர்களுக்குக் கள்வர் முதலியோரால் கெடுதிவாராது காத்தலும் ஆகிய நற்குணங்களை யுடைய அரசனிடத்து யாவரும் நீங்காத அன்புடையரா யிருப்ப ரென்பதும்; நூல்களாலே சொல்லப்பட்ட இயல்பாற் செங்கோல் செலுத்தும் அரசனது நாட்டில் பருவமழையும் குறையாதவிளைவும் உளவாகா நிற்குமென்பதும்; செங்கோன்மை யில்லாத அரசனுக்கு அவனது வேற்படை பயன்படாதென்பதும; வழக்கறிவிப்பவர்க்கு அடைதற்கெளியனாகி, அவரால் அறிவிக்கப்பட்டவைகளை நூலோர் பலரோடும் ஆராய்ந்து, நின்ற உண்மைக்குப் பொருந்த முறைசெய்யாத அரசன் பாவமும் பழியும் அடைந்து, பிறர்கெடுக்கவேண்டாது தானே கெடுவா † னென்பதும்; குடிகளிடத்தே குற்றம் உண்டானால் அதனை ஒழிக்கும்படி அவரைத் தண்டித்து அவரை அக்குற்றத்தினின்று நீக்கிப் பரிசுத்தராக்குதலும், அவரில் மிகக்கொடியராய் உலகத்தாரைத் துன்பப்படுத்துவோரைக் கொல்லுதலும் அரசனுக்குச் சாதிதருமாதலால் அது அவனுக்குப் பழியாகாதெனபதும் இங்கு அறியத்தக்கவைகளாம்.

## ௫௬. கொடுங்கோன்மை.

அஃதாவது அச்செங்கோலினது கோணுதற்றன்மை. இங்கும் உவமானமான கொடுங்கோலின் பெயர் உவமேயமான அநீதியின் மேலாயிற்று. செங்கோன்மைக்கு மாறாகலால் இஃது அதன் பின் வைக்கபபட்டது.

* "மாதவர் நோன்பு மடவார் கற்புங் காவலன் காவலிற் றங்கா" ஆகலின், இங்கு அறமென்றது அவையொழிந்தவற்றையென் றறிக.

† "அல்லவை செய்தார்க்கறங் கூற்றம்"—நான்மணிக்கடிகை.

**ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூன்மறப்பர்**
**காவலன் காவா னெனின். (௰)**

(இ - ள்.) காவலன் - காப்பாற்றற்குரிய அரசன், காவானெனின் - உயிர்களைக் காப்பாற்றானாயின், தருமமில்லாத அவனது நாட்டிலே, ஆ - பசுக்களும், பயன் குன்றும் - பால் சுருங்கும், அறுதொழிலோர் - அந்தணரும், நூல் - நூல்களை, மறப்பர் - மறந்துவிடுவார். எ - று.

ஆபயன் - ஆவினின்றுங் கொள்ளப்படும் பயன். அறுதொழிலாவன. வேதமோதல், ஓதுவித்தல், யாகஞ்செய்தல், செய்வித்தல், ஈதல், ஏற்றல் என்பவை. இவை அந்தணர்க்குரியன. ஓதல், யாகஞ்செய்தல், ஈதல், உலகோம்பல், படையிற்றல், பொருதல் என்பவை அரசர் அறுதொழில். ஓதல், யாகஞ்செய்தல், பொருளீட்டல், ஈதல், பசுக்காத்தல், ஏருழல் என்பவை வைசியர் அறுதொழில். ஏவல் செயல், பொருளீட்டல், உழுதல், பசுக்காத்தல் குயிலுவத் தொழில் செயல், காருகவினைகளாக்கல் என்பவை சூத்திரர் அறுதொழில். இவற்றுள் குயிலுவத்தொழிலெனப்படுவன - தோற்கருவிகளைக் கொட்டலும் துளைக்கருவிகளை யூதலுமாம்; காருகவினைகளாவன - பட்டு நூலையும், பருத்தி நூலையுங் கொண்டு ஆடையாக்கலும் சுமத்தலும் உழுத்தலுமாம். அரசன் காவாதவிடத்து அந்தணராதியோர் தந்தொழில் மறப்பர்; அவ்விதம் மறத்தலால் வைசிய சூத்திரர் பசுவினைப் போற்றார்; போற்றாராகவே பசு பால்கறவாது குன்றும்; குன்றியவிடத்து * அவியில்லாமையாலும், அவ்வவியைக் கொடுத்தற்குரிய அந்தணராதியர் மந்திரம் † கற்பம் என்பனவற்றை ஓதாமையாலும் யாகம் நடவாதாய; யாகம் நடவாதாகவே மேகம் மழைபொழிதலைச் செய்யாதாம்; மழைபெய்யாதாகவே தேவர்களுக்கும் இவ்வுலகத்திலே மக்களாற் செய்யப்படும் திருவிழாவும் பூசையும் நடவா; தானமும் தவமும் உளவாகா; எவ்வகை மேம்பாட்டினை யுடையவாக்கும் உலகியல் நடவாதென்பதாம்.

---

* அவி - நெய் முதலிய தேவருணவு.

† கற்பம் - வேதாங்கம் ஆறினுள் ஒன்று.

பொருளை விரும்பிக் குடிகளை வருத்தும் அரசன் பகைமை பற்றிக் கொலை செய்பவர்களினும் கொடியவனாவ * னென்பதும்; அமைச்சர் புரோகிதரோடாராய்த் தனித்து நின்று அச்சுறுத்திக் குடிகளிடத்து வரிப்பணமல்லாப் பொருள்வேண்டி நிற்கும் அரசன் வழிப்போகரை வாள்கொண்டு வெருட்டிப் பொருள் பறிக்கும் கள்வனை யொப்பானென்பதும்; தன்னாட்டிலே தோன்றும் தீமைகளை நாடோறும் ஆராய்ந்து அவ்வாராய்ச்சிக்குப் பொருந்தக் காரியஞ்செய்யாத அரசனது நாடு நாடோறுங் கெடுமென்பதும்; மேல் விளைவை எண்ணாமல் முறைதப்பச் செய்யும் அரசன் அச்செயலால் முன்னமே சம்பாதிக்கப்பட்ட பொருளையும் பின் அது சம்பாதித்தற்குக் காரணமாகிய குடிகளையும் ஒருசேர இழப்பானென்பதும்; அவன் முறைசெய்யாமையால் குடிகள் துன்பப்பட்டு அழுத கண்ணீரே அவனது செல்வத்தைத் தேய்க்குங் கருவியாகுமென்பதும்; செங்கோலே அரசனுக்குப் புகழெல்லை † யென்பதும்; தனக்குரிய பொருளோடமையாது மேலும் விரும்பி முறைதப்பி நடக்கும் அரசனது நாட்டிலே அடிக்கடி மழையின்மையைப் பொருளுடையதாகும்; ஆதலால், அந்நாட்டிலே வாழுங் குடிகளுக்கு அவ்வுடைமை வறுமையினுங் கொடிதென்பதும் முதலிய அறியத்தக்கவைகளாம்.

## ௫௭. வெருவந்தசெய்யாமை.

அஃதாவது குடிகள் அஞ்சுவதும், பகுதி என்று சொல்லப்படுகிற மந்திரி முதலாகிய அங்கங்கள் அஞ்சுவதும், தான் அஞ்சுவதும் ஆகிய தொழில்களைச் செய்யாமை. அவை செய்தல் கொடுங்கோன்மையிலே சேர்தலால், இஃது அதன்பின் வைக்கப்பட்டது.

---

* அவர் செய்வது ஒருபொழுதைத் துன்பமேயாக, இவன் செய்வது எப்பொழுதுந் துன்பமாதல்பற்றி இவன் அவரினுங் கொடியனாவான் என்றறிக.

† “இந்நிலத்து மன்னுதல் வேண்டின் இசைநடுக”

நான்மணிக்கடிகை.—

கடுஞ்சொல்லன் கண்ணிலனாயி னெடுஞ்செல்வம்
நீடின்றி யாங்கே கெடும். (௬)

(இ - ள்.) அரசன், கடுஞ்சொல்லன் - கடிய சொல்லையும் உடையவனாய், கண்ணிலன் ஆயின் - கண்ணோட்டமும் இல்லாதவனாயின், நெடுஞ்செல்வம் - அவனது பெரிய செல்வமானது, நீடின்றி - நீடுதலில்லாமல், ஆங்கே - அப்பொழுதே, கெடும், கெடும், எ - று.

வேட்டம் (வேட்டையாடுதல்), கடுஞ்சொல், மிகுதண்டம், சூது, பொருளீட்டம் (அநியாயமாய்ப் பிறர் பொருளை அபகரித்தல்), கள், காமம் எனப்பட்ட விதனங்கள் (வேதனைகள்) ஏழனுள் கடுஞ்சொல்லையும் மிகுதண்டத்தையும் இவர் இவ்வெருவந்த செய்தலுள் அடக்கினார். கண் என்பது கண்ணோட்டத்தை உணர்த்துதலால் கருவியாகுபெயர். கடுஞ் சொல்லும் மிகுதண்டமும் செய்த பொழுதே கெடுஞ்சிறுமைத்து அன்றாயினுமென்பார் 'நெடுஞ் செல்வம்' என்றார். நீடுதல் - நீடித்தல்.

ஒருவன் தன்னின் மெலியவனுக்குத் தீங்குசெய்தவிடத்து அதனை நடுவாய்நின்று ஆராய்ந்து, பின்னும் அப்படிப்பட்ட காரியம் செய்யாமற்பொருட்டு அவனை அக்குற்றத்திற்கொப்பத் தண்டிப்பவனே அரசனாவானென்பதும்; அவ்விதம் தண்டிக்கத் தொடங்கும்போது அளவிறப்பச் செய்வதுபோலக் காட்டி அளவு கடவாமற் செய்யும் அரசனிடத்துச் செல்வம் நீங்காது நிற்குமென்பதும்; குடிகளால் அஞ்சப்படுங் காரியங்களைச் செய்யும் அரசன் கடிதிற் கெடுவானென்பதும்; தன்னைக் காண வேண்டுவார்க்கு அரிதாகிய சமயத்தை யுடையனாய்க் கண்டால் இனிமையல்லாத முகத்தினை யுடையவனது செல்வம் பேய் கண்ட செல்வம்போல் ஒருவருக்கும் பயன்படாதொழியுமென்பதும்; கடுமொழியும கையிகந்த தண்டமும் அரசனது வலிமையை யழிக்குமென்பதும்; அரசன் அமைச்சருடன் ஆலோசியாது செய்தகாரியம் தவறியவிடத்து அவர்களைக் கோபிப்பானாகில், அவர்கள் அவனை அஞ்சி அகல, அதனால் அத்தவறு தீர்த்தலும் இராச்சியபாரம் இனிது செலுத்தலும் இயலாதவனாய் இறுதியை யடைவானென்பதும்; போர்வருதற்கு

முன்னே தனக்குக் காப்பிடமாவதோர் அரண்செய்து கொள்ளாத அரசன் போர்வந்த காலத்திலே காப்பில்லாமையாற் கெடுவா னென்பதும்; கொடுங்கோலரசன் தன்னேடிணங்கிக் கொடுந்தொழில் செய்தற்கு உடன்படும் நீதிநூல் கல்லாதவரையே மந்திரிகளாகச் சேர்த்துக்கொள்வா னென்பதும் இங்கு அறியத்தக்கவைகளாம்.

## ருஎ. கண்ணோட்டம்.

அஃதாவது தனேடு பழகினவரைக் கண்டால் அவராலே சொல்லப்பட்டவைகளை மறுக்கமாட்டாமை. இஃது அவர்மேற் கண் ஓடினவிடத்து நிகழ்வதாகலின் அப்பெயர் பெற்றது. இது தாட்சணியமென்றும் முகங்கொடுத்தலென்றும் சொல்லப்படும். முன்னதிகாரத்திலே சொல்லப்பட்டதையே சிறப்புப்பற்றி இதிலே விரித்துச் சொல்லுதலால் இஃது அதனைபின் வைக்கப்பட்டது.

பண்ணென்னும் பாடற் கியைபின்றேற் கண்ணென்னும்
கண்ணோட்ட மில்லாத கண். (ரு)

(இ - ள்.) பண் - இசையானது, பாடற்கு - பாடற்றொழிலோடு, இயைபின்றேல் - பொருத்தமில்லையாயின், என்னும் - என்ன பயனுடைத்தாகும், அதுபோல், கண் - கண்ணானது, கண்ணோட்டம் இல்லாதகண் - கண்ணோட்டமில்லாத விடத்து, என்னும் - என்ன பயனுடைத்தாகும், எ - று.

பண் கண் என்பன ஈறுதோன்றாத சாதியொருமைப்பெயர். பண்களாவன பாலையாழ் (வீணை) முதலிய நூற்று மூன்று. பாடற்றொழில்களாவன யாழினிடத்து வார்தல், வடித்தல், உந்தல், உறழ்தல், உருட்டல், தெருட்டல், அள்ளல், பட்டடை என்னும் எட்டும், பண்ணல், பரிவட்டணை, ஆராய்தல், தைவரல், செலவு, விளையாட்டு, கையூழ், குறும்போக்கு என்னும் எட்டும், கண்டத்தினிடத்து எடுத்தல் படுத்தல், நலிதல், கம்பிதம், குடிலம் என்னும் ஐந்தும், பெருவண்ணம், இடைவண்ணம், வனப்பு வண்ணமுதலிய வண்ணங்கள் எழுபத்தாறுமாம். இப்பாடற் றொழில்களுடன் பொருந்தாதவிடத்துப் பண்ணால் பயனில்லாத விதம்போலக் கண்

ணோட்டத்துடன் பொருந்தாதவிடத்துக் கண்ணால் பயனில்லையென்பதாம். தாட்சணியம் ஒருவர்மேல் கண்சென்றவிடத்து உண்டாவதாயிருத்தலால் அக்கண்ணைத் தாட்சணியத்திற்கு இடமாக்கினார். இறுதியிலுள்ள கண்ணென்பது 'கண்ணகன் ஞாலம்' என்புழிப்போல இடமென்னும் பொருளதாய் நின்றது.

கண்ணோட்டமென்று சொல்லப்படுகிற சிறப்புடைய அழகு அரசரிடத்தே உண்டாயிருக்கையாலேதான் உலகம் உண்டாகாநின்றதென்பதும்; உபகாரஞ்செய்தல், காப்பாற்றல், பிழைபொறுத்தல் என்று இவை முதலாய உலகநடையானது கண்ணோட்டத்தினிடத்தே நிகழ்வதாகுமென்பதும்; கண்ணோட்டமில்லாத கண்களால் பயனில்லையென்பதும்; அக்கண்ணோட்டமும் அளவுக்கு மிஞ்சினால் கெடுதியைப் பயக்குமென்பதும்; கண்ணோட்டமில்லாதவர் கண்ணுடையவரல்லரென்பதும்; அவர் மரப்பாவையையொப்பாவரென்பதும்; கண்ணுடையவர் கண்ணோட்டம் இலராதல் இல்லையென்பதும்; அரசர் முறைசெய்தலாகிய தமது தொழில் அழியாமல் கண்ணோட்டஞ் செய்யவேண்டு மென்பதும்; தம்மை வருத்துபவரிடத்தும் கண்ணோட்டமுடையவராகிக் குற்றத்தைப் பொறுத்தலே வேந்தர்க்குச் சிறந்த குணமாகுமென்பதும்; யாவராலும் விரும்பத்தக்க கண்ணோட்டத்தை விரும்புவோர் பழகினவர் தமக்கு நஞ்சிடக்கண்டு வைத்தும் கண் மறுக்க மாட்டாமையால் அதனையுண்டு பின்னும் அவரோடு பொருந்துவ* ரென்பதும் இங்கு அறியத்தக்கவைகளாம்.

## ௫௯. ஒற்றாடல்.

அஃதாவது பகைவர் அயலோர் நட்பினர் என்று மூன்று திறத்தாரிடத்தும் நிகழ்ந்தவை அறிதற்கு ஒற்றரை (வேவுகாரரை) ஆளுதல். முன்னே சொல்லிய இலக்கணமுடையவனாய அரசனுக்குத் தன்னாடு காக்கும்போதும் பிறர் நாடு பிடிக்கும்போதும்

* "முந்தை யிருந்து நட்டோர் கொடுப்பின், நஞ்சு முண்பர்
நனிநா கரிகர்" —நற்றிணை.

வேண்டுமவைகளைச் சொல்லத் தொடங்கினாராதலால் அவ்விரண்டு காரியங்களுக்கும் அவசியம் வேண்டுவதாகிய இது முன்னே வைக்கப்பட்டது.

ஒற்றும் உரைசான்ற நூலும் இவையிரண்டும்
தெற்றென்க மன்னவன் கண். (௧)

(இ-ள்) மன்னவன் - அரசன், ஒற்றும் - ஒற்றனையும், உரைசான்ற - புகழ்நிறைந்த நூலும் - நீதிநூலையும், இவையிரண்டும் - ஆகிய இவையிரண்டனையும், கண் - தன் இரண்டு கண்களுமாக, தெற்றென்க - தெளியக்கடவன், என்றவாறு.

ஒற்றனால் தன்னைச் சேர்ந்தோர் அல்லாதோர் எல்லாம் செய்கின்ற அந்தரங்க நடத்தையெல்லாம் அறிவித்தலாலும், நூலானது அந்தரங்கங்களுக்குத் தன் அறிவு செல்லமுடியாத தொழில்களையெல்லாஞ் சொல்லி அறிவித்தலாலும், இவ்விரண்டினையுமே தனக்கு ஊனக்கண்ணும் ஞானக்கண்ணுமாக நிச்சயித்துக்கொண்டு நடக்கக்கடவனென்பதாம். வேந்தனை வேந்து என்று பண்பாகுபெயரால் கூறுவது போன்று ஒற்றனை ஒற்று என்று தொழிலாகுபெயரால் கூறப்பட்டது. தெற்றென்க என்பது தெற்றென் என்னும் மறுதலைச்சொல்லடியாகப் பிறந்த வியங்கோள் வினைமுற்று. தெற்றென் என்பது பகுதியாதல் தெற்றெனல் என்னும் செயவென்னும் வினையெச்சத்தாலும் அறிக. இத்துறை ஒற்றினது சிறப்புச் சொல்லப்பட்டது. அவ்வொற்றனது இலக்கணங்களாவன — தங்காரியஞ் செய்வார் சுற்றத்தார் பகைவரென்று சொல்லப்பட்ட அனைவரையுஞ் சொல்லாலும் செயலாலும் ஆராய்தலும், ஒற்றப்பட்டார் கண்டால் அவர் சந்தேகிக்கப்படாத பார்ப்பார் வணிகர் முதலாயினோர் வடிவோடு பொருந்தி அவர் சந்தேகித்து அறியத் தொடங்கினால் கோபித்துப் பார்க்கின்ற அவர் கண்ணிற்கு அஞ்சாது நின்று சாம தான பேத தண்டமாகிய நான்கு பாயங்களும் செய்தாலும் மனதிலுள்ளவைகளை வெளிப்படுத்தாதிருத்தலும், முற்றத்துறந்தாராயும் விரதவொழுக்கினராயும் போகக் கூடாத விடங்களிலெல்லாம் போய் ஆராயவேண்டியவைகளையெல்லாம் ஆராய்ந்தறிந்து அவ்விடத்தோர் சந்தேகித்துப் பிடித்து எல

லாத துன்பமுழுதுஞ் செய்து கேட்டாலும் தன்னை வெளிப்படுத்தா திருத்தலும், ஒற்றப்பட்டார் மறையச்செய்த செயல்களை அவர்க் குள்ளாயினாரால் கேட்கவல்லனாய்க் கேட்டறிந்த செயல்களிற் பின் ஐயப்படாது துணியும் வல்லமையுடைத்தாயிருத்தலும்.

எல்லாரிடத்தும் நடப்பவைகள் எல்லாவற்றையும் தினந் தோறும் ஒற்றினாலே விரைந்தறிதல் அரசனுக்கு உரிய தொழி லாகுமென்பதும், அவ்விதஞ் செய்யாத அரசன் வெற்றியடையா னென்பதும்; ஒற்றாய்ச் சென்று வந்த ஒருவனை ஒற்றப்பட்டாரோடு கலந்து நின்று மாறுபடச் சொல்லுதலுங் கூடுமாகையால், அவன் மறைவாயறிந்துவந்து அறிவித்த காரியத்தையும் பின்னும் ஓரொற்ற னாலும் அறிந்துவரச் செய்து, ஒப்புமைகொண்டு கொள்ளவேண்டு மென்பதும்; ஒற்றரை ஆளுமிடத்து ஒருவனை மற்றொருவனை அறி யாதிருக்கும்படி ஆளவேண்டுமென்பதும்; அப்படி ஆளப்பட்ட மூவரை ஒருபொருண்மேல் வேறுவேறு விட்டால் அம்மூவரு டைய சொற்களும் பயனால் ஒத்திருக்குமாயின் அப்பொருள் மெய் யென்று தெளியப்படுமென்பதும், மறைந்தவைகளை அறிந்து சொல்லிய ஒற்றனிடத்துச் செய்யும் சிறப்பை அரசன் பிறரறியச் செய்யாதிருக்கக் கடவனென்பதும்; அப்படிச் செய்தானானால் சிறப்புப் பெற்ற இவன் யாரென்றும், இது பெறுதற்குக் காரணம் யாதென்றும் வினவுவாரும் பதில் சொல்வாரும் அயலாராதலால், தன்னுள்ளே அடக்கப்படும் இரகசியங்களைத் தானே வெளியிட்ட வனாவானென்பதும் இங்கு அறியத்தக்கவைகளாம்.

---

## ௬௰. ஊக்கமுடைமை.

அஃதாவது மனம் தளர்வில்லாமல் தொழில்செய்தலிலே எழுச்சியை உடைத்தாதலாம். ஒற்றால் நடந்தவை அறிந்து அவைகளுக்கு ஏற்றதொழில் செய்வோனுக்கு இஃது அவசியம் வேண்டுதலால், ஒற்றாடலின்பின் வைக்கப்பட்டது.

**உரமொருவற் குள்ள வெறுக்கை யஃதில்லார்**
**மரமக்க ளாதலே வேறு.** (௧௦)

(இ - ள்.) ஒருவற்கு - ஒருவனுக்கு, உரம் - திடமான அறிவானது, உள்ள வெறுக்கை - மனவெழுச்சியின் மிகுதியாம், அஃது - அம் மனவெழுச்சியை, இல்லார் - இல்லாதவர், மரம் - (மனிதரானார்) மரங்களாவார், வேறு - சாதிமரங்களோடு இம்மாங்களிடத்து வேற்றுமை வடிவு, மக்களாதலே - மனிதவடிவாயிருக்கையே, வேறில்லை, எ - று.

உரமென்பது அறிவாதல் நீத்தார்பெருமை யதிகாரத்திலே 'உரனென்னுந் தோட்டியா னோரைந்துங் காப்பான், வரனென்னும் வைப்புக்கோர் வித்து' என்னுங் குறளினுலுமறிக. [இதன் பொருள் - திடமான அறிவென்னும் அங்குசத்தினுலே பொறிகளாகிய யானைகள் ஐந்தையும் தத்தம் புலன்களின்மேற் செல்லாமற் காப்பவன் எல்லா நிலங்களிலும் மேலானதென்று சொல்லப்படுகிற முத்தி நிலத்துக்கு ஓர் வித்தாவான் என்றவாறு]. மரமென்பது சாதியொருமைப்பெயர். மனிதருக்கு இருக்கவேண்டிய நல்லறிவும் காரியமுயற்சியும் இல்லாமைபற்றி 'மரம்' என்றும், மரத்தில் உண்டாம் பயன இல்லாமைபற்றி 'மககளாதலே வேறு' என்றும் சொல்லினர். மரத்திற்குப் பயன பழமுதலானவையும், ஆலயம், வீடு, தேர், மரக்கலம் இவைகளுக்கு உறுப்பாதல் முதலானவையும் ஆம். ஊக்கத்தினுல் முயற்சியும், முயற்சியினுல் பொருளும், பொருளினுல் கொடை (வறியார்க்கு ஈதல்) யும், கொடையினுல் புகழும் உண்டாமாதலால் ஊக்கமில்லாதவர்க்குப் புகழில்லை எனபதும், மேலே புகழதிகாரத்திலே 'தோன்றிற் புகழொடு தோனறுக அஃதிலார், தோன்றலிற் றோன்றாமை நனறு' என்றதனுல் ஊக்கமில்லாதவர் மனிதராய்ப் பிறததலிலும் விலங்காய்ப் பிறத்தல் நன்று என்பதும் பெற்றும். இதனுல் ஊககமிலலாதாரது இழிவு கூறப்பட்டது.

• ஊக்கமில்லாதார் அவலூக்க மில்லாமையால் தாம் முன அடைந்து நின்ற பொருளைக் காககும் ஆற்றல் இலராகி இழப்பாராதலால், ஒருவரை உடையரெனறு சொல்லுதற்குச் சிறந்த காரணமாயிருப்பது ஊக்கமேயாகுமென்பதும் ; அவருக்கு அவலூக்கமுடைமையே நிலைபெற்ற உடைமையாகுமென்பதும் ; மற்றைப் பொருளுடைமை நிலைநில்லாது நீங்கிப்போமென்பதும் ; நிலைபெற்ற ஊக்

கத்தையுடையவர் கைப்பொருளை யிழந்தாராயினும் அதற்காக வருந்தாரென்பதும்; இங்ஙனம் முதலியவற்றால் தளராமைக்குக் காரணமாகிய ஊக்கத்தையுடையவனைச் செல்வம் தானே சென்றடையுமென்பதும்; நீர்ப்பூக்களின் தாள்கள் நீர் மிகுந்தமட்டும் நீளுவதுபோல மக்களும் தங்களது ஊக்கம் மிகுந்த அளவுக்கு உயர்வாரென்பதும்; முயற்சியுடையார் உயர்ச்சியடைதல் விதிவசத்தினாலே ஒருவேளை கூடாமற்போயினும், அவர் முயற்சியின்மேல் தளர்ச்சியில்லாமையால் இகழ்ச்சியடையாராகி, அப்போதும் புகழ்ச்சியையே யடைவரென்பதும்; யானையானது அம்புகளின்மேல் புண்பட்டவிடத்துந் தளராது தன் பெருமையை நிலைநிறுத்துவதுபோல், ஊக்கமுடையவர்களைப் பொருட்படுத்தாது முயன்று முடித்துத் தம் பெருமையை நிலைநிறுத்துவரென்பதும்; புலியைக்காட்டிலும் மிகுந்த உடல்வலிமையும் வெல்லுதற்குச் சிறந்த தந்தமும் உடையதாயினும் யானை ஊக்கமில்லாமையால் ஊக்கத்தினையுடைய அப்புலிக்கு அஞ்சுமாறுபோலப் பகைவரைக்காட்டிலும் மிகுந்த உடல்வலிமையும் வெல்லுதற்குச் சிறந்த ஆயுதமும் உடையவராயினும் அரசர் ஊக்கமிலராயின் அதனையுடைய அரசர்க்கு அஞ்சுவரென்பதும் இங்கு அறியத்தக்கவைகளாம்.

## ௬௧. மடியின்மை.

அஃதாவது நினைக்கப்பட்டவைகளைச் செய்யும்போது சோம்புதலில்லாமையாம். ஊக்கமுடையவர்க்கு ஒரோவிடத்தே குணவசத்தால் சோம்பல் வருதலைக் குறித்து, இஃது அதனபின் வைக்கப்பட்டது.

நெடுநீர் மறவி மடிதுயி னான்கும்
கெடுநீரார் காமக் கலன் (௫)

(இ - ள்.) மடி - சோம்பலும், நெடுநீர் - விரைவிற் செய்தற்குரியவைகளை நீட்டித்துச் செய்யுங் குணமும், மறவி - மறதியும், துயில் - தூக்கமும், நான்கும் - ஆகிய நான்கும், கெடுநீரார் - இறக்கும் இயல்பினையுடையவர், காமக்கலன் - விரும்பியேறும் மரக்கலமாம், எ - று.

மடி நெடுநீர் மறவி துயில் என்று முன்னிற்க வேண்டியதான மடியென்பது செய்யுளை நோக்கி 'நெடுநீர் மறவி மடி துயில்' என நடுவே நின்றது. நெடுமையாகிய காலப்பண்பு அக்காலத்தில் நடப்பதான தொழிலின்மேல் நின்றது. காலதாமதத்தையுடைய செயல், மறதி, துயில் என்னும் மூன்றும் தாமதகுணத்தில் உண்டாகி மடியுடன் நடப்பனவாதலால் மடியுடனொருங்குவைத்தெண்ணப்பட்டன இறக்கும் இயல்பு வாழ்நாள் கெடுதல் மடி முதலிய நான்கும் இன்புறுந்தன்மை யுடையவர்களுக்கு இன்பந் தருவன போலக் காண்பித்து அவர் விரும்பிக் கொண்டவிடத்துத் துன்பத்தில் தள்ளுதலால், வாழ்நாள்கெட்டவர்க்குச் செல்வத்தைத் தருவது போலக் காண்பித்து அவர் விரும்பியேறிய விடத்துக் கடலில் விழச்செய்யும் கப்பலையொக்கும் என்னும் உவமானக் குறிப்புக் காமக்கலன் என்னுஞ் சொல்லாற் பெறப்பட்டது. காமக்கலன் என்பதற்கு விரும்பத் தக்கும் ஆபரணமென்று பொருள் கூறுவாருமுண்டு [எப்படி மரக்கலம் மரணம் சமீபித்தவர்களுக்குப் பெருக்கந் தருவதுபோலத் தோன்றி அவர் விரும்பி ஏறியவிடத்துக் கடலிலே விழுத்துமோ, அப்படியே மடி முதலிய நான்கும் துன்பஞ் சமீபித்தவர்க்கு இன்பஞ் செய்வனவை போலத் தோன்றி அவர் விரும்பிக்கொண்ட விடத்துத் துன்பத்திலே விழுத்தும் என்பதாம்]

உலக நடையுள்ள வரைக்கும் இடையறாது மானுடப் பிறந்த வரை விளக்கும் குடியாகிய விளக்கானது ஒருவனது சோம்பலாகிய இருள் நெருங்க மழுங்கிக் கெடு* மென்பதும், அதனால் தாம

* "இல்லக விளக்கது இருள் கெடுப்பது" (அப்பர்தேவாரம்)
"பொருளென்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும்" (திருக்குறள்)
என்னும் கட்டுரைகளுக் கிணங்க எல்லா விளக்குகளும் இருளைக் கெடுப்பனவாயிருக்க, மடியென்னும் இருள் குடியென்னும் விளக்கைக் கெடுத்தலால், அவ்விருளின் வலிமை இத்தகைத்தென்பதை இங்கே குறித்துணர்க

பிறந்த குடியை மேன்மேலுயரும் நற்குடியாக வேண்டுபவர் சோம்பலைக் கெடுத்தொழுகக் கடவரென்பதும்; விடத்தகுவதாகிய சோம்பலைத் தன்னுள்ளே கொண்டொழுகும் அறிவில்லாதவன் பிறந்த குடியானது அவனினும் முற்பட அழியுமென்பதும்; சோம்பலிலே ஆசைப்படுதலால் திருந்திய முயற்சியில்லாதவராயினவர்க்கு குடி மடிதலோடு நெடுநீர் மறவி துயிலென்னும் குற்றங்களும் அதிகரிக்குமென்பதும்; சோம்பலுடையார் பெருஞ் செல்வம் பெற்றாராயினும் அதனாற் பயன் பெறாரென்பதும்; அன்னவர் நட்பாளர் முன் கண்டித்துப் புத்திசொல்லி அதனாற் பயன் காணாமையினாலே பின் இகழ்ந்து சொல்லும் சொல்லைக் கேட்பரென்பதும்; அரசனிடம் சோம்பலுண்டாயின் அஃது அவனைப் பகைவர்க்கு அடிமையாக்குமென்பதும்; ஒருவன் சோம்பலுடைமைக்கு ஏதுவாகிய தாமதகுணத்தை ஒழிப்பானாயின் அவனது குடியுள்ளும் ஆண்மையுள்ளும் அச்சோம்பலாலன்றி முன்னே வேறு காரணங்களாலுண்டான குற்றங்களும் அவனது முயற்சியினால் ஒழியுமென்பதும்; * தன் அடியளவினாலே எல்லா வுலகத்தையும் அளந்ததிருமால் தாவியளந்த சுவர்க்க மத்திய பாதாளமென்னும் மூன்று லோகத்தையும் சோம்பலில்லாத அரசன் ஆளப்பெறுவானென்பதும்; இல்வாழ்

---

† பலிச்சக்கரவர்த்தி யென்பவன் மண்ணுலகத்தோடு வானுலகத்தையும் வசப்படுத்திக்கொண்டு ஒரு பெரிய யாகத்தைச்செய்து தக்கார் தகவிலாரென்னும் தாரதம்மியமின்றித் தன்னை அடைந்தோர் அனைவருக்கும் அளவிறந்த தானத்தைக் கொடுத்துவரும் நாளில், திருமாலானவர் காசிப முனிவருக்கு அதிதியினிடம் அவதாரஞ்செய்து ஒரு குறுகிய வடிவுடன் வளர்ந்து அச்சக்கரவர்த்தியிடம் சென்று மூன்றடி மண் யாசித்துப்பெற்றுப் பிறகு மகத்தான ஒருருக்கொண்டு, மண்ணுலகத்தை ஓரடியாலும் வானுலகத்தை மற்றோரடியாலும் அளந்து, பிறிதோரடியை அப்பலியின் தலைமேல் வைத்து, அவனைப் பாதாள லோகத்திற்குச் செலுத்தினாரென்பது கதை.

வார்க்கு மட்டுமன்றி உலகப் பற்றினையொழித்து முத்தியை விரும்பி முயல்வார்க்கும் மடியின்மை இன்றியமையாததாகு* மென்பதும் இங்கு அறியத்தக்கவைகளாம்.

## கூஉ. ஆள்வினையுடைமை

அஃதாவது இடைவிடாத பெருமுயற்சியை உடையனாதல். அம் மெய்ம்முயற்சி காரியகாரணம் ஆதலால் வினையென அறியப்படுதலால் இது காரியமாகு மெய்யாகும். சோம்பலைக் கெடுத்தாலும் தொழிலை முயலாவிடில் ஆள்வினையுடைமையி னாலே, இது மடியின்மையின் பின் வைக்கப்பட்டது.

இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்
துன்பந் துடைத்தூன்றுந் தூண் (ரு)

(இ-ள்) இன்பம் விழையான் - தனக்கு இன்பத்தை விரும்பாதவனாகி, வினை விழைவான் - தொழில் முடித்தலையே விரும்புவோன், தன் கேளிர் - தன் சுற்றத்தாராகிய பாரமாகிய கேளிரது, துன்பம் - பாரத்தின் துன்பத்தை, துடைத்து - நீக்கி, ஊன்றும் - அதனைத் தாங்குவதாகிய, தூண் - தூணாம் என்றவாறு.

தன் கேளிரைத் தாங்குபவனைத் தூணென்று உருவகப்படுத்தி அதற்கேற்பக் கேளிரைப் பாரமென்று உருவகப்படுத்தாது விடுத்தமையால் இஃது ஏகதேசவுருவகமாயிற்று. கேளிரது வறுமையுந் தீர்த்து அவரைக் காத்தலுஞ் செய்ய வல்லவனென்னவே, தனக்கு அவை செய்துகொள்ளுதல் சொல்லவேண்டுவ தில்லையாயிற்று. காரியமாகிய இன்பத்தை விரும்பாமல் காரணமாகிய முயற்சியை விரும்புவோன் எல்லாப் பயனும் அடைவா னென்றதனால், காரணமாகிய முயற்சியை விரும்பாது காரியமாகிய இன்பத்தை

---

* மடிமையெனு மொன்றைமறந் தன்பின்மீற வென்னை
அடிமைகொள்ள வேண்டுமரசே பராபரமே.—**தாயுமானவர்.**

விரும்புவோன ஒருபயனும் அடையானென்பது பெறப்பட்டது. இதனால் முயற்சியுடையவனது நன்மை கூறப்பட்டது.

தமது சிறுமையை நோக்கி நாம் இத்தொழிலை முடித்தல் அருமையுடைத்தென்று நினைத்துத் தளராது முயற்சி செய்தால் அம்முயற்சியானது அவர்கு அவ்வரிய தொழிலை முடித்தற்கேற்ற பெருமையை உண்டாக்குமென்பதும்; மேற்கொண்ட காரியத்தை முற்றுப்பெறச் செய்யாது விட்டவரை உலகம் கைவிடுமென்பதும்; முயற்சியுடையவரே பிறர்க்கு உபகாரஞ்செய்ய வல்லவராவரென்பதும்; பேடியானவள் தன்கையிலுள்ள வாளால் பகைவரை வெட்டுதற்குக கருத்துடையவளாயினும் அஃது அவளச்சத்தால் முடியாதவிதம்போல, முயற்சியில்லாதவன் தனனிடத்துள்ள தேகபலத்தாலும் வேறு பொருள் முதலிய சாதனங்களாலும் பிறர்கு உபகாரஞ்செய்தற்குக கருத்துடையவனாயினும் அஃது அவன் முயற்சியின்மையால் முடியாதென்பதும்; முயற்சியுடையவனிடத்துச் சீதேவிசென்று தங்கிச் சகலசெல்வாக்கியம் வளர்ப்பாளென்பதும்; சோம்பலுடையவனிடத்து மூதேவி சென்று வறுமையை அடைவிப்பாளென்பதும; பயனைத் தருவதாகிய விதியில்லாமை ஒருவற்கும பழியாகாதாக, அறியவேண்டுமவற்றை அறிந்து தொழில்செய்யாமையே பழியாகுமென்பதும்; முயற்சித்துச்செய்த தொழில் ஊழ்வகையால் நினைக்கப்பட்ட பயனைத தாராதாயினும், முயற்சியானது உடம்பு வருந்திய வருத்தத்தின அளவுக்குத் தக்க பயனைத் தருமென்பதும்; பயனை விலக்குவதாகிய ஊழையும், அவ்விலக்கிற்கு இளையாமல் முயல்பவர், விலக்குவரென்பதும் இங்கு அறியத் தக்கவைகளாம்.

## ௬௩. இடுக்கணழியாமை.

அஃதாவது தொழிலிலே முயல்பவனை ஊழினாலாவது, பொருளில்லாமையினாலாவது, மெய்வருத்தத்தாலாவது தனக்குத் துன்பம் வந்தவிடத்து, அதற்கு மனங்கலங்காமை. அதிகார முறைமையும் இதனாலே விளங்கும்.

மடுத்தவா யெல்லாம் பகடன்னா னுற்ற
இடுக்க ணிடர்ப்பா டுடைத்து. (௪)

(இ - ள்.) மடுத்தவாயெல்லாம் - தடைபட்ட விடங்களெல்லாவற்றிலும், பகடன்னானை - வண்டியை இழுத்துச் செல்லுங் கடாப்போலே தொழிலை மேற்கொண்டு செலுத்தவல்லவனை, உற்ற - வந்தடைந்த, இடுக்கண் - துன்பமானது, இடர்ப்பாடு - தானே இடர்ப்படுதலை, உடைத்து - உடையதாம், எ - று.

மடுத்தவாயெல்லாமென்பது வண்டியை யிழுத்துச் செல்லும் கடாவிற்கும் தொழிலை மேற்கொண்டு செலுத்துகின்றவனுக்கும் பொதுவாக நின்றமையினாலே, வண்டிக்குச் சேற்று நிலம், மணல் நிலம், களர் நிலம், மேட்டுநிலம் முதலியனவாகவும் தொழிலுக்குத் தடைகளாகவும் கொள்க. தடைநேரிட்டபோது கடாவானது பக்கங்களில் உராய்ந்தும் நிலத்தில் மூக்கை ஊன்றியும் கால்களை மடக்கி வைத்துத் தவழ்ந்தும் அரிதாக வண்டியை இழுக்குமவிதம்போலத் தொழிலை மேற்கொண்டவன் தடை நேரிட்டபோது சரீரப் பிரயாசையை நோக்காமல் முயற்சிசெய்து அதனைச் செலுத்துவானென்பார் 'பகடன்னான்' என்றார். இதனால் உண்மையறிவுடைய ஒருவன் வினையினாலே தனக்கு இன்பதுன்பங்கள் நேர்ந்தவிடத்து அவைதாமும் உயிர்க்கு இயல்பன்றிக் கணப்பொழுது நிற்பதாய் ஊனத்தினிடத்தே உண்டாகும் கோட்பாடுகளாகலின் அவ்வின்பத்தை விரும்பாதவனாகி, தன்னுடம்பு துன்பத்திற்கு உறைவிடமாயிருத்தலையும் வினையால் துன்பமடைதல் இயல்பாதலையும் உள்ளபடி உணர்ந்து அத்துன்பத்திற்கு அழியாமல் மனமகிழ்ச்சியுடையவனாகி அதனாலே தொடங்கிய தொழிலை நன்கு முடிப்பானென்பது பெறப்படும்.

தொழில் செய்பவன் அத்தொழில் முடிவிற்குநடுவே துன்பம் வரும்பட்சத்து அத்துன்பத்திற்குத் தளர்ச்சியடையாமல் அத்தொழில் நன்றாக முடிந்தவிடத்தே உண்டாகுந் தன்மையதான மகிழ்ச்சியை உட்கொண்டானெனில் அவன் மனவெழுச்சியால் அத்துன்பத்தினைத் தள்ளி அத்தொழிலைச் செவ்வனே முடிக்கும் வல்லமையுடையவனாவானென்பதும் எத்துணைப் பெரியதுன்பம் நேரிட்டவிடத்தும் அதற்கு மாறுபட்டெழுவனை நினைக்க அத்துன்பம் தானே கெடுமென்பதும், பொருள் போனபோது அதனாலவரும் துன்பத்தைத் தானொருவன் தனிப்பட அனுபவியாது, அதுபொழுது பிறருடன் கலந்து அனுபவிக்கும் ஒருவன் தெய்வீகமாய் வறுமையுறவரின் முன் அவனால் உதவப்பட்டவர்கள் அவனை விட்டு நீங்காமல் உதவுவாராதலால், அவன் அவ்வறுமைத் துன்பத்தை அடையானென்பதும், நல்வினையால் தனக்கு இன்பம் வந்தவிடத்து அவ்வின்பத்தை அனுபவிக்கக் கொண்டிட மனத்தால் விரும்பாதவன், தீவினையின் பயனாகத் தனக்குத் துன்பம் வந்தவிடத்தும் அத்துன்பத்தை அனுபவித்துக்கொண்டு மனத்தால் வருந்தானென்பதும், தொழில் செய்யுமிடத்து முயற்சியால் வரும் துன்பத்தையே தனக்கு இன்பமாகக் கருதிக்கொள்பவன் தன் நட்பினரால் மட்டுமேயன்றிப் பகைவராலும் நன்கு மதிக்கப்படுவானென்பதும் இங்கு அறியத் தக்கவைகளாம்.

அரசியல் முற்றிற்று

# அங்கவியல்.

இனி முறையானே அரசியலை நடத்துதலிலே ஒன்றற்கொன்று துணையாகிய அங்கங்கள் ஆறனது இயல்பை முப்பத்திரண்டு அதிகாரங்களாலே சொல்லத்தொடங்கி, அவ்வங்கங்கள் ஆறனுள்ளும் ஆஞ்ஞாசக்கரத்தைச் செலுத்துதலிலே அவ்வரசனுக்குச் சமானமாகிய அமைச்சனது இயல்பு பத்து அதிகாரங்களினாலே சொல்லத்தொடங்கி, முதலிலே அமைச்சுச் சொல்லுகின்றார்.

## ௬௪. அமைச்சு.

அஃதாவது மந்திரியினது இயல்பு. அவ்வியல்பு அவன குணங்களும் செயற்கைகளும் ஆம்.

மதிநுட்ப நூலோ டுடையார்க் கதிநுட்பம்
யாவுள முன்னிற் பவை. (௧)

(இ-ள்) மதிநுட்பம் - இயற்கையாகிய நுண்ணறிவை, நூலோடு - செயற்கையாகிய நூலறிவோடு, உடையார்க்கு - உடையராய மந்திரிகளுக்கு, அதிநுட்பம் - அதிக நுட்பத்தையுடைய ஆலோசனைகளாய், முன்னிற்பவை - முன்னிற்பன, யாவுள - எவையுள, எ-று.

நுட்பமதி என்பது மதிநுட்பமென்று வந்து பின்மொழியாற் பொருள் சிறந்து நிற்றலால் அது பின்மொழிநிலையல். அம்மதி நுட்பம் ஊழ் தரவேண்டியதாதலால் முன்னே கூறப்பட்டது. நூல் என்பது நூலினுண்டாகும் அறிவையும் அதிநுட்பமென்பது அதிக நுட்பத்தையுடைய ஆலோசனையையும் உணர்த்துதலால் முறையே கருவியாகுபெயரும் பண்பாகுபெயருமாய் நின்றன. அதிநுட்பமென்பதிலுள்ள அதி யென்பது வடமொழியில் மிகுதிப்பொருளை யுணர்த்துவதோ ரிடைச்சொல்; அது தற்சமமாய் நுட்பமென்பதனோடு தொடர்ந்து நின்றது. முன்னிற்றல்

பகைவரது ஆலோசனைகளைத் தமது ஆலோசனையால் அழியாது நிற்றல். இனி அதிநுட்பமென்பதனை அதினுட்பமென்று பாடங் கூறி, அதற்கு அதனின் நுட்பம் எவையென்று பொருள் கூறுவாருமுளர், அவ்வாறு கூறுபவர் ஆலோசனைக்கு இனமாய் முன்னே சுட்டப்படுவதொன் றில்லாமையையும், அது இது முதலிய சுட்டுப்பெயர்கள் இன் என்னும் ஐந்தாம் வேற்றுமையுருபு ஏற்றவிடத்து இன் சாரியை பெற்று அதனின் இதனின் என்று நிற்பதன்றி அதின் இதின் என்று நில்லாமையையும் அறிந்திலர். பகைவர் ஆலோசிப்பனவற்றைத் தாம் அறிந்து அழித்து அப்பகைவரறிந்து அழிக்காதனவற்றைத் தாம் ஆலோசிப்பரென்பது கருத்து. இதனால் அமாத்தியர் சிறப்புச் சொல்லப்பட்டது. மதிநுட்பம் இயற்கையறிவும் நூலறிவு செயற்கையறிவும் ஆம்.

மதிநுட்பமும் நூலறிவும் உடைய ஒருவன் தொழில்செய்யும்போது அதற்கு வேண்டும் சாதனங்களும், அதற்கு ஏற்ற காலமும் அதுசெய்யும் விதமும் அவ்விதத்திலே செய்யப்படும் அவ்வரிய தொழில்களும் பொருந்த எண்ண வல்லனாயிருப்பதுடன், அத்தொழிலைச் செய்தலிலே சோம்பலில்லாதவனுடைய முயற்சியுடையவனையும் விக்கி விலக்குகளை உலகவியற்கைபோக்கு அறிந்தவனையும், ஒரு காரியத்தைச் செய்தல் பலவிதமாகத் தோன்றினால் அவற்றுள் ஆவதை ஆராய்ந்து செய்தலிலும், அது செய்யும்போது பலிக்கும் விதம் ஆராய்ந்து செய்தலிலும், சிலரைப் பிரித்தல் பொருத்தல் செய்தலிலே அவர்க்கு இதுவே செய்யத்தக்கதென்று துணிவு பிறக்கும் வகை சொல்லுதலிலும் வல்லவனாயிருப்பானென்பதும், அரசன் அறிந்து சொல்லியவாது உறுதிமொழிகளை மனத்திற் கொள்ளாமல் மேலும் அவனை இழிவுபடுத்திப் பேசித் தானும் அறியானேயாயினும், அக்குற்றம் நோக்கி அவனைக் கைவிடாமல் அவனுக்கு உறுதியானவைகளைச் சொல்லுதல் மந்திரியினது முறைமையாகு மென்பதும், அரசன் தனக்கு அறியாமையாற் செய்த குற்றம் நோக்கி அவனுக்குத் தீங்குசெய்ய நினைக்கும் மந்திரி அவனுக்கு எழுபதுகோடி பகைவரிலும் கொடியவனாவனென்பதும்; செய்யப்படும் தொழில்களை முடித்தற்கேற்ற கூறுபாடில்லாதவர் அவைகளை முன்னே அமைவுபட ஆலோசித்திருந்தும், செய்

யும்போது அவை முடிவில்லவாகவே செய்யாநிற்பரென்பதும் இங்கு அறியத்தக்கவைகளாம்.

## சுரு. சொல்வன்மை.

அஃதாவது தான் நினைத்த தொழில் முடியும் வழியால் மந்திரியினது தன்மை நடத்தற்குக் காரணமான சொற்களைச் சொல்ல வல்லவனாகுதல். முன்னதிகாரத்தில் "தெரிதலுந் தேர்ந்து செயலு மொருதலையாச், சொல்லலும் வல்ல தமைச்சு" என்னுந் திருக்குறளில் 'ஒரு தலையாச் சொல்லலும் வல்லது' என்றதையே சிறப்புப் பற்றி விரித்துச் சொல்லுதலால், இஃது அதன்பின் வைக்கப் பட்டது.

கேட்டார்ப் பிணிக்குந் தகைபவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல். (க)

(இ - ள்.) கேட்டார் - நட்பாய் வந்துகொண்டவரை, பிணிக்கும் - பின் வேறுபடாமற் கட்டும், தகை - குணங்களை, அவாய் - விரும்பி, கேளாரும் - மற்றைப் பகையாய் ஏற்றுக்கொள்ளாதவரும், வேட்ப - பின் அப்பகையை யொழிந்து நட்பினை விரும்பும்வண்ணம், மொழிவது - சொல்லப்படுவது, சொல்லாம் - மந்திரிகளுக் குச் சொல்லாவது, எ - று.

அக்குணங்களாவன வழுவில்லாமை, சொற்சுருங்குதல், பொருள் விளங்குதல், இனிதாதல், மேலானபயனைத் தருதல், முறையின் வைப்பு, உலகம் மலையாமை, உதாரண முடையதாதல், ஓசையுடைமை, ஆழ்ந்த கருத்துடைமை என்பனவாம். அவைகளை அவாவுதலாவது அச்சொல் சொல்லுவான குறித்த பொருளையே யன்றி வேறு பதிநுட்ப முடையவராலே கொள்ளப்பட்ட பொருள்களின் மேலும் கருத்துடையதாதல். அவாய் என்னும் செய்தெனெச்சம் மொழிவது என்னும் செயப்பாட்டுவினை கொண்டது. இனிக் கேட்டார் கேளாதார் என்பதற்கு நூல் கேட்டார் கேளாதார் எனவும் வினவினர் வினவாதார் எனவும் பொருள்

உரைப்பாரும் உளர். தகையவாய் என்பதற்குத் தகுதியையுடையவாய் என்று பொருளுரைத்தல் பொருந்தாது; தகைய என்னும் பன்மை மொழிவது என்னும் ஒருமையோடு பொருந்தாமையால். இதனால் சொல்வினது இலக்கணம் சொல்லப்பட்டது.

மேலே கூறியபடி நட்பாய் ஏற்றுக்கொண்டவரைப் பின் வேறுபடாமற் பிணிப்பதோடு பகையாய் ஏற்றுக் கொள்ளாதவரையும் விரும்பச் செய்வதாயுமுள்ள சொல்லை அமைச்சர் தம்முடையவும் கேட்பாருடையவுமான குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக்கம், செல்வம் உருவம், பருவம் என்பவைகளால் வரும் தகுதி வேறுபாடுகளையும், அவைகளாலே தமக்கும் அவர்களுக்கும் உண்டாகிய உயர்வு தாழ்வுகளையும் அறிந்து, அவரவர்க்குத் தகுந்த மரபினாலே சொல்ல வேண்டுமென்பதும்; அப்படிச் சொல்லுதல் உயர்ந்தோர் நடையோடு பொருந்த நடத்தலையும் இனிமையையும் தருதலாலும் தமது காரிய முடித்தலினாலும் அதைவிடச் சிறந்த அறமும் பொருளும் வேறில்லையென்பதும்; தாம் சொல்லக் கருதிய சொல்லைப் பிறரால் மறுக்கப்படாதபடி ஆராய்ந்து சொல்லவேண்டுமென்பதும்; பிறர்க்குத் தாம் சொல்லுமிடத்து அவர் பின்னும் கேட்டலை விரும்பும்படி சொல்லி, அவர் தமக்குச் சொல்லுமிடத்து அச்சொற்களிலே குற்றமுளவாயினும் அவை நோக்கி இகழாது அச்சொற்களின் பயனைக் கொண்டுவிடுதல் அறிவுடையாரது செய்கையாகுமென்பதும்; தாம் எண்ணிய காரியங்களை அவை காரியமல்லாதவையா யிருந்தாலும் ஆமென்று நம்பும்படி பிறர்க்குச் சொல்லுதல் வல்லவனாகி, அவை மிகவும் பலவானவிடத்தே ஒன்றினும் சோர்வில்லாதவனாகிச் சபைக்கு அஞ்சாதவனைப் பேச்சில் பிறர் வெல்லுதல் முடியாதென்பதும்; சொல்லப்படுங் காரியங்களை ஒழுங்குபடக் கோத்து இனிதாகச் சொல்லுவாரது வார்த்தையை உலகம் விரைந்து ஏற்றுக்கொள்ளுமென்பதும்; குற்றமற்றனவாய்ச்சிலவாகிய வார்த்தைகளை முன்னே சொல்ல வேண்டியவையும் பின்னே சொல்ல வேண்டியவையும் அறிந்து சொல்லமாட்டாதவர் பலவாகிய வார்த்தைகளைத் தொடுத்துச் சொல்ல விரும்புவரென்பதும்; தாம் கற்றுவைத்த நூல்களின் பொருளைப் பிறர்

அறியும்வண்ணம் விரித்துரைக்க மாட்டாதவர் கொத்தினிடத்தே மலர்ந்திருந்தும் மணக்காத பூப்போல்வரென்பதும் இங்கு அறியத் தக்கவைகளாம்,

இஃதாவது செய்யப்படுந் தொழில்கள் பொருளை மாத்திரமல்லாமல் அறமும் புகழுந் தந்து நல்லவையாதல். சொல்லேயல்லாமல் செயலும் நன்றாகவேண்டுமென்கின்றமையால், இது சொல்வன்மையின்பின் வைக்கப்பட்டது.

எற்றென் றிரங்குவ செய்யற்க செய்வானேல்
மற்றன்ன செய்யாமை நன்று. (௫)

(இ - ள்) எற்றென்று - நான் செய்தது எப்படிப்பட்டதென்று, இரங்குவ - பின் தானே இரங்குந் தொழில்களை, செய்யற்க - ஒருகாலுஞ் செய்யாதிருக்கக் கடவன், செய்வானேல் - அல்லாமல் ஒருகால் மயங்கி அவைகளைச் செய்யுந் தன்மையனேயினனாயின, மற்று - பின்னிருந்து, அன்ன - அவ்விரங்கல்களை, செய்யாமை - செய்யாதொழிதல், நன்று - நல்லது, எ - று.

'இரங்குவ' என முன்னே வந்தமையினாலே பின்னே இரங்குவ எனக் கூறாது, அதனை 'அன்ன' எனச் சுட்டியொழிந்தார். அவ்விரங்கும் தொழில்களது பன்மையால், தொழில்கள் பாறிப்புண்டாம் இரக்கமும் பலவாயின. இரங்குந் தொழில்களைச் செய்துவிட்டு அச்செயலுக்காகப் பின்னிருந்து இரங்குவானாயின், அது தீரும்வழி அறிந்திலனென்றும், தைரியமில்லாதவனென்றும், பயனில்லாதவைகளைச் செய்கின்றானென்றும், தன் பழியைத் தானே தூற்றுகின்றானென்றும் எல்லாரும் இகழுவாராதலால் பின்பு இரங்காமை நன்று என்றார். இரங்காமையும் நல்லதொழில் செய்வோர் செயலாதலால் உடன் சொல்லப்பட்டது.

ஒருவனுக்குத் துணையினது நன்மை செல்வம் ஒன்றைமட்டுமே கொடுப்பதாயிருக்கத் தொழிலினது நன்மை இம்மையில்

அறம், பொருள், இன்பம், புகழ், ஒளி, செல்வாக்கு முதலியவை களையும், மறுமையில் தான் விரும்பிய பதவிகளையும் கொடுக்குமென்பதும்; புகழ் அறம் முதலியன பயவாத தொழில்களை ஒரு காலத்தும் செய்யக்கூடாதென்பதும், தெளிந்த அறிவினையுடையவர் சிறிது பொழுதிலே நீங்குவதாகிய துன்பத்தை நோக்கி எப்போதும் நீங்காத இழிவு அடையுந் தன்மையதன்றென்பதையும், அவ்விழிவை அடைந்தாலும் வருவதாயுள்ள அத்துன்பமானது வந்தே தீருமென்பதையும் அறிவாராதலால், அவர் தாம் இத்தகைய துன்பத்திலே படவரினும் அது தீர்தற்பொருட்டு இழிவான தொழிலைச் செய்யமாட்டாரென்பதும்; ஒருவன் தன்னைப் பெற்ற தாயினது பசியை வறுமையால் கண்டிருக்குந் தன்மையனாயினும் அதனைக் குறித்து இழி தொழிலைச் செய்யாதிருத்தல் வேண்டுமென்பதும், நிலையாத செல்வத்தின் பொருட்டு நிலையுள்ள பழியை அறிவுடையார் மேற்கொள்ளாரென்பதும், அறிவிலார் தீய தொழில்களைச் செய்து அதனாற் பழிப்பைக் காம்மாக் கொண்டு பெறும் செல்வத்தைக் காட்டிலும், அறிவுடையார் அப்பழியை மேற்கொள்ளாது அநுபவிக்கும் வறுமையே உயர்ந்ததென்பதும், பெரியோர் விலக்கிய தொழில்களைத் தாமும் விலக்காது, பொருளைக் குறித்துச் செய்தவர்க்கு அத்தொழில்கள் தாமவையல்லாமையால் முடியாமலென்பதும், அவை ஒருவழியால் முடிந்தாலும் பின் துன்பத்தையே தருமென்பதும், ஒருவன் தீய தொழில்களைச் செய்து பிறரை அழச்செய்து கொண்ட பொருளெல்லாம் இம்மையிலே அவனை அழச்செய்து போகுமென்பதும், நல்ல தொழிலால் வந்த பொருள்கள் முன் இழந்தானாயினும் பின் வந்து பயன்கொடுக்குமென்பதும், கின்பண்டம் வைக்கப்பட்ட பசுமண்பாண்டத்திலே வார்த்த தண்ணீர் அப்பாண்டத்தையும் அதனிடத்துள்ள பண்டத்தையும் அழித்துத் தானும் வீணாய்ப் போவதுபோல், ஒருவனுக்குத் தீய தொழிலால் வந்த பொருளானது அவனையும் அவனிடமுள்ள வேறு பொருளையும் அழித்துத் தானும் அழியுமென்பதும் இங்கு அறியத்தக்கவைகளாம்.

## ௬எ. வினைத்திட்பம்.

அஃதாவது அப்பரிகாரமாகிய தொழிலை முடிப்பவனுக்கு வேண்டுவதாகிய மனவலிமையாம். அதிகார முறைமையும் இதனுலே விளங்கும்.

> ஊறொரா லுற்றபி னொல்காமை யிவ்விரண்டின்
> ஆறென்ப ராய்ந்தவர் கோள். (உ)

(இ-ள்.) ஆய்ந்தவர் - முன்பு நீதிநூலை ஆராய்ந்த மந்திரிகளது, கோள் - துணிபு, ஊறு - பழுதுபடுந் தொழில்களை, ஒரால் - செய்யாமையும், உற்றபின் - செய்யுந்தொழில் ஊழினுலே பழுதுபட்டவிடத்து, ஒல்காமை - அதற்குத் தளராமையும் ஆகிய, இவ்விரண்டின - இவ்விரண்டினது, ஆறு - வழியாகும், என்பர் - என்று நூலோர் சொல்லுவர், எ - று.

தேவர்க்கும் அசுரர்க்கும் மந்திரியாயிருக்குந் தன்மையை மேற்கொண்ட வியாழ வெள்ளிகளது துணிவைத் தொகுத்துப் பின்னே நீதிநூலுடையோர் சொல்லியபடி சொல்லுகின்றமையால், இங்கே வினைத்தூய்மையும் உடன் சொல்லினுர். பழுதுறதலையுடைய தனை முன்னே 'ஊறு' என்று கூறினதனுல் 'உற்றபின்' என்றும், வினைத்தூய்மையும் வினைத்திட்பமுமாகிய இவ்விரண்டினிடத்தே பொருந்தியதென்பார் 'இரண்டினாறு' என்றும் சொல்லினுர்.

செய்யப்படுந் தொழிலை முடிவிலே வெளிப்படும்படி அதற்கு முனனெல்லாம் *மறைத்துச் செய்வதே திட்பமாகுமென்பதும்; அவ்விதமல்லாமல் நடுவிலே வெளிப்படுமாயின் அது செய்தவனுக்கு †நீங்காத துன்பத்தைக் கொடுக்குமென்பதும்; யாம் இத்தொழிலை இவ்விதத்தாலே செய்வோமென்று ஒழுங்குபடச் சொல்லுதல்

---

* மறைத்துச் செய்தலாவது நாடு, அரண், பொருள், படை, நட்பென்னும் அங்கங்களினதையும் பற்றித் தான் யோசிக்கும் வகையைப் பிறர் அறியாமலும், தான் அறிந்ததும், தன்னிங்கிதம், வடிவு, செயல், சொற்களால் அவர் ஆலோசித்து அறியாதிருக்கவும் அடக்கிச் செய்தல்.

† நீங்காத துன்பங்களாவன - பகைவர் முனனறிந்து அத்தொழிலை விலக்குதலும், செய்வானை விலக்குதலும் செய்வாராதலால், அவ்விலக்குதல்களால் வருவன.

யாவர்க்கும் எளிதாகுமெனபதும்; அதனை அச்சொல்லிய விதத்தாற் செய்தல் யாவர்க்கும் அரிதாகுமெனபதும்; ஒரு பொருளை அடைய எண்ணியவர் அப்பொருளை அடைதற்கு வழியாகிய தொழிலினிடத்து வலிமையுடையவராகப் பெற்றால், அப்பொருளை அவரெண்ணியபடியே அடைவரெனபதும்; தேரினது அச்சாணி வடிவாற் சிறிதாயிருந்தே பெரிய பாரத்தைக்கொண்டு செலுத்துகிற வல்லமையை உடைத்தாயிருத்தல்போல வடிவாற் சிறியராயிருந்தே பெரிய தொழில்களைக்கொண்டு செலுத்துகிற வலிமையுடையவரும் உலகில் உளராதலால், அவரை வடிவினது சிறுமைநோக்கி இகழாது அவரது வலிமைநோக்கி அறிந்துகொள்ள வேண்டுமெனபதும்; மனந்தெளிந்து செய்யத்துணிந்த தொழிலினிடத்துப் பின் அசைதலில்லாமல் * ஆலசியத்தை யொழித்துச் செய்யவேண்டு மெனபதும்; முதலிலே மெய்ம்முயாசிப்பிருமேல தமக்குத் துன்பம் மிக வருமாயினும் அதனை நோக்காது முடிவிலே இன்பம் பயக்கும் தொழிலைத் துணிந்து செய்தல் வேண்டுமெனபதும்; மனத்தினிடத்திலே வலிமையில்லாதார்க்கு மற்ற வலிமையெல்லாம் இருப்பினும் தொழில் முடியாதெனபதும் இங்கு அறியத்தக்கவைகளாம்.

## ௬௮. வினைசெயல்வகை.

அஃதாவது அவ்வலிமையினையுடைய அமைச்சரானவர் அத் வ செய்யுந் திறமாம். அதிகார முறைமையும் இதனாலே விளங்கும்,

ஒல்லும்வா யெல்லாம் வினைநன்றே யொல்லாக்கால்
செல்லும்வாய் நோக்கிச் செயல். (௩)

(இ - ள்.) தொழில் செய்யும்போது, ஒல்லும்வாயெல்லாம் - கூடுமிடத்தெல்லாம், வினை - தண்டஞ்செய்தல், நன்று - நல்லதாகும்; ஒல்லாக்கால் - அது கூடாதவிடத்து, செல்லும் வாய்நோக்கி-

* ஆலசியம் - செய்யலாமென்று நிச்சயிக்கப்பட்ட தொழிலைச் செய்ய வேண்டுங் காலத்தில் செய்யாது சோர்ந்திருத்தல்.

மற்றை மூன்றுபாயங்களினுள்ளும் அதற்கு முடிவதோருபாயம் நோக்கி, செயல் - செய்யக்கடவர் என்றவாறு.

கூடுமிடம் - பகைவனின் தான் வலியனாகிய காலம். பகைவனினும் தான் வலியனாகிய காலத்தில் தண்டமே நன்று என்று கூறினார், பகைவர் பயப்படுத்து அத்தண்டத்திற்கேயாதலால். கூடாதவிடம் - பகைவனின் மெலிந்து தானொத்துள்ள காலமும் இளைத்துள்ள காலமுமாம். அவ்வொத்தகாலத்தும் இளைத்த காலத்தும் சாமம் பேதம் தானம் என்னும் உபாயங்களில் அதற்கேற்றதில் முடியும் உபாயத்தால் செய்க என்று கூறினார், அச்சாமம் முதலியவை ஒன்றற்கொன்று மேலாம் தன்மையுடையனவாயிருப்பினும் சமஞ்செய்யப் பிரயோசனத்தால் தம்முள் ஒக்கிருத்தலால். இதனால் வலியான் ஒப்பான் மெலியான் என்று நிலை மூவகைப்படுமென்பதும், அவற்றுள் செய்யும் உபாயமும் கூறப்பட்டன.

ஆலோசனைக்கு எல்லையாகத் ஆலோசிப்பவன் துணிவு தப்பாதென்னும் துணிவுடைமை கரியாகுமென்பதும், அதற்குத் துணிவுபெறாதவை ஆலோசிக்கவேண்டுமென்பதும், அப்படித் துணிவுபெற்ற தொழில் பிரயோசனத்திற்குக் காலதாமதமில்லாத நேரத்தையுடையதாகுமென்றும், விரைந்து செய்யப்படவேண்டிய தொழிலை விரைந்தும் தாமதித்துச் செய்யப்படவேண்டிய தொழிலைத் தாமதித்தும் செய்தல்வேண்டுமென்பதும், வினைகளையும் பகைகளையும் தீயினைப் போலக் குறைபோகாத தன்மையுடையனவாதலின் மிகுந்து கெடுக்குமென்பதும், ஒருவன் தொழில் செய்யுமிடத்து அழியும் பொருளும் ஆகும் பொருளும் தன் வலியும் பகைவர் வலியும் தனக்கு ஆங்காலமும் அவர்க்கு ஆங்காலமும் தான் வல்ல தொழிலும் அவர் வல்ல தொழிலும் தான் வெல்லுமிடமும் அவர் வெல்லுமிடமும் ஆகிய இவைகளை மயக்கமற ஆலோசித்துச் செய்தல்வேண்டுமென்பதும்; தொழில் செய்யுமிடத்து அது முடிதற்குள்ளாகிய முயற்சியையும் அதற்கு வரும் இடையூறுகளையும் அவ்விடையூறு நீங்கி முடிந்தால் தான் அடையும் பெரும்பயனையும் சீர்தூக்கிச் செய்தல்வேண்டுமென்பதும், அவ்வாறன்றிச் செய்யப்படும் தொழிலைச் செய்யத் தொடங்கினவன் அத்தொழிலை முன்செய்து கைவந்தவனது கருத்து

தினை யறிந்து தானும் அவ்வுபாயத்தினாலே செய்து பயனை அடைவானென்பதும்; மதங்கொண்ட யானையினாலே அப்படிப் பட்ட பிறிதுமோர் யானையைக் கட்டுதல்போல், தொடங்கிய தொழிலினாலே வேறுமொரு தொழிலை முடித்தற்கு உபாயமாகும் விதத்தை எண்ணிச்செய்தல் வேண்டுமென்பதும்; அப்படிச் செய் யவே அந்தக்கிரமத்தினால் எல்லாத் தொழிலும் இலேசில் முடியு மென்பதும்; தொழில் செய்பவன் தனது நட்பினருக்கு நல்லவை களைச் செய்தலினும் தனது பகைவருடன் பகைத்துப் பொருந்தா திருப்பவரைத் தனக்கு நட்பாக்கிக்கொள்ளுதல் நன்றென்பதும்; ஆளுமிடஞ்சிறியராகிய மந்திரிகள் தம்மின் மிகுந்த வலியவர் எதிர்ந்த விடத்தே தமது அங்கங்கள் நடுங்குதலுக்குப் பயந்து அந்நிலைக்கு வேண்டுவதாகிய சந்திகூடுமாயின், அவ்வலியவரைத் தாழ்ந்து அதனை ஏற்றுக்கொள்ளுவரென்பதும் இங்கு அறியத்தக்கவைகளாம்.

## ௬௯. தூது.

அஃதாவது பொருந்தல் பிரித்தல்களுக்கு வேற்றரசரிடத்தே செல்வாரது தன்மை. அவ்விரண்டனையும் முன் வினைசெயல் வகை என்றமையால், இஃது அதனபின் வைக்கப்பட்டது. தான் வகுத்துச் சொல்லுவோன், சொல்லியது சொல்லுவோனெனத் தூது இருவகைப்படும். அவருள் முன்னோன் மந்திரியோடு சமான னாவான் ஆகலாலும் பின்னோன் அவனிலுங் காற்பங்கு குணங் குறைந்தோன் ஆகலாலும் இஃது அமைச்சியலாயிற்று.

கடனறிந்து காலங் கருதி யிடனறிந்து
எண்ணி யுரைப்பான் றலை. (எ)

(இ - ள்.) கடன் - வேற்றரசரிடத்துத் தான் செய்யுமுறை மையை, அறிந்து - தெரிந்து, காலங்கருதி - அவர் செவ்விபார்த்து, இடனறிந்து - சென்ற கருமஞ் சொல்லுதற்கேற்ற இடத்தைத் தெரிந்து, எண்ணி - சொல்லும் வழியை முன்னே விசாரித்து, உரைப்பான் - அவ்விதம் சொல்லுவோன், தலை - தூதரில், மிக்க வன், எ - று.

செய்யுமுறையாவது வேற்றரசர் நிலையும், தன்னரசனிலையும், தன்னிலையும் நன்றாக ஆராய்ந்து அவைகளுக்குப் பொருந்த வேற்றரசரைக் காணுமுறைமையும் சொல்லுமுறைமையும் அவ் வேற்றரசரது குண முதலியவற்றை அறிதலும். செவ்வி - தன் சொல்லை யேற்றுக்கொள்ளும் மனநிகழ்ச்சி. அது காலத்தின் வசத்ததாகலால் 'காலம்' என்றார். இடன் - தனக்குத் துணையாவார் கூட இருக்கின்ற இடம். எண்ணுதல் - தான வந்தகாரியத்தைச் சொல்லும் விதமும், அதற்கு அவர்சொல்லும் உத்தரமும், அதற்குப் பின் தான்சொல்லுமவைகளுமாக இவ்வழியால் மேலுமேலும் தானே யெண்ணுதல். வடநூலார் தான் வகுத்துக் கூறவான, கூறியது கூறுவான என்னும் இருவரோடு ஓலை கொடுத்து நிற்பாரையுங் கூட்டித் தூதரைத் தலை, இடை கடையென்று வகுத்துக் கூறினாராகலின், அவர்மதமுந் தோன்றத் 'தலை' என்றார். தூதென்பது அதிகாரத்தால் வந்தது.

தன் சுற்றத்தாரிடத்து அன்புடையவனாய் அவர்க்குத் தீங்கு வாராமல் தானே காத்து நடத்தலும், மந்திரித்தொழில் செய்தற் கமைந்த குடியிலே பிறந்து தன் முன்னோரது தூதியல்பைக் கேட்டறிதலும், அரசர்சாதி விரும்பும் குணமுடையவனாதலும் தூதனுக்கு இலக்கணங்களாகுமென்பதும்; தம்மரசனிடத்து அன்புடைமையும், அவனுக்கு ஆமவைகளை அறியும் அறிவுடைமையும், அவைகளை வேற்றரசரிடத்துச் சொல்லுங்கால் ஆராய்ந்து சொல்லுதல் வன்மையும் தூதுரைக்க வுரியார்க்கு இன்றியமையாத குணங்களாகுமென்பதும்; இயற்கையாகிய அறிவும் கண்டார் விரும்பும் தோற்றப் பொலிவும் பலரோடும் பலகாலும் ஆராயப்பட்ட கல்வியுமென நன்கு மதித்தற் கேதுவாகிய இம்மூன்றனது கூட்டத்தையுடையவன் தூதுசெல்லுதற்கு உரியவனாவா னென்பதும்; வேற்றரசர்க்குப் *பலகாரியங்களைச் சொல்லுமிடத்துக் காரணவகையால் தொகுத்துச்

---

* பலகாரியங்களுக்கு உடம்படாதவர் பரம்பரையால் அப்பலவும் முடித்தற்குக் காரணமான ஒருகாரியத்தைச் சொல்ல அதனால் அவை பயன்படும் விதத்தை ஆலோசித்தறிதல் அருமையாலுஞ் சொல்வது சுருக்கமாயிருத்தலாலும் உடம்படுவர் என்றறிக.

சொல்லி † இனிமையில்லாத காரியங்களைச் சொல்லுமிடத்து வெய்ய சொற்களை நீக்கி இனிய சொற்களால் மனமகிழச் சொல்லுபவனே தன்னரசனுக்கு நன்மையுண்டாக்குந் தூதனாவானென்பதும்; நீதிநூல்களைக் கற்றுத் தான் சென்ற கருமத்தைப் பகையரசர் மனங்கொளச் சொல்லி அவர் கோபித்துப்பார்த்தால் அப்பார்வைக்கு அஞ்சாது ‡ காலத்தோடு பொருந்த அது முடிக்கத்தக்க உபாயத்தை அறிபவனே தூதனாவானென்பதும்; அத்தகைய தூதனுக்குப் பொருள் காமங்கள்பற்றி வேறுபடச் சொல்லாமைப் பொருட்டுத் தூய்மையும், தன்னரசனுக்கு உயர்ச்சி சொல்லியவிடத்தே எம்போல்வார்க்கு அஃது இயல்பென்று சொல்லி அவர் கோபத்தை நீக்கற்பொருட்டுத் தனக்கு அவர் மந்திரிகள் துணையாந்தன்மையும், இதுசொன்னால் இவர் துன்பஞ்செய்வாரென்று ஒழியாமைப் பொருட்டுத் துணிதலுடைமையும், யாவராலும் நம்பப்படுதற் பொருட்டு மெய்ம்மையும் ஆகிய இந்நான்கும் இன்றியமையாச் சிறப்பிலக்கணங்களாகுமென்பதும்; தன்னரசன் சொல்லிவிட்ட வார்த்தையை வேற்றரசர்க்குச் சென்று சொல்லுதற்குரியவன் தனக்குவரும் துன்பத்திற்கு அஞ்சி அவருக்குத் தாழ்வான வார்த்தையை வாய்சோர்ந்தும் சொல்லாத வலிமையையுடையவனாவானென்பதும் இங்கு அறியத்தக்கவைகளாம்.

## ௭௰. மன்னரைச் சேர்ந்தொழுகல்.

அஃதாவது அமைச்சர் அரசரைப் பொருந்தி நடக்கும் விதம். இது ‘வேந்தவாம் பண்புடைமை’ என முன்னதிகாரத்திலே ‘‘அன்புடைமை யான்ற குடிப்பிறத்தல் வேந்தவாம், பண்புடைமை

---

† இனிமையில்லாத காரியங்களுக்கு உடம்படாதவர் தமது மனமகிழச்சொல்ல அவ்வினிமையில்லாமை தோன்றாமையால் உடம்படுவர் என்றறிக.

‡ அவ்வுபாயம் அறிதற்பொருட்டு நீதிநூற் கல்வியும், அதனாலன்றி வேறொன்றால் முடியுங்காலம் வரின் அவ்வாறு முடிக்க வேண்டுதலால் காலத்தோடு பொருந்த அறிதலும் இலக்கணமாயின.

தூதுரைப்பான் பண்பு" என்று முதற்குறளிலே வேண்டப்பட்ட படியால், தூதினை பின் வைக்கப்பட்டது.

**போற்றி னரியவை போற்றல் கடுத்தபின்**
**தேற்றுதல் யார்க்கு மரிது.** (௩)

(இ - ள்.) அமைச்சர், போற்றின் - தம்மைக் காத்துக்கொள்ள வெண்ணினால், அரியவை - அரியபிழைகள், போற்றல் - தம்மிடத்திலே வாராமற் காக்ககடவர்; கடுத்தபின் - அவைகளை வந்தவைகளாகக் கேட்டு அவ்வரசர் சந்தேகித்தால், தேற்றுதல் - அவரைப் பின் தெளிவித்தல், யார்க்கும் - எவ்வகையார்க்கும், அரிது - கூடாது, (ஆதலால்) எ - று.

அரியபிழைகளாவன - அவர்மேல் பொறுத்தற்கரிய இழுக்குதல், அரசருக்கு உரிமையாயுள்ள மகளிருடன் கூடுதல், கிடைத்தற்கரிய பொருள்களை அபகரித்தல் என்றிவை முதலாயின. அவைகளைக் காத்தலாவது ஒருவன் சொல்லியிடத்துந் தகுமோவென்று சந்தேகப்படாமல் தகாதெனவே யவர் நம்பும்படி நடத்தல். பின் ஒரு வழியால நம்புவித்தாலும் கடன் கொண்டவரைக் கண்டவிடத்தெல்லாம் கடனகொடுத்த பொருள் தோன்றும் விதம்போல் தம்மைக் கண்டவிடத்தெல்லாம் அவ்வரிய பிழைகள் நினைக்கப்படுதலால் 'யார்க்குமரிது' என்றார்.

விரைவில் மாறுபட்டுக் கோபிக்குந் தன்மையுடைய அரசர், மிக நீங்கினால் குளிர் நீங்காது மிக நெருங்கினால் சுடுவதான நெருப்புப்போல், மிகநீங்கினால் பயன்கொடாது மிகநெருங்கினால் மதியாமைபற்றி வருத்துவாராதலால், அவரைச் சேர்ந்தொழுகுவோர் அவரை மிகநீங்காமலும் மிக நெருங்காமலும் நெருப்பிற் குளிர்காய்வார்போல் நடுவிடத்து நிற்கக்கடவரென்பதும்; அவ்விதம் அரசரைச் சேர்ந்தொழுகுவோர் அவர் உண்பன அணிவன அவரது மேன்மை என்ற இவைமுதலாக அவர்க்குச் சிறப்பாக வுரியவற்றை அவர்க்குச் சமமாய்த் தோன்றற்கு அஞ்சித் தாம் விரும்பாதிருக்க வேண்டுமென்பதும்; அவ்விதம் விரும்பாதொழியவே, அவ்வச்சம் நோக்கி அவ்வரசர் தாமே எல்லாச் செல்வமும் தருவரென்பதும்;

அரசரால் அநுபவிக்கப் படுமவற்றை விரும்பினவர்க்கு அவவிருப்பம் கேட்டைத் தருமென்பதும்; அரசர் முன்னிலையில் ஒருவன் காதிலே சொல்லுதலையும் ஒருவன் முகநோக்கி நகைத்தலையும் செய்தால் அவர் தங்குற்றங்கண்டு செய்தனவாகக் கொள்வாராதலால், அவை செய்தலாகாதென்பதும்; அரசன பிறரிடம் இரகசியம் பேசும்போது அது ஆராய்தற்குரிய பொருளாயிருந்தாலும் அதனைச் செவிகொடுத்துக் கேளாமலும், அவனை வலிந்து வினவாமலுமிருந்து, அவன் தானே சொல்லிற் கேட்கக் கடவனென்பதும்; அரசனுக்குக் காரியஞ் சொல்லும்போது அவனது மனக்குறிப்புக் காரியத்திலன்றிக் காமம் வெகுளி யுள்ளிட்டவைகளில் நிகழுமிடத்தும், அதற்கு ஏற்காத காலத்தும் சொல்லுதல் பயன்படாமற் போதலால், அப்பொழுது நிகழ்கின்ற அவனது குறிப்பினை அறிந்து, சொல்லுதற்குத் தகுந்த காலத்தையும் நோக்கி, அவன் உடம்படாத காரியங்கள் முடிவுபெறாமையாலும், பயனில்லாதவையும் பயன் சுருங்கியவையும் ஆகிய காரியங்கள் செய்தலை அவன் விரும்பாமையாலும் அத்தகைய காரியங்களை நீக்கி, அவனுக்கு வெறுப்பில்லாதனவும் வேண்டுவனவுமாகிய காரியங்களை அவன் மனம் விரும்பும்படி இனியவையாய்ச் சுருங்கி விளங்கிய பொருளுடையவையாகிய சொற்களாலே சொல்லக்கடவனென்பதும்; பெரும்பயனுள்ளவையுமாய் அரசன் விரும்புவனவுமாகிய காரியங்களை அவன் கேட்டிலனாயினுஞ் சொல்லி, பயனில்லாதவற்றைத் தானே கேட்டாலும் சொல்லாது விடக்கடவனென்பதும்; இவர் எமக்கு இளையவரென்றும் எமக்கு இன்ன முறையினை யுடையவரென்றும் அரசரை அவமதியாது அவரிடத்து நின்ற * ஒளியோடு பொருந்த நடக்கவேண்டுமென்

---

* ஒளி - காப்புக்கடவுளாம் கரியமாலானவர் திருமகளுடனே திருப்பாற்கடலில் ஆலிலையென்னும் அமளியிலமர்ந்து அறிதுயில் கொண்டு அவனியை யளித்து ஆதரித்தாற்போல, தாம் உறங்காநிற்கவும் உலகங் காக்கின்ற அரசரது தெய்வத்தன்மை. அதனோடு பொருந்த நடத்தலாவது - அவர் தேவரும் தாம் மனிதருமாக நடத்தல். அவ்வொளியினாலே நீக்கப்பட்ட இளமையும் முறைமையும் பற்றி இகழ்வாராயின், தாமும் நீக்கப் படுவரென்பதுகருத்து.

பதம்; நல்லறிவினையுடையவர் அரசனால் யாம் நன்குமதிக்கப் பட்டோமென்று கருதி அவன் விரும்பாதவைகளைச் செய்து அழி வடையாது, தம்மை முன்னையராகவே கருதி அஞ்சி நடப்பாரென பதம்; அரசனுக்கு யாம் பழையோமெனக் கருதித் தமக்கு இயல் பல்லாதவைகளைச் செய்யும் உரிமை அவ்விதம் செய்பவர்க்குக் கேட்டினைத்தரு†மெனபதம் ஈங்கு அறியத்தக்கவைகளாம்.

## எக. குறிப்பறிதல்.

அஃதாவது அரசர் நினைத்ததைத் தாம் சொல்லாமலறிதல், இது, மன்னரைச் சேர்ந்து நடப்பவர்க்கு அவசியமானதாகலால் அதன்பின் வைக்கப்பட்டது.

நுண்ணிய மென்பா ரளக்குங்கோல் காணுங்கால்
கண்ணல்ல தில்லை பிற. (ய)

(இ - ள்.) நுண்ணியமென்பார் - யாம் நுட்ப அறிவுடையேம் என்றிருக்கும் மந்திரிகள், அளக்குங்கோல் - அரசரது கருத்தை அளக்குங் கோலானது; காணுங்கால் ஆராயுமிடத்து, கண்ணல்லது - அவரது கண்களல்லாமல், பிற - வேறு, இல்லை, எ - று.

அறிவினது நுட்பத்தை அவ்வறிவுடையார் மேலேற்றி 'நுண்ணியமென்பார்' என்று கூறினாரென்றல் இஃது இடத்து நிகழ் பொருளின் பண்பு இடத்தின் மேலாய உபசாரவழக்கு. இடம்

† அரசன் பொறுக்காது வருத்துமபொழுதில் அப்பழைமை நோக்கி முகங்கொடாமல் உயிரைக் கவாதலால், அவன் வேண்டா தன செய்தற்குக் காரணமாகிய உரிமை கேடுதரும் என்றறிக.

• "பழமை கடைப்பிடியார் கேண்மையும் பாரார்
கிழமை பிறிதொன்றுங் கொள்ளார் - வெகுளினமற்
காதன்மை யுண்டே யிறைமாண்டார்க் கேதிலரும்
ஆர்வலரு மில்லை யவர்க்கு" — நீதிநெறி விளக்கம்.

[காதன்மை - அன்பு. உண்டே - உண்டோ இல்லை யென்றபடி.]

வுடையார் இடத்து நிகழ்பொருள் அறிவு இடத்து நிகழ்பொருளின் பண்பு நுண்மை இங்கிதம், வடிவு, தொழில், சொல் என்பவை முதலாகப் பிறர் கருத்தறிதற்கு அளவைகள் பல, அவை யாவும் முன்னறிந்தவிடத்தே அவராலே மறைக்கப்படும்; பார்வை மனத்தோடு கலத்தலால் அவ்விடத்து மறைக்கப்படாதென்பது பற்றி, அதனையே பிரித்துக் கூறினார் இனி அளக்குங்கோல் என்று பாடங்கூறி நுட்ப அறிவுடையயவென்றிருக்கும் அமைச்சரை அரசர் வருத்துங் கோலாவது கண்ணென்று சொல்லி, தன்னு கோபப்பார்வையால் அவ்வரசரது கோபக்குறிப்பினை யறிக என்று கருத்தாக்கிக் கூறுவாருமுளர் இதனால் நுண்ணிய கருவி பார்வை யென்பது சொல்லப்பட்டது

ஆன்ற அறிவினையுடைய அமைச்சன் அரசனாற் குறிக்கப்பட்ட காரியத்தை அவன் சொல்லல் வேண்டாவகை அவன் முகத்தினாலும் கண்ணினாலும் பார்த்தறிவானென்பதும், ஒருவனுடைய மனத்தினிடத்திலே நிகழ்வதனைச் சந்தேகப்படாமல் உணர்வானென்பதும், தன் குறிப்பு நிகழும் விதத்தையறிந்து அதனாலே பிறர் குறிப்பறியுந் தன்மையுடையவனாயிருப்பானென்பதும் இங்கு அறியத்தக்கவைகளாம்.

## ௭௨ - அவையறிதல்.

அஃதாவது அரசனோடிருந்த சபையினது இயல்பை அறிதல் காரியஞ் சொல்லுங்கால் அவன் குறிப்பறிதலேயல்லாமல் இதுவும் வேண்டுதலான், இஃது அதன்பின் வைக்கப்பட்டது.

அவையறிந் தாராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர். (௧)

(இ - ள்.) சொல்லின் தொகை சொல்லின் கூட்டத்தை, அறிந்த தெரிந்த, தூய்மையவர் பரிசுத்த குணமுடையவர், தாம் ஒன்று சொல்லுமிடத்து, அவை அப்பொழுதுள்ள சபையை, அறிந்து தெரிந்து, ஆராய்ந்து - ஆராய்ந்து, சொல்லுக சொல்லக்கடவர், எ - று.

சொல்லின் தொகையெனவே, செஞ்சொல் (வெளிப்படைச் சொல்), இலக்கணைச்சொல் (உரியபொருளை விட்டு அப்பொருளின் சம்பந்தியை யுணர்த்துஞ் சொல்), குறிப்புச்சொல் (செம்பொருளும் இலக்கணைப் பொருளுமல்லாத வேறு பொருளை யுணர்த்தும் சொல்) என்னும் மூவகைச்சொல்லும் அடங்கின. தூய்மை - அச்சொற்களில் தமக்கு ஆகாதவை ஒழித்து ஆமவை கொள்ளல். சபையென்றது இங்கு அச்சபையின் அளவினை. அவ்வளவு மிகுதி, ஒப்பு, தாழ்வு என மூவகைப்படும். அறிதல் - தம்மோடு தூக்கி அறிதல். ஆராய்தல் - இச்சபையிலே சொல்லப்படுங் காரியம் இது, சொல்லும்விதம் இஃது, சொன்னால் அதன் முடிவு என்று இவையுள்ளிட்டவைகளை ஆராய்தல்.

சொற்களின் நடையை * ஆராய்ந்தறிந்தவர் சபையில் ஒன்று சொல்லுங்கால் அது கேட்குதலில் விருப்புடைத்தாயிருத்தலை ஆராய்ந்தறிந்து, சொற்குற்றம் பொருட்குற்றமெனனும் இருவகைக் குற்றங்களும் இல்லாததாய் மிகவுந் தெளிந்து சொல்லக்கடவரென்பது; சொல்லின் வகையறியாதவர் சபையின் அளவறியாது பேசத்தொடங்கி இகழப்படுவாரென்பதும்; அறிவால் தம்மின் மிக்காரும் தம்மையொத்தாரும் இருக்கும் சபையில் தமது நூலறிவும் சொல்வன்மையுந் தோன்ற விரித்துரைத்து, அறிவிலாரது சபையில் தாமும் அறிவிலார்போல் இருக்கக்கடவரென்பதும்; தம்மின் மிக்காரவைக்கண் தங்குறைவும், அவர்மிகுதியும், அவர் சொல்லுதற்குமுன்னே சொன்னாலுண்டாகிற குற்றமும், சொல்லாவிட்டால் வருகிற நன்மையும் அறிந்து அடங்கும் அடக்கம் ஒருவர்க்கு இது நன்றென்று சிறப்பித்துச் சொல்லப்பட்ட குணங்களெல்லாவற்றுள்ளும் சிறந்ததாகுமென்பதும்; விரிந்த நூற்பொருள்களை உட்கொண்டு அவைகளின் மெய்ம்மையை அறியவல்லவர் சபையில் வல்லாரொருவன் சொல்லிழுக்குப்படுதல் முத்தியடைதற் பொருட்டு நன்னெறியில் நின்றொருவன் அந்நெறியினின்றும்

* சொற்களின் நடையாவது - முன்னர்க்கூறிய மூவகைச்சொல்லும் செம்பொருள் இலக்கணைப்பொருள் குறிப்புப்பொருளென்னும் அருத்தத்தை உணர்த்தும் விதம்.

தவறிக் கூடாவொழுக்கத்தனாதலை யொக்குமென்பதும் ; குற்றமறக் கற்றவராது சபையிலேயே கற்றவரது கல்வி விளங்கித் தோன்றுமென்பதும் ; நல்லார்சபையில் நல்லபொருள்களை அவர் மனங்கொள்ளச் சொல்லுதற்கு உரியவராயவர் அவையறியாத புல்லறிவாளரிருந்த சபையினிடத்து மறந்தும் அவைகளைச் சொல்லாதொழியக் கடவரென்பதும் ; சொல்வாராயின், தமக்குரிய சபையை அறியாமையைக்குறித்து நல்லார் சபையும்,சொன்னபொருளை அறியாமையால் புல்லர் சபையும் அவரை இகழுமென்பதும் ; அவ்விதம் புல்லர் சபையிற் சொன்னசொற்கள் சேற்றிற்சிந்திய அமிர்தத்தையொத்துக் கெடுமென்பதும் இங்கு அறியத்தக்கவைகளாம்.

## எ௩. அவையஞ்சாமை.

அஃதாவது சொல்லுதற்குரிய சபையை அறிந்து சொல்லுங்கால் அச்சபைக்கு அஞ்சாமை. அதிகாரமுறைமையும் இதனாலே விளங்கும்.

கற்றார்முற் கற்ற செலச்சொல்லித் தாங்கற்ற
மிக்காருண் மிக்க கொளல். (க)

(இ - ள்.) கற்றார்முன் - பலநூல்களையும் கற்றோர் சபையினிடத்து, கற்ற - தாம் கற்றவைகளை, செல - அவர் மனங்கொள்ளும் வழியால், சொல்லி - அஞ்சாது கூறி, தாம்கற்ற - தாம கற்றவைகளினும், மிக்க - அதிகமான பொருள்களை, மிக்காருள் - அவ்வதிகமாகக் கற்றவரிடத்து, கொளல் - அறிந்துகொள்ளக்கடவர், எ - று.

எல்லாம் ஒருவருக்குக் கற்றல் கூடாமையால் வேறுவேறாய கல்வியுடையவர் பலரிருந்த சபையில் தாம் கற்றவைகளை அவர் மனங்கொள்ளும்படி சொல்லக்கடவர் ; சொல்லவே, அவரும் அவைகளையெல்லாம் சொல்லுவாராதலால், மற்றைக் கற்கப்பெறாதவையெல்லாம் கேட்டறியலா மென்பதாயிற்று. இதனால் அவையஞ்சாமையினது ஒருசார்பயன் சொல்லப்பட்டது.

சொற்களது தொகையெல்லா மறிந்த பரிசுத்தகுணமுடையவர் கற்றுவல்ல சபை மூடசபை என்கிற சபையின் வகையினையறிந்து, கற்றுவல்ல சபையில் ஒன்று சொல்லும்போது, அச்சத்தாற் பிழை படச் சொல்லா ரென்பதும்; கற்றோர் சபையினிடத்தே அஞ் சாமலே தாம் கற்றவைகளை அவர் மனங்கொள்ளும் வகை சொல்ல வல்லவர் கற்றவரெல்லாரிலும் இவர் நன்றாகக் கற்றவரென்று உலகத்தாராற் புகழப்படுவாரென்பதும்; சபையில் அஞ்சாது பேச வல்லவர் சிலரேயென்பதும்; வேற்றரசர் சபையில் அஞ்சாமல் அவர் சொல்லிய சொற்களுக்கு உத்தரஞ் சொல்லுதல் நிமித்தம் அமைச்சர் சொல்லிலக்கண வழியாலே வாத செற்ப விதண்டை களும் சலசாதிகளு முதலிய அளவை(தருக்க)நூல்களைக் கற்றல் வேண்டுமென்பதும்; சபையிலே பேசுதற்கு அஞ்சுவோர் கற்ற கல்வி யுத்தகளத்திலே அதனை யஞ்சும் பேடியின் கையிலுள்ள வாளைப்போலப் பயனற்றதாகு மென்பதும்; நல்லவர் சபையில் குற்றமறச் சொல்லாதவர் பலநூல்களைக் கற்றிருந்தாலும் அவற் றாற் பயனில்லை யென்பதும்; நூல்களைக் கற்றிருந்தும் அவைக ளாலே பயனை அறிந்திருந்தும் நல்லவரிருந்த சபையை அஞ்சி அவ் விடத்திலே சொல்லாதவரைக் கல்லாதவரிலுங் கடையரென்று உலகம் சொல்லுமென்பதும் இங்கு அறியத்தக்கவைகளாம்.

அங்கவியலில் அமைச்சியல்

முற்றிற்று.

## எச. நாடு.

இனி அவ்வரசனாலும் அமைச்சனாலும் கொண்டு செலுத்தப் படுவதாய் மற்றை அரண்முதலிய அங்கங்களுக்கு அவசியம் வேண் டும் சிறப்பினையுடையதாகிய நாடு ஓரதிகாரத்தினாலே சொல்லு கின்றார். அஃதாவது இப்படிப்பட்டதென்பதும் அதிகாரமுறை மையும் இதனுள் விளங்கும்.

பிணியின்மை செல்வம் விளைவின்ப மேமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து. (அ)

(இ - ள்) பிணியின்மை - நோயில்லாமையும், செல்வம் - பொருள், விளைவு - நெல் முதலியவற்றின் விளைவு, இன்பம் - சுகம், ஏமம் - காவல், என்றிவை யுடைமையுமாகிய, இவையைந்து - இவைந்தினையும், நாட்டிற்கு - நாட்டினுக்கு, அணி - அழகாகும், என்ப - என்று நூலோர் சொல்லுவர், எ - று.

பிணியின்மை - நிலநலத்தால் வருவது. செல்வம் - கப்பல்களிலும் வண்டிகளிலும் வியாபாரிகள் கொண்டுவரும் பொருள்களும், வரிப்பணமும், சுரங்கத்திற் கிடைக்கும் பொன் முதலிய லோகங்களும், நிலத்தில் விளையும் தானியம் பயறு முதலிய உணவுப் பொருள்களும், மலையில் விளையும் [illegible]களும், பிறவுமாம். இன்பம் - திருவிழாவும் வேள்வியும் சான்றோர் உடைமையாலும், அனுபவிப்பவை உடைமையாலும், நிலநீரினது நன்மையாலும் வாய்வார்ந்த உள்ளே நிற்பது. காவல் என்பது அரசன் காவலும், வாழ்வோர் காவலும், அரண்காவலும் முதலியன. பிறதேசங்களிலுள்ளாரும் இச்சித்துப் பிரவேசிக்கும் அவைகளினின் பாமைக்கு ஏதுவாகிய அதனழகு இறுதிமேல் சொல்லப்பட்டது.

அத்தகைய நாடானது குன்றாத விளைவினைச் செய்பவரோடு உழவரும், * தாங்களே அதனால் முதலாகிய அறவோரும், [illegible] குறையாத செல்வத்தினை உடையோரும் கூடிவாழும் பெருமையினை யுடையதாய், அரசனது [illegible]த்தாலே மிகுபெயல், பெயலின்மை, எலி, விட்டில், கிளி என்பவற்றால் வருந்துன்பங்களும், அயல் [illegible] தியினால் வேற்றரசர் கிட்டுதலால் வருங்கேடும் இல்லாத விளைவினை யுடையதாயிருக்குமென்பதும்; பிறநாடுகளிலுள்ள மனிதர் கூட்டமும், பசு எருமை முதலாகிய விலங்கின் கூட்டமும் தத்தந் தேசங்களிலே பகைவர் வந்து தங்கியிருத்தலாலாவது அரசன் முறை தப்பாலாவது உணவில்லாமையாலாவது தம்மிடத்து வந்தால் அவற்றைத்

* "நற்றவஞ் செய்வார்க்கிடம் தவஞ்செய்வார்க்கும் அஃதிடம்" என்றார் பிறரும். [சீவகசிந்தாமணி - இதன்பொருள் - அவ்வேமாங்கதநாடு முத்தியடையுமாறு நல்லதவத்தினைச் செய்பவர்க்கும் இடம், மறுமையின்பங்கருதி இல்லறம் நடத்துவோர்க்கும் அந்நாடு தக்கவிடம் என்பது.]

தாங்கி அதன்மேலும் தன்னரசனுக்கு இறைப்பொருள் முழுதையும் உடன்பட்டுக் கொடுக்குமென்பதும்; உழவருடைமையாலும் மிகவிளைதலாலும் அந்நாட்டிலுள்ளார்க்குப் பசித்துன்பமில்லையென்பதும்; தீக்காற்றும் மிக்க குளிர்வெப்பங்களும் உண்ணப்படுமவைகளது தீமையும் இல்லாமையால், அங்கு நோய்த்துன்பமில்லையென்பதும்; அரசன் வலிமையும், எப்போதும் மாறுபடாமல் நிலைத்திருக்கும் சேனையும், காடு நீர் மதில் மலை என்னும் நால்வகை யரண்களும் உடைமையால் அங்குப் பகைத்துன்பமில்லை யென்பதும்; சாதி பற்றியும் சமயம்பற்றியும் உண்டாகும் சங்கேத (கட்டுப்பாடு) வசத்தால் மாறுபட்டுக் கூடும் பல கூட்டமும், உடனிருந்து கொண்டே பாழாகச் செய்யும் * உட்பகையும், சமயம்வந்தால் அரசனை அலைக்கின்ற கொலைத்தொழிற் குறும்பரும் அந்நாட்டில் இல்லையென்பதும்; அரசனது வலிமையாலும் கடவுட்பூசை ஆராதனை என்றிவைகளைச் செய்தலாலும் அந்நாடு கேடறியாததாய் அரிதிற் கெட்டதாயினும் அப்போதும் தன வளம் குறையாததாயிருக்குமென்பதும்; கீழ்நீரினையுடைய கிணறுகளையும் சிறுகுளங்களையும், மேல் நீரினையுடைய ஏரி ஆறுகளையும் மழைகாலத்தில் உட்கொண்டுள்ள நீரை வெயிற்காலத்தில் வெளிப்படுத்தும் மலையையும், அழியாத நகரத்தையும் தனக்கு அவயவங்களாகவுடையதென்பதும்; குடிகள் தேடி வருந்தாமல் அவர்களுக்குச் சகல பொருள்களையும் கொடுக்கவல்ல †தென்பதும்; மேற்கூறிய குணங்கள் எல்லாவற்றாலும் நிறைந்திருந்ததாயினும் அரசனோடு பொருந்துதல் இல்லாதவிடத்து அந்நாட்டிற்கு அக்குணங்களாற் பயனில்லையென்பதும் இங்கு அறியத்தக்கவைகளாம்.

* உட்பகை - வழியலைத்துப் பொருள்பறிப்போர் கள்வர் கோள் சொல்வோர் முதலாகிய மக்களும், பன்றி புலி கரடி முதலாகிய மிருகங்களும்.

† "பொருள் செய்வார்க்கு மஃதிடம்" என்றார் பிறரும். [சீவக சிந்தாமணி - இதன் பொருள் - நிலையாத பொருளைச் சேர்க்க விரும்புவார்க்கும் அவர்கள் அதனைத் தேடி வருந்தாமல் அடைவதற்கு அவ்வேமாங்கத நாடு இடமாம் என்பது ]

## ௭௫. அரண்.

இனி அந்நாட்டிற்கு உறுப்பாய் அடங்குமாயினும் பகைவரால் தொலைவு வந்தவிடத்து, அதற்கும் அரசனுக்கும் காப்பாதற் சிறப்புப்பற்றி வேறோர் அங்கமாகச் சொல்லப்பட்ட அரண் இவ்வதிகாரத்தால் சொல்லுகின்றார். (அஃதாவது இன்னதென்பதும், அதிகார முறைமையும் இதனுள் விளங்கும்.)

**உயர்வகலந் திண்மை யருமையிந் நான்கின்**
**அமைவர ணென்றுரைக்கு நூல். (௧)**

(இ - ள்.) உயர்வு - உயர்ச்சியும், அகலம் - அகலமும், திண்மை - வலிமையும், அருமை - அருமையும், என்று சொல்லப்பட்ட, இந்நான்கின் - இந்நான்கினது, அமைவு - மிகுதியையுடைய மதிலை, அரணென்று - அரணென்று, நூல் - நூலோர், உரைக்கும் - சொல்லுவர், எ - று.

அமைவு அதனையுடைய மதிலுக்காதலால் பண்பாகுபெயர். நூல் அதனை ஆக்கியோராகலால் காரியவாகுபெயர். உயர்வு - ஏணிக்கு எட்டாதது. அகலம் - புறத்தோர்க்குத் தோண்டக்கூடாத அடியகலமும், உள்ளிடத்தோர்க்கு நின்று தொழில் செய்தற்காந் தலையகலமும். திண்மை - கருங்கல் செங்கல்களாலே செய்தலால் குத்தப்படாமை. அருமை - பொறிகளாலே சேர்தற்கருமை. பொறிகள் - எந்திரப்பாவைகள். அவையாவன:—† "வளைவிற் பொறியுமயிற் செறி நிலையுங், கருவிரலூகமுங் கல்லுமிழ் கவணும், பரிவுறு வெந்நெயும் பாகடு குழிசியுங், காய்பொன் னுலையுங் கல்லிடு கூடையுந், தூண்டிலுந் தொடக்கு மாண்டலை யடுப்புங், கவையுங் கழுவும்புதையும் புழையு, மையவித் துலாமுங் கைபெய ரூசியுஞ், சென்றெறி சிரலும் பன்றியும் பணையு, மெழுவுஞ் சீப்பு முழுவிறற் கணையமுங், கோலுங் குந்தமும் வேலுஞ் சூலமும்" என்றிவை முதலாயின.

---

† சிலப்பதிகாரம் - (இதன்பொருள்) - வளைந்து தானே எய்யும் எந்திரவில்லும், கரிய விரலையுடைய குரங்குபோலிருந்து சேர்ந்தாரைக் கடிக்கும் பொறியும், கல்லையுமிழும்

'மேற்கூறிய மதிலேயன்றி அதன்புறத்திலே செயற்கையாலமைக்கப்பட்ட எந்நாளும் வற்றாத நீரையுடைய அகழியும், அதன் புறத்திலே இயற்கையாலமைக்கப்பட்ட நீரும் நிழலுமில்லாத மரு (பாலை) நிலமும், அதன் புறத்திலேயுள்ள மலையும், அதன் புறத்திலேயுள்ள நெருங்கிய காடும் நாட்டிற்கு அரண்களாகுமென்பதும்; அவ்வரணுள், காய்ந்நிரைத்தலால் சேர்ந்தாரை வருத்துவதாய நெய்யும், செம்புருக்கும், (அன்றி அங்ஙனம் இறைத்தற்குப் பாகுகாய்ந்த குழிசிகளுமாம்), உருக்கக்காய்ச்சி யெறிதற்கு எஃகுபட்டிருக்கும் உலைகளும், இடங்கணிப் பொறிகளுக்குக் கல்லிட்டு வைக்கும் கூடையும், தூண்டில் வடிவாகப் பண்ணிப் போகட்டு வைத்துக் கிடங்கு நீந்தி மதில் பற்றுவாரைக் கோத்து வலிக்கும் கருவியும், கழிகோல்போலக் கழுத்திற் பூட்டி முறுக்குஞ் சங்கிலியும், (கயிறுத் தொடக்குமாம்), ஆண்டலைப்புள் (கோழி) வடிவாகப் பண்ணிப் பறக்கவிட உச்சியைக் கொத்தி மூளையைக் கடிக்கும் பொறி நிரைகளும், கிடங்கிலேவினை மரியதக்களும் இருப்புக் கவையும், கழுக்கோலும், அம்புக்கட்டும், எவ்வறைகளும், பற்றுக் கைதுக்கிப் போகட்டவிட்டமும் (அனறிக் கதவை யடைக்கும்படி கற்கவி தொடங்கி நாற்றும் துலாமுமாம், சாணம்புக் கூடெனபாரும் சிற்றம்புகள் வைத்தெய்யும் இயந்திரமெனபாருமுளர்). மதிற்றலையைப் பற்றுவாரைக் கையைப் பொதிர்க்கும் ஊசிப்பொறிகளும் (இனிக் கதவோடு சேராதபடி வைத்த நிரைக்கழுவெனினும் அமையும்), மாற்றார் மேற் சென்று கண்ணைக் கொத்தும் சிச்சிலிப்பொறியும், மதிற்றலையில் ஏறினருடலைக் கோட்டாற் கிழிக்க இரும்பாற் செய்துவைத்த பன்றிப் பொறியும், மூங்கில் வடிவாகப்பண்ணி அடித்தற்கமைத்த பொறியும், கதவுக்கு வலியாக உள்வாயிற்படியிலே நிலத்திலே வீழ விடுமரங்களும், கணையமரமும், கோலும், குந்தமும், வேலும், சூலமும் முதலியனவுமாம். பிறவும் - சதக்கினி, தள்ளிவெட்டி, களிற்றுப் பொறி, விழுங்கும் பாம்பு, கழுகுப் பொறி, புலிப்பொறி, குடப்பாம்பு, சகடப்பொறி, தகர்ப்(ஆட்டுப்)பொறி, அரிநூற்பொறி என்பனவும் என்பது [இஃது அடியார்க்கு நல்லார் உரை.]

வாண் புறத்தோராலே கொள்ளுதற்கரியதாயும், அகத்தோர்க்கு வேண்டும் பொருள்களெல்லாவற்றையும் உள்ளே யுடைத்தாயும், புறத்தோரால் அழிவடையுமளவில் அது வாராதபடி உதவிக்காக்க வல்ல அரசனிடத்து அன்பும் மானமும் மறமும் சோர்வின்மையு முடைய வீரர்களை யுடைத்தாயும் இருக்குமென்பதும்; அதனால் அது அறிவு ஆண்மை பெருமையென்னும் மூவகைவலிமையு முடையவராய்ப் பிறர்மேற் செல்வார்க்கு அவ்விதம் செல்லுங்கால் அவர் உரிமை மகளிரையும் பொருளையும் பிறர் அபகரியாமற் காப்பதோடு, அப் பெருமை தொலைந்து முடிவுவந்தவிடத்துக் கடலினடுவே உடைந்த கப்பற்காரர்போன்று வேறு காப்புக் காணாது தன்னை அடைந்தோரையும் காக்கும் சிறப்பினை யுடையதென்பதும் இங்கு அறியத்தக்கவைகளாம்.

## எசு. பொருள்செயல்வகை.

இனிப் பெரும்பாலும நாட்டாலும் அரணாலும் வளர்க்கவும் காக்கவும படுவதாகிய பொருளைச் சம்பாதித்தலின் விதம் இவ்வதிகாரத்தாலே சொல்லுகிறார். (அஃதாவது இன்னதென்பதும் அதிகார முறைமையும் இதனுள் விளங்கும்).

அருளென்னு மன்பீன் குழவி பொருளென்னும்
செல்வச் செவிலியா லுண்டு. (எ)

(இ - ள்.) அன்பு ஈன - அன்பினால் ஈனப்பட்ட, அருளென்னும் - அருளென்கின்ற, குழவி - குழந்தையானது, பொருளென்னும் - பொருளென்று உயர்த்திச் சொல்லப்படும், செல்வம் - செல்வத்தையுடைய, செவிலியால் - செவிலித்தாயால், உண்டு - வளரும், எ - று.

சம்பந்தம் பற்றுமலே வருத்தமடைந்தவரிடத்துச் செல்வதாகிய அருள் சம்பந்தம்பற்றிச் செல்லும் அன்பு மிகுந்தவிடத்து உண்டாவதாகலால் அதனை 'அன்பீன குழவி' என்றும், அது வறியவர்மேற் செய்வது அவ்வறுமையை நீக்கவல்ல பொருளுடையவர்க்

காதலால் பொருளை அதற்குச் 'செவிலி' என்றும், அஃது உலகிற் செவிலியர் போலாகாமல் தானே எல்லாப் பொருள்களையும் உதவி வளர்த்தலால் 'செல்வச்செவிலி' என்றுஞ் சொல்லினர்.

ஒருபொருளாக மதிக்கப்படாத அறிவிலாரிடத்தும் இழிகுலத்தாரிடத்தும் பொருள் உண்டாயின அறிவாளரும் உயர்குலத்தாரும் அவரிடத்திலேபோய் கிடப்பாராதலால், ஒருவனுக்கு அப்பொருள் போன்ற பொருள் பிறிதொன்றில்லையென்பதும்; எல்லா நன்மையும் உடையவராயினும் பொருளில்லாரை யாவரும் இகழ்வரென்பதும்; எல்லாத் தீமையும் உடையவராயினும் அஃதுடையாரை யாவரும் உயரச்செய்வரென்பதும்; பொருளென்னும் * பொய்யா விளக்கானது தன்னைச் சம்பாதித்தவர்க்கு அவர் நினைத்த இடத்திற்கெல்லாம் சென்று பகையென்னும் இருளைக் கெடுக்குமென்பதும்; அப்பொருளைச் சம்பாதிக்குமிடத்துத் தீமை விலக்கி அருளோடும் அன்போடும் ஈட்டவேண்டுமென்பதும்; இவ்விதம் நல்ல வழியிலே சம்பாதிக்கப்பட்ட பொருள் சம்பாதித்தவனுக்குக் கடவுட்பூசை தானமாகிய அறத்தினைச் செய்தற்கும் இன்பமனுபவித்தற்கும் உதவியாய்நின்று, அவ்வாற்றான் பயனாகிய புகழையும் வீட்டையும் பயக்குமென்பதும்; தாம் பிறரிடத்துச் செய்யும் கருணையோடும் பிறர் தம்மிடத்துச்செய்யும் அன்போடுங் கூடாத பொருளீட்டம் பசுமட்கலத்துள் வார்த்துவைத்த நீர்போல ஈட்டியவனையுங் கொண்டிறத்தலால் அப்பொருளீட்டத்தை விரும்பாராகி நீங்கக்கடவரென்பதும்; வைத்தாரிறந்து போக நெடுங்காலம் நிலத்தின்கீழ்க் கிடந்து பின் கண்டெடுத்ததும் தாயாதிகள் பெறுதலுமாய பொருள்களும், மரக்கலங்களிலும் வண்டிகளிலும் வரும் பண்டங்களுக்கு வாங்கும் வரிப்பொருளும், பகைவரை வென்று திறையாகக்கொள்ளும் பொருளும் அரசனுக்குரிய பொருள்களாகு மென்பதும்; பொருளுள்ளவன் மேற்கொண்ட தொழில் அச்சமும் வருத்தமுமின்றி இனிது முடியுமென்பதும்; பகைவரது

* பொருள் எல்லார்க்கும் எந்நாளும் அவசியம் வேண்டுவதாய் வருதல்பற்றியும் பகையாகிய இருளைக் கெடுத்தல் பற்றியும் பொய்யா விளக்கெனப்பட்டதென் றறிக.

செருக்கைக் கெடுக்கும் ஆயுதம் பொருளாயிருத்தலால், தமககு மேன்மையுண்டாகக் கருதுபவர் பொருளைச் சம்பாதிக்ககடவ ரென்பதும், இங்கு அறியத்தக்கவைகளாம்.

## ௭௭ - படைமாட்சி.

இனி அப்பொருளினால் ஆவதாய் வெல்வதாகிய படையை இரண்டதிகாரத்தாலே சொல்லத் தொடங்கி, முதலிலே படை மாட்சி சொல்லுகிறார். அஃதாவது சேனையினது நன்மையாம். (அதிகார முறைமையும் இதனாலே விளங்கும்).

> தார்தாங்கிச் செல்வது தானை தலைவந்த
> போர்தாங்குந் தன்மை யறிந்து. (௭)

(இ - ள்.) தானை - சேனையாவது, தலைவந்த - பகைவராலே வகுக்கப்பட்டுத் தனமேல்வந்த, போர் - படையின போரை, தாங்குந்தன்மை - விலக்கும் வகுப்பை, அறிந்து - தெரிந்து வகுத்துக் கொண்டு, தார் - அவரது தூசிப்படையை, தாங்கி - தன்மேல் வாராமல் தடுத்து, செல்வது - தான அதன்மேலே செல்வதே எ - று.

படைவகுப்பாவது வியூகம்; அஃது எழுவகை உறுப்புகளை யுடையதாய், வகையால் நான்காய் விரியால் முப்பதாம். அவயவம் ஏழாவன - உரம், இறக்கையிரண்டு, மத்தியம், பிரதிக்கிரகம், பிரிட்டம், கோடியென்பவை. வகை நானகாவன - தண்டம் (சேனையைக் குறுக்காக நிறுத்தல்), மண்டலம் (பாம்பு மண்டலமிடுவதுபோல நிறுத்தல்), அசங்கதம் (வேறு வேறாக நிறுத்துதல்), போகம் (யானை, தேர், குதிரை, காலாட்களை ஒன்றுக்குப்பின் ஒன்றாக நிறுத்துதல்) என்பவை. விரி முப்பதாவன- தண்டவிரி பதினேழும், மண்டலவிரி இரண்டும், அசங்கதவிரி ஆறும், போகவிரி ஐந்தும் என்பவை. இவற்றின் பெயர்களும் இலக்கணமும் இங்கே சொல்லப்புகில் விரியும். அவையெல்லாம் வடநூல்களிற் கண்டு கொள்க.

தேர் யானை குதிரை காலாள் என்னும் நான்குறுப்புக்களாலும் நிறைந்து போரிலே காயம்படுதற்கு அஞ்சாது நின்று பகையை வெல்வதாகிய படை அரசன் செல்வங்கள் எல்லாவற்றுள்ளும் முதன்மையாகிய செல்வமென்பதும்; அப்படை மூலப்படை, கூலிப்படை, நாட்டுப்படை, காட்டுப்படை, துணைப்படை, பகைப்படை என ஆறுவகைப்படுமென்பதும்; அவற்றுள் அரசன் முன்னோரைத் தொடங்கிவரும் மூலப்படை அழிவின்மையால் வீரமும் எப்பொழுதும் தமது நிலைமையில் தாழாமையும், ஊழினால் குறைவு வந்தவிடத்து உயிர் வாழாமையும் உடையதாயும், அரசனிடத்து அன்புடைமையால் பகைவரால் வஞ்சிக்கப்படாததாயும் இருக்குமென்பதும்; அஃது அத்தன்மையதாயிருத்தலால் தான் சிறிதாயவிடத்தும் அரசனுக்குப் போரில் அழிவுவந்தால் தன்மேலே காயம் படுதற்கு அஞ்சாது நின்று தாங்கும் சௌரியத்தை யுடையதென்பதும்; பகைவரைக் கடிதிற்கொன்று நிற்றற்கேதுவாகிய தறுகண்மையும், அரசனுக்குத் தாழ்வுவாராமற் காத்தற்கேதுவாகிய மானமும், தோற்றோடுவார் முதுகின்கண் வாளை வீசாமைக்கேதுவாகிய முன்னை வீரராயினார் சென்ற நல்வழியிலே செல்லுதலும், பகைவரால் வஞ்சிக்கப்படாமைக்கேதுவாகிய (அரசனால்) நம்பப்படுதலும் அம்மூலப்படைக்கு அரணாகுமென்பதும்; அத்தகைய படை அலங்கரிக்கப்பட்ட தேர் யானை குதிரைகளுடனும் பதாகை (பெருங்கொடி), கொடி, குடை, பல்லியம் (சங்கீதம்), காகளம் (எக்காளம்) முதலியவற்றின் தோற்றப்பொலிவாலே பெருமையை அடையுமென்பதும் இங்கு அறியத்தக்கவைகளாம்.

## ௭௮. படைச்செருக்கு.

அஃதாவது அச்சேனையினது வீரமிகுதியாம். அதிகார முறைமையும் இதனாலே விளங்கும்.

**பேராண்மை யென்ப தறுகணொன் றுற்றக்கால்**
**ஊராண்மை மற்றதன் எஃகு.** (௩)

(இ - ள்.) தறுகண் - பகைவரிடத்தே முகங்கொடாமற் செய்கின்ற வீரத்தை, பேராண்மை என்ப - நூலோர் மிகுந்த ஆண்மையாகுமென்று சொல்லுவார்; ஒன்றுற்றக்கால் - அவர்க்கு ஒரு தாழ்வு

வந்ததாயின், முகங்கொடுத்து அதனைத் தீர்த்துக்கொள்ளுதற் பொருட்டு, ஊராண்மை - உபகாரஞ்செய்தலை, அதன் - அதற்கு, எஃகு - கூர்மையாகும், என்ப - என்று நூலோர் சொல்லுவர், எ-று.

என்ப என்பது எஃகு என்பதனோடும் பொருந்தி நின்றது. ஊராண்மை - உபகாரஞ் செய்யுந்தன்மை. அஃதாவது தனதுசேனை முழுதும் போரிலிறக்கத் தனியனாகப்பட்ட இலங்கைக்கரசனை இராவணனது நிலைமையைப் பார்த்து, அயோத்திக்கரசனை இராமபிரான் போர்செய்யாது இன்று போய் நாளை உனது சேனையோடு போருக்கு வரக்கடவாயென்று விட்டாற்போல்வது. மற்று - அசை. இதுவும் "கான முயலெய்த வம்பினில் யானை, பிழைத்தவே லேந்த லினிது" என்னும் முன்பாட்டும் தழிஞ்சி. தழிஞ்சி - இளைத்தவரை எதிராது தழுவல்.

வீரனெனப்படுவானொருவன் காட்டில் ஓடுகிற முயலைத் தப்பாமல் எய்த அம்பை ஏந்துதலினும் வெளிநிலத்திலே நின்ற யானையை எறிந்து தப்பிய வேலை ஏந்துதலைத் தனக்குச் சிறப்பாக மதிப்பானெனபதும்; தன் கையிலேந்திய வேலினால் யானையை யன்றி எறியானென்பதும்; கோபமிகுதியால் வேறொரு வீரனால் எறியப்பட்ட வேல் தன் மார்பிலே பிளந்து புதைந்ததை யறியா னென்பதும்; பகைவரை வெகுண்டு நோக்கியகண் அவர் வேலைக் கொண்டெறிய அதற்காற்றாது அந்நோக்கை யழித்து இமைக்குமாயின் அது வீரர்க்குப் புறங்கொடுத்தலாகக் கருதப்படுமாதலால் வீரர் அதனைச் செய்யாரென்பதும்; வீரனானவன் போரில் காயப்படாத நாட்களைத் தனக்குப் பயன்படாது வீணாகக் கழிந்த நாட்களாகக் கருதுவானென்பதும்; புகழை விரும்பிய வீரன் உயிரை விரும்பா னென்பதும்; வீரர் போர்பெற றறியாமையால், அது பெற்றால் தம் முயிர்ப் பொருட்டு அஞ்சாதவராய்த் தம்மரசன் அது வேண்டா வென்று தடுக்கினும் நில்லா*ரென்பதும்; இன்னது செய்யேனாகில்

* "புட்பகத் தேவ னுகலிற் சாவேம் யாமென, நீங்கா மறவர் வீங்குதோள் புடைப்ப".—புறநானூறு. இதன்பொருள்—புட்பக விமானத்திற் செல்லும் தேவனாக ஆதலால் யாம் போரிற் சென்று பகைவரோ டெதிர்த்து மடிவோமென்று தம்முள் நீங்குதலில்லாத வீரர் தம்முடைய பூரித்த தோள்களைக் கைகளால் தட்ட என்பது.

நகவெனத் தாங்கூறின சபதம் தப்பாமற் பொருட்டுச் சென்று சாகவல்ல வீரரைக் குற்றங்கூறுவா ரில்லையென்பதும்; வீரர் தம்மரசன் தாம்செய்த உபகாரங்களை எண்ணி உருகியழுமாறு போரில் இறப்பாரெனபதும்; அத்தகைய இறப்பானது இரந்தாயி னுங் கொள்ளுந் தகுதியையுடைய † தெனபதும இங்கு அறியத் தக்கவைகளாம்.

---

## எகூ. நட்பு.

இனி அப்படைபோல் அரசனுக்குத் தொழிலிடத்து உதவுவ தாகிய நட்பினை ஐந்ததிகாரம் உடம்பாட்டு வாயிலாலும் பன்னிரண் டதிகாரம் எதிர்மறை வாயிலாலும் சொல்லத்தொடங்கி, விதிமுக வதிகாரம் ஐந்தினுள்ளும முதலிலே நட்புச் சொல்லுகின்றார். அஃ தாவது இனனதெனபதும் அதிகார முறைமையும இதனுள் விளங் கும்.

> செயற்கரிய யாவுள நட்பினதுபோல
> வினைக்கரிய யாவுள காப்பு. (க)

(இ - ள்.) நட்பின - நட்புப்போல், செயற்கரிய- சமபாதித்துக் கொள்ளுதற்கு அரிய பொருள்கள், யா - எவைகள், உள - இருக் கின்றன; சம்பாதித்துக்கொண்டால், அதுபோல் - அதுபோல, வினைக்கரிய - பகைவர்செய்யுந் தொழிலுககுப் புகுதற்கரிய, காப்பு- காவலானவை, யா - எவைகள், உள - இருக்கின்றன, எ - று.

நட்புச் செய்தற்கு ஆவாரைப் பெறுதலும், பெற்றால் செய் யும் உபாயமும், செய்தால வேறுபடாமல் நிறறலும முதலானவை அருமையாகலால், நட்புப்போல் செய்தற்கரியனவில்லை என்றும், செய்தால் பகைவர் அஞ்சிப் போர்தொடங்காராதலால் அதுபோல் போர் வாராமற் காத்தற்கு அரிய காவலில்லை என்பும் சொன்னார். நட்பு இயற்கை செயற்கையென இருவகைப்படும். அவைகளில் இயற்கைநட்பு பிறப்புமுறையாலாகியதும் தேயமுறையாலாகியதும்

---

† சுற்றத்தார் அழ வீட்டினிடத்து நோயினால சாவார பழ வினைப்பயனையே அடைதலால், அப்போது அடுத்த வினையால வானுலகத்தை அடைவிக்கும் இறப்பு இரந்தும் கொளளத்தக்க

என இருவகைப்படும். அவற்றுள் முன்னையது சுற்றமாகலால் அது சுற்றந்தழாலில் அடங்கிற்று; மற்றது பகையிடையிட்ட தேயத்த தாகலால் அது துணைவலியென வலியறிதலுள் அடங்கிற்று. இனி இங்கே சொல்லப்படுவது முன்செய்த உதவிபற்றி வருவதாகிய செயற்கைநட்பே யாகலால், அதன் சிறப்பு இதனாற் கூறப்பட்டது.

அறிவுடையவர் நட்புக்கள் பிறை நிறையுந்தன்மைபோல் நாடோறும் நிறையுந் தன்மையனவாகுமென்பதும்; அறிவில்லாதவர் நட்புக்கள் நிறைந்த சந்திரன் பின்னே குறையுந் தன்மைபோல் நாடோறுங் குறையுந் தன்மையனவாகு மென்பதும்; அறிவுடையவரும் அறிவுடையவரும் செய்த நட்புக்கள் முன்னே சுருங்கிப் பின்னே பெருகுவதற்கும், அறிவில்லாதவரும் அறிவில்லாதவரும் செய்த நட்புக்கள் முன்னே பெருகிப் பின்னே சுருங்குதற்கும் காரணம் தம்முள்ளே முன்னே அறியாமையும் பின்னே அறிதலுமே யாகுமென்பதும்; நூற்பொருள் கற்குந்தோறும் கற்பவர்க்கு இன்பம் மிகுந்து வருதல்போல நற்குணமுடையாரது நட்புப் பழகுந்தோறும் அவர்க்கு இன்பம் மிகுந்துவருமென்பதும்; ஒருவனோடு ஒருவன் நட்புச் செய்தல் தங்களுக்குள் நகைசெய்தற்கு வேற்றமை சொல்லி நகையாடற் பொருட்டல்லாது, அவர்க்கு வேண்டாத செய்கை உண்டானவிடத்து முற்பட்டுக் கண்டித்துப் புத்திசொல்லுதற் பொருட்டே யென்பதும்; ஒருவனோடு ஒருவன் நட்பாதற்கு அவர் ஒரு தேசத்தாராயிருக்கையும் பலதரங்கண்டும் பேசியும் கூடுதலு மாகிய காரணங்கள் வேண்டாது * கோப்பெருஞ் சோழனுக்கும் பிசிராந்தையார்க்கும் போன்று அறிவு ஒத்திருக்குமானால் அதுவே உடனுயிர் நீங்கும் உரிமையினை யுடையதாய நட்பினை யுண்டாக்கு மென்பதும்; கண்டவிடத்து உள்ளமொழிய முகமாத்திரமே மலரும்வகை நட்குமது நட்பாகா தென்பதும்; அன்பால் அகமும் மலர நட்குமதே நட்பாவ தென்பதும்; உண்மையான நட்பினை

* பாண்டிநாட்டிலுள்ள பிசிரென்னும் ஊரில் இருந்த பிசிராந்தையார் என்னும் புலவர் உறையூரில் அரசாட்சி செய்த கோப்பெருஞ் சோழன் என்னும் தனது நண்பன் செல்வந் துறந்து உயிர் துறந்ததைச் செவியுற்றுத் தாமும் உடனே உயிர்துறந்தா ரென்பது கதை.

னெனப்படுபவன தன் நட்பினனைத் தீயவழியினின்றும் நீக்கி நல்ல வழியிற் செலுத்தி அவனுக்குத் துன்பம் வாராது காப்பதோடு, ஊழினாலே துன்பம் வந்தவிடத்து அப்பொழுதே சென்றுதவி அத் துன்பத்தை நீக்கமுடியாமையினால் உடனிருந்து அனுபவிப்பா னென்பதும்; ஒருவரையொருவர் சிறப்பித்துச் சொல்லும் நட்பு நட்பாகாதென்பதும்; ஒருநாளும் வேறுபடாமல் கூடுமிடத்தெல் லாம் மறுமை யிம்மைகளுக்கு உறுதியாகிய அறம பொருள்களிலே தளர்ந்தவிடத்து அத்தளர்ச்சி நீக்கி அவைகளில் நிறுத்துதலே நட் பிற்கு முடிந்த எல்லையாகுமெனபதூஉம் இங்கு அறியத்தக்கவைக ளாம்.

## அ௰. நட்பாராய்தல்.

அஃதாவது முன் சொல்லப்பட்ட இலக்கண முடையவரை ஆராய்ந்தறிந்தே சிநேகிக்க வேண்டுதலால், அவரை ஆராயுந்திறம். அதிகார முறைமையும் இதனாலே விளங்கும்.

> கேட்டினு முண்டோ ருறுதி கிளைஞரை
> நீட்டி யளப்பதோர் கோல. (௬)

(இ - ள்.) ஒருவனுக்குக் கேடெனபது, கிளைஞரை - தனது சிநேகிதராகிற நிலங்களை, நீட்டியளப்பது - குறையாமல் அளப்ப தாகிய, ஓர்கோல - ஒருகோலாம்; ஆகலால், கேட்டினும் - அக் கேட்டினிடத்தும், ஓர் உறுதி - அவராலே பெறப்படுவதொரு நல் லறிவு, உண்டு, (எ - று).

தமது தமது சிநேகத்தினெல்லைகள் சுருங்கியிருக்கவும் செல்வ முள்ள காலத்திலே புறத்து வெளிப்படாமல் வந்தவர் பின் கேடு வந்தவிடத்துச் செயல் வேறுபடுவதால் அக்கேட்டால் அச்சிநேகத் தின் எல்லைகள் அளவுசெய்து அறியப்படு மெனபதுபற்றிக் கேட் டினைக் கோலாக்கியும், அதனால் அவரை அளந்தறிந்தால் ஆவா ரையே கொள்ளுதலால் அவ்வறிவை 'உறுதி' என்றும் சொல்லி னர். கிளைஞர் - ஆகுபெயா. இஃது ஏகதேசவுருவகம்.

"பொடியணி மெய்யர்போலும் பொங்குவெண்ணூலர்போலுஞ்
சடியதோர் விடையர்போலுங் காமனைக் காய்வர்போலும்
வெடிபடு தலையர்போலும் வேட்கையாற் பரவுந்தொண்டர்
அடிமையை யளப்பர்போலும் ஆவடு துறையனாரே"—

என்னும் திருநேரிசையின் கருத்து இவண் ஊகித் துணர்தற்பாலது.

ஆராய்ந்து கொள்ளப்படாத நட்பும் ஆராய்ந்து கொண்ட நட்பை விடுதலும் துன்பந்தரு*மென்பதும்; ஒருவன் குணத்தையும் குடிப் பிறப்பையும் குற்றத்தையும் † சுற்றத்தையும் பலகால் பலவழியால் ஆராய்ந்து அவனோடு நட்புச்செய்தல் வேண்டுமென்பதும்; உயர்ந்த குடியிற்பிறந்து தன்னிடத்து உலகத்தார் சொல்லும் பழிக்கு அஞ்சுபவனது சிநேகத்தை அவன் விரும்பியதைக் கொடுத்தாயினுங் கொள்ளல்வேண்டு‡மெனபதும்; தாம் உலகநடையல்லாததைச் செய்யக்கருதின் அழுமவகைச் சொல்லி விலக்கியும், செய்தக் காற் பின்னும் செய்யாவகைக் கண்டித்துப் புத்தி சொல்லியும், அவ்வுலகநடையைச் செய்யாவிடத்துச் செய்விக்கவும் வல்லாரை

* துனபந்தருவது - சிநேகித்தால் தாம் அவரோனும் வேற்றுமையில்லாமையால் அவரிடத்துப் பழிபாவங்கள் தம்மலையாகலால் என்பதறிக.

† குற்றமில்லாதார் உலகத்திலே இல்லாமையால் உள்ளகுற்றம் பொறுக்கப்படுவதாயின், அவர் நட்பு விடற்பாற்றன்று என்பதை இங்கு குறித்துணர்ந்துகொள்க. "குண(ம்)நாடிக் குற்றமு(ம்) நாடியவற்றுள், மிகைநாடி மிக்க கொளல்" எனனுங் திருக்குறளின் கருத்தும் இங்கு உணர்தற்பாலது.

‡ உயர்ந்த குடியிற் பிறந்தவன் பிழை செய்யாமையாலும், பழிக்கு அஞ்சுபவன் பிறன்செய்த பிழையைப் பொறுத்தலாலும் உயர்ந்தகுடியிற் பிறந்து பழிக்கஞ்சுபவனது நட்பு மிகவும் அருமையுடையதாதலால் அது விலை கொடுத்தும் கொள்ளற்பால தாயிற்று. "இற்பிறந்தார் கண்ணல்ல தில்லை யியல்பாகச், செப்பமு(ம்) நாணு மொருங்கு" (திருக்குறள்).

ஆராய்ந்து, அன்னவரது நட்பினைக் கொள்ளல் வேண்டுமென்பதும்; மூடரது நட்பையும், ஆபத்திற் கைவிடுவாரது நட்பையும் ஒழித்தல் வேண்டுமென்பதும்; உலகத்தோடொத்துக் குற்றமற்றார் நட்பினையே பழகுதல் வேண்டுமென்பதும்; உலகத்தோடு ஒத்தலில்லாதவரது நட்பை அறியாது கொண்டால் அந்நட்பினை அவர் வேண்டியதொன்றைக் கொடுத்தாயினும் விடவேண்டுமென்பதும் இங்கு அறியத்தக்கவைகளாம்.

## அ௯. பழைமை.

அஃதாவது நட்பினரது பழையராந் தன்மைபற்றி அவர் பிழைத்தன பொறுத்தல். பழைமை யெனனும் காரணப்பெயர் அப்பழைமைபற்றிச் செய்யும் பிழைத்தன பொறுத்தலாகிய காரியத்திற்கு ஆயிற்று. ஆராய்ந்து சிநேகிக்கப்பட்டாராயினும் பொறுக்கப்படும் குற்றமுடையராகலாலும் ஊழ்வகையாலும் நட்புக் கொள்ளப்பட்டவரிடத்துப் பிழையுளதாமென்பது அறிவித்தற்கு, இது நட்பாராய்தலின் பின் வைக்கப்பட்டது.

பேதைமை யொன்றோ பெருங்கிழமை யென்றுணர்க
நோதக்க நட்டார் செயின். (௫)

(இ - ள்.) நோதக்க - தாம் வெறுக்கத்தக்கவைகளை, நட்டார் - சிநேகித்தவர், செயின் - செய்தாராகில், அதற்குக் காரணம், பேதைமை ஒன்றோ - அறியாமையொன்றே யல்லாமல், பெருங்கிழமை - மிகுந்த உரிமையுமாகும், என்று உணர்க - என்று அறிக, (எ - று).

ஒன்றோ என்பது எண்ணுப் பொருளில் வந்த இடைசொல். செயினெனவே, தம்மியல்பினால் செய்யாமை பெற்றாம். கைப்பொருள் இழத்தற்குக் காரணமாகிய ஊழால்வரும் பேதைமை யார்க்கும் உண்டாகலால் தமக்குத் தீங்குசெய்தாரென்றுவது ஊழ்வகையால் எம்மால் வரக்கடவது ஒற்றுமை மிகுதிபற்றி அவரால் வந்ததென்றுவது கொள்வதல்லாமல் அனபில்லாமையென்று கொள்ளப்படாதென்பதாம். கெடும்வகை செய்யின் அதற்குக் காரணம் இதனாற் கூறப்பட்டது.

பழைய சிநேகிதர் * உரிமையாலே செய்தவைகளைச் சிறிதாயி னும் உல்லங்கனஞ் செய்யாமல் அவைகளுக்கு உடன்படுவதாகிய நட்பே பழைமையென்று சொல்லப்படுவ தென்பதும்; அதுவே நட்பிற்கு அவயவமாக மதிக்கப்படு மென்பதும்; அதனால் அவ்வுரி மைக்கு இனியராதல் அறிவால் நிறைந்தோர்க்கு முறையாகு மென் பதும்; தாம் உடம்படாத காரியமானாலும் நட்பினர் உரிமையி னாலே செய்தவைகளுக்குத் தாம்செய்தவைபோல் உடம்படாராயின் அவரோடு பழையதாய்வந்த நட்பு பயனற்றதாகு மென்பதும்; ஒரு வர்க்குத் தங்கருமம் தாம் அறியாமல் முடிந்திருக்கையைக் காட்டிலும் மேலான நன்மை வேறில்லாமையால், நட்பினர் உரிமையால் கேளாது தங்கருமத்தைச் செய்தாராயின், அச்செய்கையை அறி வுடையோர் மிகவும் விரும்புவரென்பதும்; நட்பின் வரம்புகடவாது அதன்கண்ணே நின்றவர் தம்மோடு பழைமையில் வேறுபடாது நின்றவரது நட்பினை அவராலே கேடு நேர்ந்தவிடத்தும் விடா ரென்பதும்; அன்புடனே பழையதாய்வந்த நட்பினையுடையவர் தமது நட்பினர் தமக்குக் கெடுதி செய்தாலும் அவரிடத்து அன்பு நீங்கா ரென்பதும்; நட்பினர்செய்த † பிழையைத் தாமாகவே யல்லாமல் பிறர்சொல்லினும் கொள்ளாத உரிமையறிய வல்லவர் அப்பிழை பொறுத்தலாகிய உயர்ந்த குணத்தினாலே சிறப்புற்று விளங்குவரென்பதும்; உரிமைகெடாமல் பழையதாய்வந்த நட்பினை யுடையவரது நட்பினை அவர் பிழைநோக்கி விடாதாரை நம்மிடத் தும் இவர் இப்படிப்பட்டவ ராவரென்று யாவரும் தாமேவந்து நட்பாக்கிக்கொள்வ ரென்பதும்; அத்தகைய பண்பின் மிக்காரைப் பகைவரும் விரும்பி அடைவ ரென்பதும் இங்கு அறியத்தக்கவை களாம்.—

* உரிமையிற் செய்பவை - கருமங்கள் செய்யும்போது கேளாது செய்தல், கெடும்வகை செய்தல், தமக்கு வேண்டுமவை களைத் தாமே கொள்ளுதல், பணிவச்சங்க ளில்லாமை யென்றிவை முதலானவை.

† பிழையாவன - சொல்லாமல் நற்பொருள் வௌவல், பணி யாமை, அஞ்சாமை முதலானவை.

இனிப் பொறுக்கப்படாத குற்றமுடைமையால் விடத்தக்க தாகிய நட்பு நட்பாராய்தல் அதிகாரத்திலே சுருங்கச் சொல்லிய அளவால் அடங்காமையால், அதனை இருவகைப்படுத்தி இரண்டதி காரத்தாலே சொல்லத்தொடங்கி, முன்னே தீநட்புச் சொல்லு கிறார். அஃதாவது தீக்குணத்தாரோடு உண்டாகிய நட்பாம். குணத்தினது தீமை ஒற்றுமைபற்றி அத்தீக்குண முடையாரோடு செய்த நட்பினமேலாயிற்று. அதிகார முறைமை சொல்லாமலே நம.

நகைவகைய ராகிய நட்பிற் பகைவரால்
பத்தடுத்த கோடி யுறும். (௭)

(இ - ள்.) நகைவகையராகிய - தாம் அறிதல் வகையராகாமல் நகுதல் வகையராதற்குக் காரணமாகிய, நட்பின் - நட்பால் வருவன வற்றைப் பார்க்கிலும், பகைவரால் - பகைவரால்வருவன, பத்தடுத்த கோடியுறும் - பத்துக்கோடி மடங்கு நல்லவையாம், எ - று.

நட்பு - ஆகுபெயர். அந்நட்பாவது விட (காமுக)ரும் தூர்த்த (வஞ்சக)ரும், வேழம்ப (கழைக்கூத்த)ரும் போன்று பலவகையால் நகுவித்துத் தாம் பயன்கொண் டொழிவாரோடு உண்டாகியது. பகைவரால் என்பது வருவன என்பதை அவாய் (வேண்டி) நிற்றலால் அது (வருவன என்பது) வருவிக்கப்பட்டது. பத்தடுத்த கோடி - பத்தாகத் தொடுத்த கோடி. அந்நட்பினால் வரும் இன் பங்களிலும் அப்பகைவரால்வரும் துன்பங்கள் மிகநல்லவென்பதாம்.

நற்குணமில்லாதவரது நட்பும், நட்பளவுபாராமல் அந்நட் பால்வரும் பிரயோசனத்தளவு பார்ப்பவரது நட்பும், கொடுப்பா ரைக் கொள்ளாமல் அவர் கொடுப்பதைக் கொள்ளும் வேசையர் போல்வாரது நட்பும், பிறர்கேடு நோக்காது அவர் சோர்வு பார்க்கும் கள்வரது நட்பும், போர்வாராத முன்னெல்லாம் தாங்குவதுபோலி ருந்து போர்வந்தவிடத்துக் களத்திடைத் தள்ளிவிட்டு ஓடுகின்ற

† கதியைந்தும் சாரிபதினெட்டும் போர்செய்யுந் திறமும் அறியாத குதிரைபோன்ற மூடரது நட்பும், செய்தவைத்தாலும் காவலாகாத கீழ்மக்களது நட்பும், தம்மாலாகும் காரியத்தை ஆகாதாகவும் ஆகாத காரியத்தை ஆவதாகவும் நடிப்பவரது நட்பும், சொல்லும் செயலும் வேறுபட்டிருப்பவரது நட்பும், தனியே இருக்கும்போது உறவாடிச் சபையிலே பழிப்பவருடைய நட்பும் ஒழிக்கப்பட வேண்டியவை யென்பதும்; அறிவிலானது மிக நெருங்கிய நட்பைப் பார்க்கிலும் அறிவுடையானது பகைமை நன்றென்பதும் இங்கு அறியத்தக்கவைகளாம்.

## ௮௫. கூடாநட்பு.

இனி ஏனைக் கூடாநட்புக் கூறுகின்றார். அஃதாவது பகைமையால் மனத்தாற் கூடாதிருந்தே தமக்குச் சமயங் கிடைக்குமளவும் புறத்திலே கூடி நடப்பவர் நட்பு.

> மிகச்செய்து தம்மெள் ளுவாரை நகச்செய்து
> நட்பினுட் சாப்புல்லற் பாற்று. (௯)

(இ - ள்) அரசநீதியானது, மிகச்செய்து - பகைமைதோன்றாத படி புறத்திலே நட்பை மிகச்செய்து, தம்மெள்ளுவாரை - உள்ளே தம்மை இகழும் பகைவரை, நட்பினுள் - தாமும அந்நட்பினிடத்தே நின்று, நகச்செய்து - புறத்திலே அவர் மகிழும்படிசெய்து, சாப் புல்லற்பாற்று - உள்ளே அம்மகிழ்ச்சி கெடும்படிக்குப் பொருந்துந் தன்மையுடையது, எ - று.

அரசநீதி யென்பதும் நின்றென்பதும் அவாய் நிலையால் வந்தன. உள்ளொன்று புறமொன்றுதல் ஒருவனுக்குத் தகாதாயினும் வஞ்சமனத்தராய் உறவாடும பகைவரிடத்தாயின் அது தகுமென, பதுநீதிநூலின் துணிபென்பார், அதன்மேல் வைத்துக் கூறினார்.

---

† கதி ஐந்து - மல்லகதி, வானரகதி, மயூர(மயில்)கதி, வல்லிய (புலி) கதி, விடை(இடப)கதி என்பன. கதி - நடை. சாரி - வட்டமாயோடல்.

"மாதர்க்கிதங், கவிவாணர்க்குச் சால வணக்கங், குருநாதர்க்கு நீதியோ டாசாரங், கல்வி நயந்தவர்கருக் கோதற்ற வாசகம், பொய்க்குப் பொய, கோளுக்குக்கோ, ளறிவிலாதாக் கிரட்டிப் பறிவுடை யாரசெயு மாண்மைகளே" எனனும் பாசுரத்தின கருத்து இஙகே உணரத் தக்கதாகும். சாவ என்பதன இறுதிநிலையாகிய வகாரவுயிர்மெய்விகுதி செய்யுள் விகாரத்தால் தொக்குநின்றது, * "கோட்டினவாய்ச் சாககுத்தி" என்புழிப்போல. எள்ளுவாரைப் புல்லெனக் கூட்டுக.

உள்ளே பகைகொண்டு வெளிக்கு நட்பினார்போல் நடிப்பவரது நட்பு இடம்பெற்றால் பெண்பாலார் மனம்போல † வேறுபடுமென்பதும்; கண்டபொழுது முகத்தால் இனியவாகச் சிரித்து உள்ளே பகை பாராட்டும் வஞ்ச நெஞ்சத்தருக்குப் பாப்பட வேண்டுமெனபதும்; அத்தகைய பகைவர் பல நல்லநூல்களைக் கற்றவிடத்தும் அதனால் மனந்திருந்தி நட்பாகாரெனபதும்; மனத்தால் தம்மோடு பொருந்தாதவர் தம்பகைமையை மறைத்தற் பொருட்டு இனியவாகச் சொல்லுகிற வஞ்சனைச் சொல்லை நல்ல சொல்லென நினைத்து அவரைக் கருமங்களிலே தெளிதல் முறைமையனறென்பதும்; பகைவர் நட்பினர்போல் நலல சொற்களைச் சொனனாராலும் அவரது சொற்கள் நன்மைதாராமை அச்சொல்லியபொழுதே அறியப்படுமென்பதும்; பகைவரிடத்தே பிறக்குஞ் சொல்லினது வணக்கத்தை தமக்கு நன்மை செய்தலைக் குறிதததென்று நினைக்கக் கூடாதெனபதும; அவவிதமே அவர் அழுதகண்ணீரும் எண்ணத தக்கதென்பதும்; அப்பகைவர் தமக்கு நட்பினராய் நடக்குங்காலம வந்தால் தாமும் அவரோடு முகத்தால் நட்புச்

* இதன பொருள - எருதுகள தம்மைப்பிடிக்க வருவாரைக் கொம்பினாலே சாகும்படி குத்தி எனபது.

† அவர்மனம் வேறுபடுதல் "பெண்மனம் பேதின ஒருருப் படுப் பேனென்னும், எண்ணி லொருவன" எனபதனாலு மறிக - (வளையாபதி) இதனபொருள் - பெண்களினுடைய மனத்தை வேறுபடுதலில்லாமல் ஒரு தன்மையதாகச் செய்வேன என்று கூறுகின்ற ஆராய்ச்சியில்லாத ஒருவன் எனபது.

செய்து மனத்தால் அந்நட்பை நீங்கிப் பின்னர் அவ்விதம் முகத்தால் நட்புச் செய்தலையும் விடவேண்டுமென்பதும் இங்கு அறியத் தக்கவைகளாம்.

## ௮௪. பேதைமை.

இனிப் பொறுக்கப்படாத குற்றமுடைமையினால் விடத்தகுவதாகிய தீநட்பு, கூடாநட்புகளை எதிர்மறுத்துப் பகை முகத்தாலே சொல்லத் தொடங்கினார். அப்பகைதான பகைவர் மனைவி மக்கள் முதலியோரிடத்துச் சமயநோக்கிச் செய்ய வேண்டுவதாதல் பற்றி முழுவதும் விடக்கூடிய குற்றமல்லாமையினால் உண்டாய * குரோத(கோப)த்தாலும் † காமத்தாலும் வருவதாம். அவைகளுள் குரோதத்தால் வருபவை ஐந்து அதிகாரங்களாலும் காமத்தால் வருபவை ஐந்து அதிகாரங்களாலுஞ் சொல்லுவார், அவ்விரண்டற்கும் காரணமாகிய மயக்கத்தைப் பேதைமை புல்லறிவாண்மையென இருவகைப்படுத்தி, இரண்டு அதிகாரங்களாலே சொல்லத்தொடங்கி முதலிலே பேதைமை சொல்லுகிறார். அஃதாவது யாதொன்றும் அறியாமை.

ஒருமைச் செயலாற்றும் பேதை யெழுமையும்
தான்புக் கழுந்து மளறு. (௫)

(இ-ள்.) பேதை - மூடனானவன், எழுமையும் - வரும் பிறவிகளெல்லாம், தான்புக்கு - தான புகுந்து, அழுந்தும் - அழுந்துதற்கு இடமாகிய, அளறு - நரகத்தை, ஒருமை - இவ்வொரு பிறப்புள்ளே, செயல் ஆற்றும் - செய்துகொள்ள வல்லவனாவான, எ-று,

* குரோதத்திற் பிறக்குங் குற்றங்கள்-கோள், துணிவு, துரோகம், பொறாமை, பிறன் குணத்தைச் சகியாமை, பிறன் பொருளை யபகரித்தல், காரணமின்றி யடித்தல், திட்டுதல் என எட்டு.

† காமத்திற் பிறக்குங் குற்றங்கள் - வேட்டையாடுதல், சூதாடுதல், பகலில் தூங்குதல், வம்பளத்தல், பெண்ணேவல் செய்தொழுகல், குடித்தல், பாட்டு கூத்து வாத்தியங்களில் விருப்பம், றன திரிச்சல் எனப் பத்து.

எல்லாப் பிறப்பும் தேவர் மனிதர் விலங்கு பறவை ஊர்வன நீர்வாழ்வன தாவரம் (மரமுதலியவை) என ஏழாய் அடங்குதல் அறியப்பட்டமையின் 'எழுமையும்' என்றார். மறுமை கொடுத்தார் இவ்விடத்துப் பிறப்புக்களிலும் கொடுவினை வசத்தால் அந் நரகத்துன்பம் அனுபவித்து வருதலால் 'எழுமையுந் தான்புக்கு அழுந்தும் அளறு' என்றார். முடிவில்லாத காலமெல்லாம் (நெடுங்காலம்) தான் நரகத்துன்பம் அனுபவித்தற்குக் காரணமாகிய கொடுவினைகளை அறிந்து சில காலத்துள்ளே செய்து கொள்ளுதல் பிறர்க்கு அரிதாதலால் 'ஆற்றும்' என்றார். இதனால் அவன் மறுமைச் செயல் சொல்லப்பட்டது.

பேதைமையாவது கேடுபயப்பனவாகிய வறுமை பழி பாவங்களைக் கைக்கொண்டு, ஆக்கம் பயப்பனவாகிய செல்வம் புகழ் அறங்களைக் கைவிடுதலால், அது ஒருவனுக்கு ஏனைக் குற்றங்களெல்லாவற்றினும் மிக்கதென்பதும், இம்மைக்கும் மறுமைக்கும் ஆகாவென்று நூலோர் விலக்கிய செயல்களை விரும்பிச் செய்தல் ஒருவனுக்குப் பேதைமையெல்லாவற்றிலும் மிகுந்த பேதைமையாகுமென்பதும், பழிபாவங்களுக்கு நாணாமை முதல் கருமங்களில் செய்வன தவிர்வனவற்றை ஆராயாமையும் யாவரிடத்தும் தாட்சணியமில்லாத சொற்செயலுடைமையும் குடிப்பிறப்புக் கல்வி ஒழுக்கம் முதலியவற்றைப் பேணாமையும் பேதைத் தொழிலென்பதும், மனமொழி மெய்களை அடக்குதற்குக் காரணமாகிய நூல்களை ஓதியும் அவ்வடக்கத்தால் வரும் பயனை அறிந்தும் அதனை அறியும்படி பிறர்க்குச் சொல்லியும், தான் அடங்கி நடவாதவன் பேதையிற் பெரியவனென்பதும், அத்தகைய பேதையானவன் தான் மேற்கொண்ட காரியத்தைக் கெடுப்பதோடு தன்னையுங் கெடுத்துக் கொள்வானென்பதும், பேதையானவன் பெரிய செல்வத்தை ஊழால் அடைந்துவிட்டது, தன்னோடு ஒரு சம்பந்தமுமில்லாத அயலார் திருப்தியாயனுபவிக்க, எல்லாச் சம்பந்தமுமுடைய நல்லோர் பசிக்கு உணவும்பெறாது துன்புறுவரென்பதும், பேதை பொருள் பெற்றானாயின் மதுவுண்ட பித்தன்போல மயக்கத்தை மிகவு மடைந்து தலைதடுமாறுவானென்பதும், மூடரது நட்பு முன் நட்பதிகாரத்திற் கூறியபடி தினந்தோறும் தேய்ந்து வருதலால் அந்

நட்புப பின பிரிவு வநதவிடததது அனபநதாராது இனபந தரு மெனபதும, அசுததமிததத காலைப படுக்கையினமேல வைததால அபபடுககை அசுததமாதல போல, மூடன சானறோர சபையில புகுநதால அசசபை இழிவு செயயபபடுமெனபதும இஙகு அறியத தககவைகளாம

## ௮௫. புல்லறிவாண்மை.

புலலறிவாணமையெனபது புலலிய அறிவை ஆளுந தனமை என விரியும அஃதாவது தான சிறறறிவினனாயிருநதே தனனைப பேரறிவினனாக மதிதது உயாநதோா சொலலும உறுதிசசொலலைக கொளளாமை

ஏவவுஞ் செயகலான றானறேறா னவவுயிர
போஒ மளவுமோா நோய. (அ)

(இ - ள்.) புலலறிவாளா, தமககு உறுதியானவை களை அறிவுடையோா சொலலக கேடகவும, செயகலான செயயான அதுவலலாமல, தான தானேயும, தேறான இவை செயயததகு வனவெனறு அறியான அவவயிா அநத உயிரானது, போமளவும உடமபைவிடடு நீஙகுமளவும, ஓா நோய நிலததிறகுப பொறுததற கரியதொரு நோயாம, எ - று

உயிா தான அறிவுநதனமையதாயிருநதும நினற தேகவசத தால மயஙகுநதனமையதாய வேறுபடுதலால அவவுயிா எனறும, உடமபினினறும நீஙகியபொழுதே பூமிககு உயிா உடலெனனும இரணடனுள உடல ஒனறைப பொறுததல கூடுதலால போமளவும' எனறும குலமலை முதலானவைகளைச சுமககினற பூமிககுப பாவவுடமபு பெருஞசுமையாயத துனபஞ செயதலால 'ஓாநோய' எனறும சொலலினா

அறிவானது ஒருகாலததும அழியாத இயலபினை யுடையதாத லாலும, மறறைப பொருளகளெலலாம ஒருகாலததிற றோனறி ஒரு காலததில அழியும இயலபினை யுடையனவாதலாலும, அறிவுடைய

ஒருவன் மற்றைப் பொருளில்லாவிடத்தும் இம்மை மறுமைப்பயனை இழவாமையால் செல்வவானே யாவானென்பதும்; அறிவில்லாத ஒருவன மற்றைப் பொருள்களை மிகப்பெறவிடத்தும் அவ்விம்மை மறுமைப் பயனை அடையாமைபால் தரித்திரனே யாவானென்பதும்; புல்லறிவாளா தம்மைத்தாமே யாம் நல்லறிவுடையோமென்று நன்குமதிக்கும் மயக்கத்தினுல் பகைவர் செய்தற்கரிய துன்பங்களையும் தாமே தமககு உணடாககிக் கொள்ளுவரென்பதும்; புல்லறிவாளர் தாம் கல்லாத நூல்களையும கறறவராகத் தாம் மேலிட்டுக் கொண்டு பேசுவரென்பதும்; அதனுல் அவர் குற்றமறக் கற்றதொரு நூலுண்டாயின் அதனிடதது பிறர் ஐயப்படுவரெனபதும்; புல்லறிவாளர் தம்மிடதது உண்டாகும் குற்றங்களை ஒழிக்காமல் தம்மை நன்னடக்கையுள்ளவராகக் கருதுவரெனபதும்; அறிவிலான் பெறுதற்கரிய உபதேசப் பொருளைப் பெற்றாலும் உட்கொள்ளாது போக்குவானென்பதும்; அவவுபதேசப் பொருளால் அடையும் நன்மையை அறியாமையினுல் அவன் தானே தனக்கு மிகுந்த வருத்தத்தை [பொறுத்தற்கரிய துன்பத்தை]ச்செய்து கொள்ளுவானெனபதும்; புல்லறிவாளன தன்னை எல்லாம அறிந்தவனுக மதித்தலாற் பிறரால ஒன்றை அறியுந்தன்மையிலா னெனபதும்; அனனவனுக்கு நல்லறிவை வருவித்தல் ஒருவழியாலும் முடியாதெனபதும்; அவனுக்கு உறுதிப்பொருளை உணர்த்தப் புகுவோன அவனுற் பழிக்கப்பட்டு அவமானமடைவா னென்பதும்; உயர்ந்தோர் பலரும் உண்டென்று சொலவும் கடவுளும், மறுபிறப்பும், இருவினைப்பயனும் முதலாகிய பொருள்களைப் புல்லறிவாளன இல்லையென்று சொல்லுவானெனபதும்; அதனுல் அவன் மனிதனெனக் கருதப்படாது பூமியிலே காணப்படுகிற ஒரு பேயெனறு கருதப் படுவானென்பதும் இங்கு அறியத்தக்கவைகளாம்.

## ௮௬. இகல்.

இனிப் பேதைமை புல்லறிவாண்மைகளால் வரும் கோபம் காமங்களுக்குள்ளே அரசருக்குக் கோபம் பெரும்பான்மையதாக இருப்பதாகலின், அதனாலவருங் குற்றங்களைச் சொல்லத்தொடங்கி, முதலிலே இகல் சொல்லுகின்றார். அஃதாவது இருவர் தம்முள்ளே போர்செய்து வலிதொலைதற்குக் காரணமாய மாறுபாடு.

இகலின் மிகலினி தென்பவன் வாழ்க்கை
தவலுங் கெடலு நணித்து. (௬)

(இ - ள்.) இகலின் - பிறரோடு மாறுபடுதலிலே, மிகல் - மிகுதல், இனிதென்பவன் - எனக்கு இனிதென்று அம் மாறுபடுதலைச் செய்பவனது, வாழ்க்கை - உயிர்வாழ்க்கை, தவலும் - பிழைத்தலும், கெடலும் - முழுதுங் கெடுதலும், நணித்து - சிறிதுபொழுதில் உண்டாம், எ - று.

மிகுதல் - மேலுமேலு மெழும்பல். இனிதென்பது தான் வெல்லுதல் குறித்தல். பிழைத்தல் - வறுமையாலே துன்பமுடையனாதல். முழுதுங் கெடுதல் - இறத்தல். தவலும் கெடலும் என்னும் இவைகளோடு நணித்து என்பதனைத் தனித்தனி கூட்டி, உம்மைகளை எதிரதும் இறந்ததுந் தழீஇய எச்சவும்மையாக வுரைத்துக் கொள்க. பொருட்கேடும் உயிர்க்கேடும் பிறரோடு மாறுபடுதல் மிகுந்தபொழுதே உண்டாகுமென்பதாம்.

துன்பந் தருமவைகளைச் செய்தால் அதனால் பகைமைவளரத் தாம் தாழ்ந்துவருதலாலும், ஒழிந்தால் வெறுப்பவைகள் ஓய்ந்து போகத் தாம் ஓங்கிவருதலாலும், தம்மோடு கூடாமையைக் கருதி ஒருவன் வெறுப்பன செய்தானாயினும், அவனோடு மாறுபடுதலைக் குறித்துத் தாம் அவனுக்குத் துன்பந் தருமவைகளைச் செய்யாமை உயர்ந்ததென்பதும்; ஒருவன் மாறுபாடென்று சொல்லப்படுகின்ற நோயைத் தன் மனத்தினின்றும் நீக்குவானாயின அவன் எல்லாராலும் நேசிக்கப்பட்டு எல்லாச் செல்வமும் பெற்றுக் கொடைமுதலிய காரணங்களால் எந்நாளும் அழிவில்லாத புகழை அடைவானென்பதும்; பகைவரின்மையால் மிகு சந்தோடமுடையவனாயிருப்பானென்பதும்; மாறுபாடு மனத்திற் றோன்றியவிடத்து

அதனை ஏற்றுக்கொள்ளாது தாழ்ந்து நடக்கவேண்டு மென்பதூஉம்; மாறுபாட்டினாலே அறிவு கலங்குதலால் மாறுபட்ட அறிவினை யுடையவர் நீதிநூற்பொருளை அறியமாட்டாரென்பதூஉம்; பிறரோடு மாறுபடுதலையே தனக்கு இன்பமெனவு செய்துவருபவன் வறுமை யடைந்து துன்பமுற்று இறப்பானென்பதூஉம், ஒருவன் தன னிடத்து ஆக்கம் வரும்போது காரணமுண்டாயினும் இகலை நினை யாது, தனக்குக் கேடுசெய்து கொள்ளும்பொழுது அதனை நினைப்பா னென்பதூஉம் இங்கு அறியத்தக்கவைகளாம்.

## அ௭. பகைமாட்சி.

அஃதாவது அறிவில்லாமை, பெரியோரைத் துணைக்கொள்ளாமை, சிற்றினஞ்சேருதல், வலி காலம் இடங்களை அறியாமை, சோம்பலுடைமை முதலிய குற்றங்களுடைமையால் பகையை மாட்சிப்படுத்தல். அரசர்க்கு எவ்வழியாலும் பகையின்மை கூடாமையால் மேல் பொதுவகையால் விலக்கப்பட்ட இகலை இவ் விடத்தே சிறப்புவகையால் விதிக்கின்றாராகலால், இஃது அதன் பின் வைக்கப்பட்டது.

வலியார்க்கு மாறேற்றல் ஓம்புக ஓம்பா
மெலியார்மேல் மேக பகை. (௧)

(இ - ள்) வலியார்க்கு தம்மின் வலியவர்க்கு, மாறேற்றல் - பகையாயெதிர்தலை, ஓம்புக - ஒழியக்கடவர்; மெலியார்மேல மற்றை மெலியவர்க்கு, பகை - பகையாதலை, ஓம்பா - ஒழியாமல், மேக - விரும்பக்கடவர், எ - று.

வலியாரென்றவிடத்துத் துணைவலியும் அடங்கலால், மெலியா ரென்றவிடத்துத் துணைவலியில்லாமையும் கொள்ளப்படும். அத் துணைதான் படை, பொருள், சுற்றத்தார், நட்பினர் முதலாகிய வேற்றுமைத் துணையும், நல்லறிவு உடைத்தாயிருத்தல், நீதிநூல்

வழியில் ஒழுகுதல், அமைச்சர் புரோகிதர்களின் ஆலோசனைக்கு இணங்கி நடத்தல், செய்யுங் காரியங்களில் மறதியில்லாமை, ஊக்க முடைமை முதலாகிய ஒற்றுமைத்துணையும் என விரண்டாம். அவ்விரண்டுமில்லாரை வெல்வார்க்கு வலிமை தொலையாமையால் அவரோடு பகைத்தல் விதிக்கப்பட்டது. * சிங்கநோக்காகிய இத னுள் பகைமாட்சி பொதுவகையாலே சொல்லப்பட்ட

தான வலியிலனுகித் துணைவலியும் சுற்றத்தாரிடத்து அன்பும் இல்லாதவனும், அச்சமும் அறியாமையும் நட்பின்மையும் உலோப குணமும் உடையவனும், † நிறையில்லாமையை உடையவனும், பழையோராதியாகவழங்கிவந்த நீதிநூலைக்கல்லாமலும அது விதித்த தொழில்களைச் செய்யாமலும் தனக்குவரும் பழியைப் பாராமலும் பண்பில்லாமலும் இருப்பவனும், தன்னையும் பிறரையும தான் அறி யாமைக்குக் காரணமாகிய கோபத்தையும், மேலுமேலும் வளரா நின்ற மிகுந்த காமத்தையும உடையவனும் பகைவர்க்கு மிகவும் எளியவராவரென்பதும்; தொழிலைத தொடங்கியிருந்து அதற்கு ஏலாதவற்றைச் செய்பவனது பகையைச் சிலபொருள் அழியக் கொடுத்தாயினும் கொள்ளவேண்டு மென்பதும் இங்கு அறியத் தக்கவைகளாம்.

* சிங்கநோக்கு - ஒருதலை இருபுறமும் பார்த்தல். சிங்கத்தி னது பார்வை முன்னும் பின்னும் செல்லுவதுபோல் இக்குறளிற் கூறிய பகைமாட்சி முன்னதிகாரத்திலும் பின்னதிகாரத்திலும் சொல்லுதல் காண்க.

† நிறை - மறைந்ததொரு காரியம் பிறரறியாமல் ஒழுகுதல்; நிறையில்லாமை - இரகசியத்தை வெளிப்படுத்தல்.

## அஅ. பகைத்திறந்தெரிதல்.

அஃதாவது மாட்சிமைப்படாத பகையை ஆக்குதற் குற்றமும், முன்பு உண்டாகிநின்ற பகையுள் நட்பாகுந் தன்மையதும், அயலாகுந் தன்மையதும், அவைகளிலே செயல்வகையும், மற்றைக் களையுந் தன்மையுடையதனிடத்தே செய்வனவும், களையும் பருவ (அழிகருங்கால)மும், களையாதவிடத்து நேர்கின்ற குற்றமும் என்று இவ்விதங்களை ஆராய்தல். இரட்டுறமொழிதல் (இரண்டு பொருள்படச் சொல்லுதல்) என்னும் உத்தியால் பகைத்திறமென்பதனை ஆறும் வேற்றுமைத் தொகையாகக்கொண்டு பகையது திறமென்றும், ஏழாம்வேற்றுமை யுருபும் பொருளும் உடன்தொக்க தொகையாகக்கொண்டு பகையினிடத்துச் செய்யுந் திறமென்றும் விரிக்கப்பட்டது. இவையெல்லாம் மாட்சிமைப்படாத பகையினிடத்தனவாகலால், இது பகைமாட்சியின்பின் வைக்கப்பட்டது.

வில்லேர் உழவர் பகைகொளினுங் கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை. (உ)

(இ - ள்.) ஒருவன், வில் - வில்லை, ஏர் - ஏராகவுடைய, உழவர் - உழவரோடு, பகைகொளினும் - பகைகொண்டானானாலும், சொல் - சொல்லை, ஏர் - ஏராகவுடைய, உழவர் - உழவரோடு, பகை - பகையை, கொள்ளற்க - கொள்ளாதொழிக, எ - று.

சொல் ஆகுபெயராய் நீதிநூலின்மேல் நின்றது. வீரம் ஆலோசனை என்னும் வலிமைகளுள் வீரமே யுடையவரோடு பகைகொண்டால் கேடுவருவது நிச்சயமன்று, வந்தாலும் தனக்கேயாம், மற்றை ஆலோசனை யுடையவரோடானால் தன் வமிசத்தோர்க்கும் தப்பாது கேடுவருதலால், அது கொள்ளினும் இது கொள்ளற்க வென்றார். கொளினும் என்ற உம்மையால் வில்லேருழவர் பகையும் ஆகாமை பெறப்படும். இரண்டு முடையவரோடு கொள்ள

லாகாமை சொல்லவேண்டாவாயிற்று. வீரத்தில்லையும் அமைச்சரது சொல்லையும் ஏராக வுருவகப்படுத்தி அது நிமித்தமாக அவ்வீரரையும் அமைச்சரையும உழவராக வுருவகப்படுத்தினமையால இஃது உருவகவிசேடம அல்லது சிறப்புருவகவணியாகும். சிறப்புருவகமாவது ஒருபொருளை எடுத்து அதற்குச் சிறந்த அடைகளை உரூபித்து அவற்றால் அப்பொருளையும உருவகமாக்கி உரைப்பது.

ஒருவன பகையெனனுந் தீக்குணத்தை * விளையாட்டிலும் விரும்பாதிருக்கவேண்டு மெனபதும்; கூறாம் நட்புப் படை முதலானவையினறித் தான தனியனுயிருந்துகொணடு பலரோடு பகைகொள்பவன † பித்தங்கொண்டவரினும் அறிவிலனென்பதும்; வேண்டியவிடத்துப் பகையை வேறுபடுத்தித் தனக்கு நட்பாகச் செய்துகொண்டு நடக்கவேண்டு மெனபதும்; தனக்கு உதவுந்துணையின்றி நலிவு செய்யும் பகைவர் இருவராய் நினறவிடத்துத் தான் அப்பகைவர் இருவரில் வலியிருந்தவரை அச்சமயத்திறகு ஏறறபடி இனியதுணையாகச் செய்துகொள்ளவேணடு மென்பதும்; பகைவனை முன் தெளிந்திருப்பினும் தனககுப் புறதொரு தொழிலால் தாழ்வு வந்தவிடத்து உட்பகையாய்நினறு கெடுத்தல்நோக்கிக கூடாமலும், தெளியாதிருப்பினும் அவவழிவிறகுத துணையாதல் நோக்கி நீக்காமலும் நடுவே விட்டுவைத்தல் வேண்டுமென்பதும; நொந்ததனைத் தாமாக அறியாத நட்பினர்கது ஒருவன் தனதுநோவைச் சொல்லலாகாதென்பதும்; தன வலியினமை பாாத்திருக்கும் பகைவ

* விளையாட்டிடத்து வேண்டினும் கோபமே விளைந்து மெய்யாமாகலால் பகையை விளையாட்டிடததும் விரும்பக் கூடாதென்பதாம்.

† தனியனுய்ப் பல்லாா பகைகொள்பவனும் பித்தங்கொண்டவனும் மயக்கததால் ஒப்பாராயினும பித்தங்கொண்டவன் அப்பித்தத்தினுலே தீங்கடையாமையால், தீஙகடைதலுமுடைய இவன் அவனினும் அறிவிலனென்பதாம்.

ரிடத்து அவ்வலியின்மை தன்னிடத்திருப்பதாகக் காட்டலாகா தென்பதும்; தான தொழில் முடித்தற்கு ஏற்பத் தன்னைப் பெருக்கி மறதியடையாமல் தன்னைக் காக்கக் கடவனென்பதும்; களைய வேண்டுவதாகிய முள் மரத்தை இளைதாகிய நிலையிலே களையாது முதிர்ந்த நிலையில் களையத்தொடங்கினால் களைபவனது கையை அது களைதல்போல் களையப்படுவதாகிய தம் பகையை அப்பகை மெலிதாகிய காலத்தே களையாது அது வலிதாகிய காலத்தே களையத் தொடங்கினால் தம்மை அப்பகைதான் கொல்லுமென்பதும் இங்கு அறியத்தக்கவைகளாம்.

## ௮௯. உட்பகை.

அஃதாவது புறப்பகைக்கு இடமாகிக்கொண்டு அது வெல்லுமளவும் உள்ளாய் நிற்கும் பகை. இதுவும் களையப்படுவதிலே சேர்ந்ததாகலால், பகைத்திறந் தெரிதலின்பின் வைக்கப்பட்டது.

**வாள்போல் பகைவரை யஞ்சற்க வஞ்சுக**
**கேள்போல் பகைவர் தொடர்பு (௨)**

(இ - ள்.) வாள்போல் - வாள்போல, பகைவரை - வெட்டுவேமென்று வெளிப்பட்டு நிற்கும் பகைவரை, அஞ்சற்க - அஞ்சாதிருக்கக்கடவர்; அப்படி நில்லாமல், கேள்போல் - உறவினர்போல, பகைவர் - மறைந்து நிற்கும் பகைவரது, தொடர்பு - நட்பினை, அஞ்சுக - அஞ்சக்கடவர், எ - று.

முன்னேயறிந்து காக்கப்படுதலால் 'அஞ்சற்க' என்றும், அப்படி அறியவும் காக்கவுங் கூடாமையால் கெடுதல் நிச்சயமென்பது பற்றி 'அஞ்சுக' என்றும் சொல்லினர். பின்செய்யும் பகையினும் கொடிதாகலாலும், காக்குங் காலம் கேள்போல் மறைந்து நடக்கும் பகைவர் அவ்விதம் ஒழுகுங்காலமாகலாலும், அஞ்சப்படுவது முன் செய்த அவர் தொடர்பாயிற்று. இதனால் உட்பகை ஆகாதென்பது சொல்லப்பட்டது. [கேள் - உறவினர்]

ஒருவனுக்கு அனுபவிக்க வேண்டுவனவாகிய நிழலும் நீரும் முன் இன்பஞ் செய்வனவாயினும் பின் பெருங்கால் பெருவயிறு சளி சுரம் குட்டம் குன்மம் முதலிய நோய்களை உண்டாக்கித் துன்பஞ் செய்வதுபோல, தருக வேண்டுவனவாகிய தன்னாதியர் இவ்வுடலும் முன் வெளிப்படாது இன்பஞ் செய்வன போலிருந்து பின் அப் பொருள் விட்டகன்று துன்பஞ் செய்யுமாதலால் அன்னவிடத்துச் சாக்கிரதையுடன் ஒழுகவேண்டுமென்பது; ஏனைய உட்பகையினரைச் சேராமலும் அவரது செயல்களுக்கு உடம்படாமலும் அவரை விலக்கவேண்டுமென்பதூஉம், புறத்திருக்கட்டு போன்று அகத்திருந்தாக உட்பகை ஒருவனுக்கு உண்டானால் அவ்வுட்பகை அவன் சுற்றத்தாரை உள்ளாயிருந்து வேறுபடுத்தலும் அதனை அவர் வேறுபட்டவிடத்தே தான் அவரால் நம்பப்படாமையும் பின் அவரால் விளைந்த தீமைகள் பலவற்றையுந் தருமென்பதூஉம், புறத்து உறவு முறைத் தன்மையோடு கூடிய உட்பகை ஒருவனுக்கு உண்டாவதானால் அஃது அவனது புறப்பகைக்குத் துணையாய்ப் பின்னரே தான் அவ்விடம் நிறால் தோன்றுமை அவனுக்குப் பல தீமைகளையுஞ் செய்து அவனைக் கெடுக்குமென்பதூஉம், உட்பகை சிறிதாயிருந்தாலும் அதனலுண்டாகுங் கேடு பெரிதாமென்பதூஉம், மனப்பொருத்தமில்லாதவரோடு கூடிவாழ்தல் பாம்போடு கூடிவாழ்தலை யொக்குமென்பதூஉம் இங்கு அறியத் தக்கவைகளாம்

## ௯௰. பெரியாரைப்பிழையாமை.

அஃதாவது பெரியராயினாரை அவமதித்து நடவாமை. இரட்டுற மொழிதலென்னும் உத்தியினாலே பெரியாரென்பது வலிமையினாலே பெரியாராகிய வேந்தர்மேலும் தவத்தினாலே பெரியாராயின முனிவர்மேலும் நின்றது. மேற்சொல்லாமல் ஒழிந்து குறிப்பாய் நின்றதாகலால் இது குரோதத்தால் வருமவைகளது முடிவில் வைக்கப்பட்டது.

> ஏந்திய கொள்கையார் சீறி னிடைமுறிந்து
> வேந்தனும் வேந்து கெடும். (௯)

(இ - ள்.) ஏந்திய கொள்கையார் - காத்தற்கருமையால் உயர்ந்த விரதங்களை உடையார், சீறின் - கோபிப்பாராயின், அவர் வலிமையால், வேந்தனும் - இந்திரனும், இடைமுறிந்து - இடையே தன் பதம் இழந்து, வெந்து கெடும் - கெடுவான், எ - று.

வேந்தன் என்பது இங்கே இந்திரன்மேல் நின்றது. இந்திரனுக்கு வேந்தன் என்னும் பெயரிருத்தல் "வேந்தன்மேய தீம்புன லுலகமும்" என்று தொல்காப்பியம் கூறுதலாலறிக (இதன் பொருள் - இந்திரன் விரும்பியமர்ந்த இனியநீர் சூழ்ந்த மருதநிலமும் என்பது) நகுடனென்னும் சந்திர வம்சத்தரசன் நூறு அசுவமேத யாகஞ் செய்து இந்திரனது பதவியைப்பெற்று எழு முனிவர்களால் சுமக்கப்பட்ட பல்லக்கின்மேல் ஏறி இந்திராணி இருந்த இடத்துக்குச் செல்லுகையில் அவ்விந்திராணியின் மேலிருந்த காதல் மிகுதியினால் தூண்டப்பட்டு சர்ப்ப சர்ப்ப (ஓடுஓடு) என்றுகூற, அதனைக்கேட்ட அம்முனிவரில் ஒருவரான அகஸ்தியர் கோபித்து அவனைச் சர்ப்பமாகச் சபிக்க, அதனால் அந்நகுடன் சாபமெய்தி அவ்விந்திரப் பதவியை இடையே இழந்தா னென்பதனை யுட்கொண்டு இவ்வாறு கூறினர்.

தம்மிடத்துத் தீங்கு வாராது காக்க விரும்புவோர் எடுத்துக் கொண்ட காரியங்கள் யாவையும் முடிக்கவல்ல அரசர் முனிவர் முதலிய பெரியோரது பெருமை அறிவு முயற்சிகளை அவமதியா

திருத்தல் வேண்டு மென்பதூஉம்; அப்பெரியாரை * அவமதித்து நடந்தால் அஃது அவ்விதம் நடப்பவருக்கு இருமையினும் இடையறாதவரும் † மூவகைத் துன்பங்களையுந் தருமென்பதூஉம்; மூவகையாற்றலு முடையார்க்கு அவையில்லாதார் தாம் முற்பட்டுப் பிழைசெய்தல் தானேயும் வருந்தனமையறுய கூற்றுவனை இகழ்ச்சிக் குறிப்பாற் கைகாட்டி அழைத்தாலொக்கு மென்பதூஉம்; வலியுள்ள அரசனாற் கோபிக்கப்பட்டுத் தமது நிலம் விட்டுப்போனவர்க்கு இடங்கொடுப்பா ரில்லையாதலால் அவர் அரசனாற் கோபிக்கப்பட்ட அப்பொழுதே அவ்விடத்திலேயே அழிவடைவாரென்பதூஉம்; அவர்க்கு இடங்கொடுப்பார் உளராயினு மவர் இனி ஆகாரென்பது நோக்கி அவ்வரசனோடு நட்புக்கொள்ளுதற் பொருட்டும் தாமே வந்தெய்திய அவருடைமையை அபகரித்தற் பொருட்டும் அவரை கொல்லுவரென்பதூஉம்; ஒருவன் தீயினாற் சுடப்பட்டானாலும் ஒருவழியால் உயிர் பிழைத்தல் கூடும், ஆனால் தவத்தாற் பெரியார் கோபத்தீயாற் சுடப்பட்டவன் எவ்வழியாலும் உய்யா ‡ னென்பதூஉம்; அரசர் தமது செல்வக்களிப்பால் அருந்தவரிடத்துப் பிழை செய்வாராயின அவரது வாழ்க்கையும் பொருளும் அத்தவத்தினை

---

* அப்பெரியாரைக் "காலனுங் காலம் பார்க்கும் பாராது, வேலீண்டு தானை விழுமியோர் தொலைய, வேண்டிடத் தடூஉம் வெல்போர் வேந்தே" என்றார் புறநானூற்றில். இதன்பொருள் - கூற்றுவனும் உயிர்கொள்ளும் காலத்தைப் பார்த்து நிற்பான்; அவ்விதம் காலம் பாராது வேற்படை நெருங்கிய சேனையினையுடைய பெருமையுடைய அரசர்கள் சாகும்படி வேண்டியபோது கொல்லும் வெல்போர் வேந்தே என்பது.

† மூவகைத் துன்பங்கள் - ஆதிதைவிகம், ஆதிபௌதிகம், ஆதியான்மிகம் என்பன - இவற்றின் விவரத்தை ௰௫-ம பக்கத்திற் பார்க்க.

‡ "குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி, கணமேயுங் ரத்த லரிது" என்னும் நீத்தார்பெருமைத் திருக்குறளின் கருத்து ஈங்கு நோக்கத்தக்கது.

ரது கோபத்தீயால் திரிபுரம்போல் அழிந்துவிடுமென்பதும் இங்கு அறியத்தக்கவைகளாம்.

$ மாயையின் மகனாகிய தாரகனின் மக்களாகிய தாரகாக்கன், கமலாக்கன், வித்துவமாலி என்னும் மூன்று அசுரரும் பிரமதேவனை நோக்கித் தவஞ்செய்து சத்துருக்களால் செயிக்கத்தற்கு அருமையானவையும், தேவர்களாலும் அழிக்க முடியாதவையும், எண்ணிய இடத்திற்கு எளிதிற்செல்லும் வலிமையையுடையவையுமான இரும்பு வெள்ளி பொன்களினாலாக்கப்பட்ட மதில்களையுடைய மூன்று பட்டணங்களைப் பெற்றுப் பின்னர் அப்பெரும் பேற்றினால் இறுமாப்படைந்து இறைவனை மறந்து நன்னெறியினின்றும் நழுவி அளவிறந்த அவுணச் சேனையுடன் திரிபுரங்களிற் சென்று திரிலோகங்களிலுமுள்ள உயிர்களை உபத்திரவப்படுத்திவர, அதனைப் பொறுக்கமாட்டாது, தேவர்கள் தேவதேவரிடம் முறையிட அவர் அத்தீயவவுணரைத் திரிபுரத்துடன் தீக்கிரையாக்கத் திருவுளங்கொண்டு அவ்வமரரால் அமைக்கப்பட்ட அரியதேரில் ஆரோகணித்தார். அப்போது மேருமலை வாசுகியென்னும் பாம்பினை நாணாகக்கொண்ட ஓர் வில்லாக அவரது இடக்கரத்தில் அமர்ந்தது. விட்டுணுவானவர் அக்கினிதேவனைக் கூராகவும் வாயுதேவனை ஈர்க்காகவுங்கொண்ட ஓர் அம்பாக அவரது வலக்கரத்தில் அமர்ந்தார். சிவபெருமான் யுத்தசந்நத்தராய் அவ்வம்பைப் பிரயோகிக்கச் சித்தமானார். அப்போது போர்க்கருவிகளாக அமைந்திருந்தவெவ்வொருவரும் தம்மாலேயே திரிபுரதகனம் நிகழ்வதாக நினைத்துத் தருக்கினார். அதனையறிந்த பரமசிவன் பாணத்தைப் பிரயோகியாது புன்னகை புரிந்தனர். அப்போது அவர் வாயினின்றும் வெளிவந்த தீயினால் திரிபுரம் அழிந்தது என்பது விருத்தாந்தம். இதனைச் சிவமகாபுராணத்திலும் மகாபாரதத்திலும் பரக்கக் காண்க.

"கல்லாணிழற் கீழாயிடர் காவாயென வானோர்
எல்லாமொரு தேராயயன் மறைபூட்டிநின் றுய்ப்ப
வல்லாயெரி காற்றீர்க்கரி கோல்வாசுகி நாணகல்
வில்லாவெயி லெய்தானிடம் வீழிம்மிழலையே."

—சம்பந்தர் தேவாரம்.

"வளைத்த வெஞ்சிலை தாங்கினோன் மால்கணை செலுத்தி
இளைத்த நுண்ணிடை பங்கர்பார்த் திளநகை விளைப்பத்
திளைத்த மூவெயில் நீறெழுந் தொருகணஞ் செலாமுன
தொளைத்த தீமையோர் மாய்ந்தனர் சாம்பரா யொழிந்தே."

மகாபாரதம்

## ௯௧. பெண்வழிச்சேறல்.

இனிக் காமத்தால் வருபவை நேரே பகையல்லவாயினும் பெருக்கஞ்சிதைத்தல் அழிவைத்தருதல் என்கிற தொழில்களாலே பகையோடு ஒத்தலால் பகையினிடத்துப் பொருந்துவனவாம்; ஆதலால் அவைகளைப் பகைப்பகுதியின் முடிவிலே சொல்லத் தொடங்கி, முதலிலே பெண்வழிச் சேறல் சொல்லுகிறார். அஃதாவது தனவழி நடத்தற்கு உரியவளாகிய மனையாள் வழியே தான் நடத்தல்.

அறவினையு மான்ற பொருளும் பிறவினையும்
பெண்ணேவல் செய்வார்க ணில். (௯)

(இ - ள்.) அறவினையும் - அறச்செயலும், ஆன்றபொருளும் - அது முடித்தற்குக் காரணமாகிய பொருட்செயலும், பிறவினையும் - அவவிரண்டின் வேறாகிய இன்பச்செயல்களும், பெண்ணேவல் - தம் மனையாளேவலை, செய்வார் கண் - செய்பவரிடத்து, இல் - உண்டாகா, (எ - று).

காமவின்பம் செவியாதி ஐம்புலன்களாலும் அனுபவித்தற் குரித்தா யிருத்தலாலே அதனை ஒருமையாற் கூறாது * பிறவினை என்று பன்மையாற் கூறினார். அவ்வின்பச் செயல்களை நோக்கி அறச்செயல்களை முன்னே ஒழிந்தார்க்குத் தலைமை அவனிடத் திருத்தலால், பின் அவ்வின்பச் செயல்களும் இல்லையென்பது தோன்ற அவற்றைப் பிறவினையெனப் பிரித்துச் சொல்லினார். இதனால் மனையாளேவல் செய்தற்குற்றம் சொல்லப்பட்டது.

தன் ஆண்மையை விரும்பாமல் விட்டுத் தன் மனையாளது பெண்மையை விரும்புவோன் அடைந்து நின்றதான செல்வத்தைக் கொடுத்தலும் அனுபவித்தலும்முதலாகியபயனை அவள்கொள்வதைக் கண்ட ஆடவர் யாவரும் அவவாண்மைச் செய்கை அவளிடத் தாயிற்றென்று நாண, அதனாலே தன்னாண்மை யில்லாமையை யறிந்து பின்னே தானும் நாணுவானென்பதும்; மனையாளுக்கு

---

* 'பிற' என்பது 'பிறிது' என்பதன பன்மை.

அஞ்சுபவன் அவ வச்சமில்லாத நல்லாரைக் காண நாணுவா னென்பதும்; அவனுக்குத் தொழிலையாளுந் தன்மை உண்டாகிய விடத்தும் நல்லோராலே கொண்டாடப்படுதல் இல்லையென்பதும்; தான் தேடிய பொருளேயாயினும் அப்பொருளால நல்லவர்களுக்கு உதவிசெய்ய முடியாதென்பதும்; மனையாளுக்கு அஞ்சுவோன் தேவர்போலச் சிறப்புற்று வாழ்ந்தாலும் பெருமை யடையா னென்பதும்; நாணமில்லாமல் தனது மனையாளது ஏவற்றொழிலைச் செய்து திரிகின்றவனது ஆண்தன்மையைக் காட்டிலும் நாணத்தை யுடைய அவள் பெண்தன்மையே மேம்பாடுடையதெனபதும்; மேற்கொண்ட கருமத்தை ஆலோசித்தலிற்சென்ற மனத்தினையும், அவ் வாலோசனையினாலாகிய செல்வத்தினையும் உடையார்க்கு மனையாளை விழை(விரும்பு)தற்கும், அஞ்சுதற்கும், அவள் ஏவலைச் செய்தற்கும் காரணமாகிய பேதைமை ஒருகாலத்தும் உண்டாகா தென்பதும் இங்கு அறியத்தக்கவைகளாம்.

## ௯௨. வரைவின்மகளிர்.

அஃதாவது தமது போகத்தை இழிகுலத்தோர் உயர்குலத்தோர் வயோதிகர் இளையோர் என்போரில் விலைகொடுப்பவர் யாவர்க்கும் விற்பதல்லாது அதற்கு ஆவார் ஆகாதார் என்னும் வரைவில்லாத மகளிரது இயல்பு; ஆதலால் இளமைப் பருவத்தில் பிதாவினாலும் யௌவன பருவத்தில் கணவனாலும் வயோதிக பருவத்தில் புத்திரனாலும் காக்கப்படுதலை இகழ்ந்த தமக்குரிய மகளிரால் வருங் குற்றத்தின்பின் வைக்கப்பட்டது.

**அன்பின் விழையார் பொருள்விழையு மாய்தொடியார்**
**இன்சொ லிழுக்குத் தரும்.** (௧)

(இ - ள்.) அன்பின் விழையார் - ஒருவனை அன்புபற்றி விரும்பாது, பொருள் விழையும் - பொருள்பற்றி விரும்பும், ஆய்தொடியார் - மகளிர், இன்சொல் - அது கைவருமளவும் தாம் அன்புபற்றி விரும்பினவராகச் சொல்லும் இனியசொல், அவனுக்கு, இழுக்கு - பிணைபு துன்பத்தை, தரும் - உண்டாக்கும், எ - று.

பொருள் என்றவிடத்து இன்சாரியை செய்யுள் விகாரத்தால் தொக்குநின்றது. சாரியை பெற்றுநின்றால் பொருளின் என்றாம். இன் என்பது இங்குப் பற்றி எனனும் பொருளில் வந்தது. ஆய்தொடியார் - ஆராய்ந்தணிந்த வளையலையுடைய பெண்கள். ஆய்ந்த தொடியினை யுடையார் எனறதனுலும் இனியசொல் எனறதனுலும் அவ வாய்தொடியாரது (மயக்கும்) சாதனம் சொல்லப்பட்டது. அவ வினிய சொல் அக்காலத்திற்கு இனிமை தருவது போன்றிருந்து பின்பு தரித்திரத்தை யுண்டாக்குதலால் அதனைக் கொள்ளலாகா தென்பதாம்.

பொருளுக்குத்தழுவும் பரத்தையர் கருத்தும் செயலும ஆராயாமல் சாதியும் பருவமும் ஒவ்வாதானைக் கூடும்போது கூலிக்குப் பிணமெடுப்பவர் காணப்படாத தோரிடத்தில் சம்பந்தமில்லாத தோர் பிணத்தைக் கூலிக்காக எடுப்பாரை யொதது அகத்தால் அருவராநின்றும், பொருளை நோக்கிப் புறத்தால் தழுவுவரென்பதும்; இயற்கையறிவும் செயற்கை யறிவுமுடையாராய் அருளோடு கூடிய பொருளை ஆராய்ந்து சம்பாதித்தவா வயதாற் சிறியரேயெனினும் அறிவாற் பெரியராவா ராதலால் இன்பமாகிய பொருளை இகழ்ந்து பொருளாகிய பொருளையே விரும்பும் மகளிரது புல்லிய மெய்ந்நலத்தை விரும்பி அதனல் தாம் அடையக்கிடக்கும் அறமாகிய அரும்பொருளை இழக்கமாட்டா ரெனபதும்; பொருளும் அப்பொருளால் படைக்கப்படுவனவும் விரும்புகிற நெஞ்சு அவைகளின் மேலிருத்தலால் புணர்வது அவருடம்பு மாத்திர மென்பதறியாது அப்புணர்ச்சியின் வழியே ஓடாநிற்கும் நிறை நெஞ்சமில்லாத

மூடரே வேசையரைச் சேர்வரென்பதும்; உருவ சொற் செயல்களால் வஞ்சிக்கும் மகளிரது மயக்கம் முன் இனிதுபோன்று பின் உயிர்கொள்ளுதலால் அம்மயக்கத்தை அவ்வஞ்சனையை ஆராய்ந்தறியும் அறிவுடையரல்லார்க்கு அணங்கு தாக்கென்று நூலோர் சொல்லுவரென்பதும்; உயர்ந்தோரா இழிந்தோரென்று பொருள் கொடுப்பவர் யாவரையும் கூடும் தோள்கள் கீழ்மக்கள் அழுந்தும் நரகமாகக் கருதப்படுமென்பதும்; பரத்தையரும் கள்ளும் சூதும் திருமகளால் கைவிடப்பட்டார்க்கு நட்பாமென்பதும் இங்கு அறியத்தக்கவைகளாம்.

## கூ௩. கள்ளுண்ணாமை.

இனி ஒழுக்கமும் உணர்வும் அழித்தலில் அப்பரத்தையரோடு ஒப்பதாகிய கள்ளினை உண்ணாமையினது சிறப்பினை எதிர்மறை முகத்தாலே சொல்லுகின்றார்.

கையறி யாமை யுடைத்தே பொருள்கொடுத்து
மெய்யறி யாமை கொளல். (ரு)

(இ - ள்.) ஒருவன், பொருள் கொடுத்து - விலைப்பொருளைக் கொடுத்து, மெய்யறியாமை - கள்ளாலே தனக்கு மெய்ம்மறப்பினை, கொளல் - கொள்ளுதல், கையறியாமை - அவன் பழவினைப் பயனாகிய செய்வதறியாமையை, உடைத்து - தனக்குக் காரணமாக உடைத்து, (எ - று).

தன்னையறியாமை சொல்லவே, ஒழிந்தவை யாவையும் சொல்லல் வேண்டாவாயிற்று. ஈண்டுக் கையென்பது செய்வது என்னும் பொருளில் வந்ததைப் "பழனுடைப் பெருமரம் வீழ்ந்தெனக் கையற்று" என்பதனாலு மறிக. (இதன் பொருள் - பழங்களையுடைய பெரியமரம் பழுத்து மாறியதென்று செய்வ தொழிந்து என்பது). அறிவார் விலைகொடுத்து ஒன்றைக் கொள்ளுங்கால் தீயதைக் கொள்ளாமையால், மெய்யறியாமை கொளல் சன்மாந்தரத்திற் செய்த தீவினையின் பயனை அறியாமையால் வந்ததென்பதாம்.

கட்குடிப்போர் பகைவரால் அஞ்சப்படாமையேயன்றி முன் பெற்றுநின்ற மதிப்பையும் இழப்பரென்பதூஉம்; அவர்க்கு மன மொழி மெய்கள் தம்வசப்படாமையால் நாணம் அழியுமென்பதூஉம்; நாணமழிதலால் பெற்ற தாயும் அவரை வெறுப்பாளென்பதூஉம்; கள்ளுண்பார் அறிவின்மைபற்றி நஞ்சுண்பாரை யொப்பரென்பதூஉம்; கள்ளை மறைந்துண்டு அகக்களிப்பால் தம்மறிவு தளர்வார் பிறரால் சிரித்தவமதிக்கப் படுவரென்பதூஉம்; மறைந்துண்டு வைத்து யான் கள்ளுண்டறியேனென்று உண்ணாதபொழுது ஆசாரஞ் சொல்லில் அவ்வுண்டபொழுதே பிறரறிதலால் தவறுமென்று முன்னர் மனதில் ஒளித்த குற்றமும் முன்னையினும் மிகுந்து வெளிப்படுமாதலால், கள்ளுண்டவொருவன் அவ்விதம் ஆசாரம் பேசுதலை ஒழிக்கக் கடவனென்பதூஉம்; கள்ளுண்டு களித்தானொருவனை இஃது ஆகாதென்று காரணங்காட்டித் தெளிவித்தல் நீரினுள்ளே மூழ்கின ஒருவனை மற்றொருவன் விளக்கினால் தேடுதலையொக்குமென்பதூஉம்; கள்ளுண்பவன் அதனையுண்ணாமல் தெளிந்திருந்த பொழுதில் அதனை உண்டுகளித்த பிறனைக் காணுமிடத்துத் தான் உண்டபொழுது உண்டாகும் சோர்வையும், அதனால் தான் அடையும் இழிவையும் ஆலோசித்து அறிந்தானாயின், அவன் குடியானென்பதூஉம் இங்கு அறியத்தக்கவைகளாம்.

## ௯௪. சூது.

இனி அக்கள்ளுண்டல்போல் அறம் பொருளின்பங்களுக்குத் தடையாகிய சூதாடலும் பிணியனுபவித்தலும் சொல்லத்தொடங்கி, முதலிலே சூதினது இயல்பு சொல்லுகின்றார்.

அகடாரார் அல்லல் உழப்பர் சூதென்னும்
முகடியான் மூடப்பட் டார். (௧)

(இ - ள்.) சூதென்னும் - தனது பெயர்சொல்லல் மங்கல மல்லாமையால் சூதென்று வேறு பெயரால் சொல்லப்படுகின்ற, முகடியால் - மூதேவியால், மூடப்பட்டார் - விழுங்கப்பட்டவர், அகடு

ஆரார் - இம்மையிலே வயிறு நிறையப்பெறார். அல்லல் உழைப்பர் - மறுமையிலே நரகத்துன்பம் அனுபவிப்பர், (எ - று).

செல்வங்கெடுத்து வறுமை கொடுத்தற் றொழில் வேறு படாமையால் 'சூதெனனு முகடி' எனறும், வெற்றி தோல்விகள் நோக்கி ஒருபொழுதும் விடாராகலால் இங்கு 'அகடாரார்' என்றும், பொய்யும் களவும் முதலிய பாவங்கள் சம்பாதித்தலால் அங்கு 'அல்லலுழப்பர்' என்றும் சொல்லினர். வயிராறாமை சொல்லவே, மற்றை ஆடை அணிமுதலாகிய விடயங்களை அனுபவிக்கப் பெறாமை சொல்லவேண்டாவாயிற்று. உழப்பர் எனபது எதிர் காலத்தெரிநிலை வினைமுற்று.

சூதில் வென்று பொருள்பெறுவார் இல்லையென்பதும்; உண் டெனறால், அவ்வென்ற பொருளும் இரையால் மறைந்த தூண்டி லிரும்பை இரையெனக்கருதி விழுங்கிய மீன துன்பப்பட்டு உயி ரிழப்பதுபோல வென்றவர் அத்தொழிலினின்றும் நீங்காமைக்குப் போடப்பட்டதோர் விலங்காகி, இனனும் அதிகமாகப் பெறுவோ மென்னுங் கருத்தால் அறமும் இன்பமும் பொருளும் உய்யும்வகைக்கு உறுப்பாயுள்ள கைப்பொருள் இழந்து வறியராகிச் சத்தியந்தவறிப் பொய்மேற்கொண்டு புகழழிந்து குணங்கெட்டு ஒளிமழுங்கி ஊணும் ஆடையுமினறிக் கற்றகல்வியையும் மறந்து அறிவிலாப் பேதைய ராய் அல்லலுழந்து ஆருயிர்துறப்ப ரென்பதும்; உயிரானது உடம் பால் மூவகைத் துன்பங்களையும் அனுபவிக்குந்தோறும் அதன்மேல் ஆசையை விடாததுபோல், சூதன சூதாடலால் இருமைப் பயன்களையும் இழக்குந்தோறும் அச்சூதின்மேல் ஆசைப்படுவா னென்பதும் இங்கு அறியத்தக்கவைகளாம்.

## ௯௫. மருந்து.

முற்பிறவிகளிற் செய்த கருமத்தானும் காரணங்களானும் மனிதர்க்கு வாதமுதலாகிய பிணிகள் வரும்; அவைகளுள் பழவினையால் வருவன அவ்வினை கழியும்போதல்லாமல் தீராமையால் அவையொழித்து, மற்றைக் காரணங்களால் வருமவைகளைத் தீர்க்கும் மருந்தின் திறம் சொல்லுகின்றார். காரணங்களாவன உணவு செயல்களினது விதியாசமாகலால், நோய்களும் காரணத்தால் வருவனவாயின

அற்றது அறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து. (௪)

(இ - ள்.) அற்றது அறிந்து - முன்னுண்டது அற்றபடியை யறிந்து, துவரப்பசித்து - பின்னை மிகப்பசித்து, உண்ணும்போது, மாறல்ல - மாறுகொள்ளாத உணவுகளை, கடைப்பிடித்து - குறிக்கொண்டு, துய்க்க - உண்ணக்கடவன, எ - று.

'அற்றால் அளவறிந்து உண்க' என்று முன்றானிற் சொல்லிய ஆசிரியர் 'அற்றதறிந்து' என்று பின்னுஞ் சொல்லியது அதனை உறுதிப்படுத்தற் பொருட்டு. உண்டதாகிய உணவு அற்றாலும் அதன்சாரம் அறாதாகலால் அதுவும் அறல்வேண்டுமென்பார் 'துவரப்பசித்து' என்றார். பசித்தலாகிய வயிற்றின்வினை இங்கே அதனையுடையவன்மேல் நின்றது. மாறு கொள்ளாமையாவது உண்பவர் சரீர சுபாவத்தோடு மாறுகொள்ளாமையும், காலவியல்போடு மாறுகொள்ளாமையும், சுவை வீரியங்களால் தம்முள்ளே மாறுகொள்ளாமையுமாம். அவையாவன முறையே வாத பித்த சிலேற்பனங்களாலாகிய சரீர சுபாவங்களுக்கு அடைவுபடாதவைகளைச் செய்வனவாதலாலும் * பெரும்பொழுது † சிறுபொழுது

* பெரும்பொழுது - கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்னும் ஆறு பகுதிகளை யுடைத்து. அவற்றின் காலவளவு ஆவணிமுதல இவ்விரண்டு மாதங்களாகும்.

† சிறுபொழுது - மாலை, யாமம், வைகறை, காலை, நண்பகல், எற்பாடு என்னும் ஆறு பகுதிகளை உடைத்து. அவற்றின் காலவளவு ஒவ்வொன்றற்குப் பத்து நாழிகை(இரண்டரை மணி)யாகும்.

என்கிற காலவேறுபாடுகளுள்ளே ஒன்றற்கு ஆவன பிறிதொன்றற்கு ஆகாமையும, தேனும் நெய்யும் தம்முள ஒத்து நஞ்சாதல் போல்வனவுமாம். அவைகளைக் கவனியாமல் மனங்கொண்டபடி உண்டால் அதனாலே நோயும் மரணமும் வருதலால் 'கடைப் பிடித்து' என்றார்.

உணவும் செயல்களும் ஒருவன சரீர சுபாவத்துக்கு ஒத்த அளவினவன்றி மிகினும குறையினும் உடம்புக்கு இயல்பாகிய வாத பித்த சிலேற்பனமென்னும் மூவகை நோயும் அவனுக்குத் துன்பஞ் செய்யுமெனபதும்; ஒருவன முனனுண்ணப்பட்டது சீரணித்த படியைக குறிகளாலே தெளிந்து பின அளவறிந்துண்பானாயின அவனுடம்பிற்கு வேறுமருந்து வேண்டாவென்பதும்; மிகவும் பலவாய வேறு சரீரங்களினின்றுந் தப்பி இம்மை மறுமை வீடுபேறுகளை அடைதற்குரியதாகிய இம்மானுட யாக்கையை அரிதிற்பெற்ற ஒருவன் அதனை நெடுங்காலங் கொண்டுசெலுத்தி அவ்விம்மை மறுமை வீடுபேறுகளைப் பெருகச் செய்துகொள்ளுதற்கு அவ்விதம் உண்டல் சாதனமாகு மென்பதும்; மானுடதேகத்துக்கு மாறுபாடான பொல்லாவுணவை ஆசைமிகுதியால் அளவுக்குமிஞ்சி உண்பவனிடத்து நோய் நிலைபெறுமென்பதும்; அந்நோயைத் தணிக்கும் வைத்தியன் நோயாளியிடத்து நிகழ்கின்ற நோயை அதன் குறிகளால் இன்னதென்று துணிந்து, பின் அது வருதற்காரணத்தை ஆராய்ந்து தெளிந்து, பின் அது தீர்க்கும் உபாயத்தினை யறிந்து, அவ்வுபாயத்தினைச் செய்யும்வழிப் பிழைபடாமற் செய்யக்கடவனென்பதும்; அன்னான் அவ்வுபாயத்தினைச் செய்யுங்கால் நோயுற்றவனது சரீரசுபாவம் பருவம் வேதனை வலிகளினளவினையும்,

-

உணவு ஒத்தலாவது - சுவை வீரியங்களாலும் அளவாலும் பொருந்துதல். செயல்கள் ஒத்தலாவது - மன மொழி" மெய்களாலே செய்யுந் தொழில்களை அம்மன மொழி மெய்கள் வருந்துவதற்கு முன்னே யொழிதல். இவையிரண்டும் இப்படியல்லாமல் மிகுதல் குறைதல் செய்தால் அவை தத்தம் நிலையிலே நில்லாமல் வருத்து மென்பதாம்.

சாத்தியம் அசாத்தியம் † யாப்பியம் என்னும் சாதிவேறுபாட்டை யும், தொடக்கம் நடு ஈறென்னும் பருவவேறுபாட்டையும், வன்மை மென்மைகளும் முதலாகிய நோயினளவையும், தன் செயற்கேற்ற மேலே சொல்லப்பட்ட பெரும்பொழுது சிறுபொழுது என்னும் காலத்தினையும் நோக்கி, அவைகளோடு பொருந்தச் செய்யக்கடவ னென்பதும்; நோயுற்றவனுக்குப் பொருளுடைமை வைத்தியன் வழிநிற்றல், நோய்நிலை யறிவித்தல்வன்மை, மருந்தின் துன்பம் பொறுத்தல் என இவை இன்றியமையாதன வென்பதும்; வைத்தி யன் பலபிணி நோய் பார்த்தற்கு அஞ்சாதவனும், ஆசிரியனை வழிபட்டு ஓதிய கல்வியும் நுண்ணறிவும் உடையவனும், மன மொழி மெய்கள் பரிசுத்தமானவனும் இருத்தல் வேண்டுமென்ப தும்; மருந்து பல பிணிகளுக்கும் ஏற்றதாயும், சுவை வீரியம் விளைவு ஆற்றல்களால் மேம்பட்டதாயும், எளிதிலே பெறப்படுவ தாயும், சரீரசுபாவத்தோடு பொருந்தியதாயும் இருத்தல்வேண்டு மென்பதும்; அம்மருந்தினைத் தப்பாமல் செய்பவன் நோயாளி யிடத்தே அன்புடையவனும், மன மொழி மெய்கள் பரிசுத்த மானவனும், சொல்லியவற்றைச் சொன்னபடியே செய்யவல்லவ னும், அறிவுடையவனும் இருத்தல் வேண்டுமென்பதும் இங்கு அறியத்தக்கவைகளாம்.

அங்கவியல் முற்றிற்று.

† யாப்பியம் - பெரும்பான்மை தீர்க்கத் தக்கதும் சிறுபான்மை தீர்க்கத்தகாததும் ஆயுள்ளது.

# ஒழிபியல்

---

இனி அவ்வவ் ரசியலிலும் அங்கவியலிலும் அடங்காதொழிந்தவை களினியல்பைப் பதின்மூன்று அதிகாரங்களாலே சொல்லத் தொடங்கி, முதலிலே குடிமை சொல்லுகிறார்.

## கூசு. குடிமை.

அஃதாவது உயர்ந்த குடியினிடத்துப் பிறந்தவராது தன்மை. உயர்ந்த குடிப்பிறப்பு பிராமணர் சத்திரியர் வைசியர் சூத்திரர் என்னும் நால்வகைச் சாதியார்க்கும் இன்றியமையாத தாதலால், அச் சிறப்புப்பற்றி இது முன்வைக்கப்பட்டது.

குடிப்பிறந்தார் கண்விளங்குங் குற்றம் விசும்பின்
மதிக்கண் மறுப்போ லுயர்ந்து. (எ)

(இ - ள்) குடிப்பிறந்தார்கண் - குடியிற் பிறந்தவரிடத்து உண்டாகிற, குற்றம் - குற்றமானது, தான் சிறிதேயாயினும், விசும்பின - ஆகாயத்தில், மதிக்கண் - சந்திரனிடத்து, மறுப்போல் - களங்கம்போல், உயர்ந்து - ஓங்கி, விளங்கும் - தோன்றும், எ - று.

உயர்ந்த குடிக்கு விசும்பும், அதிற் பிறந்தோருக்கு மதியும், அவர் குற்றத்துக்குக் களங்கமும் உவமானங்களாய் ஒத்துநிற்க, மதி யென்னும் ஒன்றன்பால் உவமானத்துக்குப் பிறந்தாரென்னும் பலர் பால் உவமேயம் மாறுபட்டது. குடியினது உயர்ச்சியினாலும், சந்திரன் போன்ற அவர் நற்குணங்களோடு மாறுதலாலும் அக் குற்றமானது உலகெங்கும் பரந்து வெளிப்படுமென்பதாம்.

உயர்ந்த குடியிலே பிறந்தவர்க்குக் கருத்தும் சொல்லும் செய லும் தம்முள் மாறுபடாத செம்மையும் பழிபாவங்களின் மடங்குத லாகிய நாணமும் ஒருவர் கற்பிக்கவேண்டாமல் தாமேயுண்டாகு

மென்பதூஉம், மற்றவர்க்கானால் கற்பித்தவிட்டதூஉம் நெடிது இல்லாவென்பதூஉம், அக்குடிப்பிறந்தார் * ஒழுக்கத்திலும் வாய்மையிலும் நாணத்திலும் கல்வியறிவாலல்லாமல் தாமாகவே வழுவா ரென்பதூஉம், அன்னார்க்கு வறியவரிடத்து முகமலர்ச்சியும், அவர் விரும்பியதொன்றை மனமுவந்து கொடுத்தலும் அவரிடம் இன்சொற் சொல்லுதலும், அவரை † இகழாமையும் உரிமையாகு மென்பதூஉம், அளவிறந்த பொருளைப் பெற்றாராயினும், தமது ஒழுக்கங் குன்றுதற்குக் காரணமாகிய தொழில்களைச் செய்யா ரென்பதூஉம், தொன்றுதொட்டு வருகின்ற குடியிலே பிறந்தவர் தாம் கொடுக்கும் பொருள் முன்னைய அளவிலே சுருங்கியவிடத்தும் தமது குணமுடைமையினின்றும் நீங்காரென்பதூஉம், வறுமையுற்ற விடத்தும் அமைவில்லாத தொழில்களைச் செய்யாரென்பதூஉம், குலநல முடையானாய் வருகின்றவனிடத்தே அன்பின்மை தோன்றின் உலகம் அவனை அக்குலப் பிறப்பிடத்தே சந்தேகப்படுமென்பதூஉம், நிலத்தினியல்பை அதன்கண் முளைத்த முளை காட்டுவதுபோலக் குலத்தினியல்பை அதன்கட் பிறந்தார் வாயிலுண்டாகும் சொல் காட்டுமென்பதூஉம், ஒருவன் தனக்கு நலனுடைமையை வேண்டுவா னாயின் தான் நாணமுடையனாதலை வேண்டக்கடவ னென்பதூஉம், குலமுடைமையை வேண்டுவானாயின் பணியப்படுவார் யாவ ரிடத்தும் இருக்கையெழுதல் எதிர்செல்லுதல் முதலாகிய பணிதலை வேண்டக்கடவ னென்பதூஉம் இங்கு அறியத்தக்கவைகளாம்

* ஒழுக்கம் பிராமணர் முதலிய நான்கு வருணத்தாரும் தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரிய முதலிய நான்கு ஆசிரமங்களில் நின்று அறத்தின் வழுவாது ஒழுகுதல். ஒழுக்கமும் வாய்மையும் நாணமும் முறையே காயத்திற்கும் வாக்கிற்கும் மனத்திற்கும் உரியவையாதலை யறிக

† "இல்லாரை யெல்லாரு மெள்ளுவர் செல்வரை, எல்லாருஞ் செய்வர் சிறப்பு" (பொருள் செயல்வகை) என்பது பொதுவழக்கே யெனினும், எல்லா நன்மையு முடையராயினும் பொருளில்லாரை இகழ்தலும் எல்லாத் தீமையுமுடையராயினும் பொருளுடையாரைப் புகழ்தலுமாகிய தீக்குணங்கள் நற்குடியிற் பிறந்தாரிடத்து உளவாகா என்றறிக.

## கூஎ. மானம்.

னிக் குடிப்பிறந்தார்க்கு உரியவாய குணங்கள் சொல்லத் தொடங்கி, முதலில் மானம் சொல்லுகின்றார். அஃதாவது எந் நாளும் தந்நிலையிலே தாழாமையும், ஊழால் தாழ்வு வந்தவிடத்து உயிர்வாழாமையுமாம். இஃது, அக்குடிப்பிறப்பினை அழியாமல் நிறுத்துதலாலே, அச்சிறப்புப்பற்றி முறைவைக்கப்பட்டது.

**ம**ருந்தோமற் றூனோம்பும் வாழ்க்கை பெருந்தகைமை
பீடழிய வந்த விடத்து. (அ)

(இ - ள்.) பெருந்தகைமை - உயர்குடிப்பிறப்பானது, பீடு - தன்வலியாகிய மானம், அழியவந்தவிடதது, இறந்துபோகாமல், ஊனோம்பும் - பயனில்லாத உடம்பைக் காப்பாற்றும், வாழ்க்கை - வாழ்வானது, மற்று மருந்தோ - பின்னும் இறவாமைக்கு மருந்தாமோ, எ - று.

மற்றென்னும் இடைச்சொல் "ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலின் அந்நிலையே, கெட்டான் எனப்படுதல் நன்று" என்னும் மேற்குறளிற் கூறியுள்ள இறப்பென்னும் வினையை மாற்றி இறவாமையென்னும் வினையைத் தந்து நின்றது. அக்குடிப்பிறப்பு நற்குணங்களுக்கெல்லாம் இடனாதற் சிறப்புப்பற்றிப் 'பெருந்தகைமை' என்றும், அகுணங்கள் எல்லாவற்றிலும் மானமானது அக்குடிப்பிறப்பிற்கு வலியாதற் சிறப்புப்பற்றிப் 'பீடு' என்றும், அம்மானம் அழிந்தால் நின்ற வெற்றுடம்பு இழிக்கப்படுதலால் அதனை 'ஊன்' என்றும், பின்னுமிறத்தல் நிச்சயமெனபார் ஊனோம்பும் வாழ்க்கையை 'மருந்தோ' எனறும் சொல்லினார். மானத்தினது தொழில் அதற்கிடமாகிய குடிப்பிறப்பினமேல் நின்றது. மானம் கெடவருமிடத்து உயிர்துறந்தேனும் அம்மானத்தைச் சிதைவுறாது காக்கவேண்டுமென்பதும் * உயிர் காத்தற்பொருட்டு மானத்தைச்

---

* தாம் இறக்கவருமிடத்தே இழிதொழில்களைச் செய்தாயினும் பிழைக்கக்கடவரென்னும் மனுதருமசாத்திர முறைமையை மறுத்து உடம்பினது நிலையில்லாமையையும் மானத்தினது நிலையுடைமையையும் ஆராய்ந்து அவை செய்யவேண்டாவென்பதாம்.

சிதைக்கும் இழிதொழில்களைச் செய்யலாகாதெனபதும் இதனாற் பெறப்படும்.

புகழுடனே மானத்தை நிறுத்துதலை விரும்புபவர் புகழ் சம்பாதிக்குமிடத்தும் தம் குடிப்பிறப்பிற்கு ஒவ்வாத இழிதொழில்களைச் செய்யமாட்டார்†ரென்பதும், குடிப்பிறந்தவர்கசு நிறைந்த செல்வம் உண்டானவிடத்து அஃது உயர்ச்சிசெய்யத் தாம் தாழ்தலும், குறைந்த வறுமை உண்டானவிடதது அது தாழ்வு செய்யத் தாம் உயர்தலும் வேண்டுமென்பதும்; குடிப்பிறந்த மனிதர் தம் முயர்ந்த நிலையைவிட்டு அந்நிலையினின்றும் தாழ்ந்தவிடத்து, தலையினின்றும் வீழ்ந்த மயிரினைப்போல் அவமதிக்கப்படுவரென்பதும்; குடிப்பிறப்பால் மலைபோல் உயாந்தவரும் பழிககப்படும செயல்களை ஒரு குன்றிமணியளவாயினும் செய்வாரானால் தாழ்வாரெனபதும்; மானத்தைவிட்டுத் தனனை அவமதிப்பவர் பின்னே சென்று பொருள்பெற்று, அதனால் உயிர்வாழ்வதைவிட, அது செய்யாது இறத்தலே நனறென்பதும்; தன மயிர்த்திரளில் ஒரு மயிர் நீங்கினும் உயிர் வாழாத கவரிமாவையொப்பார், உயிர் நீக்கத்தால் மானமெய்தும் எல்லைவரின, அவ்வுயிரைத் தாங்காது விடுவர்†ரென்பதும்; அவ்விதம் உயிரைவிட்ட மானிகளது புகழ்வடிவை உலகத்தார் எந்நாளும் தொழுது துதியாநிற்ப‡ரென்பதும் இங்கு அறியத்தக்கவைகளாம்.

† உயிரும் மானமும் உடனில்லாதவிடதது, பின்னும் போவதாகிய உயிரைவிட்டு எந்நாளும் நிற்பதாகிய மானத்தை அடைவரெனபதாம்.

‡ "புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின், வலவ னேவா வான வூர்தி, யெய்துவ" ராகலின், இனிவரின் வாழாத மானமுடையார சுவர்க்கமடைதல் சொல்லவேண்டாவாயிற்று. [[illegible]-ம் பக்கம் அடிக்குறிப்பினைப் பார்க்க.]

## ௯௮. பெருமை.

அஃதாவது செயற்கரியவற்றைச் செய்தல், செருக்கில்லாமை, பிறர்குற்றங் கூறாமை என்ற இவை முதலாகிய நற்குணங்களாலே பெரியராயினாரது தன்மையாம். * "நன்னிலையினு மேன்மே லுயர்த்தற்" றன்மையவாகிய இக்குணங்கள் உண்டாவது நிலையிலிருந்து தாழாமை உள்ளவிடத்தேயாகலால், இது மானத்தின்பின் வைக்கப்பட்டது.

ஒளியொருவற் குள்ள வெறுக்கை யிளியொருவற்
கஃதிறந்து வாழ்து மெனல். (க)

(இ - ள்.) ஒருவற்கு - ஒருவனுக்கு, ஒளி - ஒளியாவது, உள்ள வெறுக்கை - பிறரால் செய்தற்கரியவைகளைச் செய்வோமென்று நினைக்கிற மனவெழுச்சியின் மிகுதி; ஒருவற்கு - ஒருவனுக்கு, இளி - மாசாவது, அஃது இறந்து - அச் செயலை யொழிந்து, வாழ்துமெனல் - உயிர்வாழக் கடவோமென்று நினைத்தல், எ - று,

ஒளி - தான் உளனாய காலத்து மிகுந்துதோன்றுத லுடைமை. †"ஒளிநிற்றன் ஒங்கு புகழ்செய்யான" என்றார் பிறரும். மேலும் (நீத்தார்பெருமை அதிகாரத்தில்) ‡"செயற்கரிய செய்வார் பெரியர்" எனறாராயினும் இங்கே அவை அளவிறந்த உபகாரம் ஈகை

---

* நாலடியார்-அறிவுடைமை - "நன்னிலைக்கட் டன்னை நிறுப் பானுந் தன்னை, நிலைகலக்கிக் கீழிடு வானு - நிலையினு, மேன்மே லுயர்த்து நிறுப்பானுந் தன்னைத், தலையாகச் செய்வானுந் தான்" [நிறுப்பான் - நிறுத்துபவன.]

† நாலடியார் - இதன்பொருள் - மதிப்பை நிறுத்தான் வளர் கின்ற உரையும் பாட்டுமாகிய புகழைச் செய்யான என்பது.

‡ இதன்பொருள் - ஒத்த பிறப்பினராகிய மனிதரில் மனம் வேண்டியவாறே அதனைப் பொறிவழிகளாற் புலனகளிற் செலுத்த லும் ஆசைகொள்ளுதலும் கோபித்தலும் முதலாகிய செய்தற் கெளியவைகளைச் செய்யாமல், செய்தற்கருமையான இயம நியம முதலியவற்றைச் செய்பவரே பெரியாராவர் என்பது.

முதலானவையாம். அவைகளிலாகிய பெருமையை அதன் காரணத்தின்மேல் வைத்து 'உள்ள வெறுக்கை' என்றும், அது தன்னையே அதன் காரியமாகிய ஒளியாக்கியுங் கூறினார். ஊக்கமில்லாதவர்களுக்குப் பெருமையும் பெருமையில்லாதவர்களுக்கு ஒளியும் உண்டாகாமை இங்குப் பெறப்படும். இதனாற் பெருமையின் சிறப்புக் கூறப்பட்டது.

வினைவசத்தால் பஞ்சபூத காரியமாகிய உடம்பைப் பொருந்தி நின்று அதனபயனை அனுபவித்தலாகிய பொதுவியல்பு எல்லாச் சாதியாருக்கும் ஒக்குமேயாயினும், அவராற் செய்யப்படுவனவாகிய நல்லனவும் தீயனவும் இரண்டுமாயினவும் இரண்டு மல்லனவுமாகிய அளவிறந்த தொழிற்பாகுபாடுகளால் உளவாகும் பெருமை சிறுமை எனப்பட்ட சிறப்பியல்புகள் * ஒவ்வாவென்பதும்; செய்தற்கரியவைகளைச் செய்யமாட்டாமல் சிறியராயினோர் பெருஞ்செல்வமுடையவராய் உயர்ந்த ஆதனமுதலியவற்றின் மேல் இருந்தாராயினும் பெரியராகா ரென்பதும்; செய்தற்கரியவைகளைச் செய்து பெரியராயினார் வறியராய்த் தாழ்ந்த வெறுநிலத்தில் இருந்தாராயினும் சிறியராகா ரென்பதும்; பிளவுபடாத மனத்தினையுடைய பெண்கள் கற்பினின்றுந் தவறாது தம்மைத் தாம் காத்துக்கொண்டு நடக்கும் விதம்போல, நிறையினின்றுந் தவறாமல் தம்மைத் தாம் பாதுகாத்துக்கொண்டு மன மொழி மெய்களை அடக்கி உபகாரமுதலானவைகளைச்செய்து ஒழுகுபவரிடத்தே பெருமையுண்டாமென்பதும்; செய்தற்கரியவைகளைச் செய்துவந்ததினால் பெருமையுடையராயினார் தாம் வறியராகியவிடத்தும் பிறராலே செய்தற்கரிய தம்செயல்களை விடாமல் அவை செய்யும் வழியால் முடிவுபெறச் செய்யவல்லவராவ ரென்பதும்; அப்படிப்பட்டவராகிய பெரியாரை வழிபட்டு அவ்வியல்பினை நாம் கொள்ளுவோமென்னும் எண்ணம்

* "பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந் தத்தங், கருமமே கட்டளைக் கல்" என்றார் தெரிந்துதெளித லதிகாரத்தில். [கட்டளைக் கல் - உரைகல்.]

மற்றைச் சிறியாரது மனத்தினிடத்து உண்டாகா † தென்பதும்; தனக்கொத்திருக்கும் பெரியாரிடத்து அடங்கியிருத்தலைச் செய்வ தாகிய சிறப்புத்தானும் தனக்கொவ்வாத சிறியவரிடத்து உண்டா மாயின், அடங்கியிருத்தலை யொழித்து அவரைச் செருக்கடையச் செய்யு மென்பதும்; பெருமையுடையார் குடிமை செல்வம் கல்விகளினாலாய சிறப்புண்டாகிய காலத்திலும் தருக்கின்றி அடங்கி நடப்பாரென்பதும்; மற்றைச் சிறுமையுடையவர் அச்சிறப்பு இல்லாத காலத்திலும் தம்மை வியந்து சிறப்பிப்பரென்பதும்; பெருமையுடையவர் பிறர் மானத்தையே கூறி, அவமானத்தை மறையா நிற்பரென்பதும்; மற்றைச் சிறுமையுடையார் பிறரது குணத்தை மறைத்துக் குற்றத்தையே கூறிவிடுவ ரென்பதும் இங்கு அறியத்தக்கவைகளாம்.

## ௯௯. சான்றாண்மை.

அஃதாவது பல குணங்களாலும் நிறைந்து அவைகளை ஆளுந்தன்மை. பலகுணங்களாலும் என்றது சாலுதல் (நிறைதல்) என்னும் தொழிலால் பெறப்படுதலால், அவைகளை என்னும் செயப் படுபொருள் வருவிக்கப்பட்டது. பெருமையுள் அடங்காத பல குணங்களையும் தொகுத்துக்கொண்டு நிற்கையால், இஃது அதன் பின் வைக்கப்பட்டது.

**சால்பிற்குக் கட்டளை யாதெனிற் றோல்வி**
**துலையல்லார் கண்ணுங் கொளல்.** (௬)

(இ - ள்.) சால்பிற்கு - சால்பாகிய பொன்னின் அளவறிதற்கு, கட்டளை - உரைகல்லாகிய செயல், யாதெனின் - யாதென்றால், அது, தோல்வி - தம்மின் உயர்ந்தவரிடத்துக் கொள்ளுந்

† குடிமை செல்வம் கல்வியென்ற இவற்றது உண்மை மாத் திரத்தால் தம்மை வியந்திருப்பார்க்கு அவை நமக்கியல்பென்று அடங்கியிருப்பாரை வழிபட்டு அவ்வியல்புடையாராதல் தென்பதாம்.

தோல்வியை, துலையல்லார் கண்ணும் - இழிந்தவரிடத்தும், கொளல் - கொள்ளுதலாம், (எ - று.)

துலை - சமானம். துலையல்லார்கண்ணும் என்ற எதிரதுதழுவிய எச்சவும்மையால் உயர்ந்தார் இழிந்தாரென்னும் இருதிறத்தாரிடத்தும் தோல்விவேண்டுதல் பெற்றும். கொள்ளுதல் - வெல்லும் வலிமை யுடையவராயிருந்தே தோல்வியை ஏற்றுக்கொள்ளுதல். இழிந்தாரை வெல்லதினைத்துத் தமக்குச் சமானமாக்கிக்கொள்ளாமல் தோற்பினும் அவரினும் உயர்வராயின், அதனாலே சால்பினளவு அறியப்படு மென்பதாம்.

நமக்குத் தருவது இதுவென்றறிந்து பலகுணங்களாலும் நிறைந்து அவைகளை ஆளுதற்றன்மையை மேற்கொண்டு நடப்பவர்க்கு நல்லனவாய குணங்களெல்லாம் இயல்பாயிருக்கு * மென்பதும், அக்குணங்களாலாய நலமே அவர்க்கு நலமா மெனபதும்; அஃதொழிந்த குடிப்பிறப்புக் கல்வி கேள்வி முதலிய உறுப்புக்களாலாகிய நலம் ஒருநலத்திலும் உள்ளதன்றென்பதும்; சான்றோர் சுற்றத்தார் மேலேயன்றிப் பிறர்மேலும் உளதாய அன்பும், பழிபாவங்களில் நாணலும், யாவரிடத்தும் உபகாரஞ் செய்தலும், பழையார்மேற் கண்ணோடலும், எவ்விடத்தும் மெய்ம்மை கூறலும் உடையராயிருப்ப ரெனபதும்; தவத்தினுக்குக் கொல்லாநலம் சிறந்தாற்போலச் சால்பினுக்குப் பிறர்குற்றம் சொல்லாநலம் சிறந்தாகுமென்பதும்; சான்றோர் எப்பொழுதும் வணக்கமுடையவராயிருத்தலால் அவர்க்குப் பகையில்லை யென்பதும்; தமக்குத் தீமை செய்தவர்க்கும் நன்மையே செய்வா † ரென்பதும்; சால்புடையார் வறுமை நேரிட்டவிடத்தும் அதனால் இளிவடையாது மேம்படுவரென்பதும்; சால்புடைமையாகிய கடலுக்குக் கரையெனறு

---

* நல்லனவாய குணங்களில் சிலகுணங்கள் இல்லாதவிடத்தும், உள்ளகுணங்கள் இயல்பாயிராமல் பிறரது சேர்க்கையால் செய்துகொண்டனவாயவிடத்தும் சானறாண்மை யென்னும் சொல்லுக்கு சால்பை ஆளுதற்றன்மை யெனனும் பொருள்கூடாமையறிக.

† தமக்குத் தீமை செய்தவர்க்குத் தாமும் தீமை செய்வாராயின் தம்முடைய சால்பால் ஒருபயனுமில்லை என்பதறிக.

சொல்லப்படும் சான்றோர் ‡ மற்றைக்கடலும் கரையுள் நில்லாமற் காலம் வேறுபட்டாலும் தாம் வேறுபடா § ரென்பதும் ; அன்னவர் ஒருக்கால் மாறுபடுவாராயின் உலகம் தன் பாரத்தைத் தாங்காதாய் முடியுமென்பதும் இங்கு அறியத்தக்கவைகளாம்.

## ௱. பண்புடைமை.

அஃதாவது பெருமை சான்றாண்மைகளில் தாம் வழுவாது நின்றே எல்லாரியல்புகளும் அறிந்து அவற்றிற்கு ஒத்து நடத்தல். * "பண்பெனப்படுவது பாடறிந் தொழுகல்" என்றார் பிறரும். அதிகாரமுறைமையும் இதனாலே விளங்கும்.

எண்பதத்தா லெய்த லெளிதென்ப யார்மாட்டும்
பண்புடைமை யென்னும் வழக்கு. (க)

(இ - ள்.) யார்மாட்டும் - யாரிடத்தும், எண்பதத்தால் - எளிய சமயத்தரா யிருத்தலால், பண்புடைமை யென்னும் - அரிதாகிய பண்புடைமையென்று சொல்லப்படுகின்ற, வழக்கு - நல்வழியை, எய்தல் - அடைதல், எளிது - இலேசு, என்ப - என்று சொல்லுவர் நூலோர், எ - று.

---

‡ "பெருங்கடற் காழி யனையன் மாதோ" என்றார் புறநானூற்றில்.

§ "மண்பா தலம்புக்கு மால்கடல் மூடிமற் றேழுலகும்
விண்பால் திசைகெட் டிருசுடர் வீழினும் அஞ்சல்நெஞ்சே
திண்பால் நமக்கொன்று கண்டோந் திருப்பா திரிப்புலியூர்க்
கண்பாவு நெற்றிக் கடவுட் சுடரான் கழலிணையே."

"வானந் துளங்கிலென் மண்கம்ப மாகிலென் மால்வரையும்
தானந் துளங்கித் தலைதடு மாறிலென் தண்கடலும்
மீனம் படிலென் விரிசுடர் வீழிலென் வேலைநஞ்சுண்
டூனமொன் றில்லா வொருவனுக் காட்பட்ட வுத்தமர்க்கே."

என்னும் அப்பர் அருண்மொழியின் கருத்தினை இவண் ஓர்க.

* கலித்தொகை - இதன்பொருள் - பண்பெனப்படுவது உலகவியல்பை அறிந்தொழுகுதல் என்பது.

குணங்களால் நிறைந்து எளிய சமயத்தரு மாகியவிடத்துப் பண்புடைமை தானே உண்டாமாகலால் 'எண்பதத்தா லெய்த லெளிது' என்றும் அஃது உலகத்தையெல்லாம் தன் வசப்படுத்தற் றன்மையதாக விருத்தலால் அதனைப் பழையோர் சென்ற நல்வழியாக்கியும், அதனை எளிதிலடைதற்கு இது நூலோரோதிய உபாயமென்பார் அவர்மேல் வைத்துஞ் சொல்லினார் இதனால் பண்புடையராதற்குக் காரணஞ் சொல்லப்பட்டது

பிறர்மேல் அன்புடையராதலும் உலகத்தோடமைந்த குடியிற் பிறத்தலும் ஆகிய இவ்விரண்டும் ஒருவனுக்குப் பண்புடைமை யென்று உலகத்தார் சொல்லும் நல்வழி யென்பதும், ஒருவனுக்கு நன்மக்களோடு பொய்ப்படும் ஒப்பாவது உயிரின் வேறாய நிலைபெறாத உடம்பொத்தலன்று மேவ லல்லாமல் நிலைபெறுதலுடைய பண்பொத்தலாகலால், அப்படிப்பட்ட நன்மக்கள் பண்பினையுடையவனாக வென்பதும், நீதியையும் அறத்தையும் விரும்புதலால் பிறர்க்குந் தமக்கும் பயன்படுத லுடையாரது பண்பினை உலகத்தார் மிகவும் கொண்டாடா நிற்பரென்பதும், தன்னை இகழ்தல் ஒருவனுக்கு விளையாட்டினிடத்தும் துன்பந்தருவதா மாகலால், பிறர் இயல் பறிந்து நடப்பாரிடத்துப் பகையுண்டான விடத்தும் அஃது உளதாகாது இனியவாய பண்புகளே உளவாவன வென்பதும், அதனால் அவர் தம்மைப் பகைத்தவரையும் நேசித்து அவர்க்கு இனியவே செய்வா ரென்பதும், அவராலேயே உலகியல் நடைபெறுகின்ற தென்பதும், அரம்போலக் கூரிய அறிவினை யுடையராயிருப்பினும் அவ்விசேட அறிவிற்குப் பயனாய மக்கட்பண் பில்லாதவர் ஓரறிவினதாய மரத்தினையே * யொப்ப ரென்பதும், தம்மோடு பகைசெய்து நடப்பவரிடத்தும் தாம் பண்புடையவராய் நடவாமை அறிவுடையவர்க்கு இழுக்கென்பதும், பிறரோடு நட்புச் செய்தொழுகும் பண்பில்லாதவர்க்கு உலகியல் தெரியாதென்பதும்; பண்பில்லாதவன் முன்னை நல்வினையால் அடைந்த பெருஞ் செல்வம் நல்ல பசுவின்பால் ஏற்ற பாத்திரத்தின் குற்றத்தாற் கெட்டாற் போலப் பயன்படா தொழியுமென்பதும் இங்கு அறியத் தக்கவை களாம்

---

* ௬௯ம் பக்கம் பார்க்க.

## ௱க. நன்றியில்செல்வம்.

அஃதாவது ஈட்டியவனுக்கும் பிறர்க்கும் பயன்படுதலில்லாத செல்வத்தினியல்பு. செல்வமுடையானது குற்றம் செல்வத்தின் மேல் ஏற்றப்பட்டது. அதிகார முறைமை முன்னதிகாரத்தில் ''பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வ(ம்) நன்பால், கலந்தீமை யாற் றிரிந் தற்று'' என்னும் கடைசிச் செய்யுளில் தோற்றுவாய் செய்வதனாற் பெறலாம்.

பொருளானா மெல்லாமென் றீயா திவறும்
மருளானா மாணாப் பிறப்பு. (உ)

(இ - ள்.) பொருளான் - பொருளொன்று முண்டாக அப்பொருளினாலே, எல்லாம், ஆம் - உண்டாகும், என்று - என்று அறிந்து, அதனைச் சம்பாதித்து, ஈயாது - பின் பிறர்க்குக் கொடாது, இவறும் - உலோபத்தனஞ் செய்யும், மருளான் - மயக்கத்தினாலே, மாணா - நிறைதலில்லாத, பிறப்பு - பேய்ப்பிறப்பு, ஆம் - ஒருவனுக்கு உண்டாம், எ - று.

இருமையினும் அடையும் இன்பங்கள் பலவும் அடங்க 'எல்லாம்' என்றும், பொருளைச் சம்பாதித்தற்கு முன்னே உண்டாகிய அறிவானது சம்பாதித்த பின்னே மயங்குதலால் 'மருள்' என்றும், பொருள் உண்டாயிருக்கப் பிறருடைய பசி கண்டிருந்த பாவத்தால் உணவுகள் உண்டாயிருக்கப் பசித்து வருந்தும் பிறப்பு உண்டா மென்றும் சொல்லினார்.

பெரும் பொருளைச் சம்பாதித்து வைத்த ஒருவன் அதனை யனுபவியாது செத்தவிடத்து அப்பொருளினிடத்து அவனால் செய்யக்கிடந்ததோ ருரிமை இல்லையாதலால், பொருள் பெற்றானொருவன் பெற்ற காலத்திலேயே தக்கார்க்குதவித் தானும் அனுபவிக்கக் கடவனென்பதூஉம்; அவ்விதம் செய்யாதவன் உயிரோடிருக்குங் காலத்திலும் இறந்தவனாகவே கருதப்படத்தக்கவனாவா னென்பதூஉம்; ஈகையால் இருமைக்கும் உறுதியாகிய அறத்தைச் செய்து அதன் பயனாகிய இசையையடைய விரும்பாது, நாம் பிறரைக்காட்டிலும் மிகுதியாகச் சம்பாதிப்போமென்று பொருள்

சம்பாதிக்கை மாத்திரத்தையே விரும்பி அப்பொருளினை * ஈட்டற் றுன்பத்தையும் காப்பாற்றற்றுன்பத்தையும் இழத்தற்றுன்பத்தையும் அனுபவிக்கும் அறிவிலாப் பேதையர் உலகிற்குப் பாரமாவாரென்பதும்; உலோபியானவன் ஒருவராலும் விரும்பப்படானென்பதும்; அன்னவனுக்குப் பொருளால் அடைதற்பாலதாகிய அறப்பயனும் இன்பப்பயனும் இல்லையாதலால், அவன் எவ்வளவு அதிகப் பொருளைச் சேர்த்து வைத்திருப்பினும் தரித்திரனேயாவனென்பதும்; அப்பொருள் பிறரால் அபகரிக்கப்படுமென்பதும்; அனுபவிக்கப்படுதலும் ஈயப்படுதலுமாகிய தொழிற்கு உரியபொருளை அல்லதாக்குதலால் அவ்வுலோபி அப்பொருளுக்கு ஒரு நோயாவானென்பதும்; இலராய் இரந்தார்க்கு ஈயாதான்செல்வமானது பெண்டிரின் மிக்க † நலத்தினைப்பெற்ற ஒருத்தி கொடுப்பாரில்லாமையினாலே கணவனின்றித் தனித்தவளாய் மூத்து, கொடுப்பாரும் கணவனுமின்றித் தானும் பயனிழந்து கழியுமாறுபோல வீணேயழியுமென்பதும்; வறியார்க்குச் சமீபனாயிருந்தும் ஒன்றுங் கொடாதவன் செல்வம்பெறுதல் நடுவூரில் எட்டி பழுத்ததையொக்குமென்பதும்; உலகத்தையெல்லாம் நிலைநிறுத்தும் மேகம் மழை பொழிதலால் நீரின்றி வறுமையடைந்தவிடத்தும் அவ்வறுமை விரைவில் நீங்கிப் பின்னும் மழைபெய்து உலகத்துக்கு உதவுவதுபோல், வறியார்க்கீயும் சீருடைச்செல்வர் அவ்வீகையால் வறியராயவிடத்தும் அவ்வறுமையினின்று விரைவில் நீங்கிப் பின்னும் அவ்வறியார்க்குப் பயன்படுவரென்பதும் இங்கு அறியத் தக்கவைகளாம்.

---

* "ஈட்டலுந் துன்பமற் றீட்டிய வொண்பொருளைக்
காத்தலு மங்கே கடுந்துன்பங்—காத்த
குறைபடிற் றுன்பங் கெடிற்றுன்பந் துன்பக்
குறைபதி மற்றைப் பொருள்"—நாலடியார்.

"தீயாலோ நீராலோ தேர்வேந்தர் தம்மாலோ
மாயாத தெவ்வர் வலியாலோ—யாதாலோ
இப்பொருள்போய் மாய்கின்ற தென்று பொருள்வைத்தார்
எப்பொழுது(ம்) நீங்கா ரிடர்"—பாரதம்.

† நலம் - வடிவின் நலமும் குணத்தின் நலமும்.

## ௱உ. நாணுடைமை.

அஃதாவது முன் சொல்லப்பட்ட சால்பு பண்பு முதலாகிய குணங்களால் உயர்ந்தோர் தமக்குத் தகாத கருமங்களில் நாணுதலுடையராந் தன்மை. அதிகார முறைமையும் இதனாலே விளங்கும்.

கருமத்தா னாணுத னாணுத் திருநுதல்
நல்லவர் நாணுப் பிற. (க)

(இ - ள்.) நாணு-நன்மக்களது நாணாவது, கருமத்தால்-இழிந்த கருமங் காரணமாக, நாணுதல் - நாணுதலாம், பிற - அஃதல்லாமல் மனமொழி மெய்களது ஒடுக்கத்தால் வருவனவோ என்றால், அவை அவராலல்ல, திருநுதல் - அழகிய நெற்றியையுடைய, நல்லவர் - குலமகளிரது, நாணு - நாணங்கள், எ - று.

பிற குலமகளிரது நாணென்றதனால் மற்றது நன்மக்களது நாணென்பதூஉம், நாணுதலென்றதனால் கருமத்தினது இழிவும் பெறாம். திருநுதல்நல்லவரென்பது புகழ்ச்சிப் பொருளில் வந்த குறிப்புச் சொல்- காரணத்தின் பன்மைபற்றிப் பிற என்றார். இனி அற்றமறைத்தல் முதலியன பொதுமகளிர் நாணோடு ஒக்குமென்று உரைப்பாரும் உளர் அவர்க்கு நாண் கேடுபயக்குமென விலக்கப்பட்டமையானும், அப்பெயரால் கூறப்படாமையானும், அஃது உரையன்மையறிக. இதனால் நாணினது இலக்கணம் சொல்லப்பட்டது.

ஊணும் உடையும் உறக்கமும் அச்சமும் காமமும் மக்கள் உயிர்க்கெல்லாம் பொதுவாயிருக்க, நன்மக்களுக்குச் சிறப்பாவது நாணுடைமையே யாகுமென்பதூஉம், உயிர் உடம்போடு கூடியல்லது பயனடையாதவாறுபோல, நற்குணங்களின் நிறைவானது நாண் எனநின்ற நற்குணத்தோடு கூடியல்லது பயனடையாதென்பதூஉம்; சான்றோராவார் பிறர்க்குவரும் பழியைத் தமக்குவரும் பழியாகக் கருதி நாணுவாரென்பதூஉம்; அக்கருத்துடையார் பெரியராகலின் அவரை உயர்ந்தோர் யாவரும் புகழ்வரென்பதூஉம்; உயர்ந்தவர், பழி பாவங்கள் அடையாமற் காக்கவல்ல நாணம், அப்பழிபாவங்கள் புகும் வழியாகிய உலகம் என்னும் இரண்டனுள் ஒன்றனைக்கொள்ள

நேர்ந்தவிடத்து அந்நாணத்தைச் சொல்வதல்லது உலகத்தோடு கொள்ள விரும்பாரெனபதும்; அப்பெரியார் தமது நாணங் கெடவரின் உயிர்துறந்தேனும் அந்நாணத்தைக் காப்பரெனப தும்; கேட்டவரும் கண்டவரும் நாணத்தக்கபழியை நாணாது செய்பவனைவிட்டு அறம் நீங்குமென்பதும்; நாணின்மை ஒருவ னிடத்து உண்டாகுமாயின, அந்நிலை அவனது பிறப்பு கல்வி குணம் செயல் இனம் எனறிவற்றால் வந்த நன்மைகளையெல்லாம் கெடுக்கு மென்பதும; நாணில்லாத மக்களது இயக்கம் எந்திரக்கயிற்றினால் இயங்கும் மரப்பொம்மையினது இயக்கம் போல்வதல்லது உயிரியக்க மல்லவென்பதும் இங்கு அறியத்தக்கவைகளாம்.

## ௱௩. குடிசெயல்வகை.

அஃதாவது ஒருவன் தானபிறந்த குடியை உயரச்செய்தலின் விதம். இது தாழ்வினிடத்து நாணுடையவர்க்கு உண்டாவதாகலால் நாணுடைமையினபின் வைக்கப்பட்டது.

இடும்பைக்கே கொள்கலங் கொல்லோ குடும்பத்தைக்
குற்ற மறைப்பா னுடம்பு. (௯)

(இ - ள்.) குடும்பத்தை - * ஆதிதைவிகம் ஆதிபௌதிகம் ஆதியான்மிகம் என்னும் மூவகைத் துன்பமும் அடையுந் தன் மையதான தன்குடியை, குற்றமறைப்பான் - அம்மூவகைத் துன் பங்களும் அடையாமற் காக்க முயல்பவனது, உடம்பு - தேகம், இடும்பைக்கே - அம்முயற்சித் துன்பத்திற்கே, கொள்கலங்கொல் - கொள்கலமா மவ்வளவோ? அஃதொழிந்து இன்பத்திற் காதல் இல்லையோ? (எ - று.)

* இவை மேலே ௫௰ - வது பக்கத்தின் அடிக்குறிப்பினில் விளக்கப்பட்டிருத்தலைக் காண்க.

† "உறைப்பெயல் ஓலை போல, மறைக்குவன் பெருமநிற் குறித்து வருவேலே" என்றவிடத்தும் மறைத்தல் காத்தல் என்னும் பொருளினதாயிற்று. எனகுடி முழுதும் இன்புறுமாறு யானே நான் இருமையும் பெறுதலால் இம் மெய்வருத்தமாத்திரம் எனக்கு நல்லதென்று முயலும் அறிவுடைய ஒருவன் அம்மெய் வருத்தத்தை ஒருநாளும் விடாமையை நோக்கி 'இடும்பைக்கே கொள்கலங் கொல்லோ' என்றார். இது குறிப்பாற் பொருளுணர்த்தலினுனே குறிப்புமொழியாகும். ஓ - அசை. இதனால் குடிசெய்வார் அது செய்யுமியல்பு சொல்லப்பட்டது.

தன்குடி செய்தற் பொருட்டுத் தொடங்கிய கருமத்தைச் சலிக்காது முடிப்பவனுக்குச் செல்வமும் புகழுமெய்திக் குடியுயாந்து அதனால் மேம்பாடுடைய பெருமை யுண்டாகுமென்பதும்; விடாமுயற்சியும் நிறைந்த வறிவுமுடைய ஒய்வில்லாத கருமச செயலால் அவனது குடி உயருமென்பதும்; அவ்விதம் முயல்பவனுக்குத் தெய்வசகாய முண்டென்பதும்; அதனால் அத்தொழிலை முடிக்கும் விதத்தை அவன் ஆலோசிக்க வேண்டாமல் யாதொரு தடையுமின்றித் தானே முடிவுபெறுமென்பதும்; அறநீதிகளுக்கு விரோதமான காரியங்களைச் செய்யாமல் தன்குடியை உயரச்செய்து நடப்பவனை உலகத்தார் அவனுக்குச் சுற்றமாகவேண்டித் தாமே சூழாநிற்ப ரென்பதும்; அவ்விதம் தன் குடியை உயர்த்திக் கொள்ளுதல் அவனுக்குச் சிறந்த ஆண்மையாகுமெனபதும்; குடியின் பாரத்தைத் தாங்குதல் அக்குடியிற் பிறந்தார் பலரில் தகக ஒருவரிடத்தே யாகுமென்பதும்; அன்னவர் எடுத்த காரியத்தை வெயில் மழை பனி யென்பன நோககிப் பின்னே செய்வோ மென்றுசோம்பி இராரென்பதும்; இக்குடியிலுள்ளார் யாவரும் இன்பமுற இக்காலத்துத் துன்பமுறுவோன் யாரேனுவென்று உட்கொண்டு அசட்டைசெய்யா ரென்பதும்; தான் விழும்பொழுது முட்டுக்கொடுத்துத் தாங்கவல்ல நல்ல ஆண்மகனில்லாத குடியாகிய

† புறநானூறு - இதன்பொருள் - மழையை மேலேவிழ வொட்டாது ஓலைக்குடை காப்பதுபோலக் காப்பாற்றுவனென்று உன்னைக் குறித்து வருவேன் பெருமானே - என்பது.

மரம் துன்பமாகிய கோடரியானது புகுந்து தன்முதலை வெட்டிச் சாய்க்க ஒருபற்றில்லாமல் விழுந்து கெடு* மெனபதும் இங்கு அறியத்தக்கவைகளாம்.

## ௱௩. உழவு.

அஃதாவது சிறுபான்மை வாணிகர்க்கும் † பெரும்பான்மை வேளாளர்க்கும் உரித்தாகிய உழுதற்றொழில். இது செய்விக்கும்போது பிராமணர் முதலாகிய மற்றவர்க்கும் உரித்தாகும். இது, முனனே குடி உயர்தற்கு ஏதுவென்ற முயற்சிவகையாகலால், குடிசெயல்வகையினபின வைக்கப்பட்டது.

பலகுடை நீழலுந தங்குடைக்கீழ்க் காண்பர்
அலகுடை நீழ லவர். (௪)

(இ - ள்.) அலகுடை - உழுதற்றொழிலால் நெல்லினையுடையராகிய, நீழலவர் - தண்ணளியுடையோர், பலகுடை நீழலும் - பல வேந்தர் குடைநிழலதாய பூமிமுழுதையும், தங்குடைக்கீழ் - தம் வேந்தர் குடைக்கீழே, காண்பர் - காணுவர், எ - று.

அலகு - கதிர்; அது இங்கே அதன் முதலாகிய நெல்லுக்காதலால் சினையாகுபெயர். உடைய எனனும் குறிப்புப்பெயரெச்சம் உடை என ஈறுகுறைந்து நின்றது செய்யுள் விகாரத்தால். உழுவாரிடத்துள்ள இரக்கச் சித்தம் வெப்பதினால் வருந்தி வந்தடைந்தவருக்கு அவர் வருத்தத்தைத் தீர்க்கும் நிழல்போல் பசியால் வருந்தி

* " தூங்குசிறை வாவலுறை தொனமரங்க ளன்ன
ஓஙகுகுல(ம்) நையவத னுட்பிறந்த வீரர்
தாங்கல்கட னாகுந்தலை சாய்ப்பவரு தீச்சொல்
நீங்கன்மட வார்கள்கடன் "—சீவகசிந்தாமணி.

(இ - ள்.) ஆலமரங்கள் கெடவரும்போது அம்மரங்களின் விழுதுகள் அவற்றைத் தாங்கினாற்போல, தமது குலமானது உதவியின்றிக் கெடவரும்போது அக்குடியிற்பிறந்த நனமக்கள் அதனைக் கெடாவண்ணம் காப்பாராக, மூடர் அவ்விதம் தாங்காது நீங்கிப் போவார் என்பது.

† ௱உ௰-ம் பக்கம் பார்க்க.

வந்தடைந்த வறியார்க்கு உணவு உதவுதலினால் நீழலெனப்பட்டது. நீழலவரென்றது இரப்போர்க்கெல்லாம் ஈதல் நோக்கி. அரசரது உன்னத நிலை உழவரது உழைப்பின் பயனாதல்பற்றி அவ்வரசரது குடையை உழவரது குடையாகக்கொண்டு 'தங்குடை' என்றார். குடை நீழலென்பது அதற்குத் தானமாகிய பூமிக்காதலால் தானியாகுபெயர். * "ஊன்றுசால் மருங்கி னீன்றதன் பயனே" என்றதனால் தம்மரசனுக்கு வெற்றி பெருகி மண்முழுதும் அவனதாகக் கண்டிருப்பரென்பதாம். † "இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமு முழவிடை விளைப்போர்" என்றார் பிறரும். "வரப்புயர நீருயரும் நீருயர நெல்லுயரும் நெல்லுயரக் குடியுயரும் குடியுயரக் கோவுயரும்" என்ற சொல்வழக்கின் கருத்தும் இங்கு உணரத்தக்கது.

உலகத்தவரிற் பெரும்பாலார் உழுதலால் வரும் உடல்வருத்தம் நோக்கிப் பிறதொழில்களைச் செய்து பொருள் பெற்றவிடத்தும் உணவினிமித்தம் உழுவாரிடத்துச் செல்லவேண்டுதலால், எல்லா வருத்தமுற்றும் உழுதலே தலைமையாகிய தொழிலென்பதும்; வருத்தமில்லையாயினும் பிறதொழில்கள் கடையென்பதும்; அவ்வுழுதலைச் செய்யமாட்டாமல் பிறதொழில்கள்மேல் செல்வோர் யாவரையும் தாங்குதலால் உழவுதொழில் செய்வோர் ‡ உலகத்தாராகிய தேர்க்கு அச்சாணியாவாரென்பதும்; யாவரும் உண்ணும்படி உழுதலைச்செய்து அதனால் தாமும் உண்டு வாழுகின்றவரே தமக்கு உரியாராய் வாழ்கின்றவரென்பதும்; தாமும் மனிதப்பிறப்பினராய்

* புறநானூறு - இதன் பொருள் - கலப்பை நிலத்தில் ஊன்றிய சாலினிடத்து விளைந்த நெல்லினது பயனே என்பது.

† சிலப்பதிகாரம் - இதன் பொருள் - இரப்போரது சுற்றத்தாரையும் காவலரது வெற்றியையும் உழவினிடத்தே உண்டாக்குவோர் என்பது.

‡ "காடுகொன்று நாடாக்கிக் குளந்தொட்டு" [பத்துப்பாட்டு] என்றாற்போல உழுவாரென்பது உழுவிப்பார் மேலுஞ் செல்லும் என்றறிக.

பிறந்திருந்தும் பிறரைத் தொழுது அவர் சிலபொருள் கொடுக்கத் தம்முயிர்காத்து அவர்பின்செல்வார் தமக்கு உரியரல்லரென்பதும்; ஒருநாளும் அழிவில்லாத செல்வமாகிய தமதுகையால் உழுதுண்டலை இயல்பாக வுடையவர் பிறரை யாசிக்கமாட்டா ரென்பதும்; யாசிப்பவர்க்கு அவர் வேண்டியதொரு பொருளை ஒளிக்காது கொடுப்பா ரென்பதும்; உழவுத்தொழில் நின்றவிடத்து உணவில்லாமையால் தாமுண்டலும் இல்லறஞ் செய்தலும் யாவர்க்கு மில்லையாக, அதனால் உலகத்தில் இம்மை மறுமை வீடென்னும் பயன்கள் நிகழாவென்பதும்; உழுத புழுதி நன்றாய்க் காய்ந்தபின் பயிரிடும் நிலம் நன்றாய் விளையுமென்பதும்; அப்பயிர்க்கு உழுதலுடன் எருப்பெய்தலும், களைபிடுங்கலும், நீர்பாய்ச்சலும், பட்டிமாடு முதலியவற்றால் அழிவடையாமற் காத்தலும் வேண்டுமென்பதும்; அந்நிலத்துக்கு உரியவன் அதன்கண் பிறரை ஏவியிராமல் தானே நாள்தோறும் போய்ப்பார்த்து வேண்டியவை செய்யவேண்டுமென்பதும்; அவ்விதஞ் செய்யாமல் சோம்பியிருந்தானானால் அந்நிலத்தினின்றும் அடையக் கிடப்பதாகிய போகத்தை இழப்பானென்பதும்; நிலமகள் பயிர்செய்வார் யாவர்க்கும் செல்வங்கொடுத்துவருகின்றதைக் கண்டிருந்தும் அதுசெய்யாது யாம் வறியேமென்று சொல்லிச் சோம்பியிருப்பவர் பேதையராவ ரென்பதும் இங்கு அறியத்தக்கவைகளாம்.

## ௱௫. நல்குரவு.

அஃதாவது அனுபவிக்கப்படுவன யாவும் இல்லாமை.

**தொல்வரவுந் தோலுங் கெடுக்குந் தொகையாக**
**நல்குர வென்னு நசை.** (௫)

(இ - ள்.) நல்குரவென்னும் - வறுமையென்று சொல்லப் படுகிற, நசை - ஆசை, தொல்வரவும் - தன்னாலே பற்றப் பட்டவருடைய பழைய குடிவரவினையும், தோலும் - அதற்கேற்ற சொல்லினையும், தொகையாக - ஒருமிக்க, கெடுக்கும், எ - று.

ஆசையில்லாதவிடத்து வறுமையும் இல்லையாகலால் நல்குரவை நசையாக்கி, அஃது அக்குடியிற் பழையோர்க்கு இல்லாத இழி தொழில்களையும் அவமானச் சொற்களையும் உண்டாக்கலால் அவ்விரண்டினையும் தொகையாக ஒருமிக்கக் கெடுக்கும் என்றார். † "குடிப்பிறப்பழிக்கும் விழுப்பங் கொல்லும்" என்றார் பிறரும். தோலாவது ‡ "இழுமென் மொழியால் விழுமியது நுவறல்" என்றார் தொல்காப்பியனாரும். தோலென்பதற்கு உடம்பென்றுரைப்பாரு முளர். அஃது அதற்கும் பெயராயினும் உடம்பு கெடுக்குமென்றற்கோர் பொருட்சிறப் பில்லாமையறிக.

ஒருவனுக்கு வறுமைபோலத் துன்பஞ்செய்வது பிறிதொன்றில்லையென்பதூஉம்; வறுமையுடையானுக்கு இம்மையின்பமும் மறுமையின்பமு மில்லையென்பதூஉம்; வறுமையானது அவமானச் சொல் பிறவாத உயர்ந்த குடியிற் பிறந்தவரிடத்தேயும் அவ் வவமானச்சொல் பிறத்தற்குக் காரணமாகிய சோர்வினை உண்டாக்கு மென்பதூஉம்; வறியானொருவனுக்கு அவ்வறுமைத்துன்பங் காரண மாகச் செல்வர் மனைவாயில் நோக்கிச்செல்லுதற் றுன்பமும், அவரைக் காணாதாற் றுன்பமும், கண்டபின் மறுத்தவிடத்து உண் டாகுந் துன்பமும், மறுக்காதவிடத்தும் அவர் கொடுத்ததை வாங்குதற் றுன்பமும், அப்பொருளைக் கொண்டுவந்து அனுபவிப்பவைகளைக் கூட்டுதற்றுன்பமும் முதலான பல துன்பங்களும் வந்து விளையு மென்பதூஉம்; வறியார் மெய்ந்நூற்பொருளைத் தெளிய அறிந்து சொன்னாராயினும் யாம் இவர் சொல்லியவற்றை விரும்பிக் கேட்டோமாகில் முகங்கொடுத்து இவர் அடைகின்ற குறையைத் தீர்க்கவேண்டி வருமென்றஞ்சி யாவரும் கேளாமையால் அவர் சொல் பயனில சொல்லாக முடிந்து, அதனால் அவர் கல்வியும் பயன்படாதாகு மென்பதூஉம்; வறியானொருவனை அவனிடத்தே

† மணிமேகலை - இதன்பொருள் - பசிப்பிணி தீண்டிற் பற்றப் பட்டாருடைய உயர்குடிப்பிறப்பையும் அக்குடிக்கிருந்த சிறப்பையும் கெடுக்கும் என்பது.

‡ இதன்பொருள் - மெல்லென்ற மொழியால் அறம் பொருள் இன்பம் வீடென்னும் சிறந்தபொருளுண்டாக மொழிதல் என்பது.

கொள்ளப்படுவதொன் றில்லாமையேயன்றி அவனுக்குக் கொடுக்க வேண்டிய அவசியம் உண்டாதலால் அது நோக்கி அவனைப்பெற்ற தாயும் * அவனைக் கைவிடுவாளென்பதும்; வறுமை நெருப்பினுங் கொடிதென்பதும்; அதனால் அதனைச் சகித்தல் அரிதென்பதும்; அனுபவிக்கப்படும் பொருள் ஒரு சிறிதும் இல்லாதவர் சுற்றந்தானே விட்டமையால் ஒருவழியால் துறந்தாராக, நின்ற தம்முடம்பினையுந் துறந்து அதனால் தம்மானமழியாமற் காத்தலே தகுதியாமென்பதும் இங்கு அறியத்தக்கவைகளாம்.

## ௱சு. இரவு.

இனி மானங்கெடாத இரத்தல் (யாசித்தல்) இரவாமையோடு ஒத்தலால், அவ்விரவினாலும் வீடுபெறுதற்கு உதவி செய்வதாகிய உடம்பு காக்கப்படுமென்னும் அறநூல் வழக்குப்பற்றி முன் அதிகாரத்தின் "†துப்புர வில்லார் துவரத் துறவாமை, உப்பிற்குங் காடிக்குங் கூற்று" என்னும் கடைசிக்குறளிற் பெறப்பட்ட துவரத் துறத்தலென்னும் இறத்தலை விலக்குதற் பொருட்டு இரவு சொல்லுகின்றார். அதிகார முறைமையும் இதனாலே விளங்கும்.

இன்ப மொருவற் கிரத்த லிரந்தவை
துன்ப முறாஅ வரின். (உ)

(இ - ள்.) ஒருவற்கு - ஒருவனுக்கு, இரத்தல் - யாசித்தல் தானும், இன்பம் - இன்பத்திற்கு ஏதுவாம், இரந்தவை - இரந்த பொருள்கள், ஈவாரது அறிவுடைமையால், துன்பமுறா - தான் துன்பமுறாமல், வரின் - வருமானால், எ - று.

---

* "தாயும்பகை கொண்ட பெண்டிர் பெரும்பகை தன்னுடைய
சேயும்பகை யுறவோரும் பகை யிச்செகமும் பகை
ஆயும்பொழுதி லருஞ்செல்வ நீங்கிலிங் காதலினால்
தோயு நெஞ்சே மருதீசர் பொற்பாதஞ் சுதந்திரமே."
பட்டினத்தார்

† துப்புரவு - அனுபவிக்கப்படும் பொருள். துவரத்துறத்தல் - முழுதுந்துறத்தல் (இறத்தல்).

இன்பம் அதன் காரணத்திற்காதலால் காரியவாகு பெயர். உறுமலென்பது உறு எனக் கடைக்குறைந்து நின்றது. துன்பம் - ஈறுதோன்றாத சாதியொருமைப் பெயர். துன்பமாவன - ஈவாரிடத்துக் காலமும் இடமும் அறிந்து செல்லுதலும், அவர் குறிப்பறிதலும், அவரைத் தம்வசப்படுத்தலும், அவர்மனமிரங்கத் தக்கவை காடிச் சொல்லலும் முதலானவைகளால் வருவனவும், மறுத்தவிடத்து வருவனவுமாம். அவையுறாமல் வருதலாவது அவர் முன்னறிந்து கொடுக்கக் கொள்ளுதல். இரந்தவர் துன்ப முறுவரின் என்று பாடமோதி இரக்கப்பட்டவர் இரக்கப்பட்ட பொருளின்மையால் துன்புறாது எதிர்வந்தது ஈவாராயின் என்று பொருளுரைப்பாருமுளர். இதனால் வறுமையால் உயிர்நீங்கு மளவில் அவமானமில்லாத இரவு விலக்கப்படாதென்பது சொல்லப்பட்டது.

வறுமைப்பட்டவர் தம்குறையைச் சொல்லுமுன்னே குறிப்பாலறிந்து மறாமற்கொடுக்கும் சிறந்த இயல்பினை யுடையாரைத் தெரிந்து அவரிடத்து யாசிக்கக் கடவரென்பதும்; அத்தகைய சிறந்த இயல்பினையுடையார் உலகத்தில் அரியரென்பதும்; அவரிடத்தே இரந்தார்க்கு இரவால்வரும் இழிவில்லையென்பதும்; அவர் கொடுத்தலிலே குறைகாட்டா ரென்பதும்; ஒரு சமயம் குறை காட்டுவாராயின் அப்பழியானது பரிசுத்தமான வெண்புடவையில் அழுக்குச் சேருதல்போல் அவரிடத்துக் கடிதுசெல்லுமென்பதும்; ஒளிக்காது *மானமறிந் தீவாரிடத்து யாசித்தலும் ஓரழகாகுமென்பதும்; ஒளிக்காது கொடுப்பவரிடத்து யாசித்தல் தான் புகழ் பயவாதாயினும் முன்னுளதாய புகழ்கெட வாராமையால், அன்னாரிடத்து யாசித்தலும் வறியார்க்குக் கொடுத்தலே போலுமென்பதும்; உலகத்திலே வறியார் குறிப்பறிந்து உள்ளதை ஒளிக்காது கொடுக்கும் தருமசீலர் சிலர் இருக்கின்றபடியினாலேயே மானமுடைய வறியார் உயிர்காத்தற் பொருட்டு யாசித்தலை மேற்கொண்டு ஒழுகுகின்றாரென்பதும்; அத்தகைய தருமசீலர் இல்லையாயின் வறியார் மானம்

---

* மானம் என்பது "சிறிய சுருக்கத்து வேண்டு முயர்வு" எனனும் வறியாரின் இலக்கணம். அதனையறிதலாவது சொல்லத்தொடங்கிச் சொல்லமாட்டாமைக்குக் காரணமாகிய அம்மானத்தின் இயல்பினை அறிதல்.

விடமாட்டானமயால உயிாவிடுவரெனபதும, தமமை அவமதிதது இழிவு சொலலாது நனகுமதிதது இனியவை கூறிப பொருள கொடுபபாரைக கணடால இரபபவாககுத தமமிடததுளள வறுமைத துனபஙகளெலலாம முதலறக கெட்டு அகமகிழசசியுணடாகு மெனபதும, உலகததிலே இரபபவரிலலையாயின ஈதலிலலையாகப பொருளுடையாா அபபொருளை ஈதலாலாகும பயனகளாகிய புகழை யும புணணியததையும அடையாமல * வறிதே இறபபரெனபதும்; இரப்பவா இரநதும ஈயாபபேதையா மரபபாவை போலத தாணியி லியஙகி நடைபபிணமெனன நாட்டினிலுலவி இயமலோகததிற் கிரககபபடுவ†ரெனபதும, கொடுபபவன பொருளிலலை யென்ற விடததும அவன தனககேயலலாமல மறறை யிரநதவாககும அனறைககனறு பொருள சமபாதிததறகுப படுநதுனபததைத தனககேயாகவைததுத தான படுகிறதுனபம தானறிநது இரபபவன அவனைக கோபியாதிருததல வேணடுமெனபதும இஙகு அறியத தககவைகளாம

---

# ௱௭. இரவசசம்.

அஃதாவது மானஙகெட வரும இரததலுககு அஞசுதல். அதிகார முறைமையும இதனாலே விளஙகும

கரபபவாக கியாஙகொளிககுங கொலலோ விரபபவா
சொலலாடப போஒ முயிா. (௰)

(இ ள) சொலலாட - ஒளிபபவா இலலையென்று சொல்லிய மாததிரததே, இரப்பவா இரபபவாககு, உயிாபோம உயிர்போகா

* "ஈவாருங கொளவாரு மிலலாத வானததுவாழ்வாரே வனகணவா' எனறாா பிறரும

† "இரபபவாக கீயவைததாா ஈபவாக கருளுமவைததாா
கரபபவா தஙகட்கெலலாங கடுநா கஙகளவைததாா
பாபபுரீாக கஙகைதனனைப படாசடைப பாகமவைததாா
அரககனுக கருளுமவைததாா ஐயன ஐயாறனாரே"—திருநேரிசை

நின்றது, காப்பவர்க்கு இனிச் சொல்லாடுகின்ற அவ்வொளிப் பவர்க்கு, உயிர் பின்னும் இருத்தலால் அப்பொழுது, யாங்கு - எப் புரையுள் (எவ்விடத்தினுள்) ஒளிக்கும்கொல் புகுந்தொளிந்து நிற்குமோ, என்று.

உயிர் போதலாவது இரப்பவர் இனி யாம் என்னசெய்வோ மென்று ஏங்கிச் செயலற்று நிற்றல், *"புறத்துத்தன் னின்மை நலிய வகத்துத்தன், நன்ஞானம் நீக்கி நிறீஇ - ஒருவனை, ஈயா யெனக்கென் றிரப்பானேல் லந்நிலையே, மாயானோ மாற்றி விடின்" என்றார் பிறரும். கேட்டாரைக் கொல்லவல்லதாகிய சொல் சொல்வாரைக் கொல்லுதல் காணகின்றிலம் இஃதென்னோ வென்பதாம். வறுமையுற்றவிடத்து மறையாது யாசிக்கப்படுவா ராகிய சான்றதாராகளுக்கும் அவ்வறுமையை இரப்பவர் சொல்ல உயிர்போம், ஆனபின் மறைக்கப்படுவோராய பிறர்க்குச் சொல் லாடியக்கால் போகாது எங்கே ஒளித்துநிற்கும் இரண்டானும் போமே யன்றோ வென இரவஞ்சினொருவன் கூறுகின் உரைப்பாருமுளார் இதனால் அவ்விரவின் குற்றமும் காவின் குற்றமும் ஒருங்கு கூறப்பட்டன.

தமக்குள்ளதை ஒளிக்காமல் இவர் வரப்பெற்றேமென்று மன மகிழ்ந்து கொடுக்கும் கண்போற் சிறந்த தருமசீலரிடத்தும் இர வாமலே, செயயவல்லதோர் முயற்சியின்றே சீவனஞ்செய்தலே நல்ல தென்பதும், மக்களுயிர்க்கெல்லாம் வாட்காளும், அதற்கு வேண்டுவ தாகிய உண்டியும், அதற்குக் காரணமாகிய செய்தொழிலும், வினை வசத்தால் கருவோடு கலந்தவப்போதே சிறப்பிக்கப்பட்டனவன்றே அவைகளுள் சிலவுயிர்க்கு யாசித்தலும் ஒரு செயதொழிலாக ஏற்படுத்தப் படவில்லை யென்பதும், வறுமையினாலே வரும் துன்பத்தைத் முயற்சிசெய்து நீக்கக்கடவோ மென்று நினையாமல்

* நாலடியார் இதன்பொருள் - தனது தரித்திரம் புறமான உடலை வருத்த, தனது மனத்துள் நல்ல அறிவை நீக்கி அறி வில்லாமையை நிறுத்தி ஒருவனைக் குறித்து எனக்குப் பொருள் கொடுப்பாயென்று யாசிப்பானாகில் அவன் இல்லையென்று சொல்லில் அவ்விடத்தே இறவானோ என்பது.

இரந்து நீக்கக்கடவோமென்று நினைப்பது ஒருவனுக்கு அறியாமையினும் அறியாமையாகுமென்பதூஉம்; அனுபவிக்கவேண்டும் பொருள்களின்றி வறுமைப்பட்டவிடத்தும் பிறரிடத்துச்சென்று யாசித்தலை உடம்படாத அமைதி எல்லாவுலகமும் ஒருசேரப் பொருந்தினாலும் கொள்ளாத பெருமையுடையதென்பதூஉம்; நெறியாய முயற்சியாற் கிடைத்த கூழ் யாசித்தலாற் கிடைத்த அமிழ்தத்தைவிட இனியதென்பதூஉம்; தண்ணீர் பெறாது இறக்கும் நிலைமையதாகிய ஒரு பசுவினைக் கண்டு, தருமநோக்கி இதற்குத் தண்ணீர் தரல்வேண்டுமென்று இரந்து சொல்லும்போதும் அவ்விரவுபோல் ஒருவன் நாவிற்கு இழிவினைத்தருவது பிறிதில்லையாதலால் அத்தகைய தருமமும் முயன்று செய்வதல்லது யாசித்துச் செய்தலாகாதென்பதூஉம், இரப்பவர் யாசித்து நிற்றலின் கொடுமையைவிட அந்நிலையைக் கண்டிருந்தவர் இல்லையென்றலின் கொடுமை மிகத் தீயதென்பதூஉம் இங்கு அறியத்தக்கவைகளாம்.

## ௱அ - கயமை.

அஃதாவது முன்னே அரசியலுள்ளும் அங்கவியலுள்ளும் சிறப்பு வகையாற் சொல்லப்பட்ட குணங்களுள் ஏற்புடையவைகளைக் குறிப்பினால் யாவர்க்கும் பொருந்தவைத்தமையால் அங்கே குறிப்பாற் சொல்லியவையும் இங்கே ஒழிபியலுள் வெளிப்படச் சொல்லியவையும் ஆகிய குணங்கள் யாவுமிலராகிய கீழோரது தன்மை. அதனால் இஃது எல்லாவற்றிற்கும்பின் வைக்கப்பட்டது.

நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவல மிலர். (௨)

(இ - ள்.) நன்று - தமக்கு உறுதியானவைகளை, அறிவாரின் - அறிவாரைக்காட்டிலும், கயவர் - அவையறியாத கீழ்மக்கள், திருவுடையர் - நன்மை யுடையவராவர், அவர்போல அவைகாரணமாக,

நெஞ்சத்து - தமது நெஞ்சினிடத்து, அவலமிலர் - கவலையிலராத லால், எ - று.

நன்றென்பது - ஈறுதோன்றாத சாதி யொருமைப்பெயர், உறுதிகளாவன - இம்மை மறுமை வீடுகளுக்கு உரியவாகிய புகழ் புண்ணிய ஞானங்கள். இவைகளையறிவார் இவை செய்யாநின்றே அதிகமாகச் செய்யப் பெறுகின்றிலோ மெனவும், செய்கின்ற இவைகளுக்கு இடையூறு வருமோவென்றும், இவைகளுக்கு மாறாகிய பழி பாவம் அறியாமை என்பனவைகளில் யாதுவிளையுமோ வென்றும் இவ்வழியாலே கவலையடைவர்; கயவராவார் அப்புகழ் முதலானவைகளை விட்டுப் பழிமுதலானவைகளைச் செய்யாநின்றும் ஒருகவலையும் இல்லாதிருப்பராதலால் 'திருவுடையர்' எனக் குறிப்பால் இகழ்ந்தபடி. இதனால் கயவர் பழிபாவ முதலானவை களுக்கு அஞ்சாரென்பது சொல்லப்பட்டது.

மேன்மக்களுக்கும் கீழ்மக்களுக்கும் வடிவொத்தலால் குணங்களின் இருப்பினாலும் இல்லாமையாலும் அல்லது வேற்றுமை அறியப்படாதென்பதும்; கீழ்மக்கள் தம்மைத் தடுப்பாரின்றித் தாம் விரும்புமவைகளை விரும்பியவாறே செய்வரென்பதும்; கீழாயினான் தன்னிற் குறைந்தபட்டியாய் * நடப்பாரைக் கண்டானாயின் அந் நடக்கையிலே அவரைக்காட்டிலும் தான் மேம்பட்டு அதனால் தன் மிகுதிகாட்டி இறுமாப்பா னெனபதும்; கீழ்மக்களுக்கு ஆசாரம் பெரும்பான்மை அச்சம் சிறுபான்மை பொருட்பேறு என்னும் இவ்விரண்டாலு மல்லாமல் இயல்பாக உண்டாகா தென்பதும்; கீழ்மக்கள் தாங்கேட்ட இரகசியங்களை இடந்தோறுந் தாங்கிக்கொண்டு போய்ப் பறையறைந்தாற்போலப் பிறர்க்குச் சொல்லுவரென்பதும்; அன்னார் தம்மை வருத்துபவர்க்கன்றி இரப்பவர்க்கு ஒன்றுங் கொடாரென்பதும்; கீழ்மகன் பிறாது

---

* பட்டி - மனவடக்கமும் காவலுமின்றி ஆள்வாரிலி மாடு போல் அலையும் அயோக்கியன்.

ஆக்கங்கண்டவிடத்துப் பொறாமைகொண்டு அவரிடத்துக் குற்றமில்லையாகவும் உண்டாகக் வல்லவனோவா னென்பதும்; கயவர் உணவில்லாமையாகவாவது வேறுகவாவது ஒரு துன்பம்வந்து உற்றமாத்திரத்திலே தம்மைப் பிறர்க்கு விற்று அடிமைப் படுத்தி நிற்பரென்பதும் இங்கு அறியத்தக்கவைகளாம்.

ஒழிபியல் முற்றிற்று.

பொருட்பால் முற்றிற்று

திருச்சிற்றம்பலம்.

அரக்கன் வல்லரட் டாங்கொழிந் தாரருள்
பெருக்கச் செய்த பிரானைப் பெருந் தன்மையை
அருத்தி செய்தறி யப்பெறு கின்றிலா
கருத்தி லாக்கய வக்கணத் தோர்களே.—திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

# அரும்பத அதிகார அகராதி

# அட்டவணை.


அகத்தியர் ௱அ௨
அகங்காரம் எ௩
அகலிகை ௩௰
அங்கம் ௱௪
அங்கவியல் ௱௨௩
அங்குலி ௯
அசரம் ௪
அடக்கமுடைமை ௨௯
அட்டமா ௫
அநிர்த்தம் ௭௮
அந்தணர் அறுதொழில் ௱௨௰
அபாவம் ௪௯
அபானன் எ௰
அமைச்சு ௱௩௫
அரசர் அறுதொழில் ௱௨௰
அரசியல் ௮
௱௫௯
அருத்தாபத்தி ௪௩
அருவுடம்பு ௯௯
அருளுடைமை ௪௫
அவசாப்பிணி எ௮
அவாயநிலை ௱௧
அவாவறுத்தல் எஎ
அவி ௱௨௰
அவையஞ்சாமை ௱௫௨
அவையறிதல் ௱௫௰
அழுக்காறாமை ௩௨
அளவை ௪௯
அளவைநூல் ௱௫௨
அறம் ௧, ௨௮
அறன்வலியுறுத்தல் ௰
அறிவுக்கு மாட்சிமை ௯௰
அறிவுடைமை ௯௩
அறுகுணம் ௪

அற்றமாமை ௪௯
அன்புடைமை ௰௯
அநுமம் ௪௯, ௫எ
ஆகாமியம் எஎ
ஆகாரம் ௯எ
ஆஞ்ஞாசக்கரம் ௱௩௫
ஆண்டலைப்புள் ௱௫௯
ஆதனம் ௯
ஆத்தைவிசயம் ௫௰
ஆதிபௌதிகம் ௫௰
ஆதியான்மிகம் ௫௰
ஆசயம் ௱௪௨
ஆள்வினையுடைமை ௱௩௧
ஆற்றல் ௱௫, ௱௰௯
ஆக ௱எ௯
௯எ
...றிதல் ௱௯
இடுக்கண்டியாமம் ௱௨௨
இயமம் ௮
இயற்றமிழ் ௮எ
இரசசு ௫௯
இரட்டுறமொழிதல் ௱எ௯
இரவச்சம் ௨௧௯
இரவு ௨௪
இரேசகம் ௰
௮எ
இலக்கணச்சொல் ௱௫௧
இல்லறம் ௨
இல்வாழ்க்கை ௰௨
இறைப்பொருள் ௰௨
இறைமாட்சி ௮௩
௨௧
இன்னாசெய்யாமை ௯௧
ஈகை ௪௧

ஈரறிவுயிர் ௩
உட்பகை ௯௪, ௱௫௫, ௱௮௧
உணவு ஒத்தல் ௱௯௩
உதானன் ௭௰
உபசாரவழக்கு ௮௪, ௱௩, ௱௪௯
உபதை ௱௮
உபாதி ௰
உபாயம் ௯௭, ௱௧
உருவகவிசேடம் ௱௮௰
உருவுடம்பு ௬௯
உரையசை ௪௩
உவகை ௯௫
உவமானம் ௪௬
உழவு ௨௱௰
உரசர்ப்பிணி ௭௮
உற்பாதம் ௯௭
ஊக்கம் ௱௫௬
ஊக்கமுடைமை ௱௨௬
ஊராண்மை ௱௯௨
ஊழ் ௮௰
எடுத்துக்காட்டுவமை ௪
எண்குணம் ௫
ஏகதேசவுருவகம் ௱௬௫
எறிவிடுதல் [illegible]௯
ஐயறிவுயிர் ௬௩
ஒப்புரவறிதல் ௩௯
ஒழிபியல் ௱௯௫
ஒழுக்கமுடைமை ௨௭
ஒழுக்கம் ௧, ௱௯௬
ஒளி ௱௪௮, ௱௯௯
ஒற்றாடல் ௱௨௪
ஒற்றுமைத்துணை ௱௭௮
ஓதுவார் ௨௯
ஓரறிவுயிர் ௯௩
கடவுள் வாழ்த்து ௩
கடும்பற்றுள்ளம் ௯௫
கட்டியங்காரன் ௱௰௧
கணிதநூல் ௮௭
கணவேட்டம் ௱௨௩
கதி ௱௭௰
கயமை ௨௧௮
கருமேந்திரியம் ௬௯
கல்லாமை ௮௮
கலவி ௮௫
கவலை ௱௫௬
கள்ளாமை ௫௪
கள்ளுண்ணாமை ௱௮௯
கற்பம் ௱[illegible]௰
காணப்படம் ௨௯
காமமின்குற்றம் ௱௭௨
காமம் ௯௪
காமவினைவிளைவு ௭௰
காரணசரீரம் ௬௯
காருகவினை ௱௨௰
காலமறிதல் ௱௪
கானமுளை ௫௧
கீழ்நீர் ௱௫௫
குடப்பாம்பு ௱௫௭
குடிசெயல்வகை ௨௱௮
குடிமை ௱௯௫
குணம் ௩, ௫௬, ௱௧௬
கும்பகம் ௰
குரோதமின்குற்றம் ௱௭௨
குயிலுவத்தொழில் ௱௨௰
குழிசி ௱௫௬
குறிப்பறிதல் ௱௪௯
குறிப்புச்சொல் ௱௫௧
குறிப்புமொழி ௨௱௯
குற்றங்கடிதல் ௯௪
குற்றம் ௭௩, ௯௪, ௱௧
கூடாநட்பு ௱௭௰
கூடாவொழுக்கம் ௫௨
கேசரி ௯
கேவலப்பொருள் ௭௪
கேள்வி ௯௰
கொடுங்கோன்மை ௱௧௯

| | |
|---|---|
| கொல்லாமை | ௯௩ |
| கோப்பெருஞ்சோழன | ௱௯௪ |
| கோமுகம | ௯ |
| கௌமாரம | ௨௯ |
| சகத்துருபம | ௭௮ |
| சகனம | ௯ |
| சங்கேதம | ௱௫௫ |
| சஞ்சிதம | ௯௯ ௭௭ |
| சதகனி | ௱௫௭ |
| சத்துவம் | ௫௯ |
| சந்தேகவுணர்வு | ௭௨ |
| சமாதி | ௰ |
| சமானன | ௭௰ |
| சரம | ௯௪ |
| | ௱௫௩ |
| சாக்தம | ௨௯ |
| சான்றாண்மை | ௨௱௧ |
| சிங்கநோக்கு | ௱௭௮ |
| சிரல் | ௱௫௯ |
| சிவத்தியானம் | ௭௭ |
| சிறப்புருவகம | ௱௮௰ |
| சிறுபொழுது | ௱௯௨ |
| சிற்றினஞ்சேராமை | ௯௮ |
| சீவனி | ௯ |
| சுகம் | ௰ |
| சுக்கிலத்தியானம் | ௭௪ |
| சுவத்திகம் | ௯ |
| சுற்றந்தழால் | ௱௧௨ |
| சூக்குமசரீரம் | ௭௰ |
| சூது | ௱௯௰ |
| சூத்திரர் அறுதொழில் | ௱௨௰ |
| சூனியம் | ௮௰ |
| செங்கோன்மை | ௱௧௭ |
| செஞ்சொல் | ௱௫௧ |
| செம்பொருள் | ௭௩ |
| செய்யுட்டொடை | ௱௧௩ |
| செய்ந்நன்றியறிதல் | ௨௨ |
| செல்வச்செவிலி | |
| சோபம் | ௱௫௩ |
| சோநதரைக்கொல்லி | ௫௯ |
| சைதன்னியம் | ௭௮ |
| சைவம | ௨௯ |
| சொநபதியானம் | ௫௪ |
| சொலவன்மை | ௱௩௭ |
| சொற்களின்நடை | ௱௫௧ |
| சொற்சுவை | ௯௧ |
| சொற்பொருட்பின் | |
| | ௩௭ |
| சௌரம் | ௨௯ |
| ஞானம் | ௪௫, ௯௯ |
| ஞானேந்திரியம் | ௯௯ |
| தண்டம | ௧ ௱௧ |
| ததீசிமுனிவர் | ௰௮ |
| தத்துவஞானம் | ௭௨ |
| தத்துவம | ௭ |
| தமசு | ௫௯ |
| தமம | ௭௮ |
| தவம | ௪௯ |
| தழிஞ்சி | ௱௯௨ |
| தளிவெட்டி | ௱௫௭ |
| தன்மாத்திரை | ௭ |
| தாரணை | ௰ |
| தானம் | ௱௧ |
| தியானம் | ௰ |
| திரிபுரதகனம் | ௱௮௫ |
| தீநட்பு | ௱௯௯ |
| தீவினையச்சம் | ௩௮ |
| துப்புரவு | ௨௧௪ |
| துவரத்துறத்தல் | ௨௧௪ |
| துறவறம் | ௪௫ |
| துரவு | ௯௯ |
| தூது | ௱௪௪ |
| தூலசரீரம் | ௭௰ |
| தெரிந்து செயல்வகை | ௱ |
| தெரிந்துதெளிதல் | ௱௮ |
| …யாடல் | ௱௰ |

| | |
|---|---|
| தொலைவரவு | ௬ ௩௨ |
| தொழிலுவமை | ௫ |
| தொழில் | ௩௯ |
| தோல் | ௨௩௨ |
| நகுடன | ௮௩ |
| நடா | ௯௮ |
| நடுவினை | ௭௭ |
| நடுவுநிலைமை | ௨௪ |
| நட்பாராய்தல் | ௱௯௫ |
| நட்பு | ௱௯௩ |
| நத்தம் | ௪௩ |
| நல்குரவு | ௨௧ |
| நன்றியில்செல்வம் | ௨ ௫ |
| நாடு | ௫ |
| நாணுடைமை | ௨௱௭ |
| நாலறிவுயிர் | ௪௩ |
| நிச்சிரப்பு | ௱௫ |
| நிமித்தகாரணம் | ௭௩ |
| நியதி | ௮ |
| நியமம் | ௮ |
| நிரதிசயவானந்தம் | ௭௫ |
| நிலையாமை | ௯௯ |
| நினை | ௱௮ |
| நீத்தார்பெருமை | ௭ |
| நுண்ணுடம்பு | ௭௰ |
| பகவன் | ௪ |
| பகைத்திறந்தெரிதல் | ௱௭௯ |
| பகைமாட்சி | ௱௭ |
| பஞ்சகாவியம் | ௨௨ |
| படைச்செருக்கு | ௱௯௫ |
| படைமாட்சி | ௱௯ |
| படையுறுப்பு | ௱௯௰ |
| படைவகுப்பு | ௱௯௰ |
| படைவகை | ௱௯௰ |
| படைவிரி | ௱௯௰ |
| பணை | ௱௫௯ |
| பண்புடைமை | ௨௱ |
| பதுமம் | ௯ |
| பதஞ்சலி | ௰ |
| பயனில்சொல்லாமை | ௯ |
| பவிச்சக்கரவர்த்தி | ௱௩௰ |
| பழைமை | ௱௯௭ |
| பாயுரு | ௯௯ |
| பானமுனி | ௫௯ |
| பிசிராந்தையார் | ௱௧௪ |
| பிதுரர் | ௰௨ |
| பிம்பப்பிரதிபிம்பபாவம் | ௪ |
| பிரகிருதி | ௮௰ |
| பிரத்தியாகாரம் | ௰ |
| பிரமாணம் | ௬௯ |
| பிராணன் | ௭௰ |
| பிராணாயாமம் | ௰ |
| பிறப்பு | ௰௫ |
| பிறனில்விழையாமை | ௨௯ |
| பிறிதுமொழிதல் | ௱௬ ௱௭ |
| பின்மொழிநிலையல் | ௱௨௫ |
| பின்வினை | ௭௭ |
| புகழுடம்பு | ௬௩ |
| புகழ் | ௬௩ |
| புதல்வரைப்பெறுதல் | ௰௫ |
| புதை | ௱௫௯ |
| புரோகிதர் | ௯௯ |
| புலான்மறுத்தல் | ௬௮ |
| புலவறிவாண்மை | ௱௭௪ |
| புழை | ௱௫௯ |
| புறங்கூறாமை | ௩௫ |
| பூதவுடம்பு | ௬௩ |
| பூரகம் | ௰ |
| பெண்வழிச்சேறல் | ௱௮௯ |
| பெரியஅறங்களைச் சிதைத்தல் | ௨௪ |
| பெரியாரைத் துணைக்கோடல் | ௯௯ |
| பெரியாரைப் பிழையாமை | ௱௮௩ |

பெருமை ௱௯௯
பெருமபொழுது ௱௯௨
பேதம் ௱௧
பேதைமை ௱௭௨
பொச்சாவாமை ௱௧௫
பொய்யாவிளக்கு ௱௫௯
பொருட்சுவை ௯௧
பொருள்செயல்வகை ௱௫௮
பொறி ௱௫௬
பொறையுடைமை ௩௰
பொற்கைப்பாண்டியன ௱௧௮
மடியின்மை ௱௨௮
மதம ௯௫
மமகாரம ௭௧
மயூரம் ௰
மரு ௱௫௭
மருந்து ௱௯௨
மனுநீதிச்சோழன் ௱௧௮
மன்னரைச்
சேர்ந்தொழுகல் ௱௪௬
மாக்கள் ௯௰
மாயை ௭௮
௱௯௭
முதற்காரணம் ௭௩
முத்தம் ௰
முத்தியையிகழ்தல் ௫௫
முனைவினை ௭௭
மூவறிவுயிர் ௬௩
மெய்யுணர்தல் ௭௨
மேல்நீர் ௱௫௫
யாகம் ௰௯
யாப்பியம் ௱௯௪
யோகநிலை ௮,௭௫
யோனிபேதம்
வரைவின்மகளிர் ௱௮௭
வலியறிதல் ௱௩
வழக்கு ௧
வளையாபதி ௨௨
வனிதாததோறறம ௭௮
வாதம ௱௫௩
வாயு ௭௰
வாய்ச்சுவை ௯௧
வாய்மை ௫
வாரி ௱௰
வாழ்க்கைத்துணைநலம் ௰௩
வான்சிறப்பு ௫
விதண்டை ௱௫௩
விதப்பு ௫௯
விதனம் ௱௨௨
ꞏT ௪௩
விபரீதவுணர்வு ௭௨
வியானன ௭௰
வியூகம் ௱௬௰
௪௫
விருந்தோம்பல் ௰௯
விழுமம் ௨௨
வினைசெயல்வகை ௱௪௮
வினைத்திட்பம் ௱௪௧
வினைத்தூய்மை ௱௩௯
வீரம் ௯
வெஃகாமை ௩௪
வெகுளாமை ௫௩
வெகுளி ௯௫
வெருவந்தசெய்யாமை ௱௨௧
வேதாத்தியயனம் ௰௫
வேள்வி ௰௯
வேறறுமைத்துணை ௱௭௭
வைசியர் அறத்தொழில் ௱௨௰

## திருக்குறளின் பால், இயல், பகுதி, அதிகார விவரங்கள்.

| பால் | இயல் | பகுதி | அதிகாரத் தொகை | | அதிகார எண். |
|---|---|---|---|---|---|
| | பாயிரம் | ... | | ௪ | க—௪ |
| அறம் | இல்லறம் | ... | ௨௰ | ௩௩ | ௫—௨௪ |
| | துறவறம் | விரதம் | ௯ | | ௨௫—௩௩ |
| | | ஞானம் | ௪ | | ௩௪—௩௭ |
| | ஊழ் | ... | | க | ௩௮— |
| பொருள் | அரசு | ... | ௨௫ | ௭௰ | ௩௯—௬௩ |
| | அங்கம் | அமைச்சு | ௰ | | ௬௪—௭௩ |
| | | நாடு | க | | ௭௪ |
| | | அரண் | க | | ௭௫ |
| | | கூழ் | க | | ௭௬ |
| | | படை | ௨ | | ௭௭—௭௮ |
| | | நட்பு | ௰௭ | | ௭௯—௯௫ |
| | ஒழிபு | ... | ௰௩ | | ௯௬—௱௮ |
| இன்பம் | களவு | ... | ௭ | ௨௫ | ௱௯—௱௰௫ |
| | கற்பு | ... | ௰௮ | | ௱௰௬—௱௩௩ |

*வீடொன்று பாயிர(ம்) நான்கு விளங்கறம்*
*நாடிய முப்பத்து மூன்றொன்றூழ் - கூடுபொருள்*
*எள்ளி லெழுப திருபதிற் றைந்தின்பம்*
*வள்ளுவர் சொன்ன வகை - சிறுமேதாவியார்.*

குறிப்பு:—மேலே குறிக்கப்பட்டுள்ள விவரங்களைத் திருக்குறட் கோவையுடன் ஒத்துப்பார்த்து அதனால் இன்ன பால் இயல் பகுதிக்குரிய அதிகாரங்கள் இவை என்பதையும், இன்ன அதிகாரம் இன்ன பால், இயல், பகுதிக் குரியது எனபதையும் எளிதில் தெரிந்து மனதில் பதியச் செய்து கொள்ளுதல் கூடும் என்றறிக.

## சிவாக்கினைத் திருமந்திரமென்னும்

# திருக்குறட்கோவை - நூற்றெட்டு.

[இது மாணவரும் ஏனையோரும் பிரதிதினமும் பாராயணம் செய்தற்கென அமைக்கப்பட்டது.]

பாயிரம் - அதி. ௪ - (௧ - ௪.)

௧. அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு— (கடவுள்வாழ்த்து)

௨. நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு— (வான்சிறப்பு)

௩. சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு— (நீத்தார்பெருமை)

௪. வீழ்நாள் படாஅமை நன்றாற்றி னஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல்— (அறன்வலியுறுத்தல்)

அறத்துப்பால் - இல்லறவியல் - அதி. ௨௦ - (௫ - ௨௪)

௫. தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க றானென்றாங்
கைம்புலத்தா றோம்ப றலை— (இல்வாழ்க்கை)

௬. மனைத்தக்க மாண்புடைய ளாகித் தற்கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை- (வாழ்க்கைத்துணை
[நலம்)

எ. எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்— (புதல்வரைப்பெறுதல்)

அ. அறத்திற்கே யன்புசா ரென்ப வறியார்
மறத்திற்கு மஃதே துணை— (அன்புடைமை)

கூ. இணைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன்— (விருந்தோம்பல்)

௰. அல்லவை தேய வறம்பெருகு(ம்) நல்லவை
நாடி யினிய சொலின்— (இனியவைகூறல்)

௰க. எழுமை யெழுபிறப்பு முள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு— (செய்ந்நன்றியறிதல்)

௰உ. சமன்செய்து சீர்தூக்குங்கோல்போ லமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி— (நடுவுநிலைமை)

௰௩. ஒருமையு ளாமைபோ லைந்தடக்க லாற்றின்
எழுமையு மேமாப் புடைத்து— (அடக்கமுடைமை)

௰௪. உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றுங்
கல்லா ரறிவிலா தார்— (ஒழுக்கமுடைமை)

௰௫ அறன்கடை நின்றாரு ளெல்லாம் பிறன்கடை
நின்றாரிற் பேதையா ரில்— (பிறனில்விழையாமை)

௰௬. உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்
இன்னாச்சொ னோற்பாரிற் பின்— (பொறையுடைமை)

௰எ. அவ்விய நெஞ்சத்தா னாக்கமுஞ் செவ்வியான்
கேடு(ம்) நினைக்கப் படும்— (அழுக்காறாமை)

௰அ. அருள்வெஃகி யாற்றின்க ணின்றான் பொருள்வெஃகிப்
பொல்லாத சூழக் கெடும்.— (வெஃகாமை)

கூ௰. ஏதிலார் குற்றம்போற் றங்குற்றங் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னு முயிர்க்கு.— (புறங்கூறாமை)

உ௦. சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்.—(பயனிலசொல்லாமை)

உ௧. மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறஞ்சூழுஞ் சூழ்ந்தவன் கேடு— (தீவினையச்சம்)

உஉ. மருந்தாகித் தப்பா மரத்தற்றாற் செல்வம்
பெருந்தகை யான்கட் படின்— (ஒப்புரவறிதல்)

உ௩. வறியார்க்கொன் றீவதே யீகைமற் றெல்லாங்
குறியெதிர்ப்பை நீர துடைத்து— (ஈகை)

உ௪. நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது— (புகழ்)

---

துறவறவியல் - அதி. ௧௩ - (உ௫ - ௩௭.)
விரதம் - அதி. ௯ - (உ௫ - ௩௩.)

உ௫. நல்லாற்றா னாடி யருளாள்க பல்லாற்றால்
தேரினு மஃதே துணை— (அருளுடைமை)

உ௬. உண்ணாமை யுள்ள துயிர்நிலை யூனுண்ண
அண்ணாத்தல் செய்யா தளறு— (புலான்மறுத்தல்)

உ௭. தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார் மற்றல்லார்
அவஞ்செய்வா ராசையுட் பட்டு— (தவம்)

உ௮. நெஞ்சிற் றுறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணா ரில்— (கூடாவொழுக்கம்)

உ௯. அளவல்ல செய்தாங்கே வீவர் களவல்ல
மற்றைய தேற்றா தவர்— (கள்ளாமை)

௩௰. யாமெய்யாக் கண்டவற்று ளில்லை யெனைத்தொன்றும்
வாய்மையி னல்ல பிற— (வாய்மை)

௩௧. சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி யினமென்னும்
ஏமப் புணையைச் சுடும்— (வெகுளாமை)

௩௨. அறிவினு ளெல்லாந் தலையென்ப தீய
செறுவார்க்குஞ் செய்யா விடல்— (இன்னாசெய்யாமை)

௩௩. பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல் நூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை— (கொல்லாமை)

## ஞானம் - அதி. ௪ - (௩௪ - ௩௭)

௩௪. ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப
கோடியு மல்ல பல— (நிலையாமை)

௩௫. மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்கல்
உற்றார்க் குடம்பு மிகை— (துறவு)

௩௬. பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு— (மெய்யுணர்தல்)

௩௭. அவாவென்ப வெல்லா வுயிர்க்கு மெஞ்ஞான்றும்
தவாஅப் பிறப்பீனும் வித்து— (அவாவறுத்தல்)

## ஊழ் - அதி. ௧ - (௩௮).

௩௮. வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்குந் துய்த்த லரிது— (ஊழ்)

---

## பொருட்பால் - அரசியல் - அதி.௨௫ - (௩௯ - ௪௧)

௩௯. அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா
மான முடைய தரசு— (இறைமாட்சி)

௪௰. கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக— (கல்

௪௧. நல்லார்கட் பட்ட வறுமையி னின்னாதே
கல்லார்கட் பட்ட திரு— (கல்லாமை)

௪௨. செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினு மென்— (கேள்வி)

௪௩. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு— (அறிவுடைமை)

௪௪. செயற்பால செய்யா திவறியான் செல்வம்
உயற்பால தன்றிக் கெடும்— (குற்றங்கடிதல்)

௪௫. உற்றநோய் நீக்கி யுறாஅமை முற்காக்கும் [கோடல்)
பெற்றியார்ப் பேணிக் கொளல்—(பெரியாரைத் துணைக்

௪௬. மனநல மன்னுயிர்க் காக்க மினநலம்
எல்லாப் புகழுந் தரும— (சிற்றினஞ்சேராமை)

௪௭. எண்ணித் துணிக கருமந் துணிந்தபின்
எண்ணுவ மென்ப திழுக்கு— (தெரிந்துசெயல்வகை)

௪௮. நுனிக்கொம்ப ரேறினா ரஃதிறந் தூக்கின்
உயிர்க்கிறுதி யாகி விடும்— (வலியறிதல்)

௪௯. கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து— (காலமறிதல்)

௫0. நெடும்புன லுள் வெல்லு முதலை யடும்புனலின்
நீங்கி னதனைப் பிற— (இடனறிதல்)

௫௧. அறம்பொரு ளின்ப முயிரச்ச(ம்) நான்கின்
திறந்தெரிந்து தேறப் படும்— (தெரிந்துதெளிதல்)

௫௨. வாரி பெருக்கி வளம்படுத் துற்றவை
ஆராய்வான் செய்க வினை— (தெரிந்துவினையாடல்)

௫௩. விருப்பறாச் சுற்ற மியையி னருப்பறா
ஆக்கம் பலவுந் தரும— (சுற்றந்தழால்)

௫௪. பொச்சாப்புக் கொல்லும் புகழை யறிவினை
நிச்ச நிரப்புக்கொன் றாங்கு— (பொச்சாவாமை)

௫௫. ஓர்ந்து கண்ணோடா திறைபுரிந் தியார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை— (செங்கோன்மை)

௫௬. ஆபயன் குன்று மறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவா னெனின்— (கொடுங்கோன்மை)

௫௭. கடுஞ்சொல்லன் கண்ணில னாயி னெடுஞ்செல்வம்
நீடின்றி யாங்கே கெடும்— (வெருவந்தசெய்யாமை)

௫௮. பண்ணென்னும் பாடற் கியைபின்றேற் கண்ணென்னும்
கண்ணோட்ட மில்லாத கண்— (கண்ணோட்டம்)

௫௯. ஒற்று முரைசான்ற நூலு மிவையிரண்டும்
தெற்றென்க மன்னவன் கண்— (ஒற்றாடல்)

௬௰. உரமொருவற் குள்ள வெறுக்கை யஃதிலார்
மரமக்க ளாதலே வேறு— (ஊக்கமுடைமை)

௬௧. நெடுநீர் மறவி மடிதுயி னான்கும்
கெடுநீரார் காமக் கலன்— (மடியின்மை)

௬௨. இன்பம் விழையான் வினைவிழைவான் றன்கேளிர்
துன்பந் துடைத்தூன்றுந் தூண்-(ஆள்வினையுடைமை)

௬௩. மடுத்தவா யெல்லாம் பகடன்னா னுற்ற
இடுக்க ணிடர்ப்பா டுடைத்து— (இடுக்கணழியாமை)

## அங்கவியல் - அதி. ௩௨ - (௬௪ - ௯௫).

### அமைச்சு - அதி. ௰ - (௬௪ - ௭௩)

௬௪. மதிநுட்ப நூலோ டுடையார்க் கதிநுட்பம்
யாவுள முன்னிற் பவை— (அமைச்சு)

௬௫. கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல்— (சொல்வன்மை)

௬௬. எற்றென் றிரங்குவ செய்யற்க செய்வானேல்
மற்றன்ன செய்யாமை நன்று— (வினைத்தூய்மை)

௬௭. ஊறொரா லுற்றபி னொல்காமை யிவ்விரண்டின்
ஆறென்ப ராய்ந்தவர் கோள்— (வினைத்திட்பம்)

௬௮. ஒல்லும்வா யெல்லாம் வினைநன்றே யொல்லாக்கால்
செல்லும்வாய் நோக்கிச் செயல்—(வினைசெயல்வகை)

௬௯. கடனறிந்து காலங் கருதி யிடனறிந்து
எண்ணி யுரைப்பான் றலை— (தூது)

எ௰. போற்றி னரியவை போற்றல் கடுத்தபின் [தொழுதல்)
தேற்றுதல் யார்க்கு மரிது— (மன்னரைச் சேர்ந்

எக. நுண்ணிய மென்பா ரளக்குங்கோல் காணுங்கால்
கண்ணல்ல தில்லை பிற— (குறிப்பறிதல்),

எஉ. அவையறிந் தாராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர்— (அவையறிதல்)

எ௩. கற்றாருட் கற்ற செலச்சொல்லித் தாங்கற்ற
மிக்காருண் மிக்க கொளல்— (அவையஞ்சாமை)

## நாடு - அதி. க - (எ௪)

எ௪. பிணியின்மை செல்வம் விளைவின்ப மேமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து— (நாடு)

## அரண் - அதி. க - (எ௫)

எ௫. உயர்வகலந் திண்மை யருமை யிந்நான்கின்
அமைவர ணென்றுரைக்கு(ம்) நூல்— (அரண்)

## கூழ் - அதி. க - (எ௬)

எ௬. அருளென்னு மன்பீன் குழவி பொருளென்னும்
செல்வச் செவிலியா லுண்டு— (பொருள்செயல்வகை)

## படை - அதி. உ - (எஎ - எ௮)

எஎ. தார்தாங்கிச் செல்வது தானை தலைவந்த
போர்தாங்குந் தன்மை யறிந்து— (படைமாட்சி)

எ௮. பேராண்மை யென்ப தறுகணொன் றுற்றக்கால்
ஊராண்மை மற்றதன் னெஃகு— (படைச்செருக்கு)

## நட்பு - அதி. ௰எ - (எ௯- ௬௫).

எ௯. செயற்கரிய யாவுள நட்பி னதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு— (நட்பு)

௮௰. கேட்டினு முண்டோ ருறுதி கிளைஞரை
நீட்டி யளப்பதோர் கோல்— (நட்பாராய்தல்)

௮௧. பேதைமை யொன்றோ பெருங்கிழமை யென்றுணர்க
நோதக்க நட்டார் செயின்—(பழைமை)

௮௨. நகைவகைய ராகிய நட்பிற் பகைவரால்
பத்தடுத்த கோடி யுறும்— (தீநட்பு)

௮௩. மிகச்செய்து தம்மெள்ளு வாரை நகச்செய்து
நட்பினுட் சாப்புல்லற் பாற்று— (கூடாநட்பு)

௮௪. ஒருமைச் செயலாற்றும் பேதை யெழுமையும்
தான்புக் கழுந்து மளறு— (பேதைமை)

௮௫. ஏவவுஞ் செய்கலான் றான்றேறா னவ்வுயிர்
போஒ மளவுமோர் நோய்— (புல்லறிவாண்மை)

௮௬. இகலின் மிகலினி தென்பவன் வாழ்க்கை
தவலுங் கெடலு(ம்) நணித்து— (இகல்)

௮௭. வறியார்க்கு மாறேற்ற லோம்புக வோம்பா
மெலியார்மேன் மேக பகை— (பகைமாட்சி)

௮௮. வில்லே ருழவர் பகைகொளினுங் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை— (பகைத்திறந்தெரிதல்)

௮௯. வாள்போல் பகைவரை யஞ்சற்க வஞ்சுக
கேள்போல பகைவர் தொடர்பு— (உட்பகை)

௯௰. ஏந்திய கொள்கையார் சீறி னிடைமுறிந்து
வேந்தனும் வேந்து கெடும்—(பெரியாரைப்பிழையாமை)

௯௧. அறவினையு மான்ற பொருளும் பிறவினையும்
பெண்ணேவல் செய்வார்க ணில்—(பெண்வழிச்சேறல்)

௯௨. அன்பின் விழையார் பொருள்விழையு மாய்தொடியார்
இன்சொ லிழுக்குத் தரும்— (வரைவின்மகளிர்)

௯௩. கையறி யாமை யுடைத்தே பொருள்கொடுத்து
மெய்யறி யாமை கொளல்— (கள்ளுண்ணாமை)

௯௪. அகடாரா ரல்ல லுழப்பர் சூதென்னும்
முகடியான் மூடப்பட் டார்— (சூது)

௯௫. அற்ற தறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து— (மருந்து)

---

ஒழிபியல் - அதி. ௰௩ - (௯௬ - ௱௮).

௯௬. குடிப்பிறந்தார் கண்விளங்குங் குற்றம் விசும்பின்
மதிக்கண் மறுப்போ லுயர்ந்து— (குடிமை)

௯௭. மருந்தோமற் றூனோம்பும் வாழ்க்கை பெருந்தகைமை
பீடழிய வந்த விடத்து— (மானம்)

௯௮. ஒளியொருவற் குள்ள வெறுக்கை யிளியொருவற்
கஃதிறந்து வாழ்து மெனல்— (பெருமை)

௯௯. சால்பிற்குக் கட்டளை யாதெனிற் றோல்வி
தொலையல்லார் கண்ணுங் கொளல்— (சான்றாண்மை)

௱. எண்பதத்தா லெய்த லெளிதென்ப யார்மாட்டும்
பண்புடைமை யென்னும் வழக்கு— (பண்புடைமை)

௱௧. பொருளானா மெல்லாமென் றீயா திவறும்
மருளானா(ம்) மாணாப் பிறப்பு— (நன்றியில்செல்வம்)

௱௨. கருமத்தா னாணுத னாணுத் திருநுதல்
நல்லவர் நாணுப் பிற— (நாணுடைமை)

௱௩. இடும்பைக்கே கொள்கலங் கொல்லோ குடும்பத்தைக்
குற்ற மறைப்பா னுடம்பு— (குடிசெயல்வகை)

௱௪. பலகுடை நீழலுந் தங்குடைக்கீழ்க் காண்பர்
அலகுடை நீழ லவர்— (உழவு)

௱௫. தொல்வரவுந் தோலுங் கெடுக்குந் தொகையாக
நல்குர வென்னு(ம்) நசை— (நல்குரவு)

௱௬. இன்ப மொருவற் கிரத்த லிரந்தவை
துன்ப முறாஅ வரின்— (இரவு)

௱௭. கரப்பவர்க் கியாங்கொளிக்குங் கொல்லோ விரப்பவர்
சொல்லாடப் போஒ முயிர்— * (இரவச்சம்)

௱௮. நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவல மிலர்— (கயமை)

திருக்குறட்கோவை - நூற்றெட்டு முற்றிற்று.

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| ௰௯ | ௨௭ | சக்நியாசி | சந்நியாசி |
| ௨௩ | ௩ | மழறு | மளறு |
| ௨௫ | ௨௨ | அவன | அவர் |
| ௪௯ | ௩௰ | ஒழித்துண்பான் | ஒளித்துண்பான் |
| ௪௮ | ௨௰ | பாமில்லை | பாவமில்லை |
| ௫௧ | ௰௯ | இறையவன் | இறையவர் |
| ௫௯ | ௨௭ | இரசு | இரசசு |
| ௭௫ | ௰௫ | மெய்பொருள் | மெய்ப்பொருள |
| ௮௰ | ௨௪ | வகுத்தகையால் | வகுத்தவகையால் |

தெய்வப் புலமைத திருவள் ளுவர்தந்த திருக்குறளின்
மெய்வைத்த சார முணர்த்துமிந் நூலை வியனுலகில்
சைவத் திருமக்க ளேயன்றி யேனைத் தமிழ்மக்களும்
கைவைத் தறிந்துய்ய மாறருள்வா யெங்கள் கண்ணுதலே.

தி. சா. பரமசிவன்.

புகாபில் பிரஸ், திருவல்லிக்கேணி, சென்னை.